108

தொகுதி 6

தமிழாய்வு

"திட்பமும் நுட்பமும்"

பொதுப்பதிப்பாசிரியர் :
பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

உதவி :
தமிழ்த்துறை ஆசிரியர்களும் மாணவர்களும்

C

சென்னைப் பல்கலைக் கழகம்
1977

P31:9
N77
96700

தொகுதி 6

தமிழாய்வு

"திட்பமும் நுட்பமும்"

ASSISTANT REGISTRAR OF BOOKS
12 JUL 1978
MADRAS 600 009
PUBLIC (I. & PR) DEPARTMENT

பொதுப்பதிப்பாசிரியர் :

பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,

எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,

தமிழ்த்துறைத் தலைவர்,

சென்னைப் பல்கலைக் கழகம்.

உதவி :

தமிழ்த்துறை ஆசிரியர்களும் மாணவர்களும்

சென்னைப் பல்கலைக் கழகம்

1977

முதற்பதிப்பு : 1977

தமிழாய்வு கிடைக்குமிடம் :

பதிவாளர், சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை - 600 005.

நூல்களை மதிப்பீடு செய்வதற்கும், மாற்றிக் கொள்வதற்கும் (Exchange) அனுப்பவேண்டிய இடம் :

பதிப்பாசிரியர், ''தமிழாய்வு'',
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-5.

© சென்னைப் பல்கலைக் கழகம்.

96700

அச்சிட்டோர் :
அவ்வை அச்சுக்கூடம்,
சென்னை-600 013.

TAMILAYVU

(Annals of Tamil Research)

"CLARITY AND PRECISION"

General Editor :
DR. C. BALASUBRAMANIAN, M. A., M.Litt., Ph. D.,
Professor and Head of the Department of Tamil,
University of Madras

Assistance :
STAFF & STUDENTS OF THE DEPARTMENT OF TAMIL

DEPARTMENT OF TAMIL
UNIVERSITY OF MADRAS
1977

பதிப்புரை

தமிழாய்வு 1972 முதல் 1975 வரை ஆண்டுக்கு ஒரு தொகுதி யாக நான்கு தொகுதிகள் வெளிவந்தன. 1977-ல் மாண்புமிகு துணைவேந்தர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் ஏற்கெனவே திட்டமிட்டபடி தமிழாய்வுத் தொகுதிகளை ஆண்டுக்கு இருமுறை யாகக் குறித்த காலத்தில் வெளியிட்டு விடவேண்டுமென்று கருத்துரை வழங்கினார்கள். இதன்படி இவ்வாண்டின் முதல் தொகுதி யாகிய ஐந்தாம் தொகுதி ஏற்கெனவே வெளிவந்துள்ளது. இந்த ஆறும் தொகுதி 1977ஆம் ஆண்டின் இரண்டாம் தொகுதியாகும்

இந்த ஆறும் தொகுதியில் முன் தொகுதியைப் போன்றே ஆய்வுக் கட்டுரைப் பகுதியும், அறக்கட்டளைச் சொற்பொழிவு ஒன்றும் மதிப்புரை மாலையும் இடம் பெற்றுள்ளன. அச்சில் வாரா அருந்தமிழ் நூல்களை முறையாகத் தமிழாய்வுத் தொகுதிகளில் வெளியிட்டுவரும் வரிசையில், 'மெய்ம்மொழிச் சரிதை' என்னும் சைவசாத்திரநூல் இதில் இடம் பெறுகிறது.

ஆய்வுக்கட்டுரைகளில் முதலாவதாக அமைந்துள்ளது 'திவா கரப் பதிப்பு வரலாறு'. நிகண்டு நூல்களுள் முந்திய 'திவாகரத்தை' ஆய்ந்து வருகின்ற புலவர்மணி மு. சண்முகம் பிள்ளையவர்களின் ஆராய்ச்சிக்கு அடிப்படையாக இது விளங்குகிறது. சொற்பொருள் உணர்வுக்கு இன்றியமையாத இந்தப் பழைய நூல் இதுவரையிலும் ஏட்டுச் சுவடிகளையெல்லாம் பயன்படுத்தி நன்கு பதிப்பிக்கப் பெறவில்லை என்பது இதனால் தெரியவருகிறது.

அடுத்து, 'வள்ளுவத்தில் மொழி' என்பது குறித்துச் செல்வி தி. சு. சத்தியம் மொழியியல் நோக்கில் அமைத்துத் தந்துள்ளார். எழுத்து, சொல், பேச்சு, என்றிவ்வாறு மொழித் தொடர்பான திருக்குறள் குறிப்புகளை இக்கட்டுரையில் காணலாம்.

மூன்றாவதாக, 'பாரதிதாசனின் அழகின் சிரிப்பு ஒரு திறனாய்வு' என்னும் கட்டுரை இடம் பெறுகிறது. இதனை ஆக்கியுள்ள திரு. து. மூர்த்தி அவர்கள் ஆசிரியனின் வாழ்க்கையோடு ஒட்டி அழகின் சிரிப்புப் பாடல்கள் பிறந்துள்ள பான்மையினை நன்கு சித்திரித்துள் ளார். இளங்குழந்தைகளைக் கருதிப் பாடப்பெற்ற இக்கவிதை நூலில் இக்கால மனிதவாழ்வில் நாம் மேற்கொள்ளவேண்டிய

பல்வேறு புதிய சிந்தனைகளைக் கவிஞர் உருவாக்கியுள்ள திறன் நன்கு புலப்படுத்தப்படுகிறது. 'புரட்சிக்கவிஞர்' என்னும் சிறப்பு இச்சிறு நூலுள்ளும் விளங்குதல் தெளிவுறக் காணலாம்.

இரண்டாவது பெரும்பகுதி 'ஆட்சித்தமிழ்' என்னும் அறக் கட்டளைச் சொற்பொழிவாகும். பேராசிரியர் சொல்லின் செல்வர் டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் பணிக்கால வெள்ளி விழா அறக்கட்டளையின் சார்பில், 'ஆட்சிமொழிக் காவலர்' என்னும் சிறப்புப் பெயர் பெற்று விளங்கும் பெரியார் திரு. கீ. இராமலிங்க முதலியார் எம். ஏ., அவர்களின் அரிய அனுபவ உரைகளாகும். "அன்று தொட்டு இன்று வரை," "சொல்தரு துறைகள்", "சொல் செய் நெறிமுறை" என்னும் மூன்று பொருள்களில் 1976ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதலியாரவர்கள் மூன்று நாள் வழங்கிய பேச்சுகளாகும். எல்லாம் தமிழ், எதிலும் தமிழ் என்னும் வகையில் தமிழன்னை அரசோச்சிவரும் இந்நாளில் முதலியாரவர் களின் பேருரைகள் ஆட்சிமொழித் துறைக்கு அவர்கள் அளித்த பெரும் நன்கொடையாகும்.

'அச்சில் வாரா அருந்தமிழ்' வரிசையில் 'மெய்ம்மொழிச் சரிதை' என்னும் கி. பி. 14-ஆம் நூற்றுண்டில் தோன்றிய சைவசாத்திரநூல் இடம் பெறுகிறது. இது இவ்வரிசையில் ஆருவது நூலாகும். இதனை ஆக்கியவர் இளங்காரிகுடி, மெய்ம்மொழித்தேவர் என்பவராவர். இவரது நூல் சிவஞான சித்தியாரைப்போன்று பரபக்கம் சுபக்கம் என்னும் இருபெரும்பகுதியாக அமைந்துள்ளது. பிறமதக் கொள்கை களை விளக்கும் பரபக்கப் பகுதிகளில் உள்ள 124 செய்யுட்களில் 42 செய்யுட்களே கிட்டியுள்ளன. ஆனல், சைவமசய உண்மைகளை உரைக்கும் சுபக்கப்பகுதி முழுமையும் *(361 செய்யுள்)* கிடைத் துள்ளது. இதற்குப் பழைய உரை ஒன்றும் உள்ளது. நூலின் விரிவு கருதியும், மூல ஒலை ஏடு கிட்டாமையானும் இப்பொழுது மூலத்தை மட்டும் புலவர் மு. சண்முகம் பிள்ளையவர்கள் தெளிவுறப் பதிப்பித்து வழங்கியுள்ளார்கள். இந்த நூலின் மூலப்பிரதியை தேடிவைத்து வழங்கியவர் மறைந்த தமிழ்ப் பெரியார் வேலம்பாளையம் ரா. தெய்வ சிகாமணிக்கவுண்டர் அவர்களாவார்கள். அவர்கள் எழுதிவைத் திருந்த காகிதப் பிரதியைப் பெற்று வந்து தமிழாய்வில் வெளியிடத் துணைபுரிந்தவர் கடலூர் தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்களாவர். இப்பெரியார்களுக்குத் தமிழ்த்துறை நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

'மதிப்புரை மாலை'ப் பகுதியில் அண்மைவெளியீடுகள் சில இடம் பெற்றுள்ளன. இனி ஆண்டுக்கு இருமுறை தவருது தமிழாய்வு வெளிவரும் நிலையில் ஆசிரியர்களும், பதிப்பாளரும் தங்கள் புதிய வெளியீடுகளை மதிப்புரைக்காக அனுப்பிவைத்தால் அவற்றின்

மதிப்புரை உடனுக்குடன் தமிழாய்வில் இடம்பெற வாய்ப்பாகும். ஆகவே புதிய நூல்களைப் பதிப்பாளர்கள் உடனுக்குடன் அனுப் பிவைப் பார்களாக.

தமிழ்த்துறையில் கற்கும் முதுகலை மாணவர்களுக்கும் மற்றும் தமிழன்பர்களுக்கும் பயன்படும் வகையில் அவ்வப்போது பெரும் பாலும் முதுகலைப் பாடங்களையொட்டிய சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெற்றுவருகின்றன. இவ்வாண்டு ஜூலை முதல், டிசம்பர் வரையில் நிகழ்ந்த சிறப்புச் சொற்பொழிவுகளின் விவரங்களை இத்தொகுதியின் இறுதியில் காணலாம்.

முந்திய தொகுதிகளைப் போலவே இந்தத் தொகுதியும் செம்மையுற உதவிபுரிந்த புலவர்மணி *மு. சண்முகம் பிள்ளை* அவர் களுக்குத் தமிழ்த்துறையின் சார்பில் நன்றியறிதலைத், தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

20—12—1977, **சி. பாலசுப்பிரமணியன்**

பொருளடக்கம்

I. ஆய்வுக்கட்டுரைப் பகுதி

1. திவாகரப் பதிப்பு வரலாறு
—திரு. மு. சண்முகம் பிள்ளை 1—10

2. வள்ளுவத்தில் மொழி
—செல்வி தி. சு. சத்தியம் 11—26

3. பாரதிதாசனின் அழகின் சிரிப்பு (ஒரு திறனாய்வு)
—திரு. து. மூர்த்தி 27—36

II ஆட்சித் தமிழ்
—திரு. கீ. இராமலிங்க முதலியார், எம். ஏ., 1—83

1. தோற்றுவாய் 1—3
2. அன்று தொட்டு இன்று வரை 4—29
3. சொல்தரு துறைகள் 30—56
4. சொல் செய் நெறிமுறை 57—83

III. மெய்ம்மொழிச் சரிதை 1—56

IV. மதிப்புரை மாலை 1—12

V. தமிழ்த்துறைச் செய்திகள் 1—4

ஆய்வுக்கட்டுரைப் பகுதி

பொருளடக்கம்

1. திவாகரப் பதிப்பு வரலாறு 1

—திரு. மு. சண்முகம் பிள்ளை

2. வள்ளுவத்தில் மொழி 11

செல்வி தி. சு. சத்தியம்

3. பாரதிதாசனின் அழகின் சிரிப்பு 27

(ஒரு திறனாய்வு)

—து. மூர்த்தி

1. திவாகரப் பதிப்பு வரலாறு

மு. சண்முகம் பிள்ளை,
தமிழ் விரிவுரையாளர்,
திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி,
சென்னைப் பல்கலைக்கழகம்.

இலக்கியக் கல்விக்குக் கருவி நூல்களாக அமைபவை இலக்கணமும் நிகண்டும் ஆகும். தமிழ் இலக்கண மரபுகளைத் தெளிவுற நன்கு எடுத்துரைப்பது தொல்காப்பியம் என்னும் பழைய தமிழ் இலக்கணம். இஃது எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றன் இலக்கணங்களை விளக்கும் மூன்று அதிகாரங்களையும், ஒவ்வோர் அதிகாரத்திலும் ஒன்பது ஒன்பது இயல்களாக இருபத்தேழு இயல்களையும், 1610 நூற்பாக்களையும் கொண்டுள்ளது. இப்பேரிலக்கணத்திற்கு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் முதலியோர் உரை விளக்கங்களும் அமைந்து, நமக்கு மொழிமரபை அறிய உதவி வருகின்றன. இவற்றைப் பின்பற்றியே நன்னூல், நேமிநாதம் முதலிய இலக்கண நூல்கள் காலத்திற்கு ஏற்ப வளர்ந்துள்ளன.

நூல்களைப் பயில்வோர் முதன்முதலில் சொற்பொருள் மரபுணர்த்தும் நிகண்டுகளைக் கற்று அதன்பின்பே இலக்கணப் பயிற்சி தொடங்குவது மரபாய் இருந்து வந்தது என்பதைச் சங்கர நமச்சிவாயர் எடுத்துக் காட்டியுள்ளார்.[1] நிகண்டு நூல்களுக்கு எல்லாம் முதலாவதாயும் வழிகாட்டியாயும் விளங்குவது திவாகரர் செய்த 'திவாகரம்' என்னும் நிகண்டு. தொல்காப்பியர் தம் நூலில் சுட்டிய சொற்பொருள் முறைகளை அடியொற்றி, அதுபோலவே நூற்பாவால் இந்நிகண்டு அமைக்கப்பட்டுள்ளது. கி. பி. 9-ஆம் நூற்றாண்டு அளவில் இந்நிகண்டு தோன்றியது என்பது நாட்டு வரலாற்றாலும் இலக்கிய வரலாற்றாலும் துணியப்பட்டுள்ளது.[2]

இது தமிழில் முதலில் தோன்றிய நிகண்டு ஆதலால் இதனை 'ஆதி திவாகரம்' என்றும் வழங்குவர். இதுவே பிங்கலம், உரிச்சொல் நிகண்டு, கயாதர நிகண்டு, சூடாமணி நிகண்டு முதலாகக் காலந்தோறும் நிகண்டுகள் வளர்ந்து வருவதற்கு வழிகாட்டி

யுள்ளது. இவற்றுள் திவாகரமும் சூடாமணியும் மிகுதியாகப் பலரும் போற்றிக் கற்றமையால் இந்நிகண்டுகளுக்கான ஏட்டுச்சுவடிகளும் பலவாகப் பல பகுதிகளிலும் உள்ளன. எனினும் திவாகரச் சுவடிகள் முழுமையும் முறையாகப் பரிசோதிக்கப்பெற்றுச் செவ்விய முறையிலான ஒரு பதிப்பு இன்னும் வெளிவரவில்லை.

திவாகர நிகண்டை முதன்முதலில் பதிப்பித்து வெளியிட்டவர் தாண்டவராய முதலியார். இவர் சென்ற நூற்றாண்டில் சென்னைக் கல்விச் சங்கத்தில் தமிழ்த் தலைமைப் புலவராய் விளங்கியவர். அட்டாவதானம் வீராசாமி செட்டியார், திருவேங்கடாசல முதலியார், விசாகப் பெருமாளையர், கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளை, நயநப்ப முதலியார் முதலியோர்களும் தாண்டவராய முதலியாரோடு இச்சங்கத்தில் தமிழ்ப் புலவராய்ச் சிறந்து விளங்கியவர்கள் ஆவர். கல்வித்துறைக்குப் பயன்படத்தக்க பல நூல்களையும் இச்சங்கத்தின் வாயிலாக இவர்கள் வெளியிட்டு வந்துள்ளார்கள். இந்த வகையில் அகராதிகளுக்கெல்லாம் மூலமாய் விளங்கியதும் சொற்பொருள் விளக்க நூலாய் அமைந்ததுமான திவாகரத்தைத் தலைமைப் புலவர் தாண்டவராய முதலியார் பதிப்பிக்க எடுத்துக் கொண்டார் என்று தோன்றுகிறது.

இவர் திவாகர ஏட்டுச்சுவடிகளை ஒத்துப் பார்த்துப் பிழைகளைக் களைந்து செம்மைப்படுத்திப் பதிப்பிக்க முற்பட்டார். திவாகரப் பகுதிகளில் சில இடங்களில் புதுச் சூத்திரங்களையும் இவர் செய்து சேர்த்துள்ளார்; தாம் சேர்த்த புதுச் சூத்திரங்களுக்கு உடுக்குறியிட்டுக் காட்டியுள்ளார்.[3]

திவாகரம் தெய்வப் பெயர்த்தொகுதி முதல் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி ஈருகப் பன்னிரண்டு தொகுதிகளைக் கொண்டுள்ளது ஆகும். இவை முழுமையும் தாண்டவராய முதலியாரால் பதிப்பிக்கப் பெறவில்லை. தாண்டவராய முதலியார் அச்சிட்டது முதல் எட்டுத் தொகுதிகளே. அவர் தமது வேலையின் நிமித்தம் விசாகப்பட்டினத்திற்குச் சென்று தங்க நேர்ந்தமையால் தொடர்ந்து அவரால் அச்சுவேலைகளைக் கவனிக்க இயலவில்லை. இச்செய்தி அவர் கல்விச் சங்கத்துப் புத்தக பரிபாலகராகிய கொற்றமங்கலம் இராமசாமிப் பிள்ளைக்கு எழுதிய கடிதத்தால்[4] தெரிய வருகிறது. எட்டுத் தொகுதியைத் தொடர்ந்து ஒன்பது பத்தாம் தொகுதிகளைக் கல்விச் சங்கத்து வித்துவானுயிருந்த பு. நயநப்ப முதலியார் பரிசோதித்து முதல் பத்துத் தொகுதிகள் வரையில் ஒரு தொகுதியாக 1839-ஆம் ஆண்டு வெளிப்படுத்தினர். 'மற்றையிரண்டு தொகுதிகளும் பின்னர் வெளிப்படுத்தப்படும்' என்னும் குறிப்பும் இப் பதிப்பில் காணப்படுகிறது. இதன்படி எஞ்சிய இரு தொகுதிகளும் திவாகரத்தின் இரண்டாம் தொகுதியாக அடுத்து அச்சிட்டு வெளிப்படுத்தியிருத்தல் கூடும். அந்தப் பதிப்பு

இதுவரை என் பார்வைக்குக் கிட்டாமையால் சரியான ஆண்டு விவரம் குறிக்க இயலவில்லை. முதல் தொகுதி வெளிவந்த சில ஆண்டுகளிலேயே பெரும்பாலும் 1842-க்குள் இது வெளிவந்திருத்தல் கூடும்.

இந்த 1839-ல் வெளிவந்த முதற்பதிப்பு, 'சேந்தன்றிவாகரம்' என்னும் பெயரில் 245 பக்கங்கள் கொண்டதாய் அமைந்துள்ளது. நூலுள் இரு பத்தியாக முதற்பகுதியில் சூத்திரமும் எதிரே அதற்குரிய பெயர் விளக்கமும் அமைக்கப்பட்டுள்ளன. எ, ஒ என்னும் குற்றெழுத்துக்கள் தொல்காப்பியர் சுட்டியபடி புள்ளியிட்டு அச்சிடப்பட்டுள்ளன ; ஒவ்வொரு தொகுதிச் சூத்திரங்களுக்கும் தொடர் எண் இட்டுள்ளார். ஆக, தொகுதி பத்துக்கும் சூத்திரம் 2286 என்று இறுதியில் சுட்டப்பட்டிருக்கிறது; இறுதிப் பக்கமாகிய 245 ஆம் பக்கத்தில் 'பிழை திருத்தல்' என்னும் தலைப்பில் 17 பிழை திருத்தல்கள் காட்டப்பட்டுள்ளன. அதன் கீழ், சென்னப் பட்டணத்தில் — தி. விசாகப்பெருமாளையரது கல்வி விளக்கவச்சுக் கூடத்திற் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது' என்னும் விவரமும் குறிக்கப் பட்டிருக்கிறது.

மர்டாக்கின் நூல் விவர அட்டவணையின் முன்னுரையில், சேந்தனர் என்பவரால் திவாகரம் பத்துத் தொகுதிகளில் இயற்றப் பட்டுள்ளது என்னும் விவரம் காணப்படுகிறது.[5] இது திவாகரத்தின் மேற்குறித்த முதல் பதிப்பைப் பார்த்து எழுதியதாகலாம். திவாகரரை ஆதரித்த சேந்தனைத் திவாகரம் இயற்றினரென்று தவருக உணர்ந்ததன் விளைவே இக்குறிப்பு. பின்னர், அட்டவணையில் திவாகரம் பற்றிக் குறிக்குமிடத்தும் இவ்வாறே இந்நிகண்டு ஆசிரியர் பற்றிக் குறிப்பு எழுதுகிருர்.[6] ஆனல், இங்குத் திவாகரம் பன்னிரண்டு தொகுதிகளை உடையது என்று சுட்டப்பட்டுள்ளது. பல பதிப்புகள் வெளிவந்திருப்பதாகவும் குறித்துள்ளார். இரு தொகுதிகளாக இந் நிகண்டு வெளிவந்துள்ளதையும், முதல் தொகுதி 242 பக்கமும் இரண்டாம் தொகுதி 24 பக்கமும் கொண்டது என்னும் விவரமும் தரப்பட்டுள்ளது. இங்குக் குறிப்பிடப்படும் இரண்டாம் தொகுதி பு. நயநப்ப முதலியார் உள்ளிட்ட சென்னைக் கல்விச் சங்கத்துப் புலவர்களின் பதிப்பாக இருத்தல் கூடும்.

திவாகரத்துக்குக் கிட்டிய பதிப்புகளில் அடுத்தபடியாகக் குறிப்பிடத்தக்கது கிரவுன் வடிவில் அமைந்த மற்ருெரு பதிப்பு. இதன் முதல் பக்கம் இல்லாமையால் வெளியான ஆண்டு முதலிய விவரம் தெரிய இயலவில்லை. இந்தப் பதிப்பிலும் எ, ஒ எழுத்துக்கள் புள்ளியிட்டுப் பதிப்பிக்கப்பட்டிருப்பதால் பெரும்பாலும் 1850-க்கு முற்பட்ட பதிப்பாக இது இருத்தல் கூடும். தாண்டவராய முதலியார் பதிப்பில் புதிய சூத்திரங்கள் உடுக்குறி இட்டுக் காட்டியபடி இப்பதிப்பும் உள்ளது. எனவே, தாண்டவராய முதலியார் பதிப்பின்

படியே பதிப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும். 242 பக்கங்கள் கொண்டது இப்பதிப்பு.

பிரிட்டிஷ் மியூசியம் கேட்லாக்கிலிருந்து திவாகரரின் திவாகரம் T. குப்பன் அய்யங்கார் என்பவரால் சென்னையிலிருந்து 1859-ல் பதிப்பிக்கப் பெற்ற விவரம் தெரிய வருகிறது.[7]

1886-ல் தஞ்சாவூர் சின்ன கன்னைய செட்டியார் என்பவரால் சென்னையில் வெளியிடப்பட்ட பதிப்பு ஒன்றுள்ளது. இதன் முதற் பக்கத்தில் பின்வரும் குறிப்பு காணப்படுகிறது.

உ

கடவுள் துணை

சேந்தன் திவாகரம் மூல பாடம்

இஃது

சென்னைக் கல்விச் சங்கத்துத்

தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய

தாண்டவராய முதலியார்

அவர்களால் பதிப்பித்த

பத்துத் தொகுதிகளின் மூலத்தோடு

ஷை சங்க வித்துவான்களால்

பதிப்பித்த

மற்றவிரண்டு தொகுதிகளின் மூலத்தையும்

ஒன்றுகச் சேர்த்து

சிவாத்துவித சிந்தாந்தியாகிய

திருமழிசை

முத்துச்சாமி முதலியாரவர்களால்

அவைகட் கிணங்கப் பரிசோதித்து

தஞ்சாவூர்

சின்ன கன்னைய செட்டியாரால்

தமது

சகலகலா நிலைய அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

1886

இதற்குப் பின் வந்த பதிப்புகளின் முதற்பக்கத்திலும் பதிப்பாசிரியர் அச்சுக்கூடப் பெயர்கள் வேறுபட்டபோதிலும், 'இஃது சென்னைக் கல்விச் சங்கத்து' என்பது தொடங்கி, 'மற்ற இரண்டு தொகுதிகளின் மூலத்தையும் ஒன்ருகச் சேர்த்து' என்பது வரையுள்ள குறிப்பு அப்படியே காணப்படுகிறது. ஆதலால், பின் வந்த பதிப்பாசிரியர் எல்லோருமே முந்திய பதிப்பை அப்படியே பின்பற்றி வந்திருக்கிருர்கள் என்பது தெரிய வருகிறது. எனினும் முற்பதிப்பில் புதுச்சூத்திரங்களுக்குக் காட்டப்பட்ட உடுக்குறியைக் கைவிட்டு விட்டனர். இதனல் எவை எவை திவாகரரின் சூத்திரம், எவை எவை தாண்டவராய முதலியார் உள்ளிட்ட கல்விச் சங்கத்து வித்துவான்கள் சேர்த்த சூத்திரம் என்பது தெரியாமல் ஆகிவிட்டது.

திவாகரத்தின் பதிளென்ரும் தொகுதியாகிய ஒரு சொல் பல பொருள் பெயர்த் தொகுதியின் அமைப்பு முறை தனிப்பட நோக்கத்தக்கது. திவாகரர் சொற்களை எதுகை முறையில் அமைத்துப் பொருள் கூறிய சூத்திர அமைப்பு முறையை முதற் பதிப்பிலேயே மாற்றி அச்சிட்டது ஒரு பெருங்குறையாகும். இத்தொகுதிச் சூத்திரங்களை ஆதியிற்பொருள், அந்தத்துப்பொருள் என்று இரு கூறுபடுத்தி ஒவ்வொரு பகுதியிலும் சூத்திரங்களைச் சொற்களின் அகராதி அடைவில் அமைத்து வெளியிட்டுள்ளார். இம்மாற்றத்தை முதற்பதிப்பாசிரியரே செய்தார் என்றுசொல்வதற்கும் இல்லை. கொல்லம் 877-ல் அதாவது கி.பி. 1702-ல் எழுதப்பெற்ற ஏட்டுப்பிரதியிலேயே இம்முறை காணப்படுகிறது என்பதைப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.[8] இதற்கும் எத்தனை ஆண்டுகளுக்கு முன் இத்தகைய மாறுதல் ஏற்பட்டது என்பதை வரையறுப்பதற்கு உரிய சான்றுகள் கிடைக்கவில்லை. எனினும் அகராதி நிகண்டு பழக்கத்திற்கு வந்த 16-ஆம் நூற்ருண்டிற்குப் பின்னரே இம்மாற்றம் ஏற்பட்டிருத்தல் கூடும். திவாகரர் அமைத்த முறையில் பதிேைராம் தொகுதி இது வரையில் அச்சிடப் பெறவில்லை.

1886-க்குப் பின்னும், 1897-ல் சென்னை குருநாத சுவாமிகளின் பதிப்பு வந்துள்ளது. இந்த நூற்ருண்டில் கோ. லோகநாத முதலியார் 1904-ல் தமது மனேன்மணி விலாச அச்சுக்கூடத்தில் ஒரு பதிப்பு வெளியிட்டுள்ளார். பின்னரும், 1917, 1924, முதலிய ஆண்டுகளிலும் இவ்வச்சுக்கூடப் பதிப்பு தொடர்ந்து வந்துள்ளது.

திருப்போரூர், டி. கோபால நாயகர் அவர்களின் சென்னை கோல்டன் எலெக்டிரிக் பிரஸ்ஸில் 1923-ல் ஒரு பதிப்பு வெளி வந்துள்ளது. 1958-ல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் பதிப்பு வெளியாகியுள்ளது. இதுவே இப்போது கிட்டும் அச்சுப் பதிப்பு ஆகும்.

திவாகரத்தின் முதல் தொகுதியாகிய தெய்வப் பெயர்த்தொகுதி மட்டும் 1868ல் ஊ. புஷ்பரதச் செட்டியாரால் பதிப்பிக்கப்பட்டது.

பின்னரும் பல பதிப்புகள் இத்தொகுதிக்கு வந்துள்ளன. ஏறத்தாழச் சென்ற நூற்றாண்டில் மட்டும் 11 பதிப்புகள் வந்தமை தெரிய வருகிறது.[9] சொற்பொருள் உணர்த்தும் சூடாமணி நிகண்டின் 11 ஆம் தொகுதியைப் பலரும் மனப்பாடம் செய்து வந்தது போல இத்தொகுதியையும் மனப்பாடம் செய்யும் பழக்கம் இருந்து வந்திருக்க வேண்டும். 1927-ல் மணி திருநாவுக்கரசு முதலியார் பதிப்பு ஒன்று இத்தொகுதிக்கு உள்ளது. அதன் நூன் முகத்தில், 'இந்நூலின் முதற்பகுதி எல்லாப் பள்ளிகளிலும் வழிவழி படிக்கப்பட்டு வருதலின் இதனை அச்சிட்டோம்' என்று குறிப் பிட்டுள்ளார்கள். பள்ளிப் பாடமாய் வழங்கியமையால் இத் தொகுதிக்கு வேறும் பல பதிப்புகள் அவ்வப்போது வெளி வந்திருத்தல் வேண்டும்.

அகராதிகள் வழக்கத்திற்கு வந்தபின் நிகண்டுப் பயிற்சி குறைந்து அவற்றைப் போற்றுவாரும் அருகிப் போயினர். நிகண்டு நூல்களுள் திவாகரம், பிங்கலம் உரிச்சொல் நிகண்டு ஆகியவையே முன்பு அச்சில் இருந்தன. பல நிகண்டுகள் அச்சிடப்படாமல் சுவடிகளாகவே இருந்துவந்தன. பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை யவர்கள் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியராய் வந்தபின் அகராதி களுக்கு மூலமாய் உள்ள நிகண்டுகளைப் பரிசோதித்துப் பதிப்பிக்கும் அவசியத்தை உணர்ந்தார்கள். 'தமிழ் அகராதியின் ஆதார நூற்றொகுதி' என்னும் பொது மகுடத்துடன் நாமதீப நிகண்டு, அரும்பொருள் விளக்க நிகண்டு, கயாதர நிகண்டு, பொதிகை நிகண்டு ஆகியவற்றை வெளியிட்டார்கள். சக்திப் பத்திரிகையில் இவர்கள் வெளியிடத் தொடங்கிய 'கைலாச நிகண்டு' முதலிற் சில பகுதிகளோடு நின்றுவிட்டது; இது முழுமையும் பின்னர் அச்சிடப் படவும் இல்லை. ஏனைய அச்சில் வாரா நிகண்டுகளைத் தொடர்ந்து பதிப்பிக்கவும் அச்சில் வந்தவற்றுள்ளும் சரிவரப் பதிப்பிக்கப்படாத திவாகரம், பிங்கலம், ஆகியவற்றைப் பதிப்பிக்கவும் திட்டமிட்டுப் பணியாற்றி வந்தார்கள்.[10] திவாகர நிகண்டிற்குரிய பல சுவடிகளை ஒப்பு நோக்கி இடையிடைக் காகிதம் வைத்துப் பைண்டு செய்த திவாகர அச்சுப்பிரதியில் பாடரூப பேதங்களைக் குறித்து வைத்திருந் தார்கள். அவர்கள் காலத்தில் இந்நூலின் பதிப்பு வெளிவராமல் போனது நம் தவக்குறையே.

இந்த முதல் நிகண்டினை ஏட்டுப் பிரதிகளுடன் பரிசோதித்து வெளியிட்டு, அவர்களுடைய அவாவை நிறைவேற்ற வேண்டும் என்னும் எண்ணம் எனக்கு நீண்ட நாளாக உண்டு. பல்கலைக்கழக மானியக் குழு பழைய நூல் பதிப்பு ஆராய்ச்சிக்கு உதவ முன் வந்துள்ளதால், இதனைச் சுவடிகளுடன் பரிசோதிக்க இப்பொழுது தொடங்கியுள்ளேன். சென்ற கோடை விடுமுறையில் திருவனந்த புரம் சென்று கேரளப் பல்கலைக் கழகத்திலுள்ள சுவடிகளைப் பார்வையிட்டு வந்தேன். அங்கே திவாகரம் முழுமையும் உள்ள

ஏடுகள் எதுவும் இல்லை. ஏழு தொகுதி வரையில் உள்ள இரு பிரதிகள் உள. ஏனையவற்றுள் ஒன்று தெய்வப்பெயர்த் தொகுதியும் மக்கட்பெயர்த் தொகுதியும் கொண்டது. எஞ்சிய ஐந்தும் தெய்வப் பெயர்த்தொகுதி மட்டுமே உள்ளவை. ஏட்டுப் பிரதிகளுக்கும் அச்சுப் பிரதிகளுக்கும்வேறுபாடுகள் பலவாகக் காணப்படுகின்றன. இன்னும் வேறு பகுதிகளில் உள்ள சுவடிகளையும் ஒப்பு நோக்கினுல்தான் பழைய பாடத்தை அறுதியிடவும் நாளடைவில் திரிந்த பாடங்கள் எவை என்பதைக் கண்டு கொள்ளவும் இயலும்.

என் பதிப்பு முயற்சியைக் கேட்டதும் ஆராய்ச்சிப் பேரறிஞர் மு. அருணுசலம் அவர்கள் தமது திவாகர ஏட்டுச் சுவடிகள் இரண்டை வாழ்த்துடன் தந்து உதவினுர்கள். அவற்றுள் ஒன்று நூல் முழுமையும் உள்ள பிரதி; பழமையான பிரதியும் கூட. மற்ருென்று குறைப்பிரதி. முதலிலும் இறுதியிலும் இடையிடையேயும் சில ஏடுகள் இல்லை; சிற்சில ஏடுகள் பொடிந்துமுள்ளன. இந்த இரு சுவடிகளும் திவாகரத்தின் பண்டை நிலையை நன்கு தெரிவிக் கின்றன.

தமிழகத்தில் இதுபோன்று தனிப்பட்டவர்களிடம் திவாகரப் பிரதிகள் இருத்தல் கூடும்; பழைய பதிப்புகளும் இருக்கலாம். அவற்றை வைத்திருப்போர் தந்து உதவினுல் அவற்றை நன்றியுடன் போற்றிப் பயன்படுத்திக் கொள்வேன். நூல் நிலையங்களில் உள்ள பிரதிகளோடு வேறு இடங்களில் உள்ள பிரதிகளையும் தேடி ஒப்பு நோக்கவேண்டும் என்பது என் விருப்பம். இப்பணி முற்றுப்பெறும் நாளை எதிர்நோக்கிப் பணிபுரிந்து வருகிறேன். எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

குறிப்புகள்

1. ‘இலக்கணம் அறிதற்குமுன்னரே நிகண்டறிக வென்ரும். அறியும்முறை அதுவாதலான்.’

‘பெயரியலென்பது பெயரிலக்கணம்; பெயர்த்தொகுதி என்பது பெயர்க்கூட்டம். ஏனையவுமன்ன. கூட்டமெனினும் நிகண்டெனினும் ஒக்கும். இலக்கணம் கூறும் நூலுள் நிகண்டினையும் உடன்கூருது அதனை வேருெரு நூலாகக் கூறுதல் தமிழுள்ளேயன்றி ஆரியமுதலிய வற்றுள்ளும் காண்க.’

—நன்னூல் — சூ. 460, சங்கரநமச்சிவாயருரை

2. மு. அருணுசலம்: திவாகரர்; திவாகரர் காலம் பக். 66–83.

3. சேந்தன்றிவாகரம். இஃது புத்தகங்கடோறுமொன்றற்கொன் ருெவ்வாது வழுஉக்களாற் பொதிவுற்றுக் கிடந்தமையால் அவ் வழுஉக்களைப் பல புத்தகங்களைக் கொண்டு களைந்தும், வேண்டு மிடத்துப் புதுச் சூத்திரங்கள் செய்து உடுக்குறியிட்டுச் சேர்த்தும்,

பெயர் பிரித்தும், இவ்வாறெட்டுத் தொகுதிகாறும், சென்னைக் கல்விச் சங்கத்து தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய தாண்டவராய முதலி யாராலும்......

—திவாகரம் ; முதற்பதிப்பு (1839)-முகப்புப்பகுதி.

4. ம.ரா.ஸ்ரீ. கொற்றமங்கலம்—இராமசாமிப்பிள்ளையவர்கட்கு. விஜ்ஞாபநம்.

நாம் அச்சிற்பதிப்பிக்கத் தொடங்கிய சேந்தன்றிவாகரத்தி லொன்பான்றொகுதி தொடங்குவதற்கு முன்னெனக்கு வாய்த்த வேறு தேயத் திருக்கையாலும், பிறிது கருமத்தைக் கருத்தினுலுந் தீண்ட வொண்ணுக் கருமந் தலைப்படலாலும், நான் கருதியவாறு முற்று வித்தற்கியலாத மற்றைத் தொகுதிகளையுமொருவாறு புதுக்குவித்துச் சேர்த்துப் புத்தகத்தை நிறைத்து வெளிப்படுத்துவீராக வென்ற, வென் வேண்டுகோளை மேற்கொண்டு அவற்றிலிரண்டாயினுஞ் சேர்த்தமைக்ககமகிழ்வுருநின்றேன். - மறவியால் விடுபட்ட சில பொருள்களுஞ் சொற்களும் பின்னர்ச் சேர்ப்பித்தற்பொருட்டு நான் முன் குறித்திருந்த குறிப்பேடெனக்குக் காணப்பட்டாற் காலந்தாழ்க் காமற் பயன்படுத்துவேன்.

விசாகப்பட்டணம் — இங்ஙனம்,
1839 — *தாண்டவராய முதலியார்,*
ஆகஸ்டு, 7.

5. Classified Catalogue of Tamil Printed Books: Compiled by John Murdoch, Introduction p. XCII.

6. ,, p. 199

7. ,, p. 498

8. பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, இலக்கிய மணிமாலை, பக். 157.

9. தமிழ் நூல் விவர அட்டவணை, தொகுதி 1, பகுதி 1, பக். 329 ; தொகுதி 1. பகுதி 4, பக். 318, 319.

10. பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, இலக்கிய மணிமாலை, (நாமதீப நிகண்டு முன்னுரை)-பக். 218.

'சூடாமணி நிகண்டொன்று தவிர அச்சில் வந்துள்ள மற்றைய நிகண்டுகட்கு இதுவரை நல்ல பதிப்புகளே கிடையா. பல நிகண்டுகள் அச்சியற்றப் பெறவேயில்லை. நிகண்டுகள் செவ்வை யாய் அச்சியற்றப் பெருவிடின் தற்காலத்தே அத்தியாவசியமாக வேண்டப்படும் தமிழகராதி திருத்தமெய்திப் பெருநலம் பயப்பதா காது. வடமொழி நிகண்டுகள் பல Sources of Sanskrit Lexiography என்ற கிரந்த மாலையில் ஐரோப்பிய அறிஞரால் வெளியிடப்

பட்டுள்ளமை இங்கே நினைவூட்டத்தக்கது. யான் பதிப்பிக்கும் தமிழ் நிகண்டுகளும் 'தமிழகராதியின் ஆதார நூற்றொகுதி என்ற மகுடத்துடன் வெளிவரும். இவற்றுள் நாமதீப நிகண்டு முதலாவது நூலாகும்.'

திவாகரம்

		பரிசோதகர்	பதிப்பாசிரியர்
1.	திவாகரம்-முதல் பத்துத் தொகுதி	தாண்டவராய முதலியார்	கொற்றமங்கலம் இராமசாமி பிள்ளை
		பு. நயநப்ப முதலியார்	தி. விசாகப்பெருமாளையரது கல்வி விளக்க அச்சுக் கூடம், சென்னப்பட்டணம், 1839.
2.	திவாகரம்-11-12 ஆம் தொகுதி	பு. நயநப்ப முதலியார் முதலியோர்	-- (?) 1842 ?
3.	திவாகரம் - 12, தொகுதிகளும்	——	—1850 ?
4.	,,	டி. குப்பன் அய்யங்கார்	காண்க : பிரிட்டிஷ் மியூஷியம் காட்டலாக் (பக். 498)
5.	,,	திருமழிசை முத்துசாமி முதலியார்	தஞ்சாவூர் சின்னை கன்னைய செட்டியார், சகல கலா நிலைய அச்சுக் கூடம், 1886, சென்னை.
6.	,,	குருநாத சுவாமிகள்	கோ. லோகநாத முதலியார், மனோன்மணி விலாச அச்சுக் கூடம், 1904 மறு பதிப்பு 1917, 1924.
7.	,,	,,	திருப்போரூர் கோபால் நாயகர், 1923, கோல்டன் எலக்டிரிக்பிரஸ், சென்னை.
8.	,,	சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்	அப்பர் அச்சகம், 1958.

தெய்வப் பெயர்த் தொகுதி

1. ஊ. புஷ்பரதச் செட்டியார்	கலாரத்நாகர அச்சுக்கூடம், சென்னை	1868
2. கருணானந்த சுவாமி & கேசவ முதலி	சென்னை	1870
3. அப்பாசாமி முதலியார்	இலக்கிய விளக்க அச்சுக்கூடம்	1873
4. சி. நாராயணசாமி முதலியார்	பிரபாகர பிரஸ், சென்னை	1874
5. அருணாசல முதலியார், கோகுலாபுரம்	மனோன்மணி விலாச அச்சுக்கூடம்	1878
6. ஆறுமுக சுவாமிகள்	பரப்பிரம முத்தி ராட்சரசாலை	1879
7. டி. பரசுராம முதலி	பரபிரம்ம அச்சு யந்திரசாலை	1880
8. அப்பன் செட்டியார்	சிவானந்த நிலைய அச்சுக்கூடம்	1881
9. அப்பாசாமி முதலியார்	மீனாட்சியம்மை கலாநிதி பிரஸ், சென்னை	1888
10. சுப்பிரமணிய சுவாமிகள்	ஸ்ரீ நிலையம் அச்சுக்கூடம், சென்னை	1889
11. ஊ. புஷ்பரதச் செட்டியார்	கலாரத்நாகரம் அச்சுக்கூடம், சென்னை	1889
12. சுப்பிரமணிய சுவாமிகள்	ஸ்ரீ நிலைய அச்சுக்கூடம்	1889
13. மணி. திருநாவுக்கரசு முதலியார்	வாவிள்ளா பிரஸ், சென்னை	1927

2. வள்ளுவத்தில் மொழி

தி. சு. சத்தியம்

ஆய்வுத் துணைவர், திருக்குறள் ஆய்வுப் பகுதி,
தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

1. முன்மொழி

வள்ளுவரின் கருத்துகள் காலம் பல கடந்து வாழ்கின்றன என்றால், அச்சிறப்பு கருத்துகளின் பொருண்மையை மட்டும் சாராது, பொருண்மைக்குப் பொலிவும் வலிவும் ஊட்டும் வடிவத்தையும் சாரும் எனலாம். 'திருக்குறள்' வடிவத்தால் பெயர் பெற்றமையும் திருக்குறளின் பெருமையில் வடிவம் பெறும் பங்கை உணர்த்தும். வள்ளுவரின் கருத்துப்புலம் மொழிப்புலத்தால் மேன்மையுறுவதை,

> "பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
> தெரிந்து திறந்தொறும் சேரச்—சுருங்கிய
> சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
> வல்லாரார் வள்ளுவரல் லால்" [1]

எனும் அரிசில்கிழாரின் வியப்புமொழியும் விரியக் காட்டும். மொழி பற்றிய மிகத் தெளிந்த சிந்தனையும் தேர்ந்த அறிவும் உடையவர் வள்ளுவர் என்பதில் ஐயமில்லை. அவருடைய மொழி பற்றிய சிந்தனைகள் வள்ளுவத்தில் இடம் பெற வாய்ப்புண்டா? இடம் பெற்றுள்ளனவா? எவ்வகையில்? எந்நோக்கில்? இவ்வினாக்களுக்கு விடைதேடி வள்ளுவத்தைப் புரட்டிய போது......வள்ளுவர் புதியதொரு புலமைச் சுடருடன் அறிமுகம் தந்தார்.

1. 1. மொழி, மொழியின் இலக்கியம் இரண்டிற்கும் இலக்கணம் கூறப் போந்த தொல்காப்பியர் இவ்விரண்டிற்கும் மனித வாழ்வின் மீதுள்ள செல்வாக்கை நினைந்து, வாழ்விலக்கணத்தையும் உடன் இணைத்துக் கூறினார். இலக்கண உலகில் இப்புதுமை வேறெம் மொழியிலும் காணுதற்கில்லை எனத் தமிழ்ப்புலவோர் பெருமையுடன் கூறி மகிழ்வர். மொழி இலக்கிய இலக்கண நூலில் வாழ்க்கைக்கும் இடம் தந்த தொல்காப்பியரின் புது முயற்சியைப் போன்று, வாழ்விலக்கண நூலில் மொழிக்கும் இடம் தந்து வள்ளுவரும் ஒரு புதுமையைச் செய்துள்ளார்.

1\. 2. வள்ளுவரின் முழுச்சிந்தனை வாழ்வாங்கு வாழும் வாழ்க்கையைப் பற்றியதுதான். உயரிய வாழ்க்கைக்கு உறுதுணையாக அமைபவையெல்லாம் அவர் ஆய்வுக்குப் பொருளாகின்றன. வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து, மனித வாழ்க்கையை விலங்கு வாழ்க்கையினின்றும் பிரித்துயர்த்தும் முதற்படியிலேயே கைகொடுத்து, வளர்ச்சிப் படிகளிலெல்லாம் துணை நிற்கும் மொழியையும் அவர் ஆய்வுச் சிந்தனை வளைத்துவிடுகின்றது. மொழியின் ஆற்றல், இயக்கம் அறிந்து மொழி வழிப் பயனடையும் திறமை, மொழி வழிப் பண்படும் தகைமை ஆகிய பொது நிலைகளில் மொழியை ஆயும் வள்ளுவர், மேலும் பல சிறப்பு நிலைகளில் நுணுகி ஆய்ந்து பல பயன்மிகு உண்மைகளை வாழ்வாங்கு வாழும் வாழ்க்கைக்குப் பரிசாக்குகின்றார்.

1\. 3. வள்ளுவரின் மொழிசார் சிந்தனைகளுக்குத் தனியுரிமையுடையனவாக, சொல்வன்மை, அவையறிதல், அவையஞ்சாமை, இனியவை கூறல், வாய்மை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை கேள்வி, குறிப்பறிதல் (2) ஆகிய பத்து அதிகாரங்கள் விளங்குகின்றன. இவற்றில் மட்டுமன்றி ஒல்லும் இடங்களில் எல்லாம் வள்ளுவர் சிந்தனை மொழியைத் தழுவுகின்றது. அவற்றுள் சிலவற்றை விளக்கும் இன்பப் பணியில் ஈடுபடுகின்றது இக்கட்டுரை.

2. முதற்குறள் முழங்கும் மொழியறிவு

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு." (1)

இக்குறளில் இரு கருத்துக்கள் எடுத்துரைக்கப்படுகின்றன.

1\. எழுத்துக்களின் முதல் எது? 2. உலகின் முதல் எது (அ) யார்? முதல் கருத்தே மொழி பற்றிய நம் சிந்தனைக்கு உரித்தாகின்றது. 'எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாக உடையன. எழுத்தொலிகளுக்கெல்லாம் அகரம்தான் அடிப்படை' என்ற இந்தக் கருத்தை வள்ளுவருக்கு முந்திய பிந்திய எந்த இலக்கண நூலும் இயம்பவில்லை. தொல்காப்பியரும்,

"எழுத்தெனப் படுப
அகர முதல் னகர இறுவாய்
முப்பஃ தென்ப" [2]

என, தமிழ் மொழியின் அடிப்படை ஒலிகளின்-எழுத்தொலிகளின் தொகையைக் குறிக்கையில் அவற்றின் நிரலில் முதலில் நிற்பது அகரம், ஈற்றில் நிற்பது னகரம் என்ற செய்தியையும் இணைக்கின்றார். ஆனல், அடிப்படை ஒலிகளின் நிரலில் அகரம் முதலிடம் பெறுவது ஏன் என்று விளக்கவில்லை.

'அகர முதல எழுத்தெல்லாம்' என்ற தொடரில் இவ்வினுவிற்கு விடையளிக்கின்ருர் வள்ளுவர். இத்தொடரின் பொருளைப் பின்வரும் முறையில் தெளியலாம்.

1. அகர முதல எழுத்தெல்லாம்.

↓

2. எழுத்து எல்லாம் அகர முதல.

↓

3. எழுத்து எல்லாம் அகர(த்தை) முதல(ாக உடையன).

↓

4. எழுத்து எல்லாம் (தமக்கு) அகர(த்தை) முதல(ாக உடையன).

↓

5. எழுத்து எல்லாம் (தம் இயக்கத்திற்கு) அகர(த்தை) முதல(ாக உடையன).

எழுத்துக்கள் அகரத்தை முதலாக உடையன என்ருல், எதற்கு? என்ற விஞ எழுகின்றது. எழுத்துக்களின் உயிர்ப்பு விளையே இயக்கமாதலால் அவ்வியக்கத்திற்கு அகரத்தை முதலாக உடையன என்பதே பொருந்துவது. எழுத்துக்களின் இயக்கத்திற்கு அடிப்படைக் காரணம் அகரம் என்பது இதன் வழி விளங்கும் பொருள். இவ்விளக்கம் எழுத்து நிரலில் அகரம் முதலிடம் பெற்ற காரணத்தையும் விளக்கி விடுகின்றது. 'முதற்குறள் உவமை' என்னும் நூலாசிரியர், கு. கோதண்டபாணி பிள்ளை அவர்கள், தம் விரிந்த ஆய்வில் 'எழுத்துக்களின் இயக்கத்திற்கு அகரம்தான் முதல்' என்ற கருத்தினைத் தெளிவாக்குகின்ருர்.[3]

"சிறப்பினும் இனத்தினும் செறிந்தீண் டம்முதல்
நடத்த ருனே முறையா கும்மே"[4]

என நன்னூலார், இனம், சிறப்பு எனும் இரு காரணம் நோக்கி, அகரம் முதலிடம் பெற்றது என்கின்ருர். இவற்றினும் வள்ளுவர் உணர்த்தும் 'இயக்கம்' எனும் காரணம் நுட்பம் மிக்கதாகத் தோற்றுகின்றது. ஒலிகளின் இயக்க இயல்பை நுணித்தாய்ந்து, மொழி இலக்கண நூலாரும் விளக்காத நுட்பத்தை, வாழ்விலக்கணம் உணர்த்தும் நூலின் முதல் மொழியிலேயே இணைத்து விடுகின்ருர் வள்ளுவர். எழுத்தொலிகளின் முதலை இங்கு அவர் உணர்த்த வேண்டியதன் கடப்பாடு யாது? வாழ்வியலின் முதல் உணர்த்த, மொழி-ஒலி இயலின் முதல் உணர்த்தி, வாழ்க்கைக்கும், மொழிக்கும் உள்ள இடையருப் பிணைப்பை உணரச் செய்கின்ருர். மொழியியலைத் தனி இயலாகப் பயிலுவதோடு, வாழ்வியலோடு இணைத்துப்

பயிலும் முறைகள் (Socio Linguistics, Psycho Linguistics, Neuro Linguistics etc.,) அண்மையில் தோன்றி விரைந்து வளர்கின்றன. வள்ளுவர் அன்றே மொழி இயலை வாழ்வியலோடு இணைத்துப் பயில வேண்டியதன் இன்றியமையாமையை முதற் குறளிலேயே மறை பொருளாக்கினர்.

3. மொழியறிவு வழங்கும் வாழ்க்கை

மொழி-ஒலி இயலின் நுட்பத்தை உவமையாக்கி வாழ்க்கை நூல் தொடங்கிய வள்ளுவர், வாழ்க்கையில் மொழியின் பங்கு எத்தன்மைத்து, எவ்வளவிற்று என்பனவற்றை மிகத் தெளிவாகக் கணித்தறிந்துள்ளார்.

"சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு" (27)

எனும் குறள், அறிவியல் அறிவின் (The Knowledge of Science) பேராற்றலை உணர்த்துவது. இயற்கையின் ஐம்பெரும் புலங்களை அலசி ஆய்ந்து, பல புதுமைகளைக் கண்டு உலகப் பயன் பாட்டிற்கு வழங்கும் அறிவியல் அறிஞனை நம்பி உலகம் உள்ளது என்கின்றார் வள்ளுவர். ஐம்புல ஆய்வில், ஓசைப்புல ஆய்வு இவண் கருதற்குரியது. இவ்வாய்வில் மலர்ந்த புதுமைகளில் மொழியும் ஒன்று. ஆம், ஓசை வகை தெரிந்த அறிவே மொழியைப் படைத்தது. ஓசை பற்றிய ஆய்வு பெரிதும் பரிமாற்றத் துறைக்கே (Communi cative Purpose) பயன்படுவதும் நோக்குதற்குரியது. மொழியின் தோற்றத்திற்கு மட்டுமன்றி, வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் வள்ளுவர் குறிப்பிடும் ஓசை வகை தெரியும் அறிவு இன்றியமை யாதது. இவ்வறிவின்றி ஒரு மொழியைக் கற்றுக் கொள்ளலோ கற்பித் தலோ ஆகாது. சிறப்பாகத் தாய்மொழியல்லாப் பிறமொழிகளைக் கற்கையிலும் கற்பிக்கையிலும் இந்த அறிவின் பயன் மிகுதி. இக் குறளின் 'கட்டே உலகு' என்ற ஏகாரத் தொடரை நடைமுறைப் படுத்த வேண்டுமென்றால்-உலகையே ஒன்றுபடுத்தி இயக்கவேண்டு மென்றால், அப்பொழுது எழும் பல சிக்கல்களில் மொழிவேற்றுமைச் சிக்கல் முதலிடம் பெறும். இச்சிக்கலுக்குத் தீர்வு காண ஓசை வகை தெரியும் அறிவு மிக மிக இன்றியமையாதது. உலகளாவிய கூட்டு வாழ்க்கையில் மொழியறிவின் இன்றியமையாமையை உணர்த்தும் குறள் இது. இக்குறளுக்குத் தத்துவப் பொருளே வழிவழியாகக் கூறப்பட்டதன் விளைவால் ஓசை வகை தெரியும் ஆற்றலில் மொழியறிவை இணைத்துக் காண இயலாது போயிற்று.

3.1 உலகணைந்த கூட்டு வாழ்விற்கு மொழியறிவின் இன்றி யமையாமையை உணர்த்திய வள்ளுவர் வாழும் உயிர் என்ற தகுதி பெறவே, மொழியறிவு கண்டிப்பாகத் தேவை எனப் பிறிதொரு குறளில் அழுத்தமாக ஆணையிடுகின்றார்.

"எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு" (392)

என்பதே அவ்வாணைமொழி. இங்கு 'எண்' என்பதில் அறிவியற் கல்வியையும் (எண் இல்லா அறிவியல் இல்லை), 'எழுத்து' என்பதில் மொழியியற் கல்வியையும் குறிக்கின்றார் எனலாம். ஓசை வகை தெரியும் அறிவியலின் பிறப்பு, மொழி எனக் கண்டோம். இங்கு, அறிவியற் கல்வியையும். மொழியியற் கல்வியையும் வள்ளுவர் ஏன் தனித்துக் கூறுகின்றார்? எனச் சிந்திக்கையில் மொழியியலில் மொழியிலக்கணத்தோடு, மொழியின் படைப்பையும் – இலக்கியத்தையும் இணைத்து எண்ணியிருத்தல் கூடும் என்ற கருத்தினைப் பெறுகின்றோம். மேலும் மொழியியற் கல்வி கற்பார்க்கு இலக்கியக் கல்வியும், இலக்கியம் பயில்வார்க்கு, பயிற்றுவிப்பார்க்கு, ஏன் படைப்பாருக்குமே மொழியியற் கல்வியும் தேவை என்பதையும் இதன் மூலம் உணருகின்றோம். 'இவையிரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு' என்பதனால், வாழும் உயிர் என்னும் தகுதி பெற வேண்டுமானால், கண்டிப்பாக அறிவியல் அறிவையும் மொழியியல் அறிவையும் பெற்றாக வேண்டும் என்பது பெறப்படும். வள்ளுவர் வாழ்வியலில் அடிப்படைக் கல்வியாக மொழியியற் கல்வியைக் குறிப்பிடுகின்றார். இன்றோ அக்கல்வி ஒரு தனித் துறையார்க்கு மட்டுமே உரியதாகிவிட்டது. பிறரெல்லாம் பெரும்பாலும் மொழியியற் கல்வியைப் புறக்கணித்து விட்டனர் என்றே கூறலாம். இப்புறக்கணிப்பின் விளைவுகளை,

> "ஒரு காலத்திலே மொழியை ஆராய்வதுதான் – இலக்கணப் படிப்புத்தான் படிப்பு என்றும் கல்வி என்றும் கருதப்பட்டது என்று கூடச் சொல்ல முடியும். பல்கலைக்கழகங்கள் ஏற்பட்டு ஆங்கிலக் கல்வி முறைகள் பரவிய இடைக் காலத்தில்கூட இலக்கணக் கல்விக்கு 'மரியாதை' இருக்கத்தான் செய்தது. ஆனால், எப்படியோ நாளா வட்டத்தில் நம்மை அறியாமலே இலக்கணக் கல்வியைப் புறக்கணித்து விட்டோம்; இலக்கணம் கற்பதன் மூல காரணத்தையும் மறந்து போனோம். அதன் விளைவாகப் பல துறைகளிலும் தெளிவில்லாத நிலை ஏற்பட்டுவிட்டது,"[5]

என 'மொழி இயல்' எனும் நூலின் ஆசிரியர்கள் (டாக்டர் மா. சு. திருமலை, டாக்டர் கி. கருணாகரன்) வருந்திக் கூறுகின்றனர். இவ்விளைவுகளையெல்லாம் தெளிவாக உணர்ந்திருந்தமையால்தான், அறிவியற் கல்வியோடு மொழியியற் கல்வியையும் அடிப்படைக் கல்வியாக ஒவ்வொரு மனிதனும் கண்டிப்பாகப் பெற்றாக வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

"எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும் — மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"[6]

எனும் பாடலை, மேற்கண்ட குறளுக்குப் பொருத்தமான மேற்கோளாகப் பரிமேலழகர் காட்டுகின்றார். இப்பாடலும் மொழியியல் அறிவு வாழ்விற்கு எத்துணை இன்றியமையாதது என்பதைத் தெளிவுறுத்துகின்றது.

4. மொழியாற்றல்

வாழ்க்கையின் ஒளிப்பார்வைக்கு ஒரு கண்ணாகும் மொழியறிவு என உணர்த்திய வள்ளுவர், மொழியின் இருவகைஆற்றலையும் - ஆக்கல், அழித்தல் - ஏற்ற முறையில் எடுத்தியம்பத் தவறவில்லை. அரும் பெரும் ஆற்றல்களில் இவ்விரு திறமும் இணைந்திருத்தல் இயற்கையே. ஆனால், எத்திறம் பயனாகும் என்பது அவ்வாற்றல்களை ஆளும் முறைமையைப் பொறுத்தது. மொழியை ஆளும் முறைமையிலும் இவ்விரு திறங்களைப் பயனாகப் பெறக் கூடும்.

4.1 மொழியாற்றலை ஆக்க வழிக்குட்படுத்தலின் பேரெல்லையாக வள்ளுவர் குறிப்பிடுவது — உலகையே ஏவல் கொள்ளுதலாம்.

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்." *(648)*

மொழியின் திறமறிந்து ஆண்டால் உலகையே ஆளலாம் என்கின்றார். ஆயின், இத்திறம் பெறல் அரிது. அரும் முயற்சி - அரு முயற்சியில் மலரும் குறிஞ்சியிது என்ற உண்மையைப் 'பெறின்' என்ற எச்சத்தாற் பெற வைக்கின்றார். மொழியாற்றல் விளைக்கும், 'ஞாலம் விரைந்து தொழில் கேட்கும்' அரும்பயன் வேண்டின் அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்.

4.2 மொழியைத் திறம்பட ஆளுவதால் எத்துணை நன்மையோ அத்துணை தீமை திறமின்றி ஆண்டுவிட்டால். மொழியாற்றலின் ஆக்கப் பேரெல்லையைச் சுட்டிய வள்ளுவர் அதன் அழிவாற்றலையும் உடன் எண்ணி, மொழி ஆட்சியில் பெரும் விழிப்புணர்ச்சி தேவை என்கின்றார்.

"யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு." *(127)*

"ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு." *(642)*

மொழிவழி அழிவைத் தேடிக் கொள்ளாதே என எச்சரிக்கின்றார் இக்குறள்களில்.

4.3 தனிமனிதனை மொழிவழிக் கேட்டினின்றும் காப்பாற்ற எச்சரித்த வள்ளுவர், சமுதாயத்தை மொழிவழிக் கேட்டினின்றும் காக்க,

"வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை" (872)

என்ற எச்சரிக்கையை விடுக்கின்றார். வில்லேருழவர்பகை விளைக்கும் அழிவு பெரும்பான்மையும் புறநிலை அழிவே. சொல்லேருழவர்பகை விளைக்கும் அழிவோ அகநிலை அழிவு. முன்னது உடல் உயிரைப் பிரிக்கலாம். பின்னதோ மனித உயிரைப் பிற உயிர்களினின்றும் பிரித்துயர்த்தும் பண்புயிரை அல்லவோ அழித்து விடும்! சொல்லேர் உழவர்கள் சமுதாயத்தின் அகப்பயிரை (பண்புயர்ச்சி + அறிவகற்சி) விளைத்திட மொழியை உழுகருவி யாக்கிக் கொண்டவர்கள். பண்பாட்டு உழவரை, 'சொல் ஏர் உழவர்' என வள்ளுவர் உருவகித்ததன் நோக்கம், அவர்தம் உயரிய கடமைக்குக் கருவியாகும் மொழியின் சிறப்பாற்றலை ஆழ உழுது காட்டவே எனலாம்.

5. மொழி தரும் இன்பம்

அன்புலகை அருள் உலகாக்கப் பிறக்கும் குழந்தைச் செல்வங் களின் கனிவாயில் குழைந்து விளையாடும் மொழிதரும் இன்பம் பற்றிய வள்ளுவர் மொழி, நம் மொழி பற்றிய சிந்தனைக்கு இன்பம் நல்கும் விருந்தாகும்.

"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு." (65)

மெய் மெய்யைத் தீண்ட உடல் இன்பம் பிறக்கின்றது. ஒலி செவியைத் தீண்ட மொழி இன்பம் பிறக்கின்றது. பின்னதன் தீண்டல் நுண்ணியது (obstract). இந்நுட்பத் தீண்டல்வழிப் பிறக்கும் இன்பமும் நுட்பம் சான்றது என்பதை உணர்த்தவே உடலின்பத் தினின்றும் செவியின்பத்தைப் பிரித்துக் காட்டுகின்றார் போலும்! மேலும், குழந்தைகள் மழலையில் யாரும் பொருள் தேடுவதில்லை. இங்கு பொருள் இன்பம் பயப்பதில்லை. பேச்சொலியே இன்பம் பயக்கின்றது. ஒலியலைத் தாக்குதலுறும் செவிக்கே இன்பம் மழலைப் பேச்சு; அறிவுக்கு அன்று என்ற நுட்பத்தையும் 'செவிக்கு இன்பம்' என்ற தொடரால் உணரச் செய்கின்றார்.

6. மொழித்தேர்வு / தேர்ச்சி

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் மொழித்தேர்வில் சிறந்த தேர்ச்சி பெறவேண்டும். மொழித் தேர்வில் இரு பிரிவுண்டு. ஒன்று – மொழிதல் திறம்; இரண்டு – மொழியுணருந் திறம்.

வள்ளுவரின் காமத்துப்பால் தலைவிக்கு, தன் மொழியுணருந் திறத்தில் ஐயம் பிறக்கின்றது. ஏன்?

"அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க்கு உண்டோ தவறு." (1154)

தலைவன் தெளிவாகச் சொன்னான். தலைவி அவன் சொல்லைத் தேறினாள். பின் அவன் மாறினான். சொல்லுக்கும் செயலுக்கும் முரண். தலைவி புலம்புகின்றாள். 'மொழித் தேர்வில் நான் தவறி விட்டேனா? மொழியையும் விழியையும் சேர்த்தல்லவா படித்தேன்? அவர் கூறிய மொழியை உணரும் ஆற்றல் (Language Competence) எனக்கில்லையா? தெளித்த சொல்லை நன்கு உணர்ந்தன்றோ தேறினேன். இப்பொழுது தவறு என்னுடையது என்று குறை கூறுகின்றனரே!' மொழியுணர்தலில் இவள் தவறு யாது? மொழியையும் விழியையும் படித்தால் மட்டும் போதாது. உள்ளத்தையும் ஒப்பிட்டுப் படித்தல் வேண்டும். இத்திறத்தோடு மொழித் தேர்வில் தேர்ச்சி பெறவில்லையாயின், வாழ்க்கைத் தேர்விலும் தவறி விடக் கூடும் என்ற குறிப்பைத் தலைவியின் புலம்பலில் பின்னொலி யாக்குகின்றார் வள்ளுவர்.

6.1 மொழியுணர்தலில் ஏற்படும் சில சிக்கல்களை மேலும் சில குறள்களில் குறித்துள்ளார் வள்ளுவர்.

"கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு." (819)

இதில் சொல்லுக்கும் செயலுக்கும் நேரடி இயைபின்மையை - உறவின்மையைக் குறிக்கின்றார்.

"மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினால் தேறற்பாற்று அன்று." (825)

இக்குறளில் மனத்திற்கும் சொல்லிற்கும் நேர்முக இயைபின்மையை உணர்த்துகின்றார். மொழியுணர்தலில் இவ்வியைபின்மைகள் இடர்ப்பாடுகளாகும். இவற்றைக் கடந்து உண்மையுணர்தல் எப்படி? மொழியறிவோடு உளவியலறிவும் இதற்குத் தேவை.

"உறாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்
ஒல்லை உணரப் படும்." (1096)

சொல்லின் நடிப்புத் திரையைக் கிழித்து உண்மைப் பொருளை ஒல்லை உணர உளவியல் அறிவே துணை செய்யும் என்ற குறிப்பை இக்குறளில் தருகின்றார் வள்ளுவர்.

"செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன்று உற்றார் குறிப்பு" (1097)

என்ற குறளில் மொழியுணர்தலின் நுண்திறத்தைக் குறிக்கின்றார். என்னதான் உள்ளத்தைத் திறம்பட மொழியால் மறைத்தாலும்

அதில் உண்மை ஏதேனும் ஒரு குறிப்பாய்த் தொனிக்கக் கூடும். புறநிலை வடிவிலிருந்து (Surface Structure) அகநிலை வடிவை (Deep Structure) வடிக்கையில் உளவியலையும் இணைத்தால் கிடைக்கும் வடிவம் உண்மையைக் கோடிட்டுக் காட்டும். மொழியுணர்தலில் இந்நுண்திறம் இன்றேல் வாழ்வின் பரிமாற்றத்தில் சுவைகுன்றுவதோடு பிறழ உணரும் குற்றத்தின் பயனுகும் துன்பங்களையும் துய்க்க நேரிடும்.

மொழியுணர்தலில் குறுக்கிடும் இடர்களையும் அவற்றைக் கடக்கும் நுட்பத் திறங்களையும் இக்குறள்களால் வள்ளுவர் உணர்த்துகின்றூர். வாழ்க்கைத் தேர்வில் வெற்றி பெற மொழித் தேர்விலும் வெற்றி பெற்றாக வேண்டும். மொழித் தேர்வில் வெற்றி பெற வள்ளுவர் குறிக்கும் நுட்பங்களையும் கருதுதல் வேண்டும்.

மொழியாட்சியின் திறம் மிக, பயன் விரிய வள்ளுவர் சிலவகை மொழியாய்விலும் ஈடுபடத் தூண்டுகிறார்.

7. மொழி ஆய்வு

7.1 "இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்." *(712)*

இவண் 'நடைதெரிதல்' - என்பதில் சொற்களைப் பகுத்து அவற்றின் பொருள் கூற்றினை அறிதல், பொருளின் இயைபுக்கேற்ற சொற்களை இணைக்கும் திறம் அறிதல் ஆகிய பகுப்பாய்வும் தொகுப்பாய்வும் குறிக்கப்படுகின்றன. 'இடைதெரிதல்' - என்பதில் பேசும் பொருளைக் கேட்போரின் உணரும் திறனோடு ஒப்பிட்டு ஆயும் ஒப்பாய்வு குறிக்கப்படுகின்றது.

7.2 "சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து." *(645)*

இக்குறளில் சொல்தேர்ச்சியும் (Selection of words) சொற்களை முறைப்படுத்தலும் (arrangement of words) குறிக்கப்படுகின்றன. சொல் தேர்ச்சிக்கும், முறைப்படுத்தற்கும் சொல்லின் அமைப்பும் இயக்கமும் (Structure and function of the word) அறியும் திறம் தேவை.

"திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூங்கு இல்" *(644)*

எனும் குறளில், 'திறனறிந்து' என்பது, சொல்லின் மேற்கண்ட இரு திறத்தையும் குறிப்பதாகக் கருதலாம். 'அறனும் பொருளும் அதனினூஉங்கு இல்' என்பதால் அவற்றின் இன்றியமையாமை புலப்படுத்தப்படுகின்றது.

7.3 "ஒற்றொற் றுணராமை ஆள்க உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும்." (589)

இக்குறளில், மொழிப் பொருள் ஒப்பாய்வை வலியுறுத்துகின்றார் வள்ளுவர். பேசும் பொருள் பற்றிய ஒப்பாய்விற்குப் பேசும் முறை பற்றிய ஒப்பாய்வும் தேவை. இவன் **எதை, எப்படிச்** சொன்னான்? அவன் **எதை, எப்படிச்** சொன்னான்? எனச் சொல்லிய முறையையும் உடன் வைத்து எண்ணும்போதே உண்மைப் பொருள் புலனாக முடியும். மேலும், அரசியலில் மொழியாய்வு எந்த அளவிற்கு இன்றியமையாதது என்ற குறிப்பினையும் ஒற்றாடலில் அமையும் இக்குறளில் பெறுகின்றோம்.

7.4 குழந்தை மொழி, குறு மொழி, தொழில் மொழி என்றெல்லாம் மொழியினைப் பல வகையில் பகுத்தாய்வர் மொழியியலார்.

> ''சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
> தீங்கு குறித்தமை யான்.'' (827)

என்ற குறளில் பகைஞர்மொழி எனும் பகுப்பைச் செய்து, 'சொல் வணக்கம்' என அதற்குப் பெயர் சூட்டி, அம்மொழியின் இயல்பை வில் வணக்கத்தோடு உவமிக்கும் முறையால் விளக்குகின்றார்; பகைமொழிப் பொருளை உணர்ந்து விழிப்புடன் செயல்பட வேண்டும் என்ற எச்சரிக்கையினை வழங்குகின்றார். பகைமொழியறியும் திறம் இன்றேல் ஏமாற்றத்திற்கு வாழ்க்கையை ஆளாக்கி அழிந்துபட வேண்டியதுதான் என்ற உண்மையை உணர்கையில் வாழ்வியலில் மொழியாய்வின் சிறப்புத் தேவை செவ்விதின் புலனும்.

8. மொழியின் தோல்வி

மொழியின் தாக்கம் வாழ்வியலில் உள்ளமை போன்றே வாழ்வியலின் தாக்கமும் மொழியில் உண்டு. வாழ்வின் எத்துறையிலும் ஆட்சி செலுத்தும் மொழி, வாழ்க்கையின் சில சிக்கல்களில் சிக்கித் தவிப்பதுமுண்டு; சிலபோது தோற்பதுமுண்டு. மொழி தோற்கும் ஓரிடத்தை வள்ளுவர்.

> "நற்பொருள் நன்குணர்ந்துச் சொல்லினும் நல்கூர்ந்தார்
> சொற்பொருள் சோர்வு படும்" (1046)

எனும் குறளில் சுட்டுகின்றார். கூர்த்த மொழியறிவின் பின்னணியில் சீர்த்த பொருளைச் சிறக்கப் பேசினும், அவர் மொழியின் பொருளை, பொருளற்ற அவர் வறுமை சிதைத்துவிடும் என்ற உண்மையை உணர்த்துகின்றது இக்குறள். மொழியின் பொருள் மொழிவோரின் மொழியறிவையும் மொழிதற்றிறத்தையும் மட்டும் பொறுத்ததன்று. மொழிவோர் வாழும் சமுதாயத்தின் பொருளாதார ஏற்றத் தாழ்வையும் பொறுத்தது. பொருளற்றவரையும் பொருளாகச் செய்யும் பொருள் என்னும் செல்வச் செவிலியின் அன்புறவு அற்றோர், எத்துணை மொழியறிவு பெற்றும் பயனில்லை. இப்

பொருளின் வலிமை முன் மொழியின் பொருள் வலிமை தோற்றுத் தான் போகும் என்ற உண்மையைப் புறக்கணித்தல் ஆகாது. மொழியையும் தாக்கும் இச்சமுதாயச் சிக்கலுக்குத் தீர்வு காணத் தான் வேண்டும். சமுதாயக் காவலரையும் மொழியியல் அறிஞரையும் ஒருங்கு சிந்திக்கத் தூண்டும் சிக்கலிது. மொழியும் வாழ்வும் முரணும் மோதும் இச்சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற துடிப்பை, வள்ளுவரின் மேற்கண்ட குறள் நல்கு கின்றது.

9. மொழியல் பரிமாற்றம்

மொழி - கருத்துகளை, உணர்ச்சிகளைப் பரிமாற்றும் கருவி. ஆனல், எப்போதும் மொழி வழியே - ஒலி/வரி மொழிவழியேதான், பரிமாற்றம் நிகழ வேண்டும் என்பதில்லை. வேறு சில வகைப் பரிமாற்றங்களும் உள. சிலவற்றை வள்ளுவரும் குறிக்கின்ருர்.

9.1 "கண்ணெடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல." *(1100)*

இவண், வள்ளுவர் குறிக்கும் பார்வைமொழி - ஒளிவழி மொழி, ஒலி மொழியை வென்றடக்கித் தன் பயன் பெருமையைப் பேசாமற் பேசுகின்றது.

9.2 "தொடிநோக்கி மென்ருேளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண்டு அவள் செய்தது." *(1279)*

நோக்கின் நோக்குணர்ந்த தலைவன், தலைவியின் நோக்க மொழித் திறனை வியந்து மொழிகின்ருன். அன்புலகில் வாய்மொழியினும் கண்மொழியே இனிமையும் எழுச்சியும் இசைவும் உடையது என்பதனை அவன் வியப்புமொழி விளக்கி நிற்கின்றது.

9.3 "முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன்று உண்டு." *(1274)*

இக்குறளில் புன்னகை மொழியின் பேச்சைக் காணலாம்.

9.4 கேள்வி மொழியினும் காட்சி மொழிகளாம் - நோக்க, நகை மொழிகளை - குறிப்பு மொழிகளை ஆளவும் அறியவும் நுண்ணிய திறம் தேவை. எப்பொழுது எவரிடம் எவ்வளவில் ஆள வேண்டும் என்ற பண்பாடும் உணர்ந்திருக்க வேண்டும். குறிப்பு மொழி பொது வாழ்விலும், தனி வாழ்விலும் பெறும் இன்றியமையாச் சிறப்பைத் தெளிவுறுத்தவே, பொருட்பால் அமைச்சியலில், 'குறிப் பறிதல்'எனும் அதிகாரத்தையும், காமத்துப்பாலில், 'குறிப்பறிதல்', 'குறிப்பறிவுறுத்தல்' எனும் அதிகாரங்களையும் அமைத்துள்ளார் வள்ளுவர்.

10. மொழியும் பண்பும்

மனித வாழ்க்கையின் மாண்பு, பண்புயர்ச்சியைப் பற்றிச் சுற்றுவது. அறம் பயிற்றும் எவரும் இவ்வுண்மையை மறவார். 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்' எனத் தெளிந்த வள்ளுவப் பண்பாளர் மொழிந்த குறள்களெல்லாம் பண்பைக் காக்கும் ஊக்கும் உயர்த்தும் பண்பை உள்ளீடாகக் கொண்டன. மொழி பற்றிய வள்ளுவச் சிந்தனைகளிலும் பண்பின் துடிப்பினை உணரலாம். மொழியின் ஆற்றலை வாழ்வினைப் பண்படுத்த எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் எனச் சிந்திக்கின்றார் அவர். அவர் சிந்தனை, மொழியில் பண்புகளைக் காண்கின்றது; மொழிதலில் மொழியும் முறையில் பண்புகளை நோக்குகின்றது; மொழிவழிப் பண்புகளை உணருகின்றது.

10.1 மொழியின் பண்பு

"நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து." (194)

வள்ளுவர் சொற்களைப் பண்பின் தலைப்பிரியாச் சொல், பண்பில் சொல் எனப் பகுக்கின்றார். சொற்களின் பண்பு யாது?

"இன் சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்" - (91-1)

என்ற குறள் மொழியில் சொல்லின் பண்புகளைக் குறிக்கின்றார்.

1. இனிமை — ஒலியிலும் பொருளிலும்
2. ஈரம் — ,, ,,
3. படிறின்மை — அமைப்பிலும் பயனிலும்

இப்பண்புகளை மொழியின் தனிப் பண்புகளாகக் குறிக்கும் வள்ளுவர், இவற்றினும் உயரிய பண்பினையும் மொழி பெற்றிருக்க வேண்டும் எனக் கருதுகின்றார். அப்பண்பு - நயன் சாரும் நன்மை பயக்கும் பண்பு. இதனைப் 'பெரும்பயன்' எனப் போற்றுகின்றார் பிறிதொரு குறளில்.

"அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்" (198)

இப்பெரும் பயன், மொழிப் பண்புகளை வாழ்வியல் பண்புகளோடு இணைத்துப் பெறும் பயனே. சொல்லுக்குச் சொற்பொருள் பயனோடு, வாழ்வின் நிலைக்களங்களில் பொருந்தும் பொருட் பயனையும் (Semantic value relevent to the mode of life) வழங்கல் வேண்டும். இதற்கு அரும்பயன் ஆயும் அறிவு தேவை என்கின்றார். சமுதாயத்தில் மொழியின் இயக்கத்தையும், பண்பாட்டையும் அறிகின்ற சமுதாய மொழியியல் ஆய்வு (Socio Linguistic Study) எத்துணை இன்றியமையாதது எனவும் சிந்திக்கத் தூண்டுகின்றார்.

அரும்பயன் ஆயும் அறிவினர் சொல்லார் என்றவர் அப்படியொரு தனியினம் இருக்கத் தேவையில்லை. எல்லோருமே அவ்வறிவினை வளர்த்து, மொழிப்பயன் உணர்ந்து, பேசிப் பயன் பெற வேண்டும் என்ற நோக்கில்,

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்" (200)

எனும் ஏவற்குறளை எல்லோருக்கும் உரிமையாக்குகின்றார்.

10.2 மொழியும் பண்பு

"வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்." (646)

உரையாடலுக்கு இருதிறத்தார் – பேசுவோர், கேட்போர் – தேவை இவ்விரு திறத்தாரும் மாறி மாறி இயங்குவர் மொழி உலகில். இவ்விரு நிலைகளிலும் ஒருவன் கடைப் பிடிக்க வேண்டிய தலையாய பண்புகளை இக்குறளில் துல்லியமாக்கிக் காட்டுகின்றார் வள்ளுவர்.

மொழியியலார் மொழித் திறத்தை நான்காகப் பகுப்பர்.

1.	Listening Skill	—	கேட்கும் திறம்
2.	Speaking Skill	—	பேசும் திறம்
3.	Reading Skill	—	படிக்கும் திறம்
4.	Writing Skill	—	எழுதும் திறம்
1+3	— receptive Skill	—	உணரும் திறம்
2+4	— productive Skill	—	உணர்த்தும்/படைக்கும் திறம்

வள்ளுவர் பொது நிலையில் உணரும் திறம், உணர்த்தும் திறம் பற்றியும், சிறப்பு நிலையில் பேசும் திறம், கேட்கும் திறம் பற்றியும் இங்குப் பேசுகின்றார்.

'வேட்பச் சொல்லல் — பிறர் விரும்பப் பேசுதல்'

இதற்கு மொழித்திறம் மட்டும் போதாது. கேட்போரின் உளவியல், வாழ்வியல் ஆகிய பின்னணிச் சூழல்களை உணரும் ஆற்றலும், அறிவும் தேவை.

'பிறர்சொல் பயன்கோடல்'

இதற்கும் திறம் மிகத் தேவை. பேசுவோர் சொல்லின் பொருள் அறிந்தால் மட்டும் போதாது. அவரின் நோக்கம், நோக்கத்திற்கு அடிப்படையான பின்னணிகள் ஆகியவற்றை ஊகித்தறிவதோடு, நடைமுறை வாழ்வில் அவை எந்த அளவிற்குப் பொருந்துகின்றன எனப்பயன் காணும் திறமும் தேவை. இவற்றையெல்லாம் செறித்துப் பேசும் பண்பாகவும் (Productive Culture), கேட்கும் பண்பாகவும்,

(Receptive Culture) வள்ளுவர் உணர்த்துகின்றார். 'மாட்சியின் மாசற்றார் கோள்' என்றதனால் 'Skill - திறம்' என மொழியியலார் குறிப்பதை, வள்ளுவர் உயர்நோக்கமாக - பண்பாக உணர்த்து கின்றார் - உயர்த்துகின்றார் எனலாம்.

10.3 கேட்கும் பண்பு

'பிறர்சொற் பயன் கோடலி'ல் வள்ளுவர் சுட்டிய கேட்டலின் பண்பை உணர்ந்தோம். அது பொது நிலை. அப்படிச் சொற்பயன் நாடுகையில், நம்மைத் தாக்க வேண்டும் என்பதே பேசுவோரின் குறிக்கோள் என்ற நச்சு உண்மை புலனாகும்போது என்ன செய்வது? எதிர் மொழி (அ) எதிர் வினை யாது?

"உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்." *(160)*

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு." *(389)*

"துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்." *(159)*

எனும் குறள்களில் வள்ளுவர் தரும் விடை - பேசுவோரின் இன்னாச் சொல்லை அமைதியாகக் கேட்கும் பொறுமை வேண்டும் என்பதாம். பெயக்கண்டும் நஞ்சுண்டமையும் நயத்தக்க நாகரிகம் காட்டிய வள்ளுவர் மொழியியலிலும் அத்தகைய நாகரிகப் பண்பையே பின்பற்ற வேண்டும் என்கின்றார். உண்ணாதும் நோற்கலாம்; இன்னாதும் நோற்கலாம். ஆனால், இன்னாச்சொல் நோற்றல் அரிதினும் அரிது என்பது அநுபவ உண்மை. முன்னவை இரண்டும் வாழ்வியல் பண்பாடு. பின்னது வாழ்வியலோடு மொழியும் சேர்ந்தமைந்த பண்பாடு. உள்ளத்தோடு உணர்வுகளோடு ஒட்டி இயைந்த மொழிவழித் தாக்குதலைப் பொறுத்துக் கொள்ளல் நஞ்சுண்டமையும் நயத்தக்க நாகரிகத்தினும் விஞ்சியது என்றே கூறலாம். நஞ்சுண்டபின் உடலோடு உள்ள வேதனையும் சாகும். ஆனால் இன்னாச்சொல் உள்ளளவும் வருத்துமன்றோ!

வாழ்க்கை - பலவகைப் பரிமாற்றம். பரிமாற்ற வாழ்வியலில் பண்பாட்டின் நிலை காட்ட விழைந்த வள்ளுவர் நெஞ்சம், மொழிப் பரிமாற்றத்தின்போதும் விழிப்புடன் விழுமிய பண்பாட்டினைக் கொள்கையாக்குகின்றது.

10.4 மொழிவழிப் பண்பு

ஒருவர் மொழி, அவர் பண்பினை அளக்கும் அளவுகோலாதல் கூடும் என்ற உண்மையும் வள்ளுவத்தால் புலனாகின்றது.

"செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்" *(91 : 2)*

"ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்" (415 : 2)

இத்தொடர்கள் — வாய்ச்சொல் வழி, இன்னார் செம்பொருள் கண்டவர், இன்னார் ஒழுக்கமுடையவர் என்பதை உணரலாகும் என்ற கருத்தினையும் தாங்கி நிற்கின்றன. சிலர் சொல்லுக்கும் பொருளுக்கும் தொடர்பிருக்காது. அரும்பயன் ஆயும் அறிவினர் தொடர்பையும், தொடர்பின்மையையும் உணர்வர். அளவுகோல் கொண்டு அளக்கையில் கண்ணின் பார்வைக்கோடு, அளவுப் புள்ளியுடன் செங்குத்தாக இருத்தல் வேண்டும். சாய்ந்தால் அளவில் பிழையேற்படும். இது அளவுகோலின் பிழையன்று. கண்ணின் இடமாறு தோற்றப்பிழை. அது போன்றே மொழியை அளவுகோலாகக் கொள்கையில், பேசுபவரின் உள்ளத்தோடு அளவுகோற் புள்ளியைப் பொருந்த வைத்து, நம் அறிவுப் பார்வைக் கோட்டைச் செங்குத்தாக்கினால் சரியான அளவுகிட்டும் என்பதில் ஐயமில்லை. இவ்வையம் இன்மையானே,

> "இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
> ஒழுக்க முடையார்வாய்ச் சொல்." (415)

என அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றார் வள்ளுவர். மேலும் இக்குறளில் வாழ்வின் ஒழுக்கம் வாய்மொழியையும் பற்றும் (Influence of the culture on the speech) என்ற உண்மையை உட்பொருளாக்குகின்றார். 'வாழ்க்கையும் நோக்கு; வாய்மொழியையும் நோக்கு. இரண்டையும் இணைத்து உண்மை கண்டறிந்தபின் இடறுகையிலும் இடருதோரின் இன்னுரை இவை என்ற தெளிவு கிட்டும். அவர் உரையை உன் துணையாக்கிக் கொள்' என வள்ளுவரின் மொழிப்பண்பறிவு அன்பு ஆணையிடுகின்றது; தடுக்கி விழுகையில் எடுத்து நிறுத்தி அணைத்துச் செல்வதற்கு ஏற்றமுடைய மொழித்துணையை வழித்துணையாக்குகின்றது.

11. முடி(வு)மொழி

இக்கட்டுரை காட்டிய வள்ளுவரின் மொழி பற்றிய சிந்தனைகள் தூண்டும் முடிவுகள் :

1. மனித வாழ்க்கையின் உயர்வு பற்றிச் சிந்திக்கும் வள்ளுவர், மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்த மொழியைப் பற்றியும் சிந்திக்க வேண்டியவராகின்றார்.

2. மொழியைப் பற்றிச் சிந்திக்கும் வள்ளுவர் வெறும் விளக்க மொழியறிஞராக (Descriptive Linguist) விளங்காமல் பயன்பாட்டு மொழியறிஞராகப் (Applied Linguist) பயன் நல்குகின்றார்.

3. பயன்பாட்டு மொழியறிஞராகப் பயன் நல்கும் வள்ளுவர், பண்பாட்டுக் கண்ணோட்டத்தில் மொழியைக் கண்டு, பண்புயர்ச்சிப் பாதையில் மனித வாழ்வுக்குத் துணையாக

மொழியை நடத்திச் செல்வதால் மொழியியற் பண்பாளராக/ பண்பியல் மொழியறிஞராகப் (Language Culturalist / Cultural Linguist) புகழ் பெறுகின்றார்.

குறிப்புகள்

1. திருவள்ளுவமாலை, பா எண் : 13
2. தொல்காப்பியம், நூன் மரபு, நூற்பா எண் ; 1 : 1 – 3
3. கோதண்டபாணிப் பிள்ளை, இராவ்சாகேப் கு., முதற்குறள் உவமை (நூலினது சாரம்)
4. நன்னூல், நூற்பா எண் : 73
5. திருமலை, டாக்டர் மா. சு., கருணாகரன், டாக்டர் கி., மொழி இயல், பக் : 27 – 28
6. திருக்குறள் பரிமேலழகருரை, கழகப்பதிப்பு, குறள் எண் : 392, பக் : 151

3. பாரதிதாசனின் ‘அழகின் சிரிப்பு’

(ஒரு திறனாய்வு)

து. மூர்த்தி, எம். ஏ.,
தொழில்நுட்பத் துணைவர்,
தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.

1. கவிஞன், இயற்கையை வரைபவன்; கவிஞன் இயற்கையின் இரசிகன்; இயற்கையின் தூதுவன்; பக்தன். இதோடு மட்டுமின்றி இயற்கையோடு போராடும் மனித சமூகத்தில் வலிய போர் வீரன்; இயற்கையை அடக்கி, தன்வழி நடத்திச் செல்லும் தலைவன்.

1.1. தமிழ் இலக்கிய வரலாற்றில் இயற்கை இன்றியமையாத பாடுபொருளாகத் தொடர்ந்து இடம் பெற்று வருகிறது. சங்க இலக்கிய உரிப்பொருள்கள் இயற்கையை உயிர்ப்பொருளாகக் கொண்டன. கபிலர் படைத்துக் காட்டிய இயற்கை அரங்கம் நெஞ்சை ஈர்க்க வல்லதன்றோ![1] ‘பகைவர்தான் பூத்திருக்கின்றார் என்றால் நீயுமா பூத்திருக்கிறாய்’ என்ற புலவனின் வினா, புலம்பலின் வெடிப்பாக அல்லவா காணக்கிடக்கிறது.[2] பாலை நிலக் காட்சிகளான, தன்னிழல் அளிக்கும் கலைமான், சிறகசைத்து வெம்மையாற்றும் புறா, பிடி உண்ணச் செய்து பெரிதும் மகிழும் களிறு இவை பாலைக் கொடுமையோடு பழுத்த காதலின் பண்பையல்லவா படம் பிடிக்கின்றன.[3]

இடைக்காலத்தே இலை தொடங்கி மரமெலாம் சிவலிங்கமாகக் கண்ட காட்சி இயற்கையை இறைவனாக்கியதன்றோ![4] எழுஞாயிறு, விழுஞாயிறு, மலை, குளம், காடு, ஆறு இவற்றின் வருணனைகள் இன்றியமையாத இலக்கிய உறுப்புகளாகவே மலர்ந்தன.

இவ்வாறான இயற்கைப் பாடல்களின் தொடர்ந்த வரலாற்றிற்கு இந்நூற்றாண்டும் தன் பங்கை நல்ல முறையில் ஆற்றி வருகிறது எனலாம்.

2. ‘பண்ணப் பழகடா பச்சைப் படுகொலை’ என்று முழங்கிய பாரதிதாசன்தான் ‘அழகின் சிரிப்பையும்’ சொல்லோவியமாக்கியுள்ளார் என்பது நம்புதற்குக் கடினமாக இருப்பினும், இது ஒன்றே அவருடைய உள்ளச் செழுமைக்கும் சரியான சான்றாக அமையும்.

கொலைவரிகள் சமூகக் கொடுமைகளைக் கண்டு வெடித்தவை. அழகுவரிகள் வாழ்வின் அழகு கருதி வளர்ந்தவை. கவிஞன் கண்ணீர் விடுபவன் மட்டுமல்லன். கனவுகளைக் காவியமாக்கு பவனும் அல்லன். கவிஞன் செயல்வீரன் ; அவன் கண்ணீரும் கனவுகளும் காவியமாகும் போது மாற்றியே ஆகவேண்டிய இச் சமூக அமைப்பை ஓர் உலுக்கு உலுக்கி விடுகின்றன. பாரதிதாச னிடம் இந்த மூன்று பண்புகளும் உண்டு. அவர் பாடல்கள் நம்மை நெகிழச் செய்யும் ; நிமிரச் செய்யும் ; நடக்கவும் செய்யும். எனவே, இப்புரட்சிக்கவியின் 'அழகுப் பாடல்கள்' வெறும் புனைவாக இல்லாமல், சமூக விழிப்புணர்வோடு ஒளிர்கின்றன.

2.1. பாரதி சில பொருள்களைத் தொட்டான். தாசன், பாரதி தொட்டதைத் துலக்கினான்; புதியனவற்றைத் தொட்டுத் துலக்கினான். எதைப் பற்றிப் பாடினாலும், தமிழ் விடுதலையையும்—சிறப்பையும், சமூக விடுதலையையும் சேர்த்தே பாட வேண்டிய காலத்தின் கட்டா யத்திற்கு உட்பட்டே பாடினான். அவனுக்குப் பின்னால் ஒரு காலமே உருவாகுமாறு ஒரு கால கட்டத்தையும் ஏற்படுத்தி விட் டான். அவன் 'அழகின் சிரிப்பு' இயற்கையைப் 'போதை'யுடன் இரசித்த இரசிப்பல்ல! வாழ்வையும் அழகையும் ஒன்றாக்க முயன்ற முயற்சி எனலாம்.

3. காலை இளம் பரிதியில், கடற்பரப்பில் ஒளிப்புனலில், சோலை மலர்களில் மாலை மேற்றிசையின் மாணிக்கச் சுடரொளியில், கிளை களில் கிளியின் கூட்டத்தில் அழகைக் காண்கிறான் கவி.[5] இந்த அழகுதான் இவருக்குக் கவிதையைத் தருகின்றதாம். பாரதிதாசன் பார்வையில் இயற்கையே ஒரு ஒப்பற்ற கவிதையாக விளங்குகிறது. அந்தக்கவிதை பற்றி இவர் கவிதை எழுதுகின்றாராம். பாரதிதாசன் இன்னோர் நூலில் 'இயற்கையே தன்னை எழுதும்படியாகக் கேட்டுக் கொண்டது,' என்று பெருமிதத்துடன் கூறியிருப்பது இங்கு நினைந்து மகிழத்தக்கதாம்.[6]

3.1. பாரதிதாசன் இயற்கையின் இந்த வேண்டுகோளை ஏற்று வானை வரைகின்றார். வானமென்னும் பலாப்பழத்தின் முள்களாம் 'உடுக்களு'க்கு உயிரூட்டுகின்றார். விண்மீன்களைப் பெண்களின் கண்களுக்கே உவமை சொல்லிப் புளித்துப்போன புலவர்களுக்கு இடையே பாரதிதாசன் விண்மீன்களைக் கொப்புளங்களாக்கு கின்றான்! புரட்சிப் புலவனல்லவா ?

உடலுழைப்பை முதலீடு செய்து, வட்டி, வரி, பட்டினி, பிணி ஆகிய இவற்றையே அறுவடை செய்யும் ஏழைப் பாட்டாளிகளை இவ்வுலகம் 'வறியர்' என்று வசை பாடுகின்றது. இவரில் யாரா வது ஒருவன் நெஞ்சம் நிமிர்ந்து நீதி கேட்டால், அவனை இருந்த இடம் தெரியாமல் செய்து விடுகின்ற வஞ்சகர் செல்வராம். என்னே

கொடுமை! இந்தச் சமூகக் கொடுமையின் வெம்மையால் பகல் நேரம் முழுக்க வாட்டப்பெறும் பரந்த வானத்தின் உடம்பில் அந்திக்குப் பின் விண்மீன் கொப்புளங்கள் ஏற்பட்டு விடுகின்றனவாம்.

'மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம்! உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர்செல் வராம்இதைத்தன்
கண்மீதில் பகலி லெல்லாம்
கண்டுகண் டந்திக் குப்பின்
விண்மீனாய்க் கொப்ப ளித்த
விரிவானம் பாராய் தம்பி!' [7]

என்று தன் இதயத்தில் ஏற்பட்ட வேதனை வெடிப்புகளைக் கவி இயற்கையின் இயல்பான நிகழ்ச்சியின்மேல் ஏற்றிக் கூறுகின்றார். எல்லாப் பகல் நேரங்களும் உழைப்பாளரின் உயிர் வதைப் பொழுதுகளாக இருப்பதால், 'பார்த்துப் பார்த்து வயிறெரிந்தேன்' என்று சொல்வதைப் போல, 'பகலிலெல்லாம் கண்டு கண்டு' எனக் குமுறுகின்றான் கவி.

'நாம் வானத்திற்குக் கீழே வாழ்கிறோம்' என்ற பொதுமையைத் தவிர மனித சமூகத்தில் எல்லைகளுக்கோ, பேதங்களுக்கோ, பிணக்குகளுக்கோ நியாயமே இல்லை.[8] மனிதன் தன்உடைமைகளைப் பாதுகாத்துக் கொள்ள ஏற்படுத்திக் கொண்ட எத்தனையோ குறுக்கு வழிகளில் இந்தச் சாதி அமைப்பும் ஒன்றாகக் கிடக்கிறது. 'கொய்யாப் பிஞ்சினில் சுற்றும் சிற்றெறும்பில் உயர்வு தாழ்வு கற்பிக்க முடியாது. அதுபோலப் பூமியைச் சுற்றும் மனிதர் மட்டும் ஏன் சாதியால் பிளவு பட்டுப் பிணங்குகின்றனர்' என்று கவி வினவுகின்றார்.

'எத்தனை பெரிய வானம்!
எண்ணிப்பார் உனையும் நீயே;
இத்தரை கொய்யாப் பிஞ்சு,
நீஅதில் சிற்றெறும்பே
அத்தனை பேரும் மெய்யாய்
அப்படித் தானே மானே?
பித்தேறி மேல்கீழ் என்று
மக்கள்தாம் பேசல் என்னே'

வானம் பற்றிய இக்கவிதையில் வாழ்வின் மோசமான நிலைமையை அல்லவா கவி சாடுகின்றார்.

சாதிகளால் பிளவுபட்டுச் சண்டையிட்டுச் சீரழியும் மனித சமுதாயத்தை விட, புறாக்களின் வாழ்க்கை எவ்வளவோ மேலாகத் தெரிகிறது கவிஞனுக்கு. மனிதனாகப் பிறந்த ஒருவனோடு உடன்

அமர்ந்து சாப்பிடுவதுகூடத் தீட்டு என்று தருக்கிய மனிதக் கூட்டத்தைக் கண்டு பாரதிதாசன் மனம் புயலாகிறது. அது 'புரு'க் களின் வாழ்க்கை வழி வீசுகிறது.

'இட்டதோர் தாம ரைப்பூ
இதழ்விரிந் திருத்தல் போலே
வட்டமாய்ப் புருக்கள் கூடி
இரையுண் ணும் ; அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை ; குத்து மில்லை ;
வேறுவேறு இருந்து அருந்தும்
கட்டில்லை ; கீழ்மேல் என்னும்
கண்மூடி வழக்க மில்லை' [10]

என்று மண்மூடிப் போகவேண்டிய மனித இனத்தின் மடமைகளைத் தகர்க்கின்றான் கவி. அது மட்டுமா! கற்புசான்ற பெண்புருவின் ஒழுக்கத்தைப் புகழ்கின்ற கவி, 'சேவலி'ன் ஆண்மையை அழகு படுத்தும் கவி, 'ஒருவர் இறந்தபின் இன்னொருவர் மறுமணம் செய்து கொள்ளலாம்' என்ற தன் சீர்திருத்தத்தைச் செம்மையாய்ப் படைத்துக்காட்டுகின்றார்.

'ஒருபெட்டை தன்ஆண் அன்றி
வேறொன்றுக் குடன் படாதாம்
ஒருபெட்டை மத்தாப் பைப்போல்
ஒளிபுரிந்திட நின்றாலும்
திரும்பியும் பார்ப்ப தில்லை
வேறொரு சேவல்! தம்மில்
ஒருபுரு இறந்திட்டால் தான்
ஒன்றுமற் றொன்றை நாடும்' [11]

என்று நாட்டுக்கு வேண்டிய கொள்கையை நவில்கிறார். பெண் இறந்தால் ஆண் மறுமணம் செய்து கொள்ளச் சமூகம் அனுமதிப்பது போல, ஆண் இறப்பின் பெண்ணும் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்க வேண்டும் என்பதை உணர்த்துவான் வேண்டி 'ஒரு புரு இறந்திட்டால்' என்று பொதுவாகப் பாடிச் செல்கின்றார்.

4. பாரதிதாசனுக்குச் சமூக உணர்வை விட மொழி உணர்வே மிக்கிருந்தது எனக் கூறச் சான்றுகள் பல உண்டு. இது அவர் வாழ்ந்த காலத்தின் சாரால்-சாரம்! தமிழ் விடுதலையே தமிழ் இனத்தை ஒற்றுமைப்படுத்தும், இன விடுதலைக்கு வழிகோலும், இந்த ஒற்றுமையே சமூக விடுதலைக்கு வித்தாகும் சத்தாகும் என்றெல்லாம் கவி கருதியிருக்கலாம். எனவேதான் அவர் பாடல்களில் எங்கெங்கு கண்டாலும் தமிழ் தழைக்கிறது, மணக்கிறது, வெடிக்கிறது! அழகைக் காணும்போதும் கவி தமிழுக்கு அழைப்பு விடுகின்றான்.

தமிழே அழகு என்பதுபோலப் பாடுகின்றான். வானம், கடல், மலை போலத் தமிழும் இயற்கையின் எழிற்கூத்து என்று எண்ணினர் போலும்.

4. 1. 'தென்னாடு பெற்ற செல்வத் தென்றலை'ப் பற்றிப் பாடும்போது தென்நாட்டுத் தேன்தமிழை இணையாகப் பாடுகின்றார். தென்றலை விரும்பாத தமிழன் இல்லை! தென்றல் தமிழை விரும்பாமல் தமிழன் இருக்கலாமோ என்பது கவிஞரின் உள்ளம் போலும்! ஒரே அன்னையின் இரு குழந்தைகளாம் தமிழும் தென்றலும். இரண்டும் மனித வாழ்வை மலர்விப்பனவாம். ஒன்று உளத்தே உவப்பூட்டி உயிரூட்டும்! மற்றொன்று புறத்தே மகிழ்ச்சி தரும். தன்மையால் ஒன்றாய் ஏற்ற செயலால் இரண்டாய் இருக்கும் தமிழை - தென்றலைக் கனவினும் மறக்கக் கூடாது என்கிறார்.

'கமுகொடு, நெடிய தென்னை
கமழ்கின்ற சந்த னங்கள்
சமைகின்ற பொதிகை அன்னை,
உனைத்தந்தாள் ; தமிழைத் தந்தாள் ;
தமிழ்எனக்கு அகத்தும், தக்க
தென்றல்நீ புறத்தும், இன்பம்
அமைவுறச் செய்வதை நான்
கனவிலும் மறவேன் அன்றோ?' [12]

கனவிலும் மறக்கக் கூடாத தமிழை நனவிலேயே மறந்து கிடக்கும் தமிழரை எழுப்பவோ இந்த இயற்கைப் பல்லவி!

'எல்லோரும் இந்நாட்டில் தமிழர்களாய் வாழ வேண்டும்' என்பதல்லவா பாரதிதாசனின் வேட்கை. கடன்கார வாழ்வைப் போலக் கடன்பெற்ற தமிழ்வாழ்வும் இழிவு என எண்ணுகின்றார். இருப்பதை மறந்து பிறமொழிச் சொற்களை ஏற்பதை எதிர்க்கின்றார். காட்டினுள் சென்ற கவிக்கு, வேடன் ஒருவன் வழிகாட்டுகின்றான். அவன் பயன்படுத்தும் தூய தமிழ்ச் சொற்களைக் கேட்டு கவி அவனை வாழ்த்துகின்றார்.

'வகைப்பட்ட பரத்து வாசன்
என்பதை வலியன் என்றான் ;
சகோரத்தைச் செம்போத் தென்றான்
தமிழாநீ வாழ்க என்றேன்' [13]

இந்த வாழ்த்து வேடனுக்கல்ல! தமிழின் குன்றா இளமை கொலு வீற்றிருக்கும் நாட்டுப்புறத்துக்கு நவின்றதாகும்.

'அழகின் சிரிப்பில்' இறுதித் தலைப்பு 'தமிழ்'. கவிஞரின் உறுதியான கொள்கை தமிழ் முன்னேற்றம் ; தமிழர் வாழ்வு. இயற்கை வாழ்வு நடாத்திய இனத்தின் மொழியையும் இயற்கைப் பொரு

ளாகவே கவி காண்கின்றார். இப்புவியில் மனிதன் முளைத்துப் 'புதிய நாடு' உண்டாக்கினான். மனித வாழ்வைத் தமிழ்தான் உண்டாக்கியதாம். முதலில் தோன்றியதாம் தமிழ்.[14] தமிழனின் கனவுதான் இவ்வைய வாழ்வாம். இசையின், கூத்தின் மூலையாம் தமிழ். தமிழ் தமிழனின் ஆவி! தமிழாவி உடையவனுக்குச் சாவில்லை. காரணம் இம்மொழி சாகாத மொழியாம்.[15] அயலாரால் அலைக்கழிக்கப்பட்டாலும் அஞ்சாத மொழி தமிழ். இவ்வாறெல்லாம் மொழியை ஏத்திச் செல்லும் இவர்தம் 'தமிழ்' பாட்டின் இறுதி வரிகள் வன்மையும் மென்மையும் கலந்த கவினுய்ச் சிறப்புறு கின்றன.

'இருளினை வறுமை நோயை
இடறுவேன் ; என்னுடல் மேல்
உருள்கின்ற பகைக்குன்றை நான்
ஒருவனே உதிர்ப்பேன் , நீயோ
கருமான்செய் படையின் வீடு !
நான்அங்கோர் மறவன் ! கன்னல்
பொருள்தரும் தமிழே நீஓர்
பூக்காடு நானோர் தும்பி ! [16]

தமிழர் இதயம் மலராக இருந்ததுபோதும். அது இரும்பாகவும் மலர வேண்டிய சூழல் வந்துவிட்டதைக் கவி சுவைபட விளக்குகின்றார் !

5. சமூக உணர்வும் தமிழ் உணர்வும் முயங்கிக் கிடக்கும் 'அழகின் சிரிப்பு' ஏற்படுத்தும் இலக்கியச் சிலிர்ப்பு போற்றி மகிழத் தக்கது. நடை, உவமை, சொல்லாட்சி ஆகிய அனைத்திலும் எளிமை மிளிரக் காண்கிறோம்.

5. 1. அழகின் சிரிப்பில் அமைந்துள்ள நடையும் அழகு நடையாம் ; எந்தவிதமான தடங்கலும் இன்றி ஒழுகும் ஆற்றின் நடை எனலாம். நடை மனிதனின் ஆளுமையைக் காட்டும் என்றால், 'அழகின் சிரிப்பு' மூலம் பாரதிதாசனின் எளிமைப் பண்பை நாம் விளங்கிக் கொள்ளலாம். பாரதிதாசன் இயற்கையை வியக்கின்றார் ! விவரிக்க முயல்கிறார். சொல்லினில் சிறை வைக்க இயலா இயற்கையின் சிறப்புகள் எழுச்சி பெறுகின்றன. 'குன்றத்'தின் சிறப்பு,

'அருவிகள், வயிரத்தொங்கல் !
அடர்கொடி, பச்சைப்பட்டே !
குருவிகள், தங்கக் கட்டி !
குளிர்மலர், மணியின் குப்பை !' [17]

என்றெல்லாம் குன்றுமல் விளக்கப்பட்டுள்ளது. சொல், கவிதையில் செயலாவதைப் பாரதிதாசன் பாடல்களில் தெளிவாகக் காணலாம். குருவிகளைத் தங்கக் கட்டி என்கிறார். உயிருள்ள தங்கம்' என்ற

பொருளிலல்லவா உணர்வுகள் தூண்டடப்படுகின்றன. மலருக்குக் குளிர்மட்டுமல்ல ஒளியும் இருக்கிறது என்பதைத்தானே 'மணியின் குப்பை' விளக்குகின்றது. ஞாயிற்றைப் புகழ வருகின்றார் கவி! அந்தப் பேரொளியைப் பலவாறு வருணித்து மகிழ்கின்றார்.

'மங்காத தணல் பிழம்பே !
மாணிக்கக் குன்றே ! தீர்ந்த
தங்கத்தின் தட்டே ! வானத்
தகளியில் பெருவிளக்கே ! [18]

என்றெல்லாம் ஞாயிற்றின் ஒளி கவிதை ஒளி பெறுகின்றது. இப்படிப் பொருளின் சிறப்புகளைப் பலவாறு அடுக்கிச் செல்வது பாரதிதாசனின் நடைச் சிறப்பு எனலாம்.

5.2. நடையை நளினப்படுத்தக் கூடிய ஆற்றல் சொல்லுக்கு உண்டு. ஆற்றல் வாய்ந்த சொற்கள் பாரதிதாசனிடம் ஏராளம் உண்டு. கடல்மிசை கதிரவனின் கவினொளி பாய்கிறது. ஒளி மழை! ஒளிமழை! எனக் கவி சிறப்பிக்கின்றான். இதற்கு இவர் பயன்படுத்தும் சொல், 'தங்கத் தூற்றல் !'

'எழுந்தது செங்கதிர்தான்
கடல்மிசை ! அடடா எங்கும்
விழுந்தது தங்கத் தூற்றல் !' [19]

இவ்வாறே ஆற்றின் நுரை, 'முத்துத் தடுக்குகளா' கவும், 'சுழல் மீன் கொத்தி மரகதவீச்சா' கவும் [20] மாண்புறுகின்றது.

புறுவின் நடையில் ஒரு கம்பீரம் இருப்பதைக் கண்டோர் உணர்வர். நெஞ்சை நிமிர்த்திச் சற்றுக் கால்களை இழுத்து நடக்கும். அதே சமயம் புறுவின் வாழ்வில் மனிதன் கற்றுக்கொள்ள வேண்டிய ஒழுக்கங்களும் உள. இவை இரண்டையும் இணைப்பார் போலக் கவி,

'...கீழ் இறங்கி
மகிழ்ச்சியாய் உலவி, வைய
மன்னர்க்கு நடை கற்பிக்கும்' [21] என்கிறார்.

5.3. நயமும் கருத்தும் கலக்கும்போது சிறந்த கலை உருவாகின்றது. நடை, சொல், நயத்தை உருவாக்கியதைக் கண்டோம். நயத்தின் உயிராக உவமையும் உருவகமும் இருப்பதைக் காண்போம்.

கடலின் காட்சி நெஞ்சைப் பறக்க வைக்கிறது. கவி அதை, 'இருவிழிச் சிறகால் நெஞ்சம் எழுந்திடும்' [22] என்கிறார்.

விடியலுக்குச் சற்றுப்பின் கதிரவன் வீதியுலா வரத் தொடங்குமுன் குளங்களைக் கண்டோர்க்குச் 'செந்தாமரைக்' காட்சியின் செம்மை விளங்கும். அசையாத தண்ணீரும், அதில் படிந்துள்ள தாமரை இலைகளும், அதில் தவம் செய்யும் நீர்த் திவலைகளும் எவரையும் ஈர்க்கும். கவி தண்ணீரைக் கண்ணாடித் தரையாக்கி, தாமரை இலையைப் பச்சைத் தட்டாக்கி, நீர்த்துளிகளை ஒளி முத்தாக்கு கின்றான்.

'கண்ணாடித் தரையின்மீது
கண்கவர் பச்சைத் தட்டில்' [23]

என்று அவர் பாட்டு அடியெடுத்துச் செல்கின்றது.

'பளிச்சென எரியும் கோவைப்
பழத்தில் உன்மூக்கை ஊன்றி
விளக்கினில் விளக்கை ஏற்றிச்
செல்லல்போல் சென்றாய்' [24]

கிளியின் மூக்கழகு இங்குப் பேசப்படுகின்றது. செவ்வலகால் கோவையைக் கொத்திச் செல்லும் கிளியைக் கண்ட கவி, ஒளிரும் மூக்கை ஒரு விளக்குச் சுடராகவும், கோவைப் பழத்தை ஒரு சுடராகவும் கண்டு இவ்வுவமையை உருவாக்குகின்றான்.

6. இயற்கையைப் பாடும் மரபில் ஒவ்வொரு நூற்றாண்டிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டே வருகின்றன. இந்த மாற்றங்களைக் கவிஞன் ஏற்படுத்துகின்றான் என்பதைவிட, காலம் இந்த மாற்றங்களைக் கவிஞன் வழியாக ஏற்படுத்திக் கொள்கிறது எனலாம். வேறுவகை யாகச் சொல்வதென்றால், கால மாற்றத்தைப் புரிந்து கொள்கிற வகையில், அம்மாற்றங்களில் தன்னை முன்னோக்கியோ, பின்னோக்கி யோ இணைத்துக் கொள்கிற நிலையில் கவிஞன் இயற்கையைத் தன் படைப்புகளில் கொண்டு வருகிறான் எனலாம்.

பாரதிதாசன் காலம் சமூக விடுதலைக்கும் பொருளாதார விடுதலைக்கும் மக்கள் போராடிய காலம். பாரதிதாசன் சமூக விடுதலையை முன் வைத்தார். (இது சரியா தவறா என்பது ஒரு புறம் இருக்கட்டும்). சமூக விடுதலைக்குக் கருவியாகத் தமிழைப் பயன் படுத்த விழைந்தார். இந்நிலையில் தமிழின் வாழ்வே தமிழ்ச் சமூக வாழ்வு என்று உறுதியாக நம்பினார். எனவே அவர் பாடல்களில் தமிழுணர்வும் சமூக உணர்வும் எழுச்சியுற இருப்பது இயல்புதானே.

இவ்வகையில் 'அழகின் சிரிப்பு'—

1. வெறும் இரசனைப் பாடல்களல்ல.
2. சமூக உணர்வும் தமிழுணர்வும் தாங்கிய இயற்கைத் தாளங்கள்.

3. பொருளின் சிறப்புகளை ஒன்றன் மேலொன்றாக அடுக்கிச் செல்லும் நடையை உடையது.

4. பொருத்தமான சொற்சேர்க்கைகளால் ஆன அழகிய உருவகங்களை உடையது.

5. இயற்கை, அழகானது மட்டுமல்ல; பயங்கரமானதும் அவலமானதும் கூட! இயற்கையின் பயங்கர அழகைப் பாடாமல் இன்ப அழகைப் பாடியது, கவிஞரின் மன அழகு எனலாம்.

* * * *

குறிப்புகள்

1. அகநானூறு, 82 ; 1 – 10
2. புறநானூறு, 242
3. கலித்தொகை, 11
4. திருக்குற்றாலக் குறவஞ்சி, 3

 ‘கிளைகளாய்க் கிளைத்தபல கொப்பெலாஞ்
  சதுர்வேதம் கிளைகள் ஈன்ற
 களையெலாம் சிவலிங்கம் கனியெலாம்
  சிவலிங்கம் கனிகள் ஈன்ற
 சுளையெலாம் சிவலிங்கம் வித்தெலாம்
  சிவலிங்க சொரூபம் ஆக
 விளையுமொரு குறும்பலவின் முளைத்தெழுந்த
  சிவக்கொழுந்தை வேண்டு வோமே’

5. அழகின் சிரிப்பு, 1
6. பாரதிதாசன் கவிதைகள் (முதல் தொகுதி), 22

 ‘ஏடெடுத்தேன் கவிஒன்று வரைந்திட
 என்னைஎழு தென்று சொன்னது வான்!
 ஓடையும் தாமரைப் பூக்களும் தங்களின்
 ஓவியம் தீட்டுக என்றுரைக்கும்!
 காடும் கழனியும் கார்முகிலும் வந்து
 கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்!’

7. அழகின் சிரிப்பு, 9
8. கறுப்பு மலர்கள் (நா. காமராசன்)
9. அழகின் சிரிப்பு, 9
10. அழகின் சிரிப்பு, 11
11. அழகின் சிரிப்பு, 11
12. அழகின் சிரிப்பு, 3
13. அழகின் சிரிப்பு, 4
14. கவிஞரின் தமிழ்ப் பற்று அளவிடற்கரியது என்றாலும், இது போன்ற கருத்துகள் ஆராய்ச்சிக்குரியதே!

15. பாரதிதாசன் கவிதைகள் (இரண்டாம் தொகுதி)
 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை
 தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ'

16. அழகின் சிரிப்பு, 16

17. அழகின் சிரிப்பு, 5

18. அழகின் சிரிப்பு, 8

19. அழகின் சிரிப்பு, 2

20. அழகின் சிரிப்பு, 6

21. அழகின் சிரிப்பு, 11

22. அழகின் சிரிப்பு, 2

23. அழகின் சிரிப்பு, 7

24. அழகின் சிரிப்பு, 12

ஆட்சித் தமிழ்

ஆசிரியர் :

ஆட்சிமொழிக்காவலர்

கீ. இராமலிங்க முதலியார், எம்., ஏ.

சென்னைப் பல்கலைக் கழகம்

1977

பதிப்புரை

'ஆட்சித் தமிழ்' என்னும் இப்பகுதி தமிழிலேயே ஆட்சி நிகழ்ச்சிகள் அனைத்தும் நடைபெற்றுவரும் இந்நாளில் யாவரும் அறிந்திருக்க வேண்டிய இன்றைய வழக்கியல் முறையை வகுத்துக் காட்டுகிறது. இதனைப் படைத்து அளிப்பவர்கள், 'ஆட்சிமொழிக் காவலர்' என்னும் சிறப்புப் பெயர் பெற்று விளங்கும் பெரியார் திரு. கீ. இராமலிங்க முதலியார், எம். ஏ. அவர்களாவர்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் முன்னைத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளையவர்களின் பணிக்கால வெள்ளிவிழா அறக்கட்டளையின் சார்பில் 1976-ஆம் ஆண்டு திரு. முதலியார் அவர்களால் மூன்று நாள்கள் ஆற்றப்பட்ட விரிவுரைகள் இதில் அடங்கியுள்ளன. 'அன்று தொட்டு இன்று வரை,' 'சொல்தரு துறைகள்,' 'சொல் செய் நெறி முறை' என்னும் மூன்று பொருள்கள் குறித்து 1976-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் மூன்று நாள்கள் மாலையில் இவ்விரிவுரைகள் தொடர்ந்து நடைபெற்றன.

ஆட்சிமொழிபற்றிய அலுவலகத் துறையிலேயே பல்லாண்டுகள் தாம் பெற்ற அனுபவத்தால் ஆசிரியர் அவர்கள் தரும் கருத்துக்கள் மேன்மேலும் ஆட்சித் தமிழாக்கம் செழித்துச் செம்மையுற வளர்வதற்குத் துணைசெய்வனவாகும்.

— பதிப்பாசிரியர்.

உள்ளுறை

பக்கம்

1. தோற்றுவாய் 1— 3

2. அன்று தொட்டு இன்று வரை 4—29

1. கல் தோன்றி மண் தோன்றாக் காலம் — 2. குமரிக் கண்டம்-இலமூரியா — 3. மொகஞ்சதரோ-ஆரப்பா — 4. சங்க காலம் — 5. பல்லவர் காலம் — 6. பிற்காலச் சேர, சோழ பாண்டியர் — 7. நாயக்க மன்னர் காலம் — 8. மராட்டியர் பிறர் காலம் — 9. முசுலீம் அரசு— 10. ஆங்கிலேயர் ஆட்சி. விடுதலைக்குப் பின் — (i) அரசு மாறியது — (ii) ஆட்சி ஆங்கிலமே — (iii) அரசியல் அமைப்பு — (iv) ஆட்சி மொழிப் பகுதி — (v) அரியணையில் அன்னை — (vi) ஆங்கிலம், இந்தி இவற்றின் நிலை — (vii) முன் அணி வேலைகள் — (viii) பொங்கல் புதுநாள் — (ix) ஆய்வுப் பணியும் பிறவும் — (x) நான்கு நிலைத் திட்டம்.

3. சொல் தரு துறைகள் 30—56

1. பேச்சு வழக்கு: 1. ஒன்றுடம் — 2. பதிவாக — 3. தண்டி — 4. தடியன்காய் — 5. தாம்போகி — 6. ஓடு பாலம் 7. கோளாறு — 8. வாழ்வரசி — 9. கட்டுக் கழுத்தி — 10. பூவாடைக்காரி — 11. கட்டுமானம் — 12. கட்டுப்படி — 13. பண்டடை — 14. குறியாப்பு — 15. நன்மையடைதல். 2. இலக்கியம். 3. கல்வெட்டு: 1. 'As usual' பழம்படி — 2. agreed price இசைந்த விலை — 3. Block துண்டம் — 4. Caretaker நோக்கர் — 5. Collection தண்டல் — 6. District Collector மாவட்டத் தண்டல் நாயகம் — 7. Collect a fine தண்டம் கொள் — 8. levy a fine தண்டம் இடு — 9. Prostrate தண்டமிடு — 10. Punishment தண்டனை — 11. document ஆவணம் — 12. registration office ஆவணக்

களரி — 13. highways பெருவழி — 14. huzur treasury பெருங் கருவூலம் — 15. inalienable land குடி நீங்கா நிலம் 16. tax free land இறையிலி • நிலம் — 17. subdivide a land நிலம் கூறு செய் — 18 Survey stones அளவுக்கல் — 19. Hereditory right வழிவழி உரிமை — 20. Take possession of கைக்கொள் — 21. Three Crop Land முப்பூ நிலம் — 22. Range சிறகம் *4. பிறமொழிச் சொற்கள் :* 1. Bank — 2. Cashier — 3. Quorum — 4. Calender — 5. Pump — 6. Mayor — 7. Chairman.

5. புதுப் புனைவு

4. சொல் செய் நெறிமுறை 57—83

1. இயற்றமிழ் — 2. பொருள் பொருத்தம் — 3. உருச் சுருக்கம் — 4. ஓசை நயம் — 5. மரபு அமைதி. ஒற்றுமை நோக்கு — பற்றுள்ளம் தேவை — வருங்கால வளமை.

ஆட்சித் தமிழ்

முதல் நாள் விரிவுரை

1—4—1976

தோற்றுவாய்

பல்கலைக்கழக அறக்கட்டளை விரிவுரையாற்ற வாய்த்தமைக்கு நான் பெரிதும் மகிழ்கின்றேன்.; என் வாழ்வில் எனக்குக் கிடைத்த ஒரு சிறப்பாக இதனைப் போற்றுகிறேன்.

அறக்கட்டளை, என்பால் பேரன்பு கொண்டிருந்த பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் விழா நினைவாக அமைந்தது என் மகிழ்ச்சியைப் பன்மடங்காக்குகின்றது.

பள்ளிப் பருவத்தில், மயிலையில், அவரது அன்புக்கு ஆளானவன் நான். வடக்கு மாட வீதியில், தமிழ்ப் பேறறிஞர் கா. சு. பிள்ளை அவர்களுடன் திரு. ரா. பி. சே. அவர்கள் வதிந்தனர். தெற்கு மாட வீதியில் திருவண்ணாமலைத் திருமடத்துச் சத்திரத்தில் நடந்துவந்த உணவு விடுதியில் அவர் உணவு கொள்வார். உணவுக்குச் செல்லும் போது என்னையும் உடன் அழைத்துச் செல்வார்; உண்ணும்போது பக்கத்தில் அமர்த்திக் கொள்வார்.

அப்போது அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் பயிற்றுநர் (Tutor) பணியில் இருந்துகொண்டு, சட்டக் கல்லூரியில் படித்து வந்தார்.

தமிழில் எழுதுவது எப்படி என்று சொல்லுவார். இனிமையான நடை கைவரப் பெறுவதற்குத் தனித்தமிழ்ப் பெரும்புலமை படைத்த மறைமலையடிகளாரின் 'கோகிலாம்பாள் கடிதங்'களை உன்னித்துப் படிக்க வேண்டும் என்பார். விறுவிறுப்பான நடை பழகுவதற்கு, அடிகளாரின் 'சோமசுந்தரக்காஞ்சியாக்கம்' என்னும் அரிய ஆராய்ச்சி நூலை ஆழ்ந்து படிக்க வேண்டும் என்பார்.

திருநெல்வேலியில் தாம்பிரபரணிக் கரையிலுள்ள செப்பறை என்னும் ஊரைத்தாண்டிச் சென்று, அவர்களது பிறந்த ஊரான

இராசவல்லிபுரத்துக்கு ஒருமுறை போய், அவர்கள் அன்பினுக்கு ஆளாயிருக்கிறேன்.

திருச்சியில் நான் நகராட்சி ஆணையனாக இருந்தபோது, ஒரு தடவை என் இல்லத்துக்கு வந்து உடன் உண்டு உவக்கும் பேற்றினையளித்தார்.

அடையாற்றில் அவர்கள் மாளிகையில் அவர்கள் அடைந்து விட்ட செய்திகேட்டு விரைந்து, நீராட்டுவதில் பங்குகொண்டு, பெற்ற பொன்னுடைகளால் அவர் திருவுருவைப் போர்த்திய கடைசிக் காட்சியைக் கண் நனையக் கண்டு, மயானத்திற்கு உடன்சென்று, பலருடன் நானும் அவர் புகழை வாயாரப் பேசிக் கடமையாற்றினேன்.

அவர்கள் அறிவுப் பணியாலும் தமிழ்ப்பணியாலும் ஆற்றிய பொருள் அனைத்தும், தமிழுக்கே உரிமையாக்கிய சிறப்பைப் பலரும் அறிவர். அவர் திருப்பெயர் என்றும் புகழோடு நிலவுக !

நம் நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களில், நமது சென்னைப் பல்கலைக் கழகமே, முதன்முதலில், ஓர் ‘ஆட்சி மொழி’யைப் பற்றி அறக்கட்டளை விரிவுரையாற்ற ஏற்பாடு செய்திருக்கிறது. இது மிகவும் பாராட்டற்பாலது. தமிழ் நமது மாநிலத்தின் ஆட்சிமொழியான பின்பு, நமது பல்கலைக் கழகம் தன் பேரவைக் கூட்டங்களின் பொருள் நிரல்களைத் தமிழிலும் அளிக்கத் துவங்கிவிட்டது. இனி, படிப்படியாகத் தமிழ் நமது பல்கலைக் கழகத்தின் எல்லாச் செயல்களுக்கும் பயன்பட்டு வரும்.

1950-ஆம் ஆண்டிலேயே இந்தியைச் சட்டப்படி ஆட்சி மொழியாக்கிக் கொண்ட பீகார் மாநிலத்துள்ள ஐந்து பல்கலைக் கழகங்களும் ஆங்கிலத்தையே ஆட்சிமொழியாகப் பயன்படுத்தி வருகின்றன. சென்ற மார்ச்சு மாதம் 14-ஆம் தேதி ‘இந்து’ நாள் தாளில் வெளிவந்த செய்தியில், அந்த மாநில முதல் அமைச்சர் திரு. சகந்நாத் மிச்ரா அவர்கள், அம்மாநிலத்தின் ஐந்து பல்கலைக் கழகங்களும், இந்தியை இன்னமும் ஆட்சிமொழியாக ஆக்கிக் கொள்ளாமைக்குத் திடுக்குற்று, உடனடியாக மொழிமாற்றம் செய்துகொள்ள வேண்டும் என்று, அப்பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களுக்கு, நேர்முக மடல் எழுதியிருப்பதாக அறிகிறோம். நமது பல்கலைக் கழகம் இதிலும் முன் அணியில் நிற்பது நமக்குப் பெருமிதமளிக்கிறது.

என்னை இவ்விரிவுரைகளை ஆற்றுமாறு அழைத்துள்ள பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் திரு. மால்கம் ஆதிசேஷையா அவர்களுக்கும் இப்பல்கலைக் கழகச் செயற்குழுவான ‘சிண்டிகேட்’ அவை

யினர்க்கும், பல்கலைக் கழகத் தமிழ்த்துறையை இயக்கும் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த அவையில் பல பேரறிஞர்கள் வந்து குழுமியுள்ளனர். என்னிடம் கொண்ட அன்பினுல் பலர் வருகை புரிந்துள்ளனர். ஒவ்வொருவருக்கும் என் அகங்கனிந்த கைகூப்பினை உரிமையாக்கு கின்றேன்.

'ஆட்சித் தமிழ் அன்றுதொட்டு இன்றுவரை' என்னும் தலைப்பின் கீழ், இன்றைய என் பேச்சை வரம்புசெய்துகொள்ளக் கருதுகிறேன்.

அன்றுதொட்டு இன்று வரை

1. கல் தோன்றி மண் தோன்ருக் காலம்

தமிழ்மொழி மிகப் பழைமையான மொழி. உலகம் தோன்றி உலகத்தில் மனிதன் தோன்றி, அம்மனிதனுக்குப் பேசத் தோன்றி, அவன் வாயைத் திறந்து பேசிய முதல் மொழி தமிழ் என்பர்.

படுவேகத்தில் சுழன்று கொண்டுள்ள ஞாயிற்றிலிருந்து, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, தெறித்து விழுந்த தீ வடிவப் பெருந்துண்டுகளில் ஒன்று இந்நிலம். ஞாயிற்றைச் சுற்றிச் சுழலச் சுழல, இத்துண்டு, உருண்டை வடிவம் எய்திக்கொண்டே, குளிர்ந்து கொண்டும் வந்தது. இதில் உயிர் இனம் தோன்றுவதற்கு உரிய பக்குவத்தை இது அடைந்தது; இவ்வுயிரினங்கள் படிப்படியாக வளர்ச்சியுற்றன. இறுதியாக மனிதன் இதில் உருவானுன்.

அக்காலம், இளகியிருந்த தீப்பிழம்பாகிய உலகம், இறுகிக் கல்லாகி அமைந்து இருந்த காலம். அக்கல்,பின்பே,தேய்ந்து தேய்ந்து நாளடைவில் மணலும், பிறகு மண்ணும் ஆயிற்று. கல்தோன்றிய காலத்துக்கும், மண் தோன்ருத காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தி லேதான் மனிதன் முதல்முதலில் தோன்றினுன்.

அங்ஙனம் தோன்றிய மனிதனே தமிழன் என்பர். எனவே, தமிழனை, 'கல் தோன்றி மண் தோன்ருக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி'யைச் சேர்ந்தவன் என்று சொல்லுவதை அறிவோம்.

'மூத்த குடி' என்னும் சொல்லில் இருந்தே, அக்காலத்துத் தமிழன் 'குடி செய்து' வாழ்ந்தான் என்று தெரிகிறது. காட்டு மிராண்டித்தனமாக வாழவில்லை. வீடு வாசல் அமைத்துக் கொண்டான். அவன் 'குடி செய்'வதற்காகக் கட்டிக்கொண்ட வீடே, 'குடிசெய்'. இது பின்னர், 'குடிசை' எனப்பெற்றது. அங்ஙனம் வாழ்ந்த காலத்தில், ஓர் எளிய ஆட்சிமுறையும் இருந்திருக்க வேண்டும். அந்த ஆட்சியை நடத்துவதற்குப் பயன்பட்ட மொழி, தமிழை விட்டால், வேறு எதுவாக இருந்திருக்க முடியும் ?

எனவே, வரலாறு அறியாத அம்முதுபெருந் தொன்மைக் காலத்திலேயே, தமிழ் ஆட்சிமொழியாக இலங்கியது என்று கொள்ளலாம்.

2. குமரிக் கண்டம் – இலமூரியா

நம் நாட்டிற்குத் தெற்கே விரிந்து பரந்து கிடக்கும் இந்துமாக் கடல் ஒரு காலத்தில் நிலப்பகுதியாக இருந்தது என்று, ஆராய்ச்சி

யாளர்கள் முடிவு கட்டிக் கூறுகின்றனர். நம் நாட்டிற்கு மேற்கிலும், பெரும்பரப்பு, நிலமாக இருந்தது என்றும் சொல்கின்றனர். நம் நாட்டின் வடபகுதி, விந்தியமலைக்கு அப்பால், கடற்பரப்பாக இருந்தது என்றும் மொழிவர். இயற்கையாற்றல்களின், எளிதில் விளங்கிக்கொள்ளலாகாத செயல்களால், கடல் நிலமாயிற்று ; நிலம் கடலாயிற்று. திடும் என்றோ, சிறிது சிறிதாகவோ, இவ்வாறு நேர்ந்திருக்கிறது.

‘ஆஸ்திரேலியா’க் கண்டமே, வானவெளியிலிருந்து திடும் என இந்நிலவுலகின் மீது வீழ்ந்தது என்றும், அந்தத் தாக்குதலாலும் அதிர்ச்சியினுலும் தென் நிலப்பகுதி அமிழ்ந்து கடலாயிற்று என்றும் கூறுவர். இங்ஙனம் கடலாக மாறிய நிலப்பகுதியே முதலில் ‘குமரிக்கண்டம்’ ஆக இருந்தது என்போம். இந்நிலப்பகுதியை மேல்நாட்டு அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் ‘இலமூரியா’ என்பர்.

விந்தியமலைக்கு வடக்கேயுள்ள நம்நாட்டு நிலப்பகுதியில், இன்றும் இராசத்தானம் போன்றவற்றில் பெரும் மணல் பரப்புகள் இருப்பதும், இமயமலையில் அகழ்ந்து பார்க்கும்போது, ஆழ்கடலில் காணக்கூடிய பொருளான திமிங்கிலத்தின் எலும்புக் கூடுகள் கிடைப்பதும், பிற கடல் படு பொருள்கள் காணப்பெறுவதும், நம் நாட்டின் வடபகுதி, ஒரு காலத்தில் கடலாக இருந்திருக்க வேண்டும் என்பதற்குத் தக்க சான்றுகளாக அமைகின்றன.

கடலால் விழுங்கப்பட்டுவந்த குமரி நாட்டில் வசித்திருந்த மக்கள் தமிழ்மக்கள். கல் தோன்றி மண் தோன்ருக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடியாயிற்றே அவர்கள்! அக்காலத்துக்கு ஏற்ற ஆட்சிமுறை அன்று நிகழ்ந்திருக்கும். அதனை நடத்துவதற்குத் தமிழே ஒரு தனிமொழியாக விளங்கியிருக்கும் என்று கொள்வது பொருத்தம்.

3. மொகஞ்சதரோ - ஆரப்பா

குமரி நாட்டைக் கடல் மூடியது, பகுதி பகுதியாக, மூன்று முறை நடந்தது என்பர். தெற்கே இருந்து, நிலத்தைக் கடல் சிறிது சிறிதாக மூடிக்கொண்டு வந்திருக்க வேண்டும். நிலம் கடலில் அமிழ அமிழ, அங்கு வாழ்ந்த தமிழ் மக்களில், நீரில் அமிழ்ந்தனர் போக, மற்றவர்கள் வடக்கே ஓடிக் குடியேறியிருக்கவேண்டும். கடைசிக் கடல்கோளுக்குப் பிறகு, விந்திய மலைக்குத் தெற்கே, இப்போதுள்ள தென்னகத்தில் மக்கள் செறிந்துவிட்டிருக்க வேண்டும். இத்தென்னகப் பகுதி எக்காலத்திலும் கடலால் பாதிக்கப்படவில்லை என்பர். என்றுமே, வாழும் நிலப்பகுதியாக இலங்கியிருக்கிறது. இங்கிருந்து, புதிதாக நிலமாகிக்கொண்டு வந்த, முன்னைய கடல் பகுதியான நாட்டில், வடக்கேயும் சென்று குடியேறியிருப்பர். அங்ஙனம் குடியேறிய பகுதிகளில், மொகஞ்சதரோ, ஆரப்பா முதலி

யனவாகப் பிற்காலத்தில் உருவாகிய பகுதி, மற்ற இடங்களைக் காட்டிலும் வசிப்பதற்கு வளமானதாக அமைந்திருக்கும். தெற்கில் இருந்து, கடலானது, வடக்கிருந்த நிலப் பரப்பை உண்டுகொண்டு வந்ததால், கடல்கோளுக்கு அஞ்சியவர்களாய், எவ்வளவு வடக்கே செல்ல முடியுமோ அவ்வளவு வடக்கே சென்றிருப்பது இயல்பே. அப்படிக் குடிபுகுந்த இடங்களே, சிந்துவெளி நாகரிகத்தால் சிறந்தன என்று பின்னல் போற்றுதற்குரிய பகுதிகளாயிருக்கும்.

மொகஞ்சதரோ, ஆரப்பா முதலிய இடங்களில் அகழ்ந்து கண்ட பொருள்களை ஆராய்ந்த அறிவியல் அறிஞர்கள், அந்நாகரிகம் இற்றைக்கு ஐயாயிரம், ஆருயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறுகின்றனர். புதை வடிகால்களும், பாதுகாத்த குடிநீர்க் குழாய்களும் அமைந்த பெரிய கட்டடங்கள் காணப்படுகின்றன. சிறந்த நகர் அமைப்பு முறைகள் கையாளப்பெற்றுள்ளன. இத்துணை மேன்மையார்ந்த நாகரிக வாழ்வு வாழ்ந்தவர்கள், மேதக்க முறையில் அரசாண்டும் இருப்பர் என்பது திண்ணம்.

அன்றைய ஆட்சிக்கு உகந்ததாயிருந்த மொழி ஒரே மொழிதான். அதுவே தமிழ்மொழி. அகழ்ந்தெடுத்த பொருள்களில், எழுத்துகள் பொறித்த ஓடுகளும் காணப்படுகின்றன. அந்த எழுத்துகளைத் தவத்திரு ஈராசுப் பாதிரியார் ஆராய்ந்து பார்த்தார். அவை தமிழ் எழுத்துகளையே குறிக்கின்றன என்று முடிவுகட்டினர். பின்னர், பிற பல அறிஞர்களும், ஆராய்ந்து கண்டு, இம்முடிவுக்கே வந்தனர். பின்லாந்து நாட்டு எழுத்தியல் வல்லுநர்களும், உருசிய எழுத்துருவ ஆய்வு அறிஞர்களும் இம்முடிவையே உறுதிப்படுத்துகின்றனர்.

தமிழ்மொழியுடன் தொடர்பில்லாத மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்ட அயல்நாட்டு அறிஞர்கள், சிறிதும் பால்பற்ருமல் ஆய்ந்து கண்ட உண்மையைத் தாம் அறிந்தவாறே கூறியிருப்பவும், வேறு சிலருக்கு, இந்த உண்மையை எப்படியாவது மறைத்துவிடக் கூடாதா என்னும் நப்பாசை, இன்னும் இருந்து வருவதையறிவோம். தமிழைத் தம் தாய்மொழி எனச் சொல்லிக்கொண்டவர்களே, அச்சிலரில் பெரும்பாலோர் என்று அறியும்போது, நமக்கே வியப்பாக இருக்கிறது. இப்படியும், தம் தாயிடமே அன்பில்லாத, இயற்கைக்கு மாருன எண்ணம், இவர்கள் உள்ளங்களில் உதிக்கின்றதே எனக் கையற்றுப் போகிறேம். தமிழர்களாகத் தம்மைக் கூறிக்கொண்டாலும், இவர்கள் வேறு ஏதேதோ பற்றினைத் தம் மனத்தகத்தே பொதிந்து வைத்துக்கொண்டு, இங்ஙனம் உண்மையை மறைத்து, மற்ருென்றை வலியுறுத்தத் திட்டமிடுகிருர்கள் என்பதை நாம் உணர்ந்துகொள்ளாமல் இருக்க முடியாது.

உள் எண்ணத்தால் எவர், எத்தனை முயன்ருலும் உண்மையை உண்மையென்று உலகம் உறுதிசெய்து கொள்ளாமற் போகாது.

சிந்துவெளி நாகரிகக் காலத்தில் ஆட்சி மொழி தமிழே என்பதை ஐயத்துக்கு இடமின்றிக் கூறலாம்.

4. சங்க காலம்

பண்டைக் காலத்தில் தமிழ்ச் சங்கங்கள் மூன்று நிலவின என்று அறிகிறோம். அவை பணியாற்றிய காலங்களை, இறையனார் அகப் பொருள் அகலவுரை, விரிவாகக் கூறுகின்றது. வரலாற்றுக் காலத் துக்கு முன்பே, தமிழ்ச்சங்கம் தொடங்கப்பெற்றது என்று தெரிகிறது. பல்லாயிரம் ஆண்டுகள் ஒவ்வொரு சங்கமும் நடந்தது என்றும், ஒவ் வொன்றிலும் இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை இத்தனை இத்தனை என்றும், அவ்வுரை விரித்துரைக்கிறது. பிறவா யாக்கைப் பெரியோராகிய கடவுளே முதற் சங்கத்தின் தலைவர் என்றும் கூறக் காண்கிறோம். பெம்மான் முருகனே அகப்பொருள் இலக்கணத் துக்கு உண்மை உரை காண, உணர்வு வயப்பட்டு உதவினார் என்றும் சொல்லப் பெற்றிருக்கிறது.

அதில் கூறிய எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்வது எளிதாக இல்லையாயினும், தமிழ் இலக்கண இலக்கியங்கள், ஆய்வதற்குரிய அளவு பெருகி வளர்ந்திருந்தன என்பதும், அவ்வாறு ஆயும் புலமை சான்ற பெருமக்கள் பலர் வாழ்ந்திருந்தனர் என்பதும் இனிது புலனா கின்றன. வரலாறு காணாத காலத்திலேயே, தமிழில் 'அகத்தியம்' என்றோர் இலக்கண நூல், முதற் சங்கத்தில் இலங்கியது என்னும் செய்தி கூறப்பெற்றிருப்பதால், அதற்கு முன்பே, பல இலக்கி யங்கள் தோன்றி, மக்களால் பயிலப்பெற்றிருக்க வேண்டும் என்பது விளங்குகிறது.

'எள்ளில் இருந்து எண்ணெய் எடுப்பது போல
இலக்கியத்திலிருந்து எடுபடும் இலக்கணம்'

என்று ஒரு நூற்பாவும், அவ் அகத்தியத்தில் இருந்ததாகப் பிற நூல் களில் எடுத்தாளப்படுவதையறிவோம்.

இரண்டாவது சங்கத்துக்கு இலக்கணமாக இருந்தது 'தொல் காப்பியம்' என்பர். சங்கம் மருவிய நூல்களில் சில பகுதிகள் தொல்காப்பிய இலக்கணத்தைச் சாராதனவாக இருப்பது கொண்டு, நமக்குக் கிடைத்துள்ள சங்க நூல்களுக்கு முன்பே, பல இலக்கி யங்கள் இருந்தன என்பதும், அவற்றிற் கண்ட இலக்கண அமைதி யையே தொல்காப்பியம் தனது நூற்பாக்களில் நவின்றுள்ளது என்பதும் பெறப்படும். இடைச்சங்க, கடைச்சங்க கால நூல்களி லும், சிலவற்றில், இங்கும் அங்கும் சிதறி வழங்கிய பாடல்கள் சில வற்றைத் திரட்டியே, 'எட்டுத்தொகை' நூல்கள் யாக்கப்பெற்றன. பத்துப் பாடல்களும் இங்ஙனம் கிடைத்தவையே.

அரிதிற் கிடைத்த இச்சில நூல்களும், தமிழர்கள் அல்லாதார் வகுத்த இலக்கணத்தின்படியே எழுதப்பெற்றன என்று சொல் வதிலே, நம்மில் சிலருக்கு மனநிறைவு இருப்பதைப் பார்க்கிறோம். 'இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் வகுப்பதே மரபு' என்னும் உண்மையை மறுத்து, உண்டாக்கிக்கொள்வது இம்மன நிறைவு.

'அகத்தியம்' என்னும் சொல்லுக்குக் 'கட்டாயம்' என்னும் பொருள் இருப்பதை, நாட்டுப்புறங்களில் உள்ளவர்கள் பேசும் பேச்சிலும் அறியலாம். 'எங்கள் வீட்டுத் திருமணத்திற்கு நீங்கள் அகத்தியம் வரவேண்டும்' என்று அழைப்பர். 'அகத்தியம்' எழுதியவர் 'அகத்தியர்.' தமிழுக்கு அகத்தியமானவர், அகத்தியர் எனப்பெற்றார். காரணப் பொருளில் இப்பெயர் அமைந்திருக்கிறது. இப்பெயரை, 'அகஸ்தியர்' என்று திரித்து, அவர் தமிழர் அல்லார் என்று ஆக்கிக்கொண்டும், அகத்தியரின் மாணுக்கரான 'திரணதூமாக்கினியே' தொல்காப்பியர் என்று கதை கூறி, அவரையும் தமிழர் அல்லார் என்று சொல்லிக்கொண்டும், இம்மன நிறைவுக்கு அமைதி தேடிக்கொள்பவர்களை என்னவென்று சொல்வது?

முச்சங்கங்களால் தமிழுக்கு உள்ள சிறப்பினைக் கண்டு, பொருமலோ என்னவோ, 'சங்கம்' என்னும் சொல்லே தமிழ்ச் சொல் அன்று என்று கூறுவதற்கு ஆதாரமாக, 'ச' என்னும் எழுத்தே சொல்லுக்கு முன் வராது என்னும் பொருள்படும்படி, தொல்காப்பிய நூற்பா ஒன்றையும் உருவாக்கி வைத்துவிட்டனர் போலும். 'சங்கம்' என்னும் சொல்லே, தமிழ்ச் சொல்லாக இல்லை யென்னும் வாதத்தால், முச்சங்கங்களும், சங்கம் மருவிய நூல்களும், வேறோர் அயல்மொழியின் ஆதரவால் இயங்கினவாகும் என்னும் கருத்தை வலியுறுத்தும் உள்நோக்கு இருப்பது வெள்ளிடைமலை.

'இலக்கியம்' என்னும் சொல் 'இலங்கு - இயம்' என்று பிரிப்பதற்கு உரியதாய், இலங்குகின்ற கருத்தை, இலங்குகின்ற மொழியிலே, இலங்குகின்ற முறையிலே எடுத்தியம்புவது என்னும் பொருளில் இருக்கிறது. இதனை 'இலட்சியம்' என்றும், 'இலக்கணம்' என்னும் சொல்லை 'இலட்சணம்' என்றும் ஆக்கிக் கொண்டு, இலக்கியமும் இலக்கணமும் பிறமொழிச் சொற்களே என்று அடித்துக்கூறும் போக்கும், இதே உள்நோக்கினை அடிப் படையாகக் கொண்டதேயாகும்.

எவர், எத்தகைய மனநிறைவைக் கொள்ளவோ, எத்தகைய உள்நோக்கை வலியுறுத்தவோ, ஏதேது செய்தாலும், ஏதேது சொன்னாலும், தமிழ்மொழி, சங்க காலத்தில் மிகச் சிறந்த பொற்போடு பொலிந்தது என்னும் உண்மை, மறைக்கலாகாத உண்மையே யாகும்.

அம்மொழியின் மாண்பினைப் புரந்துகொண்டு, தென்னகத்தை யாண்ட சேர சோழ பாண்டியர்கள், தமிழையே தம் நாட்டாட்

சிக்குத் தனிமொழியாகப் பயன்படுத்தினர் என்பதே நாம் ஈண்டு உணரற்பாலது.

5. பல்லவர் காலம்

பல்லவர்கள் அயலகத்திலேயிருந்து நம் நாட்டின்மீது படையெடுத்து வந்தவர்கள் ஆயினும், நம் நாட்டில் தங்கி ஆட்சி புரிந்த போது, தமிழையே துணையாகக் கொண்டனர். அவர்களுக்குப் பிற மொழிப் பற்று இருந்தது என்றாலும், அதனைச் சில வகைக்கே கட்டுப் படுத்திக்கொண்டு, தமிழிலேயே ஆட்சியை நடத்தினர். அவர்கள் காலத்துக் கல்வெட்டுகள் இதற்குச் சான்று பகரும். பல்லவ மன்னர்களில் சிலர் சிவனடியார்களாகவும் வைணவ அடியார்களாகவும் விளங்கி, இரு நெறியினராலும் போற்றப்பெறும் செயல்களைச் செய்து, புகழ் எய்தியிருக்கின்றனர். சைவ, வைணவ திருநெறிக் குரவர்களால் பாடப்பெறும் பெருமையினையும் பெற்றிருக்கின்றனர். இவையும், அம்மன்னர்கள், தமிழைப் பாராட்டியதற்குச் சான்றாக அமைந்து, தமிழில் ஆட்சி புரிந்தனர் என்பதைச் சுட்டிக்காட்டும்.

ஆட்சியில், சில பிறமொழிச் சொற்களை அவர்கள் பயன்படுத்தியிருப்பது இயல்பே. வடமொழிப் பற்றும் அவர்களுக்கு இருந்ததில் ஏதும் புதுமையில்லை. தனியவர்களுக்குப் பட்டங்கள் வழங்கும் போது, தம் மரபின் பெயரையே பட்டமாக்கி வழங்கினர். பெரிய புராணம் எழுதிய சேக்கிழார் பெருமானை 'உத்தம சோழப் பல்லவன்' என்னும் பட்டத்தால் பெருமைப்படுத்தினர். வீர நெஞ்சம் படைத்த, 'படையாட்சி' மரபுக்கே 'பல்லவர்' என்னும் பட்டம் சூட்டிப் புகழ்ந்தனர். இப்பட்டமே பிற்காலத்தில் 'பள்ளவர்' 'பள்ளி' என்னும் பெயர், அந்த மரபுக்கு வருவதற்குக் காரணமாயிருந்தது. இதைப் புரிந்துகொள்ளாத சிலர், 'படையாட்சி'க் குலத்தவர் தமிழர் அல்லர்; வேறு புலத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்த பல்லவர் இனத்தினர் என்று சொல்லவும் முற்பட்டனர். ஆங்கிலேயர் 'சர்' என்றும், 'நைட்' என்றும் பட்டம் கொடுத்தது போலவும், முசுலீம் மரபையொட்டி 'இராவ்சாகிப்,' 'திவான்பகதூர்' என்று பட்டம் அளித்ததுபோலவும், பெருமை செய்வதற்குத் தகுதி பூண்ட தனியாள்களுக்கும், 'பல்லவன்' என்று பட்டம் தந்தது போல ஓர் இனத்துக்கே 'பல்லவர்' என்னும் பட்டம் தந்தனர் பல்லவ மன்னர்கள்.

தம் மரபுக்கு ஏற்ற வகையில் பட்டங்கள் அளித்தாலும், தாம் தொடர்பு கொண்டிருந்த பிறமொழிகளில் பற்றுடையவராக இருந்தாலும், தமிழை அவர்கள் புறக்கணித்துவிடவில்லை. ஆட்சிமொழி தமிழாகவே அவர்களது ஆட்சியில் விளங்கிற்று என்னும் உண்மையை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

6. பிற்காலச் சேர, சோழ, பாண்டியர்

சங்க காலத்தின் சேர சோழ பாண்டியர்களின் தமிழ் வளமையை, இங்கும் — அதாவது பிற்காலச் சேர, சோழ, பாண்டியர்

காலத்திலும் காணலாம். ஆனுல், முந்தைய அம்மன்னர்கள் காலத்தில், பிறமொழித் தாக்குதலுக்கு இடமில்லாமல் இருத்தது. அப்போது தமிழ் தனது தனித்திருச்செழிப்பில் திகழ்ந்திருந்தது. இப்போது பிற மொழியாளர் இடையீடுகளால், தமிழ் தனது தனித்தன்மையில் ஓரளவு குறைந்திருந்தாலும், தமிழுக்கு உச்சநிலே இல்லாமல் இல்லே. அரசாளும் மொழியாக அரியணேயில் அமர்ந்து விளங்கிவந்தது.

சங்க காலத்தைப் போல, பல கலேகளும் தமிழில் தழைத்து வளர்ந்தன. அக்காலத்தில் உரோம நாட்டுடனும், கிரேக்க நாட்டுடனும் வணிகம் நடந்தது ; இக்காலத்தில், தென்கிழக்கு நாடுகளில் தமிழ்ப் பண்பாடே பரவியது. இசைக்கலே நாட்டியக்கலே பற்றிய நுணுக்கங்கள் கட்டடக் கலேயோடு தொடர்பு கொண்டன. தென் கிழக்கு நாடுகளிலும் இவை நிலேயான உருவங்கள் பெற்றன. இன்றும் அவற்றின் சின்னங்களே அந்நாடுகளில், கண்டு புகழத் தக்க அளவில், அவை அங்கு நிலவுகின்றன. அவை அங்கு நிலே கொள்ளுவதற்கு முன்பு, அந்நாடுகள் தமிழர் ஆட்சிக்குத் தலே சாய்த்தன. அது எளிதில் கைவந்துவிடவில்லே. போர் நிகழ்த்தி, அந்நாடுகளே வென்றனர் தமிழ் மன்னர்கள். கடல் இடைப்பட்ட நாடுகள் அவையாதலின், தரைப் போர் செய்து அவற்றைத் தமிழர் ஆட்சிக்கு ஆட்படுத்துவது எங்ஙனம் இயலும் ?

கடற்போர்கள் பல நிகழ வேண்டியிருந்தன. கடற் கொள்ளேக் காரர்களே அடக்கி வெல்லவும், கடலில் போர்கள் நடந்திருக்கின்றன. போர்க்கப்பல்கள் என்பது எளிய படகு போன்றதாகுமா? எதிரியின் தாக்குதலேத் தாங்கிச் சமாளிக்கும் ஆற்றலும், அதற்குத் தேவையான அமைப்புகளும், அக்கப்பல்களில் இருந்திருக்க வேண்டும். எதிரியை வெற்றிகொள விரைந்து தாக்கி முறியடிக்கும் கருவிகளும், அவற்றில் பொருத்தப்பெற்றிருக்க வேண்டும். கடல் மீது அணிவகுத்து அடல் புரியும்போது, கப்பலில் உள்ளவர்களுக்கு அன்ருடத் தேவைகள் அளிக்கப்பெறுவதற்குரிய ஏற்பாடுகள் அக் கப்பலில் அமைந்திருக்க வேண்டும்.

இக்கப்பல்கள் அயல்நாடுகளில் அயலவர்களால் ஆக்கப் பெற்று, நம்மவர்களால் விலேக்கு வாங்கிப் பயன்படுத்தப் பெற்ற வையா ? நாமே செய்துகொண்டவைதாமே ! இவற்றைச் செய்வ தற்குரிய கலேயை நம் முன்னேர்கள் நன்கு அறிந்திருந்தனர். அக் கலேயை நூல் வடிவிலே எழுதி வைத்திருந்தனர். அவர்கள் எந்த மொழியிலே எழுத முடியும் ? தமிழிலேதான் பொறித்து வைத்தனர் என்று சொல்லவும் வேண்டுமா ? அந்நூல்களில் ஒன்ருவது இன்று இல்லேயே என்று கலங்குகிருேம். பிறமொழியில் அவை மொழி பெயர்க்கப்பெற்றன. பிறகு தமிழ்நூல்கள் எங்கே போயினவோ தெரியவில்லே.

ஐரோப்பிய நாடுகளுடன் கப்பல் வணிகம் செய்வதற்குரிய கப்பல்களைக் கட்டும் அறிவியல் நூல்களும் தமிழில் இருந்தன. பின்பு அடிச்சுவடுகூட இல்லாமல் அவைகள் எங்ஙனம் மறைந்து போயினவோ தெரியவில்லை. பல்லாயிரம் கற்கள், பலப்பல மாதங்கள் அக்கப்பல்களிலே பயணஞ்செய்த பலருக்கும் தேவையான, உணவுப் பண்டங்கள் அக்கப்பல்களிலே பண்டடை செய்யப்பெற்றிருக்க வேண்டும். ஓராண்டுக்கும் மேலான காலத்துக்குத் தேவையான குடிநீரும் அக்கப்பல்களில் சேமித்து வைக்கப் பெற்றிருக்க வேண்டும். அல்லது கடல்நீரை அவ்வப்போது தேவையான அளவுக்கு நன்னீராக மாற்றும் வகையறிந்திருக்க வேண்டும், அலுப்புத் தீர உறங்குவதற்கான வசதிகளும் பிற வசதிகளும் அவற்றில் பொருத்தியிருக்க வேண்டும்.

வழியில், கடலிலுள்ள சுறு, திமிங்கிலம், செந்நாகவனி, முதலிய தீங்கிழைக்கும் கடலுயிர்களால் கப்பலுக்கு ஊறுநேராதபடி காப்பதற்குரிய முறைகளையும், அவற்றைக் கையாளுவதற்கான அறிவையும் ஆற்றலையும் படைத்த திறலாளர்களையும், அக்கப்பல்கள் கொண்டிராவிட்டால், ஒரு கப்பலாவது உருப்படியாக அயல் கரையை அடைந்திருக்க முடியுமா? அவ்வுயிர்களால் ஊறுண்ட, உடை கப்பல், கப்பலாய்த் திரையாழி யூடு செலுமோ?

கடற்பயணத்தில் நேரக்கூடிய புயல்கள், சூறுவளிகள், பெருமழைகள், முதலியவற்றை வெல்லும் ஆற்றல் அக்கப்பல்களுக்கு இருந்திருக்க வேண்டாவா? எனவே, நெடுந்தூரக்கப்பல் பயணத்திற்கான, 'கடலியல்,' 'காற்றியல்,' 'வானியல்,' 'மீனியல்,' போன்ற பல வகை அறிவியல் ஞானமும், கப்பலியலுடன் தெரிந்திருந்தால்தானே, கப்பற்பயணம் வெற்றியளிக்கும். இந்த அறிவியல் செய்திகளை எந்த மொழியில் நம்மவர்கள் கற்றுப் பயன்படுத்தியிருப்பர்? தமிழில் தானே? அவ் அறிவியல் நூல்கள், அந்தோ, இன்று காணோமே என்று கவல்வதைத் தவிர, நாம் என்ன செய்ய முடியும்? அயல் மொழியில் இவ் அறிவியல் நூல்களைப் படித்து அறிந்து, அக்காலத்து நிலையளவாவது உயர்வதற்கு, நமக்குக் காலம் போதாதே என்று கவலையில் ஆழாமல், இனிவரும் நம்மவர்களாயினும், இக்கால உயர்நிலையை இவ்வறிவியல் துறைகளில் எய்த, ஏற்ற ஏற்பாடுகளைச் செய்ய நம் அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு நாமும் உவந்து தோள் கொடுத்து உதவுவோமாக! தமிழில் இவ்வறிவியல் துறைகள் வளம் பெறுவதற்குத் தமிழறிவு, படைத்த நாம்தாம், பிறமொழியிலுள்ள அறிவியல் நூல் அறிவுடன் தக்க தமிழறிவும் பூண்டு, அவ்வறிவியல் நூல்களைத் தமிழில் எழுதியாகவேண்டும்.

கப்பலியலேயன்றி, வானூர்தியியலையும் சங்ககால மக்களுக்கு முன்னிருந்தவர்களே அறிந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. அங்ஙனம் அறியாமலா, வானூர்தியைப் பற்றிய செய்திகள் ஐம்

பெருங்காப்பியங்களில் வருகின்றன? ஓட்டுநர் இல்லாமலே இயங்கும் வானூர்திகள் பற்றியும் அக்காலத்தவர் அறிந்திருந்தனர் என்பதற்குச் சான்ருகவன்றே வருகின்றது, ஆங்கிலத்தில் Pilotless Plane என்பதற்கு நேரான 'வலவன் ஏவா வான ஊர்தி' என்னும் தமிழ்த் தொடர்?

'Aero Plane' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு எவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கிறது 'வானூர்தி' என்னும் சிறுசொல்! இதன் அழகை யுணராத நண்பர் ஒருவர் கேட்டார்; 'ஊர்தி' என்ருல் எறும்பு போல மெல்ல ஊர்ந்து செல்வதைத்தானே குறிக்கும்; வானத்தில் மிக விரைந்து பறந்து செல்லும் பொருளை 'ஊர்தி' என்பது எப்படிப் பொருந்தும்? என்று. அவர் வானத்தில் ஒரு வானூர்தி பறந்து போகும் போது அண்ணுந்து பார்த்தாராஞல் இங்ஙனம் கேட்கமாட்டார்? அது எவ்வளவு, விரைந்து பறந்து போனுலும், கீழிருந்து பார்க்கும் நம் கண்ணுக்கு அது மெல்ல ஊர்ந்து செல்வது போலத்தானே தோன்றுகிறது? வரிசையாக ஒன்றன்பின் ஒன்ருகப் பல ஊர்திகள் பறக்கும்போது, அக்காட்சி எறும்புகள் ஒன்றன்பின் ஒன்ருய் ஊர்ந்து செல்வது போலவே தோன்றும் என்பதையும் அந்நண்பர் கவனித்து, 'வானூர்தி' என்னும் சொல்லின் பொருத்தத்தைப் போற்ற வேண்டாவா?

சிலப்பதிகாரத்தில் வரும், காண்பாரை வியக்கவைக்கும் ஐந்து மன்றங்களான 'வெள்ளிடை மன்றம்,' 'இலஞ்சி மன்றம்,' 'ஒளிகால் மன்றம்,' 'பூதச்சதுக்கம்,' 'பாவை மன்றம்' இவைபோன்ற கருவிகளை இக்காலத்தவர் கணிப்பங்கள் (Computors) என்பர். ஏதோ மாயத்தால் மந்திரத்தால் அம்மன்றங்கள் உருவாக்கப்பெற்றன என்று எண்ணுமல், அக்காலத்துத் தமிழ் மக்கள் தமது அறிவியல் ஆற்றலால், இக்கணிப்பங்களை அமைத்துக் காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பித்தனர் என்றே கொள்ளவேண்டும் என்பது என்கருத்து.

சங்க காலச் செய்திகளில், முன்பே சொல்ல விடுபட்ட சிலவற்றையும், அக்காலச் சேர சோழ பாண்டியர்களின் வழித் தோன்றல்களே பிற்காலச் சோழ பாண்டியர்கள் என்பதால் ஈண்டுச் சொன்னேனுலும், எனது நோக்கம், தமிழ், அறிவியல் சான்ற அரசாளும் மொழியாக, இவ்விருவகை மன்னர்கள் காலத்தில் திகழ்ந்தது என்று எடுத்துரைப்பதேயாகும்.

7. நாயக்கர் மன்னர் காலம்

தென்னகத்தில் இந்து சமயம் அயல் சமயத்தவரால் அழிக்கப் பட்டுவிடாதபடி காக்கும் பொறுப்புணர்ச்சியுடன் அமைக்கப் பெற்றதே விசயநகரப் பேரரசு. ஆனுல் அவ்வரசைச் சேர்ந்த விசுவநாத நாயக்கர், தமிழகத்தைத் தம் நேர் ஆட்சிக்கு ஆட்படுத்த மதுரைக்கு வந்தார். அவர் தமிழின் வடபகுதி வடிவமான 'வடுகு'என்னும் மொழியைத் தம் தாம் மொழியாகக் கொண்டவர். தமிழ் தேன்

போல இனியது ஆவதுபோல் வடுகும்இனிது ஆதலின் பின்பு தெனுகு எனப்பெற்றது. பின்னர் இது தெலுங்கு ஆயிற்று. எனினும் தமிழைப் புறக்கணிக்கவில்லை. அவருக்குத் திட்மூட்டி அவரைத் தமிழகத்துக்கு அழைத்து வந்த அரிய நாயக முதலியார் நல்ல தமிழர். தொண்டை நாட்டைச் சேர்ந்தவர். எங்கள் சிற்றூரான கீழச்சேரியைத் தொட்டாற் போலுள்ள 'மப்பேடு' என்னும் சிற்றூரைச் சேர்ந்தவர். சிறுபிள்ளையாக இருந்தபோதே விசயநகர அரசின் அரண்மனையில் பணியேற்றவர். அப்போது, விசுவநாத நாயக்கருக்குத் தோழரான வர். இயல்பாக விசுவநாத நாயக்கர் தமிழைப் போற்றுபவராக இருந் ததுடன், அரியநாயக முதலியாரின் தொடர்பு, விசுவநாத நாயக்கர் ஆட்சியில், தமிழுக்கு ஏற்றந்தந்தது.

திருமலை நாயக்கர், தெய்வத் தமிழ்ப் பெரும்புலவரான குமர குருபர அடிகளாருக்குப் பேராதரவு அளித்து, அத்திருவாளர் எழுதிய 'மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ்' என்னும் அரிய நூலின் அரங்கேற்றத்திற்குத் தாமே தலைமையமர்ந்து பாராட்டினுர் என்றும், பெரும் பொருள் வழங்கி மகிழ்ந்தார் என்றும் அறிகிரேும். அவ்வளவு தமிழ்ப் பற்றுடைய அம்மன்னர் காலத்தில், தமிழ் ஆட்சி ஓங்கியிருந் தது என்று கூறுவது மிகையாகாது. வடுகத் தமிழைத் 'தெலுங்கு' என்று ஒரு தனிமொழியாக்கிவிட்ட சமற்கிருதத்தின் மீது, அவருக்குப் பரிவு இருந்ததில் வியப்பேது? ஆனுல், அதனுல் தமிழின் வளம் கெடவில்லை. சில அயற்சொற்கள் தமிழில் இயல்பாகப் புகுவன வாயின. அவ்வளவே.

மதுரையே யன்றி, தஞ்சை, செஞ்சி இவ்விரு நகரங்களைத் தலைமையிடமாகக் கொண்டு நாயக்க மன்னர்களின் வேறு பிரிவினர் அரசாண்டு வந்தனர். அவர்களும் தமிழையே ஆளும் மொழியாகப் பயன்படுத்தி வந்தனர்.

நாயக்க மன்னர்களிடையே ஏற்பட்ட பொருமையும் புகைச்ச லும், பிற இனத்தவர்கள் நுழைந்து ஆட்சியைக் கைப்பற்ற இடந் தந்தது.

8. மராட்டியர், பிறர் காலம்

மதுரை நாயக்கருக்கும் தஞ்சை நாயக்கருக்கும் ஏற்பட்டிருந்த பகைமை காரணத்தால், ஏற்பட்ட போரில், மராட்டியரின் உதவி கோரப்பட்டது. உதவிபுரிய வந்த மராட்டியர், தஞ்சையைத் தம்வசமாக்கிக் கொண்டு, அங்கு அமர்ந்து ஆளத் தொடங்கினர். மராட்டிய மொழி சமஸ்கிருதத்துடன் பெரிதும் தொடர்புடையது ஆதலின், அங்கு ஆண்டவர்கள் சமஸ்கிருதத்துக்கு ஏற்றந் தந்தனராயினும், அம்மொழி, ஆட்சியைக் கைப்பற்ற விட்டுவிட வில்லை. பல தமிழ் நூல்கள், வடமொழி நூல்கள் ஆயின என்ருலும், அரசு தமிழிலேயே நடந்தது.

சரபோசி மன்னர் பல்கலைச் சுவைஞராக இருந்தார் ஆதலின், பல கலைகளைப் பற்றிய நூல்களையும் திரட்டுவதில், அவர் பேருக்கங் கொண்டார். 'சரசவதி மகால்' என்று இன்றும் புகழோடு விளங்கும் நூலகத்தில், அரிய கலை நூல்கள் பல செறிந்துள்ளன. நாட்டு மருத்துவம், இசைபோன்ற துறைகளில் போற்றற்குரிய ஓலைச் சுவடிகள், அவற்றைப் படித்து, அத்துறைகளில் ஆராய்ச்சி செய் வோர்க்கு, அரும் பொருள்களாகக் கிடைக்கின்றன. இந்நூலகம், தமிழின் வளத்தைப் பெருக்குவதற்கு, இன்னும் பெரிதளவு, பயன் படுத்தப்பெறவேண்டியிருக்கிறது என்பதைத், தமிழ் நலம் பெருக்கும் கருத்துடையவர்கள் கவனத்தில் கொண்டு, அரசின் உதவி பெற்று ஆவன செய்ய வேண்டும்.

மராட்டிய மன்னர்கள் பிறமொழியாளராலுைம், தமிழையே ஆட்சிமொழியாகக் கொண்டிருந்தது போல, ஐதராபாத்தைச் சேர்ந்த 'வாரங்கல்' என்னும் நகரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு அரசாண்ட 'காகதியர்' என்னும் மரபினரும், ஒரு காலத்தில் திருச்சி வரை கைப்பற்றி அவர்களது ஆட்சிக்கு அத் தமிழ்நாட்டுப் பகுதியை உட்படுத்தியிருந்தபோது, அவர்களும் தமிழையே ஆட்சி மொழியாகக் கொண்டு ஆண்டு வந்தனர். சிலகாலம் ஒய்சாள நாட்டு மன்னர், திருச்சிக்கு அண்மையிலுள்ள சமயபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு, தமிழகத்தின் ஒரு பகுதியை ஆண்டனர். அவர்களும் தமிழைப் புறக்கணித்துவிடவில்லை. ஆட்சிமொழி தமிழாகவே இருந்தது.

9. முசுலீம் அரசு

எந்த நோக்கத்துடன் விசயநகரப் பேரரசு அமைக்கப்பெற் றதோ அந்த நோக்கம், காலப் போக்கில் காற்றில் சென்றுவிடவே, அப்பேரரசு சிதைந்துபோனதுடன், பல சிற்றரசுகள் தோன்ற இடம் ஏற்பட்டது. முசுலீம் மன்னர்களுக்கு இது வாய்ப்பான நேரமா யிற்று. தமிழகத்தில் பல பகுதிகளைத் தம் ஆட்சிக்கு உட்படுத்திக் கொண்டனர்.

தம் சமயத்தைப் பரப்புவது முசுலீம் மன்னர்களின் முதல் நோக்கமாக இருந்தது என்றாலும், தமிழர்களை இசுலாமியர்களாக மதமாற்றம் செய்தபோது, அத்தமிழர்கள் தமிழர்களாகவே இருக்க இசைந்து போந்தனர். சமய வழிபாட்டிற்கு அரபுமொழி ஓரளவு பயிற்றப் பெற்றது ஆனாலும், தமிழும் இணையாக வளர்க்கப்பெற்றது. ஆட்சியைத் தமிழிலேயே நடத்திவந்தனர். 'மசால்ச்சி,' 'சிரஸ்ததார்,' 'டபேதார்,' 'தாசில்தார்,' 'தாக்கீது,' 'வாபிசு,' 'பதில்,' 'நகல்,' போன்ற சில உருதுச் சொற்கள், ஆட்சித் தமிழில் நுழையலாயின. இது இயல்பே. மற்றப்படி, தமிழுக்கு ஏதும் ஊறு நேரவில்லை. பிற் காலத்தில் தமிழில் இசுலாமிய இலக்கியங்களை இயற்றுவதற்குரிய ஆற்றல் படைத்த தமிழ்ப் பெரும் புலவர்கள் தோன்று

வதற்கு வாய்ப்புகள் இருந்தன. தில்லியில் ஆட்சி புரிந்த மொகலாய மன்னர் அவுரங்கசீப், குமரகுருபர அடிகளாருக்குக் காசியில் இடம் தந்து, தமிழை வளர்ப்பதற்கு வாய்ப்பு அளித்ததுபோல, தமிழகத்தில் ஆட்சி செய்த முசுலீம் சிற்றரசர்களும் தமிழ் வளர்வதற்கான வாயில்களைக் கெடுத்துவிடவில்லை.

இவ்வாருகக், கல் தோன்றி மண் தோன்ருக் காலம் முதற் கொண்டு, ஆங்கிலேயர் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பு வரையில், நம் நாட்டின் ஆட்சிமொழி தமிழாகவே இருந்துவந்தது என்பதை ஒருவாறு அறிந்தோம். நமது நாட்டை ஆண்டவர்கள் எந்த வேற்று மொழியினராக இருப்பினும், தம்தம் மொழியையே நாட்டின் ஆட்சி மொழியாக்கிவிட முனையாமல், நம்மொழியாகிய தமிழே தமிழகத்தின் ஆட்சிமொழியாக இருப்பதற்கு இசைந்து வந்திருக்கின்றனர் என்பதையறிகிரேம்.

10. ஆங்கிலேயர் ஆட்சி

வணிகம் புரிய வந்த ஆங்கிலேயர், எதிர்கால நோக்கத்துடன் தம்மை வலுப்படுத்திக் கொண்டு, இங்கு அதுபோது சிதறுண்டு கிடந்த அரசியல் நிலையை யறிந்து, பிரித்தாளும் வல்லமையால், சிற்றரசர்களுடன், வசதிக்கு ஏற்றபடி கூட்டுச் சேர்ந்து, அவர்களே ஒருவரையொருவர் மாய்த்துக்கொள்ளும்படிசெய்து, சிறிது சிறிதாக நாட்டைத் தம் ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்துவிட்ட செய்தி நாம் அறிந்த செய்தியே.

நாட்டை ஆளத் தொடங்கியபோது, ஆங்கிலம் ஆட்சிமொழி யாக இருப்பது அவர்களுக்கு எளிதாக இருந்தது. பல மொழிகள் பேசும் பல இனத்தவருக்கும் பொதுவாக, அவ்வொரு மொழியையே பயன்படுத்துவது வசதியாக இருக்கும் என்று எண்ணினர்கள். இங்கிலாந்திலுள்ள தலைமையரசு வரையில், இதுபற்றிக் கடிதப் போக்கு வரவு நடந்தது. ஆங்கிலப் புலமை மிக்க மெக்காலே என்பார், அரசியலிலும் பெரும் பதவி பூண்டிருந்தவர், இது குறித்த முடிவைச் செய்தார். ஆங்கிலேய அலுவலர்கள், மேல் பதவி களில் இருந்தாலும், அடிநிலையில் நாட்டில் இருக்கும் மக்களையே கொண்டு ஆட்சி நடத்துவது என்றும், நாட்டில் பல பகுதியிலுள்ள எல்லாருக்கும் பொதுவானதும், புதிதானதுமான ஆங்கிலமொழியை ஆட்சி மொழியாக்கிக் கொள்வது என்றும் முடிவு எடுக்கப்பெற்றது.

ஆங்கிலம் பயிற்றுவிக்கும் பள்ளிக்கூடங்கள் துவங்கப்பெற்றன. நாட்டு மொழியும் கணக்குப் பாடமும் பயிற்றுவிப்பதுடன், ஆங்கிலத்தில் அலுவலகச் செய்திகளை எழுதும் அளவுக்கு, அம் மொழியும் கற்பிக்கப்பட்டது. நாளடைவில் ஆங்கிலப் பாடங்களின் அளவு, மிகுதிப்படுத்தப்பட்டது. பல்கலைக்கழகப் பட்டப் படிப்பு களும் பின்னர் ஏற்பட்டன. இவ்வாறு புகுத்தப்பட்ட ஆங்கில

மொழியில், நாட்டவர்கள் நல்ல புலமை பெறலாயினர். எழுத்தர் பதவிகளுக்கு மேலுள்ள பதவிகளுக்கும் உயர்த்தப்பெற்றனர். நாளாவட்டத்தில், உயர் அலுவல்களுக்கும் நம்மவர்களில் சிலர் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். அலுவலகங்கள், அற மன்றங்கள் யாவற்றிலும், ஆங்கிலமே ஆளப்பெற்றது. நம்மவர்கள் ஆங்கில மொழியில் அம்மொழியாளரைப் போலவே, எழுதும் ஆற்றல் கைவரப்பெறலாயினர். ஆங்கிலம் பேசுவதிலும் சிலர் ஆங்கிலேயரை நிகர்த்தனர். அவர்களை விஞ்சும் வகையில் ஆங்கிலப் புலமையும் படைக்கலாயினர்.

ஓர் அயல்மொழியை அத்துணைச் சிறந்த அளவுப் பயில்வதில் நாட்டின் அறிஞர்கள் முனைந்து ஈடுபட்டு விளங்கவே, அவர்கள் தம்தம் தாய் மொழிகளைப் பயில்வதற்கு, அளிக்க வேண்டிய அளவு நேரத்தையும் ஊக்கத்தையும் உழைப்பையும், தராமற் போகலாயினர். அறிஞர்களாயினோர் இங்ஙனம் போய்விடவே, நாட்டிலுள்ள பிறரும் தாய்மொழிப் பயிற்சியிலே பற்றுக்கொள்ளாமற் போயினர். வீட்டில் பேசுவதிலும் எழுதுவதிலும்கூட ஆங்கிலச் சொற்கள் புகுந்து, தாய்மொழியின் தரத்தைக் குறைத்தன. மேடைகளிலும் தாய்மொழியில் பேசுவதே குறையென்றும், "தாய்மொழியில் எனக்குப் பேசத்தெரியாது" என்று சொல்லிக்கொள்வது பெருமையென்றும் கருதப்பட்டது.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில், பன்னெடுங்காலமாக அரியணையில் அமர்ந்து அரசு புரிந்து வந்த தமிழன்னை, 'அந்தோ! ஒதுங்கி நின்று, ஆங்கிலத்திற்கு அடங்கி நடக்கும் பணிப்பெண்ணாக மாற நேர்ந்துவிட்டது!' "ஆட்சியைத் தமிழில் எப்படி நடத்த முடியும்? ஆங்கிலத்தில் எழுதுவது போல அத்துணைத் திறம்பட தமிழில் எங்ஙனம் எழுத இயலும்? தமிழில் வரைந்தால் விளங்குமோ? ஆங்கிலத்துக்குரிய விளக்கம் தமிழுக்கு உண்டா? வரைவுகள் (Drofts & Notes) குறிப்புகள் எழுதுவதற்குரிய ஆற்றல்தான் தமிழுக்கு ஏது" என்றெல்லாம் நாமே நினைக்கலானோம்; கூறலானோம்.

இடையில் ஒரு நூறு ஆண்டுகள் மட்டுமே ஆங்கிலம் தமிழினை ஒதுக்கிவிட்டு ஆட்சி புரிய நேர்ந்தது. இந்தச் சிறியகால எல்லைக்குள்ளேயே நம் அன்னையை இவ்வளவு ஒடுக்கிவிட்டோம். தமிழர்களாகப் பிறந்தும், நாம் நம் தாய்மொழியில் தன்னம்பிக்கையிழந்துவிட்டோம். அதனை அழகுறவும் வல்லமையுடனும் இயக்கும் ஆற்றலையும் போக்கடித்துக்கொண்டுவிட்டோம். இவற்றைக் காட்டிலும் படுகேடான செய்தியொன்று உள்ளத்தை நைக்கின்றது. நம்மில் பலருக்குத் தமிழில் பற்றே இல்லாமல் போய்விட்டிருக்கும் செய்தியே அது. பற்று இல்லாமை மட்டும் அல்லாது, தமிழ் என்றால் சிலருக்கு அருவருப்பே வளர்ந்துவிட்டிருக்கிறதே! "ஐயகோ,

எவரிடம் சென்று இதனை முறையிடுவது? எங்கே சென்று ஆறுதல் பெறுவது?'' என்று குன்று முட்டிய குருவியாகின்றோம்.

இவ்வாறு திணறிக்கொண்டிருந்த நேரத்தில், நம் நாடு விடுதலை பெற்றது. அயலவன் அகன்றான். அயலரசு நம் அரசு ஆயிற்று.

விடுதலைக்குப் பின்

(i) *அரசு மாறியது*

1947ஆம் ஆண்டு, ஆகஸ்டு 15ஆம் நாள் நாடு மீளவும் நமக்கே உரிய நாடாயிற்று. அன்று நள்ளிரவில் நம் நாட்டுத் தலைவர்கள், அரசாட்சியை ஆங்கிலேயர்களிடமிருந்து ஏற்றுக்கொண்டனர்! ஆங்கிலேயத் தலைமை ஆளுநர் (Governor General) அவரது பதவியை நம் மதிப்பிற்குரிய மேதகு இராசாசி அவர்களிடம் ஒப்புவித்தார். மாண்புமிகு சவகர்லால் நேரு அவர்கள் நாட்டின் முதல்வர் ஆனார். அமைச்சர்கள் அனைவரும் நம்மவர்கள் ஆயினர். மாநில அரசுகளின் ஆளுநர்கள் (Governors) நம்மவர்கள் ஆகித் தலைமை ஆளுநரின் (Governor General) கீழ்ப் பணிபுரிவாராயினர். 'விடுதலை பெற்றுவிட்டோம்-அரசு நம்முடையதாகிவிட்டது' என்னும் அகமகிழ்வில் திளைத்தோம்.

(ii) *ஆட்சி ஆங்கிலமே*

ஆனால் ஆங்கில மொழியே ஆட்சிமொழியாக இருந்துவந்தது. திடும் என, அரசு நடத்தும் மொழியை எப்படி மாற்றிவிட முடியும்? அதுவும் பல மொழி பேசுநரையுடைய, பல மாநிலங்களைக் கொண்ட மாபெரிய நாடல்லவா நம் நாடு. ஆங்கிலமே நம் அனைவர்க்கும், ஒரு பொதுவான மொழியாக வாய்த்திருந்தது. அரசு நள்ளிரவில் மாறியது போல, ஆட்சிமொழியும் ஒரே நாளில் எங்ஙனம் மாறிவிடும்? அரசின் அன்றாடப் பணிகள் நாடெங்கிலும் நடந்தாக வேண்டுமே? அறிவிப்புகள் அனுப்பவும், ஆணைகள் பிறப்பிக்கவும், மொழிதானே வாயில்! நூற்றாண்டுகளாக ஆட்சியைத் திறம்பெறச் செலுத்தி வந்த மொழி ஆங்கிலந்தானே? நம் நாட்டிற்கு ஏற்ற வண்ணம், ஆட்சியின் திறல் குறையாத வண்ணம், நமது ஆட்சிமொழியை நாம் அனைவரும் இசைந்து அமைத்துக்கொள்ளும் வரையில், அதுகாறும் கோலோச்சி வந்த ஆங்கிலத்தை நம் பணிக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தது.

(iii) *அரசியல் அமைப்பு*

'ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே!
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்! - என்று
ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே!'

என்று கவிஞர் பெருமகனார் சுப்பிரமணிய பாரதியார் அன்றொருநாள் பாடினார். அப்போது நாடு அயலவனின் காலடியில் அடிமையாய்க்

கிடந்தது. சுதந்திரத்தைப் பற்றிப் பேசினால் சிறைவாசம் என்ற சட்டம் தலைவிரித்தாடிய காலம் அது. என்றோ வரப்போகும் விடுதலையை, கவிஞர்க்கு உரிய ஏதிர்கால ஞானத்தோடு, அன்றே அறிந்து சொல்லிவைத்தார் என்று கூறவேண்டும். அவரது வாக்கின் வண்ணமே, எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு, 1947ஆம் ஆண்டில், நாடு விடுதலையடைந்தது.

அவரது இந்தக் கனவு பலித்து விட்டதுபோலவே, அவரது இன்னொரு கனவும் பலிப்பதற்குரிய நற்காலம் நண்ணியது. இக் கனவுதான், 'எல்லோரும் இந் நாட்டு மன்னர்' என்னும் அரிய தொரு கனவு. இக்கனவும், நமது நாட்டிலேயே நாம் அடிமை களாகக் கிடந்த காலத்திலே, அவருக்கு ஏற்பட்ட கனவு. நாடு நம் கைக்கு வந்துவிட்டது. இனி அதுவரை அயலான் ஆண்ட முறையில் நாட்டை ஆள்வதா? நமக்கெனத் தனியே ஓர் அரசியல் அமைப்பை ஆக்கிக்கொள்வதா? என்னும் கேள்வி எழுந்தது. இந்திய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு மக்களின் சார் பாளர்கள் அடங்கிய மாமன்றம் (Assembly) ஒன்று கூட்ட வேண்டியிருந்தது. மாநிலச் சட்ட மன்றங்களும், நாடாளு மன்றமான பாராளுமன்றமும் தேர்ந்தெடுத்த அந்த அந்த மன்றங் களின் உறுப்பினர்களும், அரசு தேர்ந்தெடுத்த சில வல்லுநர்களும், அடங்கிய இந்திய அரசியல் அமைப்பு மாமன்றம் (Indian Constituent Assembly) தில்லியில் அமர்ந்து 1950ஆம் ஆண்டில் செயலாற்றத் தொடங்கியது. நம் நாட்டின் அரும்பெருந் தலைவர்களில் ஒருவரான இராசேந்திரப் பிரசாத் அவர்கள் அம்மாமன்றத்தின் தலைவர் ஆனார்.

நம் நாட்டின் அரசியல் அமைப்பு (Indian Constitution) கவிஞர் பெருமான் அன்று கனவு கண்ட வண்ணம், நம் நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும், நமது நாடாளும் ஒரு மன்னராக விளங்குகின்ற நிலைமையளிக்கும் 'குடியாட்சி'யாக இருக்க வேண்டும் என்று முதலில் முடிவு செய்தனர்.

(iv) ஆட்சிமொழிப் பகுதி

1950ஆம் ஆண்டு இறுதியில், நிறைவேற்றிய இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தில், நாட்டின் ஆட்சி மொழியைப் பற்றிய திட்டங்கள், அச்சட்டத்தின் பாகம் xvii-ல் 'ஆட்சிமொழி' என்னும் தலைப்பின்கீழ் தீட்டப்பெற்றன.

இப்பாகத்தின் உறுப்பு (Article) 343-ல் 'இந்தியே இந்திய ஒன்றியத்தின் ஆட்சி மொழியாகும்' என்று கண்டிருந்தது. ஆட்சி மொழி பற்றிய பாகம், அரசியல் அமைப்பு மாமன்றத்தின் முன் வந்தபோது, மாமன்றத்தின் தலைவர் மேதகு இராசேந்திரப் பிரசாத் அவர்களே தலைமையமர்ந்திருந்தார். மாமன்றத்தின் உறுப்பினர்களை உற்று நோக்கினர். அப்போது மாமன்றத்தில் வீற்றிருந்த உறுப்பினர் களின் எண்ணிக்கையில் இந்தி பொதுமொழி ஆவதை ஆதரிப்பவர்

பெரும்பாலோராக இல்லாமல் இருந்ததைக் கண்டார். ஆட்சிமொழி பற்றிய அச்சட்டப் பகுதி, அப்போது முடிவுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டால் 'இந்தி' ஒன்றியத்தின் ஆட்சிமொழியாவது நிறைவேறுது போகும் என அஞ்சினர். எனவே, "இது சிக்கலான பகுதி; நாளை பார்த்துக்கொள்வோம்; இதை ஒதுக்கி வைத்துவிட்டு, மேலேயுள்ள பகுதிக்குச் செல்வோம்" என்று சொல்லி, அடுத்துள்ள பகுதிக்குப் போய்விட்டார். அன்று மாமன்றக் கூட்டம் முடிந்தது. இரவோடு இரவாக ஏதோ நடந்திருக்க வேண்டும். நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

மறுநாள் மாமன்றம் கூடியது. இந்தியை ஆதரிப்போர் பலராக இருந்தனர். இந்திக்குப் பெரும்பான்மை கிடைத்துவிடும் என எண்ணி, ஆட்சி மொழிபற்றிய பகுதியை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டார் தலைவர். பலர் பிணங்கிப் பேசினர். 343ஆம் உறுப்பு, வாக்களிப்புக்கு விடவேண்டியதாயிற்று. வாக்குகளை எண்ணினர். ஒரு பாதி உறுப்பினர்களே இந்தியை ஆதரித்தனர். சரிபாதி எதிர்த்தனர். தலைவர் சிக்கலான நிலைக்கு ஆளானர். இந்தியை விட்டுக் கொடுத்துவிடவும் மனம் இல்லை. இறுதியாகத், தம் தலைவர்-பதவி வாக்கை (Casting Vote) ஆதரிப்போர் பக்கம் அள்ளிப் போட்டார். ஒரே ஒரு வாக்கு மிகுதியால், இந்தி ஒன்றியத்தின் ஆட்சிமொழியாகி விட்டது.

அப்போது, அரசியல் அமைப்பு மாமன்ற உறுப்பினர்களில், காங்கிரசின் சார்பாக அந்தப் பேரவையில் வீற்றிருந்தவர்களில் ஒருவர், திரு. எல். கிருஷ்ணசாமி பாரதியார், எம். ஏ., பி. எல்., அவர்கள் ஆவார். இப்பெருந்தகையார் காங்கிரசில் பழைய தொண்டர்; நாட்டுப்பற்று மிகுந்தவர். அயலரசினை எதிர்த்துச் சிறை சென்றவர். இவர் வாழ்வரசியாரும், அங்ஙனமே, ஆங்கில அரசினல் நாட்டுப் பற்றுக்கொண்டதற்காக, சிறைக்கு அனுப்பப்பெற்றவர். இவர்கள் தலைமகனும் நாட்டுத் தொண்டு புரிந்தது காரணமாகச் சிறைசெய்யப்பெற்றவர். மாமன்றத்தில் நடந்த இந்நிகழ்ச்சியைக் கண்டு மனம் புழுங்கினர், இப்பெருமானர்; அப்புழுக்கத்தினைப் போக்கிக்கொள்ள, இதைப்பற்றி, வெளியில், பிறகு பேசியும் எழுதியும் மன அமைதி கொண்டதைப் பலர் அறிந்திருப்பர்.

'இந்தி' இந்திய ஒன்றியத்தின் ஆட்சி மொழியான வரலாறு, இது தான். இதுவே இந்திய அரசின் பொதுமொழி. இனி அரசியல் அமைப்புச் சட்டத்தின் xvii ஆம் பாகத்தில் 345ஆம் உறுப்பினைக் காண்போம்.

அப்பாகத்தின் உறுப்பு (Article) 345-ல் மாநிலங்களின் ஆட்சி மொழியைப் பற்றிக் கூறியிருக்கிறது. மாநிலங்களின் மொழிகளில் எதையேனும் ஒன்றையோ, அவற்றில் சிலவற்றையோ, அம் மாநிலத்தின் ஆட்சித் தேவைகளில் எதற்காவதோ அல்லது எல்லா

வற்றிற்குமோ, ஆட்சிமொழியாக ஆக்கிக்கொள்ளலாம். இதற்கென, அம்மாநிலச் சட்ட மாமன்றம் ஒரு சட்டம் இயற்றிக்கொள்ள வேண்டும் என்பதே, அந்த உறுப்பில் காணும் செய்தி.

இவ்வாறு அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஆட்சிமொழி பற்றித் திட்டமிட்டது பொருத்தமே. பல மொழிகளைப் பேசும் பல மாநிலங்களைக் கொண்டது நமது நாடாகிய இவ்இந்தியச்சிறுகண்டம். இம்மொழிகளில் ஏதேனும் ஒன்றை, ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி, நம் நாட்டிலுள்ள அனைவர் மீதும் சுமத்திவிட்டால், நாட்டின் ஒற்றுமை குலையும். அம்மொழி பேசுபவர்கள் 'ஆளும் மொழியினர்' எனத் தம்மைச் செம்மாப்புடன் எண்ணிக்கொள்வர். மற்ற மொழியினர் நாட்டின் இரண்டாந்தரக் குடிமக்களாகிவிடுவர். இந்நிலை நேரவிடாமல், அந்தந்த மாநிலமே அந்தந்த மாநிலத்தின் ஆட்சிமொழியைத் திட்டஞ்செய்யச் சட்டஞ்செய்துகொள்ள வேண்டும், என்னும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 345-ஆம் உறுப்புப், பெரிதும் வரவேற்கற்பாலதாக அமைந்தது.

ஆனால், அரசியல் அமைப்புச் சட்டத்தின் இப்பகுதியில், பின் வரும் ஏற்பாட்டுக்கு வகை செய்யும் இன்னொரு செய்தியும் இருந்தது :-

> 'இவ் அரசியல் அமைப்புச் சட்டம் செலாவணிக்கு வந்த நாளி லிருந்து பதினைந்து ஆண்டுகளுக்குள், எந்த மாநிலமாவது அந்த மாநிலத்தின் ஆட்சிமொழி வேறு எதுவாக இருக்க வேண்டுமென்று சட்டம் செய்துகொள்ளாவிட்டால், தானகவே, இந்தி மொழி, அந்த மாநிலத்தின் ஆட்சி மொழி யாக ஆகிவிடும். அப்படி இந்தி அம்மாநிலத்தின் ஆட்சி மொழியாவதற்கு, வேறு சட்டமோ, ஆட்சி முறை ஆணையோ (Administrative Order) தேவையில்லை."

இதுவே அச்செய்தி.

இந்தி பேசாதவர் பெரும்பாலோராக இருக்கும் மாநிலங்களுக்கு, இச்சட்டப் பகுதி அச்சத்தை விளைவிப்பதாக இருந்தது. இந்தி பேசு வோரைக் கொண்ட மாநிலங்களான, பீகார், உத்திரப் பிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங்கள், மனமகிழ்ச்சியுடன், விரைந்து, 'இந்தி'யே அம்மாநிலங்களின் ஆட்சிமொழியாகும் என்று சட்டங்கள் செய்து கொண்டன.

(v) அரியணையில் அன்னை

தமிழகத்தில் எல்லா அரசியல் கட்சியினருமே, ஆளும் காங்கிரசுக் கட்சியினர் உள்பட-பரபரப்பு அடைந்தனர். பதினைந்து

ஆண்டு என்பது எப்படியோ விரைந்து ஓடிவிடுமே! அதற்குள் தமிழை நமது மாநில அரசின் ஆட்சிமொழியாக ஆக்கிக்கொள்ள வேண்டுமே. ஏதேதோ காரணத்தால் பதினைந்து ஆண்டு எல்லைக் குள், தவக்கங்கள் இடைப்பட்டுவிட்டால், என்ன ஆகுமோ? என்று அஞ்சலாயினர். அரசினரை எல்லாக் கட்சியினரும் ஒருமன தாகக் கூடி வேண்டிக்கொள்ள முடிவு செய்தனர். உடனடியாக, நம் மாநிலத்திற்குத் தமிழை ஆட்சிமொழி ஆக்குமாறு, கேட்டுக் கொள்ளத் திட்டமிட்டனர்.

சென்னை அண்ணுமலை மன்றத்தில் அனைத்துக் கட்சி மாநாடு ஒன்று கூடிற்று. அப்போது மேல்மன்ற உறுப்பினராக இருந்த திரு. கசபதி நாயகர், பி.ஏ., பி.எல்., எம். எல். சி. தலைமையமர்ந்தார். அவர் மாவட்ட நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றவர். பல அரசியல் கட்சியினரும், தமிழை ஆட்சி மொழியாக்கும்படி மாநில அரசினை வேண்டிக்கொள்ளும் தீர்மானம் நிறைவேறியது. திரு. கசபதி நாயகர் அவர்களே ஆட்சி மொழிச் சட்ட வரைவு ஒன்றினை ஆயத்தம் செய்து, மேல் மன்றத்தில் கொண்டு வருவது என்றும் முடிவு செய்தனர்.

அம்முடிவையொட்டி, உடனடியாகத் திரு. நாயகர் அவர்கள் 'ஆட்சி மொழிச் சட்ட வரைவு' ஒன்றினை மேல் மன்ற முடிவுக்கு அனுப்பினுர். தமிழக அரசும் தமிழை நம் மாநிலத்தின் ஆட்சி மொழியாக்கும் சட்டத்தை நிறைவேற்றும் ஆர்வமுடன் இருந்தது; என்றுலும், தனியார் ஒருவர் கொண்டுவரும் வரைவினைச் சட்டமாக்க இடந்தருவதற்கு இசையும் மனம் அரசுக்கு இல்லாதிருப்பது இயல்பே. இத்தகையதொரு மக்கள் போற்றுவதும், வரலாற்றுப் பெருமை பூணத்தக்கதுமான சட்டத்தினை, அரசினரே கொண்டு வந்து நிறைவேற்ற நினைப்பது பொருத்தந்தானே? திரு. நாயகர் அனுப்பிய வரைவினைச் சட்டம் ஆக்கினுல், அதனைச் செயற்படுத்த பணச் செலவாகும் என்னும் காரணத்தினுல், அப்போது முதலமைச் சராக விளங்கிய மாண்புமிகு சி. இராசகோபாலாசாரியர் அவர்கள், அவ்வரைவினை ஆளுநரின் முன் ஒப்புதலுக்கு அனுப்பினுர். பணச் செலவு விளைவிக்கும் சட்டங்களை ஆராய்வதற்கு ஆளுநரின் முன் இசைவைப் பெறவேண்டும் என்பது விதி. ஆளுநர் இசைவு அளிக்க வில்லை.

இது நிகழ்ந்த சிறிது காலத்திற்குள், மாண்புமிகு திரு. சி. சுப்பிர மணியம் அவர்கள் சட்ட மாமன்ற ஆய்வுக்கு, தமிழக ஆட்சி மொழிச் சட்ட வரைவினைப் படைத்தார். 1956ஆம் ஆண்டின் XXXIX எண் சட்டமாக, தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டம் நிறைவேறிவிட்டது. அன்னைமொழி அரியணை ஏற்றப்பெற்றுள். மக்கள் உள்ளங்கள் குளிர்ந்தன!

(vi) ஆங்கிலம், இந்தி இவற்றின் நிலை

தமிழை ஆட்சிமொழியாக்கிக்கொண்டாலும், ஆங்கிலம் சில செயல்களுக்குத் தேவையான காலம் வரையில், உடனிருந்து வரவும் தமிழக ஆட்சிமொழிச் சட்டத்தில் வகை செய்யப்பெற்றது. ஆங்கிலத்தைப் பற்றி, ஒரு தப்பான கருத்து, நாட்டில் பலரைப் பற்றிக்கொண்டிருக்கிறது. அம்மொழி நம் நாட்டின் மொழிகளில் ஒன்று அன்று, என்னும் எண்ணம் தவறான எண்ணம். இந்தியர் களாகிய நமது தாய்மொழிகள் அனைத்தும் இந்திய மொழிகள் என்பதை யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டியதுதானே? இந்திய மக்களில் ஒரு பகுதியினர் ஆங்கிலோ இந்திய இனத்தவர்கள் ஆக இருப்பதை யறிவோம். அவர்களுடைய தாய்மொழி ஆங்கிலம். எனவே, இந்திய மக்களில் ஒரு பகுதியினரின் அன்னை மொழியான ஆங்கிலத்தை நம் நாட்டு மொழிகளில் ஒன்று என்று கொள்ளாமல் எப்படி விட்டுவிட முடியும்?

இவர்களை நம் நாட்டவர் என்று சொல்லாமல், வேறு எந்த நாட்டினர் என்று கூறுவது? வேற்று நாட்டவர்கள்—ஏன் இங்கிலாந்து நாட்டவர்களாவது—இவர்களைத் தம் நாட்டவர்கள் என்று ஏற்றுக் கொள்வரா? இவர்கள், இந்தியாவில் பிறந்து, இந்தியாவில் வளர்ந்து, இந்தியாவில் வாழ்ந்து, இந்தியாவில் இறப்பவர்கள். இவர்கள் பெற்றோர்களும் அங்ஙனமே. முதல்முதலில் இவர்கள் ஒரு தனி இனமாவதற்கு முன்பு, இவர்களுக்குத் தந்தையர்களாக இருந் தவர்கள், அப்போது இந்தியாவில் வசித்த ஆங்கிலேயர்கள் என்பது ஒன்று கொண்டே, இவர்களை இங்கிலாந்து நாட்டுக்கு உரியவர்கள் என்று ஒதுக்கிவிடுவதால் இவர்கள் ஆங்கிலேயர்களாகி, அந் நாட்டுக்கு உரியவர்கள் ஆகிவிடுவரா? முதலில்அம்மொழி நம் நாட்டை அடக்கி யாண்டவர்களின் தாய்மொழி என்பதனாலேயே, அதன்மீது வெறுப்புக்கொண்டு, பின்னால் அது நம் நாட்டுமொழியும் ஆகிவிட்டதை மறுக்க முடியுமா?

மேலும், நம் நாட்டுப்பிறமொழிகளைக் காட்டிலும் சிறப்பாக, ஆங்கிலம் நம் நாட்டிற்குரிய மொழியாகின்ற உண்மையையும் நாம் அறியவேண்டும். பிற மொழிகளைப் பேசும் இந்தியர்கள், இந்தி யாவில், தாம் வாழும் ஒவ்வொரு பகுதியை மட்டுமே முதலாவதாக தமக்கு உரிய நாடாகக் கருதுகின்றனர். இந்தியா, அடுத்தபடியாகத் தான் அவர்களுக்கு உரிய நாடாகின்றது. குசராத் பேசுகிறவர்களுக்கு குசராத் மாநிலம், முதலில் அவர்களுக்குரிய தாய் நாடாகிறது. பிறகே இந்தியா அவர்கள் தாய் நாடாகிறது. அவர்கள் குசராத்தியர்கள், பிறகு இந்தியர்கள். இப்படியல்லாமல் இதை மாற்றிச் சொல்ல விரும்பினாலும் முதலில் அவர்கள் இந்தியர்கள், பிறகு அவர்கள் குசராத்தியர்கள். இவ்வாறே இந்தியர்களில் ஒவ்வொரு மொழி பேசு பவருக்கும் சொல்லலாம்.

ஆங்கிலோ இந்தியரோ, நாடு முழுவதிலும் ஆங்காங்கே வசிக்கின்றனர். ஒவ்வொரு மாநிலத்திலும் அவர்கள் இருக்கிறார்கள். என்றாலும் அவர்களைக் குசராத்தியர், மராட்டியர், வாங்காளியர், தமிழர் என்றெல்லாம் அவர்கள் வசிக்கும் மாநிலத்தைக் கொண்டு சொல்ல முடியாது. எந்த மாநிலத்தில் வசித்தாலும், அவர்கள் இந்தியர்களே. முதலாவதாக எங்கள் தாய்நாடு குசராத், பிறகு எங்கள் தாய்நாடு இந்தியா என்ற வகையில் அந்தந்த மாநிலத்தில் வசிக்கும் ஆங்கிலோ இந்தியர்கள் சொல்வரா? இந்தியா முழுவதையுமே முதலாவதாகவும் இரண்டாவதாகவும் தங்கள் தாய் நாடாகக் கொள்பவர்களாக வேறு எந்தமொழியினரைக் கூறக்கூடும்? எனவே, ஆங்கிலோ இந்தியர்கள் வேறு எந்த இனத்தவரைக் காட்டிலும் சிறந்த இந்தியர்கள். அவர்கள் தாய்மொழியான ஆங்கிலம், வேறு எந்த மொழியைக் காட்டிலும் சிறந்த இந்திய மொழி, என்பதை எவரும் ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும்?

இத்துடன் ஆங்கில மொழி மற்ற மாநிலங்களுடன் தொடர்பு கொள்வதற்கு உரிய மொழியாக அமையும். ஏன் உலகத்தின் பிற நாடுகளுடன் தொடர்பு கொள்ளவும் அம்மொழி தக்கதாகும். என் மகன் ஆங்கிலத்தில் பொறியியற் பாடங்களைப் படித்துப் பட்டம் பெற்றபின், செர்மனியிலே மேல்படிப்புப் படிக்கும் வாய்ப்பு அவனுக்குக் கிட்டியது. முதல் ஆறு மாதத்தில் செர்மன் மொழியைக் கற்றுக்கொண்டு, பொறியியலில் மூதறிஞர் (Doctor) பட்டம் பெறுவதற்குரிய பாடங்களை அம்மொழியிலேயே பயின்று வெற்றி பூண்டான். வேறு எந்த இந்திய மொழியில் புலமை பெற்றிருந்தாலும் இவ்வாறு செய்ய முடியுமா?

ஆகவே, தமிழுடன் ஆங்கிலமும் தேவையான காலம் வரையில் ஆட்சி மொழியாக இருந்து வரும் என்று, தமிழக ஆட்சி மொழிச் சட்டத்தில் வகை செய்திருப்பது எவ்வளவு பொருத்தமானது என்பதை உணரலாம்.

தமிழக ஆளுநர் மேதகு ஷா அவர்கள் அண்மையில், மாணவர்கள் உயர்நிலைப்பள்ளியில் ஆங்கிலம் பயில்வதற்குரிய வசதிகளைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்' என்று பேசியிருப்பதையும் நாம் அனைவரும் கருத்தோடு கவனித்தோம்.

நாட்டின் நம் முன்னைய தலைமை அமைச்சர், நம் போற்றுதலுக்குரிய சவகர்லால் நேரு அவர்கள், இந்தி பேசாத மக்கள் பெரும்பாலோராக இருக்கும் மாநிலங்களில், அவர்களாக, அவர்கள் மாநிலச் சட்டமன்றத் தீர்மானத்தால் விரும்பினாலொழிய, இந்திக்கு மாற்றாக ஆங்கிலமே, மைய அரசுடனும் பிற மாநிலங்களுடனும் தொடர்பு கொள்ளுவதற்குரிய மொழியாக இருந்துவரும் என்று பாராளுமன்றத்தில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, தீர்மானம் செய்துவிட்டுப் போயிருக்கிறார். நமது பள்ளிகளில் புற நேரங்களில் இந்தி உள்பட, எந்த மொழியையும் பயில்வதற்கு

வசதிகள் செய்ய வேண்டும் என்று அண்மையில் நம் மேதகு ஆளுநர் அவர்கள் கூறியபடி, நாமே விரும்பி இந்தியைச் சிறிது சிறிதாகப் படித்துக் கொண்டு, அதுவே போதும் ஆங்கிலம் ஏன் என்னும் துணிவு நமக்கு வருகிற வரையில் தமிழ் இந்தியுடன் ஆங்கிலமும் ஆட்சி மொழியாக இருந்துவர நிலையாக வகை செய்து வைத்த மாண்புமிகு நேரு பெருமகனார் அவர்களுக்கு நாம் என்றும் நன்றியுடையவர்களாவோம்.

(vii) *முன் அணி வேலைகள்*

தமிழ், தமிழகத்தின் ஆட்சிமொழியானது அறிந்ததுமே, திருநெல் வேலியிலுள்ள சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கச் செயலாளர், என் அண்ணார்போன்ற அன்பினர், திரு. இ. மு. சுப்பிரமணியப்பிள்ளை யவர்கள், அங்குள்ள பலதுறைகளின் ஓய்வுபெற்ற அலுவலர்களை ஒன்றுகூட்டி, அம்மாவட்டக் கல்வி அலுவலர் திரு. கி. வேங்கட சுப்பிரமணியம் அவர்களையும், அரசின் இசைவு பெற்று, இணைத்துக் கொண்டு ஆட்சிச்சொல் அகராதியொன்று ஆயத்தம் செய்தார். ஆங்கிலர் ஆட்சியில் வெளியிட்டிருந்த மாவட்ட அலுவலக நடை முறை நூலில் (District office manual) அட்டவணையிட்டுள்ள ஆட்சிமுறை ஆங்கிலச் சொற்களைக் கண்முன் கொண்டே, இந்த அகராதி வகுக்கப்பெற்றது. இது காலத்தால் பெரிதும் பயன்படத் தக்க பணி. இவ்வகராதியை அரசினருக்கு அளிக்கச் சென்னை இராசாசி மண்டபத்தில் ஒரு பெருவிழாவே நடந்தது. முதல் அமைச்சர் மாண்புமிகு காமராசர் அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டார்.

இந்த அகராதியை ஆய்ந்து, அரசின் அகராதியை அமைத்துக் கொள்ளவும், ஆட்சி மொழிச் சட்டத்தைச் செயலாக்குவதற்கு ஆவன பிற செய்யவும், அரசு ஆட்சி மொழிக் குழு (Official Language Committee) என்னும் பெயரிட்ட குழு ஒன்றினை அமர்த் தியது. வருவாய் ஆயத்தின் (Revenue Board) முதல் உறுப்பினராக இருந்த திரு. எஸ். வெங்கடேசுவரன், ஐ. சி, எஸ். அவர்கள் அதன் தலைவர். வருவாய்த்துறைச் செயலாளராக இருந்த ஓய்வு பெற்ற திரு. டி. கே. சங்கரவடிவேல் பிள்ளை ஐ. ஏ. எஸ். அவர்கள் ஓர் உறுப்பினர்.

ஒரு புறம் அகராதியை ஆய்வு செய்து வந்தனர். தமிழ் தட்டச்சுப் பொறியைச் சீர்செய்யவும் வேண்டியிருந்தது. தமிழ்த் தட்டச்சுப் பொறிகள், சில வணிக நிறுவனத்தாரால் ஏற்கெனவே செய்து வழங்கப்பெற்று வந்தன. ஆனால், ஒன்றின் விசைப் பலகை (Key Board) இன்னொன்றின் விசைப்பலகையோடு ஒத்தில்லை, பெரிதும் வேறுபட்டிருந்தது. ஒன்றில் அடிப்பதில் வல்லமை மிக்கார் என்று ஒரு தட்டச்சரை ஒரு பெருவணிகர் தம் அலுவலகத் தட்டச்சுப் பணிக்கு அமர்த்தினர். நல்ல ஊதியமும் தர முன்வந்தார்.

இத்தட்டச்சர் பயின்றது "இரெமிங்டன்" (Remington) தட்டச்சுப் பொறியில். அந்த அலுவலகத்தில் இருந்தது "உட்ஸ்டாக்" (Woodstock) தட்டச்சுப் பொறி. •முதலில் பெரு வல்லமை படைத்திருந்த அத்தட்டச்சர், இரண்டாவதில் தட்டவே மாட்டாதவராகத் திகைத்தார். நல்ல ஊதியத்தில் வேலை கிடைத்தும், அவ்வலுவலகத்தில் தட்டச்சராகப் பணிபுரிய முடியாது போகவே, அவரை வீட்டுக்கு அனுப்பிவிட்டனர். இச்செய்தியைச் சட்ட மாமன்றச் செய்தி வரையும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஒருவர் கூற அறிந்த போதுதான், அக்காலத்திலிருந்த தட்டச்சுப் பொறிகளுக்குள் இருந்த வேறுபாட்டை உணர்ந்தேன்.

மாமன்றச் செய்தி வரைவோர் (Assembly Reporetrs) சிலரைக் கொண்ட ஒரு குழு, தமிழ்த் தட்டச்சுப் பொறிச் சீர்திருத்த வேலைகளைக் கவனித்தது. அப்போது சட்டக் கல்லூரி இயக்குநராக இருந்த திரு. எம். அனந்தநாராயணன், ஐ. சி. எஸ். அவர்கள், தட்டச்சுப் பொறியமைப்பு, சுருக்கெழுத்து முறை, இவற்றிலும் நுண் அறிவு பூண்டிருந்தார். அவர் ஆட்சி மொழிக்குழு உறுப்பினராகவும் இருந்தார். அவரது ஆன்ற அறிவுரை, தமிழ்த் தட்டச்சுப் பொறியின் விசைப் பலகையை, ஒரு படித்தானதாகவும், விரைவாக அடிப்பதற்குரிய வசதியானதாகவும், அமைக்கப் பெரிதும் பயன் பட்டது. அரசினர் அறிக்கைகள், ஆணைகள், நாளிதழ்களின் செய்திகள் இவற்றில் சிலவற்றைத் தெரிந்தெடுத்து வைத்துக் கொண்டு, அவை ஒவ்வொன்றிலுள்ள தமிழ் எழுத்துகள் ஒவ்வொன்றும் எத்தனை முறை வருகின்றது என்று கணக்கெடுத்தனர். இதற்கு 'Frequency test' என்று பெயர். சொல் நிகழ்முறைச் சோதனை எனலாம். அடிக்கடி வரக்கூடிய எழுத்துகளை வலப்புறமும், விரல்களின் நிலைமைக்கும், தன்மைக்கும் இசைவான இடங்களிலும், அமைக்க இச்சோதனை துணையாயிருந்தது.

சுருக்கெழுத்து வல்லுநர் ஒருவர் வெளியிட்டிருந்த சுருக்கெழுத்துச் சுவடி ஒன்றை அரசினர் ஏற்று, அதனைச் செப்பனிட்டுக் கொண்டனர். இந்த முறையில், தனியார் பயிற்றகங்களில் தமிழ்ச் சுருக்கெழுத்துப் பயில்வதற்குப் பண உதவியும் அளித்தனர். தமிழ்த் தட்டச்சுப் பயிற்சிக்கென சென்னையில் தனியே ஒரு பயிற்சிக் கூடமே தொடங்கி அதில் மாநிலத்திலுள்ள அரசலுவலகங்களில் பணியாற்றும் ஆங்கிலத் தட்டச்சர்களுக்கு அணி அணியாகப்பயிற்சியளித்து அனுப்பினர். வேகமாகவும், திருத்தமாகவும் தட்டக்கூடியவர்களுக்குத் தங்கப் பதக்கங்களும் பிற பரிசுகளும் தந்து கைவளமை சிறந்த தட்டச்சர்களை உருவாக்கினர்.

(viii) பொங்கல் புதுநாள்

இவை ஒருபுறம் நடக்கத் தொடங்குவதற்கு முன்பே, ஆட்சிச் சொல் அகராதி செப்பனிடப்பெற்று அச்சானதுமே, அதன் படிகளைக்

கையினால் எழுதியே கடிதப் போக்குவரவு நடத்தி வந்த சிறு அலுவலகங்களுக்கு அனுப்பிவைத்தனர். மாநிலம் முழுவதுமுள்ள பள்ளித் துணை ஆய்நர் (Dy. Inspector of Schools), தொழிலாளர் உதவி ஆய்நர் (Asst. Inspector of Labour), வனச்சிறக அலுவலர் (Forest Range Officer) போன்றவர்களின் அலுவலகங்களில் தமிழையே பயன்படுத்தும்படி அரசிதழில் ஆட்சிமொழிச் சட்டத்தின் கீழ், அறிவிக்கை (Notification in the Govt. Gazette under the Official Language act) வெளியிட்டனர். "Tamil shall be used in respect of all official communications in the following government offices' என்று அந்த அறிவிக்கை, கூறியது. 'shall be' என்னும் தொடர் கட்டாயம் என்னும் பொருளுடையது என்பதையறிவோம். இந்த அறிவிக்கை, சட்டத்தின் தன்மையுடையது. சட்டத்தை மீறினால் தண்டனையென்னும் விதி, இவ்வறிவிக்கையை மீறினவர்களுக்கும் பொருந்தும்.

கட்டாயம் தமிழில் எழுத வேண்டும் என்று கட்டளையிட்டாலும் அரசினர் அன்போடு இதனை அறிவித்தனர். அவர்களது அன்புள்ளம், "இந்த ஆட்சிமொழி முதல் அறிக்கையை, மக்கள் மகிழ்ச்சியோடு போற்றும் பொங்கல் நாளிலிருந்து செயலாக்குக!" என்று வெளியிட்டதிலிருந்து இனிது புலனாகும். 'on & from' *14.1.1958* என்பதே அவ்வறிக்கையின் துவக்கம். அன்றுதான் தைப்பொங்கல் நாள். அந்த அறிக்கையை வெளியிடுவதற்கு ஏற்பளித்த தமிழ்த் திருவினர், அப்போது கல்வி அமைச்சராகவும், ஆட்சி மொழி அமைச்சராகவும் இருந்த மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள் ஆவர். அவர்கள் தாம், *1956*-ஆம் ஆண்டு இறுதியில் ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்றியவர்.

(ix) *ஆய்வுப் பணியும் பிறவும்*

14 - 1 - 1956-ல் இருந்து அந்த அரசறிவிக்கையில் குறிப்பிட்ட, மாநிலமெங்கும் இருந்த, பல நூறு அரசு அலுவலகங்களிலும், ஆட்சி மொழி, தமிழாக மாறியிருக்க வேண்டும். அங்ஙனம், மாறியதா? மாறவில்லையா? எந்தெந்த அலுவலகங்கள் பின் தங்கியுள்ளன? என்று அறியவும், அலுவலர்களுக்குத் தேவையான அறிவுரைகளை எடுத்துரைத்து வழிப்படுத்தவும் வேண்டியிருந்தது. அதற்கென ஒரு தனி அலுவலரை அமர்த்த அரசு முடிவு செய்தது. தமிழறிவும், ஆட்சிப் பழக்கமும், ஆட்சிக்குரிய சொற்களை அமைக்கும் திறமும், பூண்ட ஒருவரைத் தேடி வந்தனர். ஆட்சி மொழிக்குழு உறுப்பினராக இருந்த திரு டி. கே. சங்கர வடிவேல் பிள்ளை, ஐ. ஏ. எஸ். அவர்கள் இவ்விரிவுரையாளரின் பெயரைக் குறிப்பிட்டிருப்பார் எனத் தோன்றுகிறது. நகராட்சியிலும், பங்கீட்டுத் துறையிலும், இவ்விரிவுரையாளர் தமிழை எளிதாகப் பயன்படுத்தி வந்ததை, *1940* முதல், அவர் இனிது அறிவார். ஆட்சி மொழிக்குழுத் தலைவர்

திரு. எஸ். வெங்கடேசுவரன், ஐ. சி. எஸ். அவர்களின் பரிந்துரையை அரசு ஏற்றது. அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள், இவ்விரிவுரையாளரை ஆட்சி மொழித் தனி அலுவலராக அமர்த்தினர். 11 - 8 - 1958-ல் நான் அலுவல் ஏற்றேன்.

மாநிலம் முற்றும் பரவியிருந்த அலுவலகங்களுக்குச் சென்று ஆய்வு செய்வது எனது களப்பணி. தலைமையிடத்தில் தங்கும்போது, ஆட்சிச் சொல் அகராதியைச் செப்பனிட்டு விரிவாக்கும் பணியும், சட்டத் தொகுப்புகள் (codes), விதிகள் முதலியவற்றில் மொழி பெயர்ப்புகளைச் சரிபார்க்கும் பணியும் இருந்தன. மொழி பெயர்ப்புகள் மிகுதியாயின. அதற்கெனத் தனியே ஒரு தனி அலுவலரை அமர்த்தினர். புலவர் திரு. கோ. மு. முத்துசாமிப்பிள்ளை, ஐ. ஏ. எஸ் (ஓய்வு) அவர்கள், தனி அலுவலர் (மொழி பெயர்ப்பு) [Special officer (Translations)] என்னும் அலுவல் பெயருடன் வேலையேற்றார். அப்போது என் அலுவலர் பெயரைத், தனி அலுவலர் (ஆய்வு) [Special Officer- (Inspection)] என மாற்றினர்.

ஆட்சிச் சொல் அகராதியின் அடுத்த பதிப்பு வெளியாயிற்று. ஒவ்வொரு துறையிலும், கடிதப் போக்குவரவில் பயன்படும் தனிச் சொற்கள் கொண்ட துறையகராதிகள் பல வெளியாயின. துறையக ராதிச் சொற்கள், அவ்வத்துறையில் வல்லுநராகவுள்ள ஓர் அலு வலரை உடன் வைத்துக்கொண்டு ஆராய்ந்து முடிவு செய்யப் பெற்றன. இவையாவும் திரு. எஸ். வெங்கடேசுவரன் அவர்கள் தலைமையிலேயே. அவர்களை "ஆட்சி மொழிக்குழுவின் தலைவராக அமர்த்தியிருப்பதற்குக் காரணம், அவருக்கு ஒரு சொல் புரிந்து விட்டால் எல்லோருக்கும் புரிந்தது போலே" என்று அமைச்சர் பெருமான் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள் இரண்டு பெருங்கூட்டங்களிலே அவர்களைப் பாராட்டிச் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

திரு. எஸ். வேங்கடேசுவரன், ஐ. சி. எஸ். அவர்களுக்குப் பிறகு, திரு. ஜி. வேங்கடேசுவரன், ஐ. சி. எஸ். அவர்களுக்குப் பின்னர் முறையே திரு. ஆர். ஏ. கோபால்சாமி, ஐ. சி. எஸ். அவர்களும், திரு. சி. ஏ. ராமகிருஷ்ணன், ஐ. சி. எஸ். ; அவர்களும் ஆட்சி மொழிக்குழுத் தலைவராயினர். 1964-ல் நான் தனி அலுவலர் (ஆய்வு) பணியிலிருந்து ஓய்வு கொண்டபின், அகராதியின் மூன்றாம் பதிப்பும் வெளியாயிற்று ; பிறகு இப்போது நான்காவது பதிப்பும் வெளிவர ஆயத்தமானதாக அறிகிறேன்.

இன்று, மாவட்டத்திற்கு ஒருவராகப் பல தனி அலுவலர்கள் அலுவலகங்களின் தமிழ்ப்பணியை ஆய்வு செய்கிறார்கள். மொழி பெயர்ப்பு வேலைக்குப் பல அலுவலர்கள் அமர்த்தப்பெற்றுள்ளனர். துறையே விரிவு செய்யப்பெற்று, "தமிழ் வளர்ச்சி இயக்ககம்" எனப்

புதுப் பெயரிடப்பெற்றது. இப்போது தலைமைச் செயலாளராக விளங்கும் திரு. கார்த்திகேயன், ஐ. ஏ. எஸ். அவர்கள் இத்துறையின் முதல் இயக்குநராக அமர்ந்தார். தமிழ் வளர்ச்சித்துறை இயக்கு நராகத் தமிழ் நலம் பேணிய இவர்கள், இன்று மாநிலத்தின் தலைமைச் செயலாளராக விளங்குவது, தமிழுக்கு வாய்த்த ஒரு பெரும் பேருகும். இவர்களது தலைமைச் செயலாண்மையில் ஆட்சித்தமிழ் அனைத்து அலுவலகங்களிலும் நிறைவுறச் செயலாக்கம் பெறும் என்று ஆர்வத்துடன் எதிர்நோக்கியிருக்கின்றோம்.

'ஆட்சி மொழிக்குழு'வும் தனியே இயங்கி வருகிறது. 'தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் (Tamil Development & Research Council)' என்று அமைச்சர்பிரான் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் தொடங்கிய மன்றமும் தனியே இயங்குகின்றது. இரண்டுக்கும் தலைவர் மாநில முதல் அமைச்சர் அவர்களே; இரண்டிலும் என்னையும் உறுப்பினராகச் சேர்த்துள்ளனர். 'ஆட்சிமொழிக்குழு', 'தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்' என்னும் இவ்விரு நிறுவனங்களிலும் உறுப்பினராகவும், செயலாளராகவும் இருப்பவர், தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் தலைவரேயாவார். திரு. கார்த்திகேயன் அவர்களுக்குப் பிறகு, திரு. எம். ஆர். பெருமாள் முதலியார், எம். ஏ. எல்டி. அவர் களும், திரு. மு. இராசாக்கண்ணனுர், எம். ஏ., அவர்களும் முறையே அமர்த்தப்பெற்று, இப்போது திரு. கொண்டல் சு. மகாதேவன் எம். ஏ., பிஎஸ்ஸி., அவர்கள் இயக்கத்தின் தலைவராக இருந்து வருகிறுர்.

(x) *நான்கு நிலைத் திட்டம்*

14 - 1 - 1958-ல் சிறு அலுவலகங்களில் தமிழில் எழுதுவது, என்னும் ஆணை பிறந்த பின்பு, படிப்படியாகப் பல அலுவலகங் களுக்குத் தமிழ்த் திட்டம் விரிவாக்கப் பெற்று வந்தது. சித்திரைப் புத்தாண்டு, நாடு விடுதலை பெற்ற நாள், குடியரசு நாள், என்று இப்படியாக, நினைவுக்குரிய நாள்களைத் தேர்ந்தெடுத்து, அந்த அந்த நாள் முதலாகச் செயற்படுவதென, இப்பிரிவாக்கங்கள் செய்யப் பெற்று வந்தன.

சீரமைத்த தமிழ்த் தட்டச்சுப் பொறியில் அரசு அளித்த பயிற்சி முடிந்த பின், தட்டச்சுச் செய்து கடிதங்கள் அனுப்பும் அலுவலகங் களிலும் தமிழ் ஆட்சி மொழியாகும் என்று, ஆட்சி மொழிச் சட்டத்தின் கீழ் அறிவிக்கைகள் வெளியிடப் பெற்றன. சுருக் கெழுத்துப் பயன்பட்டு வந்த அலுவலகங்களிலும், தமிழ்ச் சுருக் கெழுத்துப் பயின்றவர்கள் பணிபுரியக் கிடைத்தவுடன், தமிழ் ஆட்சி மொழியாயிற்று.

இங்ஙனம், இன்று அரசின் தலைமைச் செயலகமான அமைச்சகத் திலிருந்து, சின்னஞ்சிறு அரசலுவலகம் வரைக்கும், எல்லா அலுவல கங்களிலும் தமிழ் ஆட்சி மொழியாக ஆக்கப்பெற்றுவிட்டிருக்கிறது.

பின்வரும் நான்கு நிலையில், படிப்படியாகத் தமிழ், ஆங்கிலத்தின் இடத்தில் அமர்வது எனத் திட்டமிட்டுச் செயலாக்கப்பெற்றது.

1. பொதுமக்களுக்குத் தமிழில் எழுதுவது.
2. மாவட்ட நிலையில் ஓர் அலுவலகம் மற்ற அலுவலகங்களுக்குத் தமிழில் எழுதுவது.
3. துறைத்தலைமை அலுவலகங்களுக்கு மாவட்ட அலுவலகங்கள் தமிழில் எழுதுவது.
4. எல்லாச் செயல்களுக்குமே தமிழைப் பயன்படுத்துவது.

இந்நான்கு நிலைத் திட்டம் சட்டப்படி மாநிலத்திலுள்ள எல்லா அலுவலகங்களிலும் செயலுக்கு வந்துவிட்டது.

ஆனால், எந்த அளவு, நூற்றுக்கு எத்தனை வீதம் இவ்வகை அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும், கடிதங்களும், குறிப்புகளும் தமிழில் மாறியிருக்கின்றன என்பது தனி ஆய்வுக்கு உரியது. மேல் நிலை அலுவலகங்களில் பெரும்பகுதி, மாறாமலே இருக்கின்றது என்றால், அதற்குப் பல காரணங்கள் உண்டு. அவையும் தனியே ஆராய்வதற்கு உரியன. சட்டப்படி எல்லாச் செயல்களுக்கும் தமிழில் மாறியாக வேண்டிய இவ்வனைத்து அலுவலகங்களும், ஆட்சி மொழிச் சட்டம் பிறந்து இருபது ஆண்டுகள் ஆகியும், இன்னமும் ஏன் மாறாமல் இருக்கின்றன என்பதற்குரிய காரணங்கள் ஆராய்ந்து, அவற்றைப் போக்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து, அரசின் சட்டம் — இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி பிறந்த சட்டம் — மேலும் தயக்கம் இன்றி, முழு அளவுக்குச் செயலாக்குமாறு செய்வது அரசின் கவனத்திற்கு உரியது.

ஆட்சித்தமிழ், கல் தோன்றி மண் தோன்றாக் காலமான அன்று தொட்டு எப்படியிருந்து, எப்படி வளர்ந்து, இடையில் சிறிது காலம் எப்படி மறைந்து, இன்று எப்படி இருக்கின்றது, என்பதை ஒருவாறு வரிசைபடுத்திக் கூறினேன். இது இன்றைய விரிவுரை. ஆட்சித் தமிழின் பொதுவான வரலாறு தெரிவிக்கும் பகுதியாக இது அமைந்தது.

நாளைய பேச்சு, “சொல் தரு துறைகள்” என்னும் தலைப்புடையதாகும்.

இரண்டாம் நாள் விரிவுரை

2—4—1976

சொல் தரு துறைகள்

பல்லாயிரம் ஆண்டுகள், அரசாட்சி செய்த மொழியாதலின் தமிழ் மொழியில், இயல்பாகவே, ஆட்சிக்குரிய பல தமிழ்ச் சொற்கள் எளிதில் கிடைப்பனவாகும். எனினும், இக்காலத்திய ஆட்சி, பல வகையில் விரிவடைந்துள்ளதுடன், பலதிறப்பட்ட செய்திகளைப் பற்றியதாகவும் இருத்தலினால், ஏற்கெனவே ஆட்சியில் வழங்கியிராத பல புதுச் சொற்களும், இன்றைய ஆட்சிக்குத் தேவைபடுகின்றன என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். தமிழ் ஒரு தொன்மை மொழி. எந்தப் புதுச் செய்தியாயினும், அதற்குப் பொருத்தமான, ஒரு தமிழ்ச் சொல்லை, அதே உருவத்திலேயோ, சிறிது மாற்றியோ, அமைத்துக்கொள்வது அரிதாகாது. இதுவரை பழக்கத்தில் இல்லாத புது வடிவங்களிலே, தேவையான சொற்களைப் படைத்துக் கொள்ளவும் தகும். இயல்பான முறையிலெல்லாம் இசைந்து கொடுப்பதற்குரிய பண்பும் ஆற்றலும், தமிழ்மொழிக்கு உண்டு.

இந்த உண்மைகளைக் கருத்தில் வைத்துக் கொண்டு, இன்றைய ஆட்சிக்குத் தேவைப்படும் சொற்களை வழங்கக் கூடிய துறைகளைப் பின்வருமாறு பிரித்து ஆராயலாம்.

1. பேச்சு வழக்கு
2. இலக்கியம்
3. கல்வெட்டு
4. பிறமொழி
5. புதுப்புனைவு

1. பேச்சு வழக்கு

முதலாவதாக, நாட்டில் மக்கள் அன்றாடம் பேசும் பேச்சில் கிடைக்கக்கூடிய, ஆட்சிக்குப் பயன்படும் சொற்களைத் திரட்டலாம். மற்றச் சொற்களைக் காட்டிலும், பேச்சு வழக்குச் சொற்கள் பொது மக்களால் எளிதில் புரிந்து கொள்வனவாக இருக்கும். எனவே, அச்

சொற்களுக்கு முன்னிடம் தருவது பொருத்தமாகும். என்றாலும், இதில் ஒரு குறை இல்லாமல் இல்லை. தமிழகத்தில் பல பகுதிகளிலே, பேச்சு வழக்குப் பலவகையாக இருப்பதையறிவோம். சென்னையில் பேசும் பேச்சுக்கும் மதுரைக்குத் தெற்கே பேசும் பேச்சுக்கும் வேறுபாடு உண்டு. இடையிலுள்ள பகுதியில் வழங்கும் மொழி இன்னொருவகையாக இருக்கும். கொங்கு நாட்டுப் பேச்சு வேறொரு பாங்குடையதாகும்.

பேசும் ஓசையில், இடத்துக்கிடம் இருக்கும் வேறுபாட்டைப் பற்றி, இங்குக் கேள்வியில்லை. சொற்களே இடத்துக்கு இடம் வேறுபட்ட பொருளில் வழங்குவதைக் காணலாம். ஒரே இடத்துக் குரிய சொற்களில் வேறு வேறு பொருளில் வழங்கும் சொற்களும் இருக்கின்றன. எனவே, ஒரு பகுதியில் வழங்கும் ஒரு சொல்லை, ஆட்சிப் பணிக்கு ஆளாக்கிக் கொள்ளும்போது, வேறு பகுதிகளில் இருப்பவர்களுக்கு, அச்சொல் தமிழ்ச் சொல்லாயிருந்தாலும், அச்சொல்லுக்கு ஆட்சித் துறையில் குறிக்கும் பொருள் வேறாக இருக்குமாதலின், அவ்வேறு பகுதியினர் அச்சொல்லை எளிதில் புரிந்து கொள்ள முடியாது போகும். ஆனால் இச்சிக்கல் ஒருமுறை அச்சொல்லின் புதுப் பொருளைக் கேட்டு அறிந்துகொண்டு விட்ட பிறகு, கதிரவனைக் கண்ட பனிபோல், கதுமென நீங்கிவிடும், ஆதலின் பேச்சு வழக்குச் சொற்களுக்கு முதலிடம் தருவதில் தயக்கம் கொள்ள வேண்டுவதில்லை.

இரண்டொரு மாவட்டங்கள் தவிர, தமிழகத்தின் மற்ற மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் சில காலம் தங்கி வாழ்ந்து, அலு வலாற்றும் வாய்ப்பினைப் பெற்றவன் நான். அத்துடன் ஆட்சி மொழித் தனி அலுவலனாக இருந்தபோது, எல்லா மாவட்டங் களிலும், சிறிய ஊர்களிலுமுள்ள அலுவலகங்களுக்குச் சென்று ஆய்வு செய்யும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்திருந்தது. எனவே, ஆங்காங்கே, புதுவகையான சொற்களையோ, புதுவகையாக ஆளப் பெறும் சொற்களையோ, செவியிற் கேட்டபோது, அவற்றைக் குறித்து வைத்துக்கொள்வது என் வழக்கம். அவற்றின் பொருளை, அப்பகுதியினர் வாயிலாகத், • திட்டமாக அறிந்துகொள்ளவும் செய்வேன். அங்ஙனம் தெரிந்துகொண்ட வழக்காற்றுச் சொற்கள் சிலவற்றைப் பற்றி, இங்கே எடுத்து விளக்குவது எனது கடமையாகும்.

அதற்குமுன்பு, ஒரு செய்தியைச் சொல்லிவைக்க விரும்பு கிறேன். ''தமிழில் ஒரு சொல் என்றால், அது நூல் வழக்கில் உள்ள ஒரு சொல்லாக இருந்தால்தான், அது நல்ல தமிழ்ச்சொல்லாகும். இலக்கிய இலக்கண நூல்களில் அதற்கு ஆதாரம் இல்லையென்றால், அதைத் தமிழ்ச் சொல் என ஒப்புக்கொள்வது புலமையாகாது,'' என்று எண்ணும் எண்ணம், சில புலவர்களிடையே யிருந்து வருகிறது. இதை ஒரு எடுத்துக்காட்டால் விளக்குவேன்.

ஒரு கல்லூரியில், தமிழ்மன்ற, ஆண்டின் முதற் கூட்டத்தில் பேச, என்னை அழைத்திருந்தனர். என் பேச்சில், 'துவக்கம்', 'தொடக்கம்' என்னும் இரண்டு சொற்களைச் சுட்டிகாட்டி, இரண்டுக்குமுள்ள வேறுபாட்டை எடுத்துரைத்தேன், 'துவக்கம்' என்பது முதன்முதலாக ஆரம்பிப்பது, என்னும் பொருளில் இருக்கிறது என்றும், 'தொடக்கம்' என்பது ஏற்கெனவே துவக்கிய ஒன்று, இடையில் நின்றிருந்து, பிறகு ஆரம்பிப்பது என்னும் பொருளில் உள்ளதாகவும் கூறினேன். இதற்குக் காட்டாக, 'இந்தக் கல்லூரி முதன்முதல் ஏதோ ஓர் ஆண்டில் துவங்கப்பெற்றது; சென்ற கோடை விடுமுறைக்குப்பின், சூன் 25ஆம் நாள் தொடங்கப் பெற்றது' என்றேன். தொடங்குதல் என்னும் சொல்லில், ஏற்கெனவே 'தொட்ட' ஒன்றை மீளவும் 'தொடுவது' என்னும் கருத்தும், அச் சொல்லின் 'தொட' என்னும் எழுத்துகளில் இருப்பதையும் உன்னிக்குமாறு கூறினேன்.

கூட்டத்தின் இறுதியில், 'அக்கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவரும், அம்மன்றத்தின் தலைவரும், என் அன்புசான்ற நண்பருமான பெரும் புலவர் அவர்கள் நன்றி நவிலும்போது, 'துவக்கம்' என்னும் சொல்லைப்பற்றித் தொல்காப்பியத்தில் குறிக்கவில்லை எனவே, 'துவக்கம்' என்பது சரியான தமிழ்ச் சொல் ஆகாது என்றார்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் செந் தமிழ் வெளியீடான 'தமிழ்ப் பொழில்' இதழிலே, என் மதிப்புக்குரிய நண்பர் தமிழறிஞர் திரு. தியாகராசப்பிள்ளையவர்கள் அரிய தமிழ்ச் சொற்களை ஆராய்ந்து குறிப்பு எழுதிவந்தார். அச்சொற்களில் ஒன்றே 'துவக்கம்' என்பது. 'தாயம்' என்னும் விளையாட்டிலே, பல கறையையோ, தாயக் கட்டையையோ வீசித் தாயம் விழுந்தால்தான் ஆடுபவர்களில் ஒவ்வொருவருக்கும் ஆட்டம் துவங்கும். இப்படித் துவங்குவதைத் 'தோய்வது' என்பர். ஆட்டத்தில் தோய்வதற்குரிய செயல் அதுவாதலின் அங்ஙனம் கூறினர் போலும். 'தோய்தல்', 'துவைதல்' என்று மருவும் ; 'துவைதல்' 'தோய்தல்' என்றும் ஆகும். 'துவைதல்' என்னும் சொல்லே, துவங்குதல் என்று, ஆகியிருக்கிறது என்று, என் நண்பர் எழுதியிருந்தார். துணியைத் துவைப்பதைத் துணியைத் தோய்ப்பது என்று கூறி வருகிறோமன்றோ?

'துவக்கம்' என்னும் சொல் எப்படிப் பேச்சு வழக்கில் வந்தது என்னும் செய்தியை ஓர் உயரிய தமிழ் இதழான தமிழ்ப் பொழிலில் ஒரு தமிழறிஞர் விளக்கியிருந்தார் என்பதை, அன்று, அவைக்கு எடுத்து இயம்ப, வாய்ப்பில்லாமலே போயிற்று. நன்றி கூறிவிட்ட பின்பு, பேச்சுக்கு இடமேது?

இதை நான் இங்குக் கூறுவதன் கருத்து, நூல்களில் காணாத பல சொற்கள், நாட்டுவழக்கில் இருந்துவருகின்றன என்பதை

யுணர்ந்து, அத்தகைய சொற்களையும் ஆட்சித் துறைக்குப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவேயாகும்.

இனி, நான் சென்ற ஊர்களில், என் செவியில் விழுந்த பேச்சு வழக்குச் சொற்களில் பின்வரும் சிலவற்றை விளக்கப் புகுகின்றேன்.

ஒன்றுடம் — பதிவாக—தண்டி—தடியன்காய்—தாம்போகி— ஓடுபாலம் — கோளாறு — வாழ்வரசி — கட்டுக்கழுத்தி — கட்டுமானம் — கட்டுப்படி — குறியாப்பு — நன்மை யடைதல்—பண்டடை.

1. ஒன்றுடம்

'அன்றுடம்' என்னுஞ்சொல் எல்லோருக்கும் தெரிந்த சொல். 'Every day,' 'daily' என்னும் சொற்களுக்கு நேரான தமிழ்ச்சொல் என்பதை அறிகிறோம். திருநெல்வேலி மாவட்டத்தில் நான் பணி யாற்றியபோது, 'ஒன்றுடம்' என்னும் புதுச் சொல் என்னை ஈர்த்தது. 'Every alternate day' என்னும் தொடருக்கு, நேரான தமிழ்ச் சொல்லாக, அம்மாவட்டத்தில், சாதாரண மக்களும் வழங்கு கின்றனர். ஒவ்வொரு நாளும் முகத்தை மழித்துக் கொள்வதை, 'அன்றுட முகமழிப்பு' (Daily Shave) என்பது போல, ஒன்றை விட்டு ஒரு நாள் மழித்துக்கொள்வதை 'ஒன்றுட மழிப்பு' (alternate day Shave) எனலாம். 'ஒன்றுடம்' என்னும் இச்சொல், மதுரைக்கு வடக்கே எங்கும் வழங்குவதாக, என் காதில் படவில்லை. தமிழ கத்தின் எந்தப் பகுதியிலும் வழங்குவதற்குரிய அழகான சொல் இது. ஆட்சித்துறைக்கு உகந்த சொல்லாகும்.

2. பதிவாக

பாளையங்கோட்டையில் வீட்டு வேலைக்கு ஒருவரைப் பேசினோம். 'பதிவாக' வைத்துக்கொள்வதானால் மட்டுமே, வேலைக்கு வருவதாக அவர் சொன்னார். 'பதிவாக' என்பது அங்கு 'Permanent-ஆக' என்னும் பொருளில் வழங்கப்பெறுகிறது. பதிவான வேலை 'Permanent appointment.' இதனை 'நிலையான வேலை' என்று இன்று சொல்லி வருகிறோம். இதற்கு ஒரு மாற்றுத் தொடராகப் 'பதிவான வேலை' என்றும் வழங்கப், பாளையங்கோட்டைப் பேச்சு வழக்கு, வாய்ப்பு அளிக்கிறது. 'Appointment Permanent' ஆகிவிட்டதா? என்று கேட்பதற்கு மாற்றாக, 'வேலை பதிவாகிவிட்டதா?' என்று கேட்கலாம்.

'பதிவு' என்னும் சொல், பொதுவாக Registration-க்குத் தமிழ்ச் சொல்லாகப் பயன்பட்டுவருகிறது. இடத்திற்கு ஏற்றபடி அச் சொல்லுக்குப் 'Permanence' என்னும் பொருளையும் கொள்ளலாம் என்பது, இப்பேச்சு வழக்கால் புலனாகிறது.

3. தண்டி

பாளையங்கோட்டையில், வீட்டு வேலையாள், ஒருநாள், 'இம் மாந்தண்டி இருந்துதே; இதை ஒரே நாளில் எள்ளுபோல் ஆக்கிட்டாரே !' என்று இன்னொரு வேலையாளைப்பற்றிக் குறை சொன்னார். அன்று அப் புதுவேலையாளர் துணிக்குத் தூப்பு (சோப்பு) ப் போட்டார். [சோப்பைத்தான் 'தூப்பு' என்கிறேன். சோப்புக்கு ஒரு தமிழ்ச் சொல் தேவைதானே என்று, 'தூப்பு' என்னும் இச்சொல்லை ஆக்கினேன். தூய்மை செய்வது, துப்புரவு செய்வது தூப்பு.] இது இருக்கட்டும், தண்டிக்குப் போவோம். 'தண்டி' என்னும் வழக்குச் சொல் 'பருமன்' என்னும் பொருளைத் தருகிறது. "இவ்வளவு பருமனாக இருந்த தூப்புக் கட்டியை அழுத்தித் தேய்த்துத் தேய்த்து, ஒரே நாளில் எள்ளுபோல அவ்வளவு சிறிய தாக்கி விட்டாரே" என்றுதான் அவ்வேலையாள் குறை கண்டிருக் கிறார். 'அப்படித் தேய்த்து விட்டவர் எங்கே ?' என்று கேட்டபோது அவர் சொன்ன விடை மேலும் சுவையாக இருந்தது. "இங்ஙனேத் தான் குத்திக்கிட்டுக் கிடந்தாரு, காணமே. பூப்போல எந்திருச்சிப் போயிட்டாரு" என்றதும், வீட்டில், அனைவரும், திருநெல்வேலித் தமிழின் இனிய ஓசை நயத்தைக் காதாரக் கேட்டு இன்புற்றோம்.

'தண்டி' என்னும் இச்சொல் செங்கற்பட்டு மாவட்டத்தில் பேச்சில் ஆளுவதைக் கேட்டிருக்கிறேன். ஆனால், திருநெல்வேலிப் பொருளில் அன்று. 'நிரம்ப' என்னும் பொருளில் அது இப்பக்கங் களில் வழங்குகிறது. 'அந்த வீட்டுக் கண்ணாலத்தில் எல்லாருக்கும் சோறு தண்டியாப் போட்டார்கள்' என்று பேசுவர். எங்கள் வீட்டில் சர்க்கரைக்குக் குறைவில்லை. 'தண்டியாயிருக்குது' என்பார்கள். இவ்வாண்டு நிலக்கடலை தண்டியாக விளைந்திருப்பதால், கடலெண் ணெய் விலை மிகவும் குறைந்து விட்டது என்று சொல்லலாம்.

'தண்டி' என்னும், சொல்லை இருபொருள்களில் ஆட்சித் துறை யில் பயன்படுத்தலாம்.

4. தடியன்காய்

திருநெல்வேலியில் இப்படியொரு காய் இருக்கிறது என்பதைக் கேட்டபோது வியந்தேன். நேரில் பார்த்தபோது, 'பூசுணை,' 'வெள்ளைப் பூசுணை,' 'சாம்பற் பூசுணை,' 'கல்யாணப் பூசுணை,' என்றெல்லாம் சொல்லப்பெறும் அதே காய்க்குத்தான், இந்தப் புதுப் பெயர் சூட்டப்பெற்றிருப்பதை அறிந்தேன். 'தடியாகத்' 'தண்டி யாகப்' 'பருமனாக' அக்காய் இருப்பதனாலேயே, அப்பெயர் அதற்கு வந்தது என்று தெரிந்துகொண்டேன். வேறு எந்தக் காயும் அவ்வளவு தடியாக இல்லை. இனிப்புப் பூசுணைக்காய் ஒன்று இருக் கிறதே, தடியன்காய்க்கு மேல் உருவில் பெரியதாக என்று நினைக் கலாம். ஆனால், இனிப்புப் பூசுணைக்காய் உள்ளே காலியாக உள்ள

ஒரு பானை போன்றதே. தடியன் காயைப் போல் சதைப்பற்று நிறைந்தது அன்று. இனிப்புப் பூசுணையைப் பறங்கிக்காய் என்றும் சொல்வோம்.

'தடியன் காய்' எப்படி ஆட்சித் துறைச் சொல்லாக்கத்திற்குப் பயன்படப் போகிறது என்று எண்ணலாம். 'தண்டனை,' அதிலிருந்து 'தண்டனையர்' என்னும் சொற்களை அமைப்பதற்குத், 'தண்டி' 'தடி' என்னும் சொற்கள் எங்ஙனம் தேவைப்படுவனவாகும் என்பதைப் பின்னல் அறிவோம்.

5. தாம்போகி

'causeway' என்று ஆங்கிலத்தில் ஒரு சொல் உண்டு. 'காரணவழி' என்று அதற்குப் பொருள் சொல்லலாமா? அது ஒரு பாலமே; ஆற்றின் குறுக்கே, தரையோடு தரையாகக் கட்டப்படும் பாலம் அது; சாதாரண பாலத்தின் கீழ், கண்கள் இருப்பதுபோல, இப்பாலத்தின் கீழ் பெரும்பாலும் கண்கள் இருப்பதில்லை. அப்படி யிருந்தாலும் அவை சிறியவையாகத் துளைகள் போன்றே இருக்கும். தரையோடு தரையாக அமைந்த பாலம் ஆதலின், இதற்குத் 'தரைப்பாலம்' என்று ஒரு பெயரை நான் இட்டேன். திருநெல்வேலிக்குச் சென்ற பிறகு, இதைத் 'தாம்போகி' என்கிறார்கள், என்பதை அறிந்தேன். 'தூக்கிக் கட்டிய கண் பாலம் ஒன்று குறுக்கே அமைந்து, நீர் ஓட்டத்தைத் தடுத்து ஒழுங்கு செய்து விடாமல், ஆற்றுநீர், தானே ஓடுவது போலப் போவதற்குரிய பாலம் என்னும் பொருளில் 'தாம்போகி' என்று உருவானது இச்சொல் என்று தெரிந்தது.

'தரைப்பாலம்' என்னும் புதுச்சொல்லுடன், இப்பழைய வழக்குச் சொல்லையும் 'causeway' க்குப் பயன்படுத்தலாம்.

6. ஓடுபாலம்

'தாம்போகி'யையே 'ஓடு பாலம்' என்று கூறுவர். தண்ணீர் மேலே ஓடுவதற்கு மட்டும் பயன்படும் பாலம் இது என்று, இதற்குப் பொருள். பாலத்தின்கீழ் படகுகள் முதலிய செல்வதற்கு இயலாத படி கட்டப்பெற்றது என்பது கருத்து. கண்கள் அமையாமல், ஆற்றின் குறுக்கே இட்ட ஓடு போன்றது, என்னும் கருத்தும் தோன்ற இச்சொல் அமைந்து இருக்கின்றது. இதனல், 'causeway' க்கு மூன்ருவது ஒருசொல்லும் கிட்டியது. ஒரேபொருளை, அப் பொருளின் பல கோணங்களில் கண்டு, வேறுபட்ட பல சொற்களால் குறிப்பது, ஒரு சிறந்த மொழிக்கு உரிய பண்புதானே? இவ்வாறு ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களை, ஆங்கிலத்தில் 'Synonyms' என்பர்.

7. கோளாறு

'கோளாறு' என்னும் இச்சொல்லைக் கேட்டவுடனே, 'இச்சொல் தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வழங்கும் சொல்தானே?

அதிலென்ன புதுமையிருக்கிறது' என்று எண்ணலாம். நானும் 1942 வரை அப்படித்தான் எண்ணிக்கொண்டிருந்தேன். அவ்வாண்டு, போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையராக மாற்றப்பெற்றேன். அந்நகர் மன்றத்தில், திரு. ஆறுமுகம் செட்டியார் என்னும் ஒரு வணிகரும் ஓர் உறுப்பினர். அவர் தொகுதியில் ஓர் இடத்தைப் பூங்கா அமைப்பதற்குத் தகுதியானதாகத் தெரிந்தெடுத்திருந்தனர். அது ஒரு தனியவருக்கு உரிய இடம். பொதுப் பயனுக்கு ஓர் இடம் தேவைப்படும் என்று தெரிந்ததும், அதன் விலையை ஏராளமாக உயர்த்திவிடுவது, அந்த இடத்தின் உரியவருக்கு இருக்கும் பழக்கம் என்பதை அறிவோம். அதை ஞாயமான விலைக்கு வாங்க முயற்சிகள் நடந்துகொண்டிருந்தன.

அந்நேரத்தில், அம்மன்ற உறுப்பினர் திரு. ஆறுமுகம் செட்டியார் ஒரு நாள் காலை என்னிடம் வந்து, "அந்த இடத்தை வாங்குவதற்கு ஒரு கோளாறு செய்துவிட்டேன்" என்றார். நான் கவலை கொண்டவனாய், "என்ன, செட்டியார் அவாள், நீங்களே இப்படிச் செய்தால் எப்படி? உங்கள் தொகுதியில்தானே, இப்பூங்கா அமையப் போகிறது" என்றேன். 'கோளாறு' என்றால் 'குழப்பம்,' 'கெடுதி' என்றும் பொருள் செய்துகொண்டு நான் இவ்வாறு கவன்றேன். அந்த இடத்தை வாங்குவதற்கு ஆவன செய்யாமல், வாங்குவதைக் கெடுப்பதற்கு வழிசெய்து விட்டாரே, என்பதுதான் என் கவலைக்குக் காரணமாக இருந்தது.

உடனே, திரு. செட்டியார் சொன்னார், "என்ன ஐயா! இப்படிச் சொல்லுகிறீர்கள்? அவ்விடத்தைக் குறைந்த விலையில் வாங்கு வதற்குத்தானே வகை செய்துவிட்டு வந்திருக்கிறேன்" என்றார். 'கோள்' என்றால் கொள்வதற்கு, 'ஆறு' என்றால் வழி, என்னும் இப்பொருளில் அந்த இடத்தைக் கொள்வதற்கு வழி செய்து விட்ட தாகவே திரு. செட்டியார் சொல்லியிருக்கிறார். 'கோளாறு' என்னும் சொல்லுக்கு இப்பொருள் இருப்பதை அப்போதுதான் நான் உணர்ந் தேன். செயல்களைத் தந்திரமாகச் சாதித்து விடுவதில் வல்லாரை, 'அவர் ஒரு கோளாறான பேர்வழி' என்று சொல்லும் வழக்கமும் இருப்பதைப் பின்னர் அறிந்தேன். திரு. ஆறுமுகம் செட்டியார் ஒரு கோளாறான பேர்வழியே; தென்பாண்டி நாட்டுப் பொருளில், கோளாறாக அவர் நடந்து, பூங்காவுக்கு அந்த இடத்தைப் பெற வழி செய்துவிட்டார்.

'கிரகம்' என்றால் 'கோள்' என்று பொருள். 'கிரகசாரம்' 'கிரகம் நகர்வது'; கிரகம் போகும் வழியைக் குறிக்கிறது. வாழ்க்கையில் ஒருவருக்கு ஏதேனும் கெடுதி நேர்ந்துவிட்டால் அவரைப் பார்த்து, "அவரது கிரகசாரம், பாவம்!" என்போம். கிரகசாரத்தைக் 'காச்சாரம்' என்றும் நாட்டில் வழங்குவர். "அவரது 'காச்சாரம்' இப்படி ஆய்விட்டது" என்பர். இந்தக் காச்சாரந்தான், 'கோள்ஆறு'

என்னும் பொருளில் தமிழகத்தின் வேறு பகுதிகளில் வழங்குகிறது. 'கோள்'-'கிரகம்'; 'சாரம்'-சரிக்கும் அல்லது செல்லும் வழி. 'கோள் சாரம்' 'கோட்சாரம்,' 'கோசாரம்', என்றும், கிரகசாரத்தைக் கோள் நிலையறிந்து கூறுபவர்கள் சொல்வதைக் கேட்டிருப்போம். கிரக சாரம், நல்லதையும் செய்யக்கூடுமாயினும், கிரகங்கள் செய்யும் கெடுதியையே இச்சொல் குறிப்பது போலக் கோளாறு என்னும் சொல்லும், கெடுதி விளைவதையே குறிப்பதாயிற்று.

இரண்டு பொருள்களிலும் 'கோளாறு' என்னும்சொல் வழங்கு மாயினும் இடத்தைக் கொண்டு, பொருள் புரிந்துகொள்ளலாம்.

8. *வாழ்வரசி*

'வாழ்வரசி' என்னும் சொல்லை முதன்முதலில் நான் போடி நாயக்கனூரில்தான் காதில் கேட்டேன். என் அன்பின் நண்பர், சிறந்த தமிழ்க் கவிஞர், கான்முகம்மது இராவுத்தர் அவர்களிடம் ஒரு நாள் பேசிக்கொண்டிருந்தபோது, இச்சொல் அவர் வாயிலிருந்து வந்தது. அவர் உறவினர் வீட்டில் ஒரு திருமணத்தை முன்னிட்டு, 'வாழ்வரசி நோன்பு' கொண்டாடியதாகக் கூறினர். இது 'சுமங்கலிப் பிரார்த்தனை' என்று மற்ற இடங்களில் சொல்லும் ஒரு சடங்கே யாகும். 'வாழ்வரசி' என்னும் சொல்லை, 'வாவரசி' என்று வழங்கு கிறார்கள். சுமங்கலிதான் வாழ்வரசி. கணவனுடன் வாழ்பவளே வாழ்வரசி. கணவனுக்கு முன் அவள் இறந்துவிட்டால், அவள் என்றுமே வாழ்வரசியாகிறாள். ஒரு குடும்பத்து நல்ல நிகழ்ச்சிகளில், அக்குடும்பத்தின் வாழ்வரசிகளை—சுமங்கலிகளை—நினைத்து, முன் கூட்டி வழிபடுவது நாட்டின் வழக்கம் என்பதை யறிவோம்.

9. *கட்டுக்கழுத்தி*

வாழ்வரசியையே 'கட்டுக் கழுத்தி' என்பர்; நாட்டின் மற்றப் பகுதிகளில் இச்சொல் வழங்குகிறது. தாலி கட்டிய கழுத்தோடு இருப்பவர்களே கட்டுக் கழுத்திகள்.

10. *பூவாடைக்காரி*

'சுமங்கலிப் பிரார்த்தனை', 'வாழ்வரசி நோன்பு' என்பது '*பூவாடைக்காரி* கும்பிடுதல்' என்றும் நாட்டின் பிற பகுதிகளில் வழங்குகின்றது. மஞ்சள் குங்குமம் அணிவதுடன், பூவும், கட்டுக் கழுத்திக்கு உரிய ஆடையும், ஒரு வாழ்வரசி அணிவதனால், அவளைப் 'பூவாடைக்காரி' என்று சொல்லும் வழக்கம் ஏற்பட்டிருக் கிறது. A lady who has got her husband living என்னும் கருத்தைத் தெரிவிக்க, 'கட்டுக்கழுத்தி' அல்லது 'வாழ்வரசி' என்று சொன்னால் சாலும்.

11. கட்டுமானம்

கட்டுமானம் என்னும் சொல், 'கட்டப்படுவது' என்னும் பொருளில் பல இடங்களில் வழங்குவதை அறிந்திருப்போம். 'construction' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு நேர்த்தமிழ்ச் சொல்லாக இது ஆட்சியில் ஆளப்படுகிறது. 'building'-ஐக் கட்டடம் என்போம். ஆனால், 'கட்டுமானம்' என்பது, பருத்தி வணிகத் துறையில், வேறு ஒரு பொருளிலும் வழங்கப்படுவதைக் கேட்டிருக்கிறேன். தூத்துக்குடியில் இவ்வாறு இச்சொல்லை ஆளுகின்றனர். வேறு இடங்களிலும் இப்பொருளில் இது வழங்கப்படலாம்.

விற்பவர், பருத்தியின் விலையை, வாங்குபவரிடம் தெரிவித்ததும், வாங்குநர் பருத்தியைக் கையில் அள்ளியெடுத்துப், பிடித்துப் பிடித்துப் பார்த்துப் பருத்தியின் இடையில் சிக்கிக்கொண்டுள்ள விதையின் அளவைக் கணித்துக் கொள்வார். இழைகளின் நீளத்தையும் கண்டுகொள்வார். சொன்ன விலைக்கு வாங்கினால், 'கட்டுமானம் ஆகும்' 'கட்டுமானம் ஆகாது' என்று சொல்லி விடுவார்.

12. கட்டுப்படி

'கட்டுமானம்' என்னும் சொல்லுக்குள்ள இப்புதுப் பொருளில், மற்ற ஊர்களில் 'கட்டுப்படி' என்னும் சொல் ஆளப்படுகிறது. ஒரு சில்லறை வணிகர், ஒரு மொத்த வணிகரிடம் ஒரு பொருளை வாங்கும்போது, மொத்த வணிகர் கூறும் விலையில் அப்பொருளை வாங்கினால், தாம் அப்பொருளை விற்கச் செல்லும் இடத்தில், அந்த விலைக்கு மேல், தான் விரும்பும் அளவு ஆதாயம் வைத்துக்கொண்டு விற்கப்போனால் வாங்குபவர் இரார். அதற்குக் குறைத்து விற்றால், விற்பனைச் செலவை ஈடு செய்த பின்பு, இழப்பு ஏற்படும். இவ்வாறு தோன்றினால், 'நீங்கள் சொல்லும் விலைக்கு வாங்கினால், கட்டுப்படி ஆகாது' என்று கூறிவிடுவார். 'கட்டுப்படி' ஆகும் பேரம், விரும்பும் ஆதாயம் வரும் பேரமாகும்.

13. பண்டடை

'ware housing' என்னும் ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான சொல் காணமுடியாமல் கவன்று கொண்டிருந்தேன். ஒருமுறை, இராசபாளையத்திற்குப் பேருந்தில் செல்ல நேர்ந்தது. வழியில், உலர்ந்த வயற்காட்டில், ஏறத்தாழ நூறு அடி நீளமான குடிசைகளைக் கண்டேன். தென்னங் கிடுகுகளால் கட்டப்பெற்றவை. தரையில், மழை நீர் ஓட, இடம் விட்டுத், தூக்கிப் போடப் பெற்றவை. உயரம், நான்கு ஐந்து அடிக்கு மேல் இராது. நுழை வாயிலோ, கால் அதர்களோ, எவையும் இன்றி, எல்லாப் புறமும் மூடுண்டவை. மேற் கூரையையோ, பக்கங்களையோ பிரித்தே உள்ளிருப்பதைக் காண

முடியும். உள்ளே என்ன இருக்கிறது என்றே தெரியவில்லை. மக்கள் குடியிருப்பதற்குக் கட்டப் பெற்றவையல்ல என்று மட்டும் தோன்றுகின்றது. இவை எதற்காக இங்ஙனம் கட்டப்பெற்றுள்ளன என்று அறிந்து கொள்ளும் வேட்கை மிகுந்தது.

பேருந்தில், என் பக்கத்தில் அமர்ந்திருந்தவரைக் கேட்டேன். 'பண்டடங்கோ' என்றார். என்னவென்றே எனக்குப் புரியவில்லை. மீளவும் வினவினேன். "வங்காயம் பண்டடங்கோ" என்று சொன்னார். அப்போதும் புரியவில்லை. "வங்காயம்" என்னும் சொல் மட்டும் புரிந்தது. சிறிது நிறுத்திச் சொல்ல வேண்டுகிறேன். என்றேன். அவர் சொன்னதிலிருந்து 'பண்டடை' என்னும் சொல்லே அந்நீளக் குடிசையைக் குறிக்கும் சொல் என அறிந்து கொண்டேன். பிறகு மற்றவர்களிடம் கேட்டு, 'பண்டடை' என்னும் சொல்லின் பொருளையும் தெரிந்து கொண்டேன். பண்டத்தை அடைத்து வைக்கும் இடம் என்று விளங்கிற்று.

வங்காயம் வயற்காடுகளில் விளைந்து வந்ததும், அவற்றை வண்டிகளில் ஏற்றி வீட்டுக்குக் கொண்டு சென்றால், வண்டிச் செலவு ஏற்படும். மேலும் வீட்டில் உள்ள அறைகளில் கொட்டி வைத்தால் அழுகிவிடும். இதற்காக, இவ்வாறு தென்னங்கீற்றுகளால் நீளத் தொட்டிகள் போல் கட்டி, அவற்றில் வங்காயத்தைப் பெய்து மேலே கூரையிட்டுவிடுவர். மழை பெய்தால் கூரைமேல் நீர் விழுந்து வழிந்து கீழே ஓடிவிடும். வங்காயம் உலர்ந்தும் போகாது; அழுகியும் போகாது. விற்பனைக்கோ மற்றச் செலவுக்கோ தேவையானபோது, கூரைகளைப் பிரித்து எடுத்துக் கொள்வர். இதைத்தான் ஆங்கிலத்தில் ware housing, ware house செய்தல், என்கின்றனர்.

ஒரு பண்டத்தைச் சேமித்து வைப்பதற்கு மட்டும் இது பயன்படவில்லை; அப்பண்டத்தைச் கெடாமல் பாதுகாத்து வைப்பதற்கும் இது பயன்படுகிறது. சேமித்து வைத்தல் மட்டும் இருந்தால் அச் செயலைச் 'Storing' என்போம். வெல்லத்தையும் பானைகளிலோ பிறவற்றிலோ இட்டுப் பண்டடை செய்வர். அவ்வெல்லத்திற்குப் பண்டைவெல்லாம் என்று பெயர். உருண்டை உருண்டையாகச் செய்து பண்டடை செய்த வெல்லத்தை, 'மண்டை வெல்லம்' என்று கூடச் சொல்வதுண்டு, தலையின் மண்டையைப்போல் அவை இருப்பதால் அவ்வாறு சொன்னாலும், உண்மையில் அவை பண்டை வெல்லமே.

'ware housing corporation' என்பது 'பண்டடை நிறுவனம்' ஆகும். 'ware housing facilities' என்பதற்குப் 'பண்டடை வசதிகள்' என்போம். பண்டம் விற்கும் ஓர் இடத்தையும்' 'ware house' என்று கூறுகின்றனர். ஆயினும், அச்சொல் வெறும் கடையை மட்டும் குறிப்பது அன்று.

14. குறியாப்பு

ஈரோட்டுப் பக்கத்தில் இச்சொல் வழங்குகிறது. அடுத்த வீட்டில் உடனடித் தேவைக்குக் கடனுக ஒரு பண்டத்தை வாங்கி வருவதைக், 'குறியாப்பு' வாங்குவது, என்பர். திருப்பித் தந்துவிடும் குறியோடு, அதாவது நோக்கத்தோடு, வாங்குவது இக் 'குறியாப்பு,' 'ஒரு கால்படி பருப்பு குறியாப்பாக வாங்கி வந்தேன்' என்று சொல்வர். தம் வீட்டுக்குக் கடையிலிருந்து பருப்பு வந்ததும், அடுத்தகத்தில் குறியாப்பு வாங்கி வந்ததைத் திருப்பித் தந்துவிடுவர். இது சாதாரண மக்களாலும் பேசப்படுகின்ற சொல்லாயினும், ஒரு நல்ல இலக்கியச் சொல்லின் திரிந்த வடிவமேயாகும். இதுபோது திருக்குறளில் வரும் 'குறியெதிர்ப்பை நீரது உடைத்து' என்னும் தொடர் நம் நினைவில் தோன்றும்.

'வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்று எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து.'

அறத்துப்பால், 'ஈகை,' அதிகாரத்தின் முதற்குறள். "குறியெதிர்ப்பை' ஆவது அளவு, குறித்து வாங்கி, அவ்வாங்கியவாறே எதிர் கொடுப்பது" – இது பரிமேலழகர் உரை.

'குறியெதிர்ப்பை' என்னும் சொல்லே, 'குறியாப்பு' என்று வழங்குகிறது. வழக்கத்தினுல், தேய்ந்து எளிய உருவம் பெற்று விட்டது இச்சொல். இன்று வழங்குவதற்கு எளிதாகவும் இருக்கும்.

கடனுகப் பெறும் பொருளேயே யன்றி, அதற்கு மாற்றுக வேறு பொருளைத் தருவதைக் குறிக்கவும் இச்சொல் பயன்படும். கேரளம் நம்மிடமிருந்து குறியாப்பாக அரிசி பெறுகிறது. நாம் அதற்கு மாற்றுக மின்சாரம் பெறுகிறேம். கேரளத்தின் குறி நம்மிடமிருந்து அரிசி பெறுவதே. நம்முடைய குறி அதனிடமிருந்து மின்விசை பெறுவதே.

15. நன்மையடைதல்

'நன்மையடைதல்' என்னும் இச்சொல்லை, செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள திருக்கழுக்குன்றத்தில் கேட்டேன். அங்கிருந்து சென்னைக்கு அரிசி கொண்டுவர ஒரு வண்டி ஏற்பாடு செய்திருந்தேன். அன்று இரவு வண்டி கட்டுவதாக அவ் வண்டிக்காரர் சொல்லியிருந்தார். இரவு எட்டு மணிக்குமேல் என்னிடம் வந்து, "இப்போ வண்டி கட்றத்துக்கு இல்லிங்கோ" என்ருர். "என்ன ஐயா இது, இப்படிச் சொல்லிவிட்டீர்களே, என் வேலை கெட்டு விடுகிறதே ; இதற்காக இங்குவந்து நான்கு நாள்கள் ஆய் விட்டனவே" என்றேன். அப்போது அவர் சொன்னுர். "இன்னு செய்றதுங்கோ, எங்க அண்ணன் கொயந்தை நன்மை யடைஞ்சுது,

நாளைக்குத் தலைக்கு ஊத்தப் போறாங்கொ. எங்க வீட்டிலே என்னை இங்கேயே இருக்கச் சொல்றாங்களே" என்றார்.

'அண்ணன் குழந்தை நன்மையடைந்தது' என்று அவர் சொன்னதை நான் விளக்கத் தேவையில்லை. அண்ணன் மகளைத் தான் அவர் குழந்தை என்று குறித்தார் என்பதைத் தெரிந்து கொண்டிருப்பீர்கள். இந்த நிகழ்ச்சியைத் தெரிவிக்க அண்ணன் மகள், 'பெரிய மனுஷி ஆனாள்,' 'பெரியவள் ஆனாள்,' 'பெரிசானாள்,' 'புத்தி தெரிந்தாள்,' 'அறிவுக்கு வந்தாள்,' 'வயதடைந்தாள்', 'வயசுக்கு வந்தாள்', 'பருவம் அடைந்தாள்', 'ருதுவானாள்,' 'பூப்பு எய்தினாள்', 'புஷ்பவதியானாள்', என்றெல்லாம் குறிக்கின்ற வழக்கம் இருப்பதையறிவோம். இவற்றில் சில தொடர்களை விளக்கப் போனால், அது இவ் அவையில் இடக்கர் ஆக இருக்கும். ஆனால், இத்தொடர்களில் எதுவும் 'நன்மையடைந்தாள்', என்னும் தொடரைப்போல், சிறந்தது ஆகாது என்பதை நான் விளக்கியாக வேண்டியிருக்கிறது.

ஒரு பெண் நன்மையடையாவிட்டால், அப்பெண்ணுக்கு வாழ்வே இல்லையென்று சொல்ல வேண்டும். ஏதோ ஒரு 'சாபக் கேட்டினாலோ' அணுகுண்டின் கதிர் வீச்சுப் போன்ற கோளாற்றினாலோ, இன்று முதல் எந்தப் பெண்ணுமே நன்மையடைவதில்லை யென்னும் நிலை ஏற்பட்டு விட்டதாக எண்ணிப் பாருங்கள். அங்ஙனம் ஏற்பட்டுவிட்டால் உலகத்தில், மனித இனத்துக்கு இன்பம் ஏது? வளர்ச்சி ஏது? உலக வாழ்வில், ஊக்கம், முயற்சி, இவற்றிற்கு இடம் ஏது? இன்று உயிரோடு இருப்பவர்கள், இன்னும் நூறாண்டு நிறை வாழ்வு வாழ்ந்து இருப்பார்கள் என்று கொண்டாலும், பிறகு இந்நில உலகில் மனிதப் பூண்டே இல்லாமல் அல்லவா போய்விடும்?

என் உறவினர் வீட்டில், அவர்களுக்கு இருந்த ஒரே பெண் பன்னிரண்டு வயதான பிறகு, ஒவ்வொரு நாளும் ஒரு நல்ல நிகழ்ச்சியை அக்குடும்பத்தார் எதிர்பார்த்தபடி யிருந்தனர். அப் பெண்ணின் அகவை 13, 14, 15, 16, 17, 18, 19, 20 இப்படி யாகவே உயர்ந்து கொண்டே போயிற்று. ஆனால், அச்செல்வி நன்மையடையவில்லை. அவ்வுறவினர்கள் பட்ட துன்பத்தை, என்னால் இங்கு எடுத்து இயம்ப முடியாது. மருத்துவம், சோசியம், மந்திரம், தந்திரம், கோயில், குளம், சாந்திகள், கழிப்புகள், எவையும் பயன் அளிக்கவில்லை. ஒரு செல்வந்தக் குடும்பம் அது. அப்பெண்ணைத் திருமணம் முடித்துக்கொள்ள பலர் வந்தனர். வருவோரிடம் என்ன சொல்லுவார்கள், பாவம்? எவராவது பெண் பார்க்க வந்தால், அவ்வீட்டில் துன்பம் மேலிடும்; துயரம் சூழும்.

'நன்மையடைதல்' என்னும் சொல்லிலுள்ள மிகப் பரந்து சிறந்த பொருள், என் மனத்தில் விளக்கமாகத் துலங்கிற்று. இம்மை நலங்களையே யன்றி, மறுமை நலங்களையும் பெறமுடியாத நிலையில்,

இந்நன்மையடையாத அப்பெண்ணை, இரக்கத்திற்கு ஆளாக்கி விட்டது! பாவம்! இவ்வளவு பொருள் பொதிந்த ஒரு சொல்லை, ஒரு நாட்டுப்புறத்து வண்டிக்காரரர் அறிந்திருந்தார். சிற்றூர் மக்கள் அறிந்திருந்தனர். நமக்கு அது புதுச்சொல்லாக வியப்பளிக்கலாம்.

இச்சொல்லை யறிந்தபிறகு, 'புஷ்பவதியானுள்,' 'ருதுவானுள்' என்று அந்நிகழ்ச்சிக்கு அழைப்புகளில் எழுதுவதை மாற்றி, 'நன்மை யெய்தினுள்' என்று எழுதித்தரும் வழக்கத்தை மேற்கொண்டேன். 'புஷ்பிணி முகூர்த்தப் பத்திரிகை,' 'ருது சாந்திப் பத்திரிகை' என்னும் அவ் அழைப்பின் தலைப்பும், 'மஞ்சள் நீராட்டு', 'மங்கல நீராட்டு' என்று அமையலாயிற்று. அரசின் நலத்துறையில், இச்சொல் இனிதாகப் பயனுகலாம். 'Girls who have attained puberty' என்னும் தொடருக்குத் தமிழாக்கம், 'நன்மையெய்திய பெண்கள்' என்று அமைவது எத்துணைப் பொருளுடையதாக இருக்கும்!

2. இலக்கியம்

'இலக்கியச் சொற்கள், அவற்றிலும் சங்க இலக்கியச் சொற்கள் செத்துப்போன சொற்கள், ஏன், அவற்றை இன்றைய ஆட்சி மொழித்துறைக்கு இழுக்க வேண்டும்,' என்று சொல்லுகிறவர்களைக் கேட்டிருக்கிறேன். அப்படிச் சொல்லுகிறவர்கள் தமிழராக இருக் கின்றுர்கள்! தமிழில் அவர்களுக்கு நிரம்பப் பற்று இருப்பதையும் பார்க்கிறேம், நல்ல இலக்கியங்களைப் பயிலும் பழக்கம், குன்றி விட்ட காரணத்தால், அவற்றை இன்று நோக்கும்போது, அறிஞர் களாயிருப்பவர்களுக்குக்கூட, அவை, இறந்துபோன மொழியைக் கொண்டவையாகத் தோன்றுகின்றன, அவர்கள் கண்ணுக்கு; அவற்றில் இலக்கியச் சுவை இருப்பதாக அவர்கள் ஒப்புக் கொள்ளவும் தயங்குகிறுர்கள். அவர்களில் சிலர், 'சங்க இலக்கியங் களும், இலக்கியமாகுமா?' என்று ஒரேயடியாக அடித்துப் பேசவும் செய்கிறுர்கள்; காலத்தின் கோலம்!

இன்னும் ஒரு தலைமுறையாவது ஆகும், இத்தகையவர்கள் சங்க இலக்கியங்களைப் போற்றுவதற்கு. அதுவரையில், அவ்விலக்கியங் களிலுள்ள சொற்களில், இன்றைய ஆட்சி மொழித்துறைக்குப் பயன்படும் சொற்களைத் திரட்டி யெடுத்துப் பயன்படுத்தாமல் விட்டு விட முடியாது. அங்ஙனம் விட்டு விடுவதால், ஆட்சித் துறைக்கே இழப்பாகும். அவ்வாறு இழப்பாகும் என்பது உண்மைதானு, என்பதை உன்னித்துப் பார்த்துக்கொள்ள வாய்ப்பாகுமாறு, இங்கே, சில இலக்கியச் சொற்களை, உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இச்சொற்கள், எந்தஎந்த நூல்களில், எந்தஎந்த இடங்களில், வரு கின்றன, என்பதைச் சுட்டிக்காட்டி, இப்பேச்சை நீட்டிவிட எண்ணவில்லை. சொற்களைப் பட்டியலிட்டுத் தருகிறேன். அவற்றின் பொருத்தம், சுருக்கம், எளிமை, அழகு, முதலியவற்றைத், தேவை யென்று தோன்றுமிடங்களில், விளக்கிக்கொண்டே செல்வேன்.

Abolish	கட்டழி
Advice	மதிமொழி, மதியுரை
Adviser	மதியுரைஞர்
An able lady conversationalist	சொல்லாட்டி
At that time	அக்கால்
Bathing dress	நீச்சலுடை
Bonus	நன்னர்
Bottle	மணிக்கலம்
Cancel	உலை, உலைத்துவிடு
Cancellation	உலைவு, உலைத்துவிடல்
Circus Arena, circus	வட்டு, வட்டில்
Cloth business	அறுவை வணிகம்
Connoisseur	நயவர்
Conversation	சொல்லாடல்
Conviction	மனக்கோள்
Cooking utensils	அடுகலம்
Dancers	ஆடுநர்
Devastating rains	அழி பெயல்
Dramatic stage	ஆடுகளம்
Drinking water tank	உண்குளம்
Dried up tank	அறுகுளம்
Encroachment	பிதிர்பு
Estuary	புகார்
Forest Bouleward	அருப்பு
Fort having forest bouleward	அருப்புக்கோட்டை
Hired person	விலைவன்
Impregnadle Bouleward	ஆர் அரண்
Junior	பின்னன் (பின்னவர்)
Junior to me, My Junior	எனக்குப் பின்னன் (என் பின்னவர்)
Kindergarten teacher	பாலாசிரியர்
Last days	கடை நாள்
Light Grey hair	அரிநரை
machine	எந்திரம்
Maternity home	ஈனில்
Model	முன்னெறி-'முன்னெறியாகிய முதல்வன் முக்கணான்'-அப்பர்
Nadhaswaram	ஏழில்
Players of musical instruments	இயவர்
Produce	முந்துறுத்து
produce before judge	நடுவரின் முந்துறுத்து
produce production	விளையுள்
projection	பிதிர்வு

Plane / Aeroplane	வானூர்தி
Pilot	வலவன்
Pilotless plane	வலவன் ஏவா வானூர்தி
quick	ஒல்லை
refuge	புக்கில்
removing encroachment	பிதிர்வு பெயர்த்தல்
resign	ஒருவு
resignation	ஒருவல்
retinue	உழையோர்
second crop	மறுகால்
selfishness	என்னின்றி, தன்னின்றி
senior	முன்னன் (முன்னவர்)
senior to me, my senior	என் முன்னவர்
spare axle	சேம அச்சு
spokes	ஆரை, ஆரம்
stephy	சேமச் சக்கரம்
strangers	புதுவோர்
survey	புலவரை
swimming dress	நீச்சல் உடை
to stand before a person to curry his favour	முகம்புகல்
tribunal	அவையம்
weak mind	ஓட்டை மனம்

இலக்கியங்களைத் துருவிப் பயின்ற நுண்ணறிஞர்கள் குழுமியுள்ள இந்த அவையில், இச்சொற்களின் சிறப்பை நான் விளக்கி விளம்ப வேண்டிய தேவையில்லை. ஓர் உண்மையை மட்டும் உங்கள் உன்னிப்புக்கு உரிமையாக்க விழைகிறேன். ஆங்கில ஆட்சித் தொடர்களுக்குத் தமிழ்ச் சொற்கள் அமைக்கும்போது, அவை ஒவ்வொன்றும் ஆங்கிலத் தொடரைக் காட்டிலும் எழுத்துக்கு எழுத்துச் சிறியதாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான், ஆங்கிலத்தில் வரைவுகள், குறிப்புகள் (Draft Notes) எழுதுவதற்கு ஆகும் நேரத்தைக் காட்டிலும், தமிழில் எழுதுவதற்குக் குறைவான நேரம் போதுமானதாக இருக்கும். அப்போதே, தமிழ்க் கடிதப் போக்கு வரவு விரைந்து நடக்கும். தமிழில் எழுதுவதால் காலம் கூடுதலாக ஆகிவிடுகின்றது என்று எவரும் குறைகூற இடம் நேராது. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பெருமை படைத்தது தமிழ் மொழி. அப்பெருமையை நமது கருத்தின்மையால் குலைத்துவிடக் கூடாது.

ஈண்டு குறித்துள்ள இலக்கியச் சொற்களும், இலக்கியச் சொற்களை அடிப்படையாக வைத்து அமைந்துள்ள சொற்களும், பெரும்பாலானவை, ஆங்கிலத்தைக் காட்டிலும் அளவில் எவ்வளவு சிறியனவாக இருக்கின்றன என்பதைக் கண்டு நாம் களிகூர வேண்டும்.

இக்காலத்துக்குத் தேவையான ஆங்கில ஆட்சிச் சொற்களையும், செய்திகளையும் கண்முன் வைத்துக் கொண்டவர்களாக, இலக்கியங்களைப் பேராசிரிய அறிஞர்கள், ஆராயப் புகுந்தால், இன்னும் எத்தனை எத்தனையோ, அழகழகான, தமிழ்ச் சொற்கள், ஆட்சித் துறைக்குக் கிடைப்பனவாகும். சங்க காலத்து நூல்களையே யன்றி இன்றுவரை வெளியாகியுள்ள பிற நூல்களையும், இவ்வாறு அவர்களது ஆசிரியப் பணிக்கு இடையே, ஆராய்ந்து அரிய ஆட்சிச் சொல் திரட்டும் வேலையில் உதவிபுரிவது, பேராசிரியப் பெருந்தகையவர்கள் செய்யக்கூடிய செம்பணியாகும்.

இவ்வாறே, பேச்சு வழக்கிலுள்ள ஆட்சிக்குப் பயன்படக்கூடிய சொற்களையும், சிற்றூர்களிலும், நகரங்களிலும் பணிபுரியும் துவக்கப் பள்ளி ஆசிரியர்களிலிருந்து, கல்லூரி ஆசிரியர்கள் வரையிலுள்ள தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் திரட்டி உதவுவது, ஆட்சிச் சொல் அகராதியை வளப்படுத்தும் அருஞ்செயலாகும் என்று இதுபோது தெரிவித்துக்கொள்கிறேன்.

3. கல்வெட்டு

இலக்கியங்கள் நமக்குத் தருவதுபோல, ஆட்சித் துறைக்குக் கல்வெட்டுகளும், சொல் வழங்கும் திறமுடையனவாகும். கல்வெட்டுகளின் தமிழ்நடை, நல்ல தமிழ்நடை என்று சொல்ல முடியாது. ஏனோ, இக் கல்வெட்டுகளை வெளியிட்ட மன்னர்கள், அவற்றின் தமிழ்நடையைப் பற்றிக் கவனம் செலுத்தாது போனார்கள். பிழையில்லாத, திருத்தமான, தமிழிலாவது கல்வெட்டுகள் உருவாகியிருக்கலாம். கல்லில் எழுத்துகளைப் பொறித்த கல்தச்சர்கள், அவர்களது வேலையைச் செவ்வையாகச் செய்யவேண்டுமே என்று, மேல் இருந்தவர்கள் சிறிதும் உள்ளம் வைக்காமற் போனார்கள். கல்வெட்டுகள் இலக்கியங்களாக இலங்க இல்லையேயென்னும் குறை ஒருபுறம் இருந்தாலும், அக்காலத்திய ஆட்சியில் வழங்கிய தமிழ்ச் சொற்களின் அழகிய வடிவங்கள், அவற்றில் காணக்கிடைக்கின்றனவே என்று நாம் களிகூரவேண்டும். அச்சொற்கள் அவ்வக் காலத்துக்குரிய ஆட்சிச்சொற்களாக மட்டும் இருந்து விடாமல், அவற்றில் பல, இன்றைய ஆட்சியிலும் பொருத்தமாகப் பயன்படக் கூடியனவாகவும் விளங்குவதாற்றான், அவற்றை நாம் முயன்று ஒன்று சேர்க்க முனையவேண்டிவர்களாகிறோம்.

நான் பார்த்த கல்வெட்டுகள் மிகச் சிலவேயாகும். அவற்றில் நான் கண்டசில சொற்களை மட்டுமே, இங்கு எடுத்துக்கூறி, இத் துறையில் நம்முடைய பணி மிகப் பெரிதாக இருக்கின்றது என்பதை உங்களுக்கும் நினைவூட்டி என்னையும் நினைவூட்டிக் கொள்ளுகிறேன்.

1. *'As usual'* பழம்படி.

இச்சொல், இன்று, 'பழையபடி' என்று பேச்சு, வழக்கிலும் உள்ளது.

2. *agreed price* — **இசைந்தவிலை**

இதனை இன்று, 'ஒப்புக்கொண்ட விலை' என்போம். கல்வெட்டுச் சொல்லான இசைந்தவிலை என்பது சிறியதாகவும், அழகாகவும் இல்லையா?

3. *Block* — **துண்டம்**

இன்று 'Block' என்பதற்குச் சரியான சொல் கிட்டவில்லையே யென்னும் கவலையை, 'துண்டம்' என்னும் 'கல்வெட்டுச்சொல், போக்கிவிடுகிறது. 'பகுதி', 'பிரிவு', 'தொகுதி' என்னும் சொற்களைக் காட்டிலும், 'துண்டம்' என்னும் சொல் பொருத்தமாக இருக்கிறது. 'pare'-பகுதி; 'section' — பிரிவு; 'ward' — தொகுதி; என்று அச் சொற்கள் இவ்வாறு, வேறு ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமா யிருப்பதைக் காணலாம்.

ஒரு படத்தை அச்சுசெய்வதற்காக, அதற்கு ஒரு block செய் கிறோம். அந்த இடத்தில் 'block' என்பது 'உருவச்சு' என்னும் பொருளுடையதாகும். வேறு பொருள்களில் 'block' என்னும் சொல் வழங்குவதைப் பற்றி இங்கு ஆராயவில்லை.

4. *Caretaker* — **நோக்கர்**

இது மிக அழகாகவும் பொருத்தமாகவும் அமைந்த சொல். இதைக் காட்டிலும் சிறந்த சொல் 'caretaker' - க்குக் கிடைப்பது அரிது. ஒரு கட்டடத்தை நல்லவண்ணம் கவனித்துக்கொள்பவர் அதாவது நோக்கிக் கொள்பவர், இக்கட்டடத்தின் நோக்கர் ஆவார்.

5. *Collection* — **தண்டல்**

இதனை 'வசூல்' என்னும் உருதுச் சொல்லால் இப்போது குறிக் கிறோம். இதனால், 'தண்டல்' என்னும் தமிழ்ச்சொல் கூறும் வரலாறும், நமக்குக் கிடைக்காது போகிறது. பணம் கேட்கப் போகும்போது, கையில் ஒரு தண்டு, அல்லது தடியைக் கொண்டு செல்வது பழங்கால வழக்கம். கடும் வட்டிக்குக் கடன் கொடுத்து விட்டு, அதனை மீட்கச் செல்லும்போது, கையில் ஈட்டியைக் கொண்டு போகும் ஒருவனை, இன்று 'ஈட்டிக்காரன்' என்று சொல்லக் கேட்கிறோம். சிற்றூர்களில், நிலவரிப் பாக்கியைக் கேட்கச் செல்லுகையில், கையில் ஒரு பெரிய கம்பினைக் கொண்டு செல்கிற வனைத் 'தண்டல்காரன்' என்பர். கிராம ஊழியர்களாகத், தலையாரி, வெட்டியான் என்பவர்கள், இவ்வாறு வரிப்பணம் கேட்கப்போகும் போது, தண்டு கொண்டு செல்வதைக் கண்டிருக்கிறோம். 'தண்டு எடுத்தவனெல்லாம் தண்டல்காரன் ஆகிவிடமாட்டான்' என்னும் பழமொழி, தண்டலுக்குச் செல்லும்போது தண்டு ஏந்திச் செல்லும் வழக்கத்தைக் குறிக்கிறது. பணத்தை, அதை வாங்க வேண்டிய வரிடமிருந்து பிரிப்பதற்குத் தண்டு ஓர் கருவியாகும்.

கையில் தண்டு இல்லாமலே, பாக்கியை 'வசூல்' செய்யப் போகிறவனையும், 'தண்டல்காரர்' என்றே, சொல்கிறோம். பழைய வழக்கத்தையொட்டி, தல ஆட்,சி நிறுவனங்களில், வரி தண்டும் பணியரைத் 'தண்டலர்' என்று கூறுவதையறிவோம். 'Bill collector' — பட்டியல் தண்டலர், 'Tax collector' — வரித் தண்டலர், 'rent collector —வாடகைத் தண்டலர்.

நிலவரியைத் தண்டும் பணிக்குத் தலைமையமரும் அலுவலரைத், 'தண்டல் நாயகம்' என்று கல்வெட்டுகள் குறிக்கின்றன.

6. *'District Collector'* — மாவட்டத் தண்டல் நாயகம்

'District Collector' மாவட்டத் தண்டல் நாயகமே ஆவார். ஆனல், இன்று அவர் செய்யும் பணி இது மட்டுமேயன்று. இதுவே அன்று, என்று கூடச் சொல்லலாம். ஒரு மாவட்டத்தை ஆளுகின்ற பணியே இன்று அவருடையதாக அமைந்திருக்கின்றது. அவரே, 'District administrator'. எனவே, அவரை இன்று 'மாவட்டத் தண்டல் நாயகம்' என்னமல், 'மாவட்ட ஆட்சியர்' என்று சொல்லலாயினேம். 'District Collector' என்பது இன்று பொருளற்ற சொல்லாக இருக்கிறது. இதனை 'District administrator' என்று என்ருவது மாற்றி விடுவார்கள் என்று கொள்ளலாம்.

7. *collect a fine* — தண்டம் கொள்

இங்குத் 'தண்டம்' என்னும் சொல், 'fine' என்பதற்கு நேரான தமிழ்ச் சொல்லாகக் கல்வெட்டில் வருகிறது. இதனைப் புரிந்துகொள்ளத் 'தண்டனை' என்னும் சொல்லை நாம் உன்னித்துப் பார்க்க வேண்டும். 'தண்டனை' என்பதே இங்குத் 'தண்டம்' என்று வந்திருக்கிறது.

ஒரு குற்றம் செய்தவரை ஒறுப்பது, அவரை ஒரு தடிகொண்டு அடிப்பதே. இதுவே, மனிதன் முதலில் செய்துவந்த ஒறுக்கும் முறையாகும். தண்டு என்பதும் தடி என்பதும் ஒரே பொருளுடைய சொற்கள். தவறு செய்தவரைத் தண்டுகொண்டு அடிப்பதை, அவரைத் 'தண்டிப்பது' என்றனர். அது தண்டனையாயிற்று.

கால வளர்ச்சியில், வேறு பலவகை ஒறுக்கும் முறைகளும் வளர்ந்தன. பணம் கட்டச் சொல்வது, சிறையிடுவது, நாடு கடத்துவது, தூக்கிலிடுவது, என்று ஒறுத்தல்கள் பலவாயின. என்ருலும், அவை யாவும் 'தண்டனைகள்' என்றே இன்றுவரை, கூறப் பெறுவனவாயின. பணம் கட்டும்படி தண்டிப்பதையே, 'தண்டம்' என்றனர். இதனை 'அபராதம்' என்றும் சொல்வர். அபராதம் தண்டுவதையே, 'தண்டம் கொளல்' என்று கல்வெட்டுகளில் கண்டிருக்கிறது. இதுபோலவே இன்னெரு தொடர் உண்டு.

8. *levy a fine*—**தண்டம் இடு**

'தண்டம் இடு' என்பது அது. இதனைத் 'தண்டம் விதி' என்றும் சொல்லலாம். 'levying a fine' என்பதை 'அபராதம் விதித்தல்' என்றும் சொல்வர்.

'தண்டம் இடு' என்னும் தொடருக்கு, 'விழுந்து வணங்கிக் கொள்' என்னும் பொருளும் உண்டு. அது எவ்வாறு என்று இங்கு விளக்க வேண்டியது தேவையேயாகும். ஒருவர் தம் உடலைத் தண்டுபோல் தரையில் குப்புற வீழ்த்தி வணக்கம் செய்வதே 'தண்டம் இடுவது' ஆகும். எனவே, வேறு ஓர் ஆங்கிலச் சொல் லுக்கும் இதே தொடர் பொருந்துவதையறிகிறோம்.

9. *prostrate* — **தண்டமிடு**

எந்த வகையான ஒறுத்தல் ஆனாலும், அவை யாவும், பொதுவாக, 'தண்டனை' என்னும் சொல்லாலேயே குறிக்கப்பெறும்.

10. *punishment* — **தண்டனை.**

11. *document* — '**ஆவணம்**'

இது நல்ல தமிழ்ச் சொல். 'பத்திரம்' என்றும் இதனைச் சொல்வர். பத்திரம் என்பது இலை. 'இதழ்' என்றும் கூறலாம். 'பத்திரம், புஷ்பம், பலம், தோயம்' என்னும் தொடரைக் கேட்டி ருப்போம். பத்திரம் - இலை, புஷ்பம் - மலர். பலம் - பழம், தோயம் - நீர். இறைவனுக்கு நம் அன்பினை உரியதாக்குவதற்கு இவற்றைப் பயன்படுத்துவது மரபு.

12. '*registration office*' — **ஆவணக் களரி**

ஆவணங்களைப் பதிவு செய்கின்ற இடம், கல்வெட்டுக் காலத் தில், 'ஆவணக்களரி' எனப்பெற்றது.

இன்று இதனைப் 'பத்திரப் பதிவு அலுவலகம்' என்றும், 'ஆணைப்பதிவு அலுவலகம்' என்றும் கூறுவோம். 'ஆவணக்களரி' வடிவத்தில் சிறிதாக இருப்பதால் ஆளுவதற்கு எளிதான தொட ராகும்.

13. *highways*—**பெருவழி**

high road என்பதைப் '*பெரிய சாலை*' எனலாம். 'trunk road'க்கு **நெடுஞ்சாலை** பொருத்தமாகும்.

14. '*huzurtreasury*' **பெருங் கருவூலம்.**

'தலைமைக் கருவூலம்' என்றும் இதனைச் சொல்லலாம். ஆனாலும் 'பெருங்கருவூலம்' வடிவில் சிறியது, பொருளிலும் குறை வில்லை.

15. *inalienable land* — **குடிநீங்கா நிலம்**

இதைக் காட்டிலும் சுருக்கமாகவும், பொருத்தமாகவும், இவ்வாங் கிலத் தொடருக்குத் 'தமிழ்த் தொடர்' காண்பது அரிது.

16. *taxfree land* — **இறையிலி நிலம்**

இக்கல்வெட்டுத் தொடரும் ஆட்சிக்கு அழகாகப் பொருந்தும் சொல். முதலில் சிறிது கடுமையானது போல் தோன்றினும் நாளா வட்டத்தில் எளிதாகிவிடும்.

18. *subdivide a land* — **நிலம் கூறுசெய்**

'கூறுசெய்' என்பது 'subdivide' என்னும் சொல்லுக்கு ஏற்ற தமிழாகும். அளவில் சிறிதாக இருப்பதும் அதன் சிறப்பு.

19. *survey stone* — **அளவுக்கல்**

இத்தொடரை இக்கால ஆட்சியில் அப்படியே பயன்படுத்திக் கொள்ளலாம்.

20. *Hereditory right* — **வழிவழி உரிமை**

இதனைப் 'பரம்பரைப் பாத்தியம் என்றும் கூறுவர். 'வழிவழி உரிமை' நல்ல தமிழ்த் தொடராகவும், சுருக்கமானதாகவும் இருப்ப தால் ஆட்சிக்கு வரவேண்டியதே யாகும்.

21. *Take possession of* — **கைக்கொள்**

அழகான சிறுதொடர்; எளிதாகப் பயன்படுத்தலாம்.

22. *Three crop land* — **முப்பூ நிலம்**

திருநெல்வேலிப் பக்கத்தில், இத்தொடர் இன்றும் பயன்பட்டு வருகிறது. நாட்டின் வேறு பகுதிகளிலும் 'மூன்று போக நிலம்' என்பதற்கு மாற்றாக, எளிதில் ஆளக்கூடிய அழகுவாய்ந்த தமிழ்த் தொடர் இது.

23. *Range* — **சிறகம்**

இதனைச் 'சரகம்' என்று தவறாக வழங்குகிறோம். திருத்தமான வடிவம் 'சிறகம்' என்பதே. ஒரு குறித்த இடம்முதல், இன்னொரு குறித்த இடம்வரையில், விரிந்து செல்கின்ற ஓர் இடத்தையே 'சிறகம்' என்றனர். ஒரு தெருவில், 'ஒரு சிறகம், எண் 1 முதல் எண் 16 வரை நீண்டிருக்கிறது. எதிர்ச்சிறகம் எண் 17 முதல் எண் 32 வரை செல்கிறது' என்போம். தெருவின் இரு சிறகங்கள் இவை, பறவைக்கு இரு சிறகுகள் இருப்பது போல. பறவையின் ஒவ்வொரு பக்கத்துச் சிறகும், மூடிய நிலையில் இருந்து, விரிந்த நிலைவரை

செல்கிறது. எனவே, அவைகளும் சிறகங்கள் ஆயின. சிறகங்களையே சிறகுகள் என்கிறோம். 'தென்மட வளாகத்தில், வடசிறகில்' என்பதுபோன்ற தொடர்களே கல்வெட்டுக்களில் காணப்படுகிறன.

இச்சொல்லில் இருந்து, *'Ranger,' 'Range Officer'* என்னும் சொற்களுக்கு, ***'சிறகர்', 'சிறக அலுவலர்'*** என்னும் சொற்களை ஈடாக்கலாம்.

கல்வெட்டுச் சொற்கள் நம் கருத்தில் வேலை செய்ய, இப்போதைக்கு இவை சாலும்.

இனி, பிறமொழிச் சொற்களை ஆட்சித் துறைக்கு எப்படி ஆட்படுத்திக் கொள்ளலாம் என்பதைப் பார்ப்போம்.

4. பிறமொழிச் சொற்கள்

பிறமொழிச் சொற்களைத் தமிழில் அப்படியே ஏற்று கொள்வதை நான் விரும்புகிறவன்; ஆனல், அச்சொற்களில் ஓசையை, அப்படி அப்படியே தமிழ் எழுத்தில் எழுதிக் கொள்வது தமிழாக்குவது ஆகாது என்பது என் கருத்து, 'Boarding & Lodging' என்பதைப் 'போர்டிங் & லாட்ஜிங்' என்று எழுதிவிட்டால், அது எப்படித் தமிழாகிவிடும்? 'உணவு விடுதி தங்குவசதி' என்பதை, ஆங்கிலமாக்குவதானல், 'Boarding & Lodging' என்று எழுதவேண்டும். அப்படியன்றி, 'Unavu Viduthi Thangu Vasathi' என்று தமிழ் ஓசையை, அப்படியே ஆங்கில எழுத்தில் வரைந்து விட்டால், அது எங்ஙனம், ஆங்கிலமாகிவிடும்?

இப்படியல்லாமல், ஆங்கில ஓசையைத், தமிழ் வடிவமாக்கி, அதற்குத் தமிழில் வேரும் உண்டாக்கித், தமிழ் இலக்கண மரபு கெடாமல், எழுதுவதே அப்பிற மொழிச் சொல்லைத் தமிழில் ஏற்றுக் கொள்வதாகும் என்று நான் நினைக்கிறேன். அப்படிச் செய்தால்தான், தமிழ்மொழி கெடாது ; தமிழ் வளரும். ஆங்கில ஓசையைக் குருட்டுத்தனமாகத் தமிழ் எழுத்தில் அமைத்துவிட்டால், தமிழ்மொழி, நாளாவட்டத்தில், தமிழாக இல்லாமல், வேறு ஏதோ ஒரு புதுமொழியாக மாறிவிடும். இப்படி மாறியவையே, ஒரு காலத்தில் தமிழோடு தமிழாக, ஒரே மொழியாக இருந்த, கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் ஆகியவையாகும்.

சிறந்த நமது இன்னெரு மொழியான வடமொழியில், பிற மொழிச் சொற்கள், ஏராளமாக இருக்கின்றன. ஆனல், அவற்றைச் சமற்கிருதத்தில் ஏற்கும் முறை, தமிழில் கையாளவேண்டும் என்று, மேலே நான் சொல்லிய முறையே யாகும்.

காட்டாக, 'வேட்டி' என்னும் தமிழ்ச் சொல்லை, ஏற்கும்போது, வேட்டியில் உள்ள 'வெட்டுதல்' என்னும் வேர்ச் சொல்லை அப்படியே சமற்கிருதத்தில் ஏற்கவில்லை. 'வேஷனம்' என்னும் புதுவேரை அமைத்துக்கொண்டு, 'வேஷ்டி' என்று ஆக்கியிருக்கின்றோம். வேஷனம்' என்றால் 'சுற்றிக்கொள்வது' என்று பொருள். 'வேட்டி' என்னும் தமிழ்ச் சொல்லையே, 'வேஷ்டி' என்ற வடசொல்லாக ஆக்கியிருந்தாலும், 'வெட்டுதல்' என்ற பொருளில் அச்சொல் இல்லாமல் வேறு பொருளைக் கொண்ட 'வேஷனம்' என்னும் வேரிலிருந்து உண்டானது என்று எண்ணும் படி அமைத்துவிட்டோம். இது போலவே, 'நிமிடுதல்,' 'நிமிட்டுதல்,' 'நொடித்தல்' என்னும் பொருளையுடைய, வேரைக்கொண்ட 'நிமிடம்' என்னும் சொல், 'நிமிஷம்' என்னும் வடசொல்லான போது, 'நிமிடுதல்' என்னும் வேருக்கு மாற்றாக, அதே கருத்தைத் தெரிவிக்கும் 'இமைத்தல்' என்னும் பொருளிலுள்ள சமற்கிருதவேரான 'நிமிஷ்' என்னும் வேரை உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம். இவ்வாறு செய்தது, வடமொழியில் பிறமொழிச் சொற்கள் புகுவதால், அம்மொழியின் கட்டுக்கோப்புக் கெடாதபடி, நல்ல வண்ணம் அது வளர்தற்கேயாகும்.

இதே விதியைத்தான், தமிழ்மொழியில் பிறமொழிச் சொற்களை ஏற்றுக் கொள்வதற்கும் நாம் கையாளவேண்டும். எத்தனை அயல் மொழிச் சொற்களை, இவ்வாறு நாம் ஏற்றுக்கொண்டாலும், மொழி வளமுறுமேயன்றி உருமாறாது. வேர் அமைத்துவிடுவதால், அவ்வேரிலிருந்து, ஏற்றுக்கொண்ட அயல் மொழிச் சொல்லின் சாயலிலேயே, பல புதுச் சொற்களையும் நாம் அமைத்துக் கொள்வது எளிதாகும். அவ்வாறு அமைக்கும் சொற்களைத் தமிழறிந்த எவரும், வேர்ச்சொல்லின் துணைகொண்டு, எளிதில் புரிந்து கொள்ள முடியும். அச்சொற்கள் அறுபடமுடியாத அதாவது-சீரணிக்கமுடியாத-ஏதோ ஒரு புதுப் பண்டத்தின் உருண்டைகளை வயிற்றில் இட்டு விட்டதால் அவ்வுருண்டைகள் வயிற்றில் சிக்கிக்கொள்வதுபோல, மொழியில் இணையாத ஓசைகளாகி, மொழியைச் சீரழிக்க மாட்டா.

1500 ஆண்டுகளுக்கு முன்பு, ஆங்கிலம் சில சொற்களைக் கொண்டு ஒரு மொழியாக இருந்தது. அதை வளர்ப்பதற்கு, இலத்தின், கிரீக் முதலிய சொற்களையும், அவற்றிலிருந்து, அதற்கு முன்பே சொற்களை ஏற்றுக்கொண்டிருந்த, செர்மன், பிரஞ்சு போன்ற மொழிகளையும், ஆங்கில மொழியுடன் இணைத்தார்கள். அந்த ஆங்கிலத்தைக் கொண்டு 'பியோஉல்ப்' என்னும் ஓர் இலக்கியத்தையும் ஆக்கினார்கள், அதுதான் முதன்முதல், ஆங்கிலம் என்னும் மொழியில் உருவான இலக்கியம்.

சொற்கள் போதவில்லை. மேலும் பல பிறமொழிச் சொற்களைச் சேர்த்துக்கொண்டே சென்றார்கள். அது இன்னொரு புதுமொழியாக ஆயிற்று. அதையும் ஆங்கிலம் என்றார்கள். 'பியோஉல்ப்' என்னும்

96700

காப்பியம் எழுதப்பெற்ற ஆங்கிலத்தைப், பழைய ஆங்கிலம் என்று பெயர் இட்டார்கள். இந்தப் புது ஆங்கிலத்தில் சில இலக்கியங்கள் தோன்றின. பழைய ஆங்கிலத்தில் எழுதப் பெற்றிருந்த 'பியோ உல்ப்'-ஐப் படித்தவர்கள் இந்தப் புது ஆங்கிலத்தில் எழுதிய நூல்களைப் புரிந்துகொள்ள முடியாமல் இருந்தது.

சொற்களை இன்னும் பெருக்க விழைந்தார்கள். பிறமொழிச் சொற்களைத்தான் நம்பினுர்கள். 500 ஆண்டுகளுக்குள் அதுவேறு ஒரு புதுமொழியாய்த் தோன்றிற்று. ஆனல் அதையும் ஆங்கிலம் என்றே சொன்னுர்கள். இந்தப் புது ஆங்கிலத்தில் 'சாசர்' என்பவர் நூல் எழுதினுர். எனவே, இது 'சாசர் ஆங்கிலம்' என்று ஆயிற்று. பழைய ஆங்கிலத்தையும், இடைக்கால ஆங்கிலத்தையும் தெரிந்து கொண்டவர், சாசர் ஆங்கிலத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் இருந்தது. மூன்று ஆங்கிலங்களும், மூன்று வேறு வேறு மொழி களாகவே காணப்பட்டன. தொடர்புடைய மொழிகள் என்று மட்டுமே சொல்லிக்கொள்ள முடிந்தது.

மேலும் மேலும் வேற்றுமொழிச் சொற்கள் ஆங்கில மொழியில் புகுந்தன. நான்காவது ஆங்கிலம் ஒன்று உண்டாயிற்று. முதல் மூன்று ஆங்கிலத்தைப் படித்த அறிஞர்கள், இந்த நான்காவது ஆங் கிலத்தைப் புரிந்துகொள்ள முடியாது. ஒவ்வொரு நிலையிலும், வேறு வேறு பிறமொழிச் சொற்களை ஏற்றுக் கொண்டே வந்ததால், மொழி உருமாறிக்கொண்டே வந்துவிட்டது. நான்கையும், ஆங்கிலம் என்றே சொன்னுலும், நான்கும் நான்கு வேறுவேறு மொழிகளே.

இவ்வாறே, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, நம் நாட்டில் நிலவிய ஒரு மொழி, ஆங்காங்கே பேசப்பெறுவதில், சிற்சில கொச்சை வழக்குகளும் ஓசை வேறுபாடுகளும், உடையதாயிருந்த துடன், பிறமொழிக்கலப்பால், அந்த ஒரே தமிழ்மொழி தெலுங்கு கன்னடம், துளுவம், மலையாளம் என்று தனித்தனி உருவங்கள் பெற்றுவிட்டது. இவ்வாறு தனித்தனியே உருமாறிப் பிரிந்துபோன இந்த நான்கு மொழிகளும் தமிழ் மொழியே என்று சொல்வது பொருந்துமா? ஆங்கிலத்தில் பிறமொழிக் கலப்பால் உண்டான நான்கு மொழிகளையும், ஆங்கில மொழிகளே என்று சொல்வது போலல்லவா இருக்கும்?

இக்கால ஆங்கிலம் உண்மையில் ஆங்கிலமாகவே வளர்கிறது. பிறமொழிச் சொற்களை அப்படி அப்படியே, ஆங்கிலத்தில் அமைத்துக் கொள்ளும் பழைய வழக்கம் இப்போது இல்லை. ஏற்கெனவே, மொழியில் உள்ள சொற்களைக் கொண்டே, அச்சொற் களின், பகுதிகள், வேர்களைக் கொண்டே, இன்று, புது ஆங்கிலச் சொற்கள் உருவாக்கப் பெறுகின்றன. இவ்வாறு எத்தனைச் சொற் களை உருவாக்கிச் சேர்த்தாலும், ஆங்கிலம், உண்மையிலேயே,

ஆங்கிலமாகவே இருக்கும். ஆங்கிலம் தெரிந்தனர் எவரும் அப்புதுச் சொற்களை எளிதில் இனங்கண்டு புரிந்துகொள்ள முடியும். ஆங்கில மொழி இனிச் சிதையாது, வளர்ந்துகொண்டே போகும்.

இந்த உண்மையை யறியாத பலர், தமிழில் பிறமொழிச் சொற்களை அப்படிஅப்படியே ஏற்றுக் கொண்டால், தமிழ் வளரும் என்று கூறுகின்றனர். சான்று காட்டுவதுபோல, 'ஆங்கிலத்தைப் பாருங்கள், அது பிறமொழிச் சொற்களை ஏற்றுக் கொண்டதால் உலக மொழியாக வளர்ந்துவிட்டிருக்கிறது' என்று அடித்துச் சொல்லுகிறார்கள். ஆங்கிலம் உலக மொழியாக ஆகியிருப்பது, அம்மொழியின் சிறப்பினுல் அன்று; அம்மொழிக்குரியவரான ஆங்கிலேயரின், உலகை வெல்லும் திறத்தினுல், என்பதையும், அவர்கள் மறந்துவிட்டு, இங்ஙனம் மொழிகின்றார்கள் என்பதை அறிஞர்கள் அறிவர்.

ஒரு மொழி சிதையாமல், உண்மையாகவே வளர்ச்சிபெற வேண்டுமானால், எந்தப் பிறமொழியை அது ஏற்றாலும், அம்மொழியில் அப்பிற மொழிச் சொல்லுக்கு, வேர் உண்டாக்கிக் கொண்டு, அம்மொழி மரபு கெடாமல் வடிவமைத்துக் கொள்ளுதல் வேண்டுமென்னும் உண்மையை இவற்றால் இனிது உணரலாம். இங்ஙனம், சில வேற்றுமொழிச் சொற்களைத் தமிழில் தழுவிக்கொள்ளுவதற்குக் காட்டாக, கீழே சிலவற்றைத் தருகிறேன்.

1. 'BANK'

இதனைப் 'பாங்கு' என்று அமைத்துக் கொள்ளலாம். பணம் பாங்கான இடம் பாங்கு. ஆங்கிலத்தில் இச்சொல்லுக்குத் 'கரை' என்று பொருள். ஒரு குளத்துக்குக் கரையிட்டு, நீரை அதில் தேக்கவும், அதிலிருந்து அதனைப் பிறர் பயன்படுத்தவும், வகை செய்கின்றோம். அதுபோல, பலர் தம் பணத்தைக் கொண்டுவந்து போட்டுவைக்கவும், எடுக்கவும், பலர் அப்பணத்திலிருந்து கடன் வாங்கிப், பின்பு வாங்கிய கடனை அதில் திருப்பிப் போடவும், வாய்ப்பாக இருக்கின்ற இடமே 'பாங்கு.' பணத்துக்குக் கரைபோட்டுக் காப்பாற்றும் இடம். 'Bank'ன் பொருளை இச்சொல் இனிது தருகிறது. தமிழ்ச் சொல்லாகவும் இருக்கின்றது. நீரைக் காப்பது 'Bank'-'கரை'; பணத்தைக் காப்பது 'Bank'-'பாங்கு'; பணத்துக்குப் பாங்கான இடம் பாங்கு.

இப்படியல்லாமல், ஆங்கில ஓசையை அப்படியே, 'பாங்க்' என்றோ, 'பேங்க்' என்றோ, அமைத்துக் கொண்டால் தமிழில் அச்சொற்கள் பொருள் செய்யமுடியாத, ஓசைக் கற்கட்டிகளாக இருக்கும். தமிழ் இலக்கண மரபுக்கு அவை பொருத்தமானவையாகா.

சிலர் 'Bank' என்னும் இச்சொல்லை 'வங்கி' என்று தமிழில் எழுதி வழங்குகிறார்கள். 'பாங்கு' என்னும் ஓசையில் 'ப' வை 'வ'வாக மாற்றி, இறுதியில் சிறிது நயப்புச் செய்து ஆக்கப் பெற்றதே இவ்'வங்கி' யாகும். இச்சொல்லுக்குத் தமிழில் வேறு பொருள்கள் உண்டு. 'வங்கி' என்பதற்கு 'வளைந்து' என்று தெலுங்கில் பொருள். 'வணங்கி' என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபே 'வங்கி'. 'வணங்கி'யில் 'ண'வை எடுத்துவிட்டால் மீறி நிற்பது 'வங்கி' தான். 'கோணி', 'கோணலாகி' என்றும் இச்சொல்லுக்குப் பொருள் உண்டு. பெண்கள் முழங்கையருகே கோணலான ஓர் அணிகலனை அணிவர். அதற்கு 'வங்கி' என்று பெயர். எனவே, இவ்வாறு ஆங்கில மொழியின் ஓசையை தமிழ் எழுத்தில் எழுதிக்கொண்டு, அதைத் தமிழ்ச்சொல் என்று சொல்வதால், வேறுவேறு பொருள்கள் விளைவ துடன் குறித்த கருத்துக்கு ஏற்றதாக இல்லாதிருப்பதையும் காணலாம்.

'பாங்கு' என்னும் சொல் இன்று பல இடங்களிலும் பயிலும் சொல்லாகிவிட்டது. கூட்டுறவுத்துறையில் 'பாங்கு' என்னும் சொல்லே நாட்டுப் புறங்களிலும், பெருவழக்காக இருப்பதை யறிவோம்.

2. 'CASHIER'

'காசாளர்.' பணத்தைப் பெறவும் வழங்கவும் செய்பவரே காசு ஆளர்.

3. 'QUORUM'

'கோரெண்' : ஒரு கூட்டம் நடப்பதற்குத் தேவையான உறுப் பினரின் எண்ணிக்கை. கூட்டத்திற்குக் கோரும் எண். Number of members required for conducting a meeting.

4. 'CALENDER'

'காலந்தேர்.' நாள், கிழமை, மாதம், ஆண்டு முதலிய காலப் பகுதிகளைத் தேர்ந்துகொள்ளப் பயன்படும் கருவி. 'நாள் காட்டி' என்னும் சொல்லைப் பார்க்கிலும் பரந்த பொருளில் இருப்பது இச் சொல்.

5. 'PUMP'

'பம்பு': அழுத்தினால் நீர் பம்பி மேலே வரும் எந்திரம். பம்பச் செய்வது பம்பு.

6. 'MAYOR'

'மேயர்.' மேயர் என்பது ஏற்கெனவே தமிழ்ச் சொல். 'மேலான வர்', 'முதன்மையர்' என்னும் பொருளில் இருக்கிறது. ஒரு மாநகராட்சி

உறுப்பினர்களில் அந்நிறுவனத்திற்குத் தலைமையமரும் முதன்மை யான உறுப்பினர் 'மேயர்' எனப்படுகிறார்.

7. 'CHAIRMAN'

'சேர்மன்' 'Chairman' என்னும் ஆங்கிலச் சொல்லுக்குத் தலைவர் என்று பொருள். ஊராட்சி ஒன்றியத் தலைவர், நகராட்சித் தலைவர், சட்ட மேல்மன்றத் தலைவர், இவர்களில் ஒவ்வொருவரும் ஆங்கிலத்தில் 'Chairman' என்றே கூறப் பெறுகின்றனர். இவர்களில் பெரும் பாலோர் 'தலைவர்' என்னும் தமிழ்ச் சொல்லால் தங்கள் பதவியைக் குறிப்பதைக் காட்டிலும், 'Chairman' என்னும் ஆங்கிலச் சொல்லின் ஓசையை அப்படியே தமிழில் எழுதிக்கொண்டு, 'சேர்மன்' என்றே சொல்லிக் கொள்ள விரும்புகின்றனர். அவ்வோசையைத் தமிழில் எழுதும்போது சேர்மேன், 'சேர்மென்' என்று தமிழில் பொருளாகாத படி எழுதாமல், 'சேர்மன்' என்று எழுதுவது பொருத்தமாகும். 'மன்னத்தன்மை' சேரப்பெற்றவர், என்னும் பொருளில் அமை கின்றது, இத் தமிழ்ச்சொல்.

ஒரு குடியரசில், மன்னத்தன்மை, வயதுவந்த ஒவ்வொரு மாந்த ரிடமும் பொதிந்து இருக்கிறது, ஒரு தொகுதியில் வசிக்கும் அவர்கள், தம் வாக்கால் அம்மன்னத்தன்மையை அத்தொகுதி உறுப்பினருக்கு அளிக்கிறார்கள். உறுப்பினர்கள் தம் வாக்கை அளித்தே, ஊராட்சி மன்றத்தின் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். அத்தலைவர்கள் அனைவருங்கூடி, ஒன்று குவித்துத் தம்மிடம் சேர்த்துக்கொண்டுள்ள வாக்குகளான மன்னத்தன்மையுடன், தம் வாக்கையும் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவருக்கு அளிக்கிறார்கள். எனவே, அத்தலைவர், பலரின் மன்னத்தன்மை சேரப்பெற்றவர் ஆகிறார். அவர் மன்சேர், 'சேர்மன்' எனப்படுவது பொருத்தந்தானே. 'Chairman' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இப்படியொரு பொருளார்ந்த தமிழ்ச்சொல் இருக்கட்டுமே.

இப்படியாக, எந்தப் பிறமொழிச் சொல்லையும், அவ்வோசை யைக் கொண்டே, பெரும்பாலும், உண்மையான, தமிழ்ச் சொல்லாக ஆக்கிக்கொள்ள முடியுமானால், எத்துணைப் பிறமொழிச் சொற்கள் தமிழில் புகுந்தாலும், தமிழ் சிதையாது, செழிப்பாக வளரும்.

ஏறத்தாழப் பிறமொழியின் அதே ஓசையை அமைத்துத் தமிழ்ச் சொல் ஆக்கிக்கொள்ள முடியாதபோது, 'அப்பிறமொழிச் சொல் லுக்கு நேரான பொருளுடைய ஒரு சொல்லை தமிழில் புனைந்து கொள்ள வேண்டியதுதான். இனி அப்புதுப் புனைவுக்குச் செல்வோம்.

5. புதுப்புனைவு

ஒரு பிறமொழிச் சொல்லுக்கு நேரான ஒரு தமிழ்ச் சொல்லை ஆக்கிக்கொள்ள முற்படும்போது, சில விதிகளைப் பின்பற்ற

வேண்டும். மனம் போனபடியெல்லாம் ஆக்கினுல், மொழி நலங் கெடும். அவ்விதிகள் ஐந்து. அவை, யாவையென வரிசைப்படுத்திக் கூறுகிறேன்.

1. செய்யப்பெறும் சொல் தமிழ்ச்சொல்லாக இருக்கவேண்டும்.

2. அச்சொல், பிறமொழிச் சொல்லுக்குப் பொருளில் பொருத்த மானதாக இருக்க வேண்டும்.

3. வடிவில் சிறியதாக இருக்க வேண்டும்.

4. ஓசை நயமுள்ளதாக விளங்க வேண்டும்.

5. தமிழ் மரபுக்கு ஒத்ததாக அமையவேண்டும்.

இனி, இவ்விதிகள் ஒவ்வொன்றையும் அடுத்த பகுதியில் நானே விளக்கப்புகுவேன்.

மூன்றும் நாள் விரிவுரை

3—4—1976

சொல் செய் நெறிமுறை

1. இயற்றமிழ்

தமிழில் ஆக்கப்பெறும் சொல் இயல்பான தமிழ்ச் சொல்லாக இருக்க வேண்டும். இந்தக் கருத்தையே உள்ளத்தில், கொண்டு இங்கு 'இயற்றமிழ்' எனலானேன். 'இசைத்தமிழ்,' 'நாடகத்தமிழ்' இவற்றின் வேருன 'இயற்றமிழ்,' என்று, அன்று.

ஓர் ஆங்கிலச் சொல்லைத் தமிழாக்குவதென்ருல், அதன் ஓசையை அப்படியே தமிழ் எழுத்தில் எழுதிக்கொள்வது அன்று. 'Magistrate' என்னும் சொல்லுக்குத், தமிழில் 'மாஜிஸ்ட்ரேட்' என்று எழுதினுல் போதும் என்று, இன்றும், சில தமிழர்கள் கருதுகின்றனர். இன்னும், சிறிது தமிழ்ச்சாயலை அச்சொல்லுக்குக் கொடுத்து விட்டால் சாலும், என்று கூறி, 'மாஜிஸ்திரேட்டு' என்று சிலர் எழுதி, நன்ருகத்தமிழ்ப்படுத்திவிட்டதாக மகிழ்வர். ஒரு சிற்றூரில் தெருவில் போகும் ஒருவருங்கூட,–ஆங்கிலமே படிக்காதவர்கூட– 'மாஜிஸ்ட்ரேட்' என்ருல், அவர் யார் என்று இன்று தெரிந்துகொள் வாரே? அப்படியிருக்க, இனி அதற்குப் புதிதாக ஒரு தமிழ்ச்சொல்லை உண்டாக்கி ஏன் தொல்லைப்படுத்த வேண்டும்? 'மாஜிஸ்ட்ரேட்' என்றே தமிழில் எழுதிக்கொள்வோமே என்று சொல்வதிலேயும் உண்மை இல்லாமல் இல்லை.

முதலில், 'மாஜிஸ்ட்ரேட' என்று, ஆங்கிலம் படித்த தமிழர் ஒருவர் சொன்னுர். அவரைப்போன்ற வேறு சிலரும், நாட்டில் ஆங்காங்கே இருந்தவர்கள், சொன்னுர்கள். 'மாஜிஸ்ட்ரேட்,' 'மாஜிஸ்ட்ரேட்' என்று, ஆங்கிலம் தெரியாதவர்கள் காதிலேயும், இச்சொல் விழுந்துகொண்டே, வந்தது. முதல்முறை கேட்டபோது, அடியோடுபுரியாது இருந்த இச்சொல்லை, அடுத்துஅடுத்துக் கேட்கக் கேட்க, சொல்லுகின்ற சூழலிலிருந்து, எவரையோ ஓர் அலுவலரைக் குறிக்க, இச்சொல்லைச் சொல்லுகிருர்கள், என்று, அறிந்திருப்பார். சிறிதுசிறிதாக, இச்சொல், ஆங்கிலமே அறியாத அவர்கள் மனத்தில் பதிந்திருக்கும். வாயிலும் ஒருவாறு உருவாகியுருக்கும். 'மாச்ரேட்'

'மாச்ரேட்' என்று சொல்ல முற்பட்டிருப்பர். இவ்வாறே, ஆங்கிலம் படிக்காத தமிழன் வாயில், சில ஆங்கிலச்சொற்கள் புகுந்துவிட்டன. எத்தனையோ ஆண்டுகள் பிடித்திருக்கும், இங்ஙனம், ஓர் ஆங்கிலச் சொல், ஒரு தமிழன் வாயில் இடம் பெறுவதற்கு.

'Magistrate' என்னும் சொல்லுக்கு, நேரான 'தண்டனையர், என்னும் தமிழ்ச்சொல்லை, ஆங்கிலந்தெரிந்த நாம் சொல்ல முற்பட்டு விட்டால், தமிழ்மட்டுமே தெரிந்த பலரும், இச்சொல்லை மிகவும் எளிதில் புரிந்துகொண்டு, திருத்தமான வடிவில், பயன்படுத்தத் தொடங்கிவிடுவர்: 'Magistrate, என்னும் சொல்லைப் புரிந்துகொண்டு, பயன்படுத்தத் தொடங்குவதற்குத், தேவையான அத்துணைக்காலம், ஆகாது, 'தண்டனையார்' என்னும் புது தமிழ்ச் சொல்லைச் புரிந்து, எடுத்தாள. முதன் முதலில் காதில் விழும்போது கூட 'Magistrate'-ஐப்போல், அவ்வளவு புரியாத புதிய சொல்லாகவும் இராது, 'தண்டனையர்' என்னும் சொல். 'தண்டனை' என்பது, முன்பே செவியில்பட்ட ஒரு சொல்லாகத் தானே இருக்கும்?

குற்றவழக்குகளைக் கேட்டாய்ந்து, தீர்ப்புக்கூறுகிற நடுவரே, 'Magistrate' ஆவர். இவ் ஆங்கிலச்சொல், இங்கிலாந்திலே, சிற்றூரி லுள்ள நாட்டாண்மைக்காரரைக் குறிக்கும், சொல்லாக இருந்தது. ஊரில் ஏற்படும் சச்சரவுகளைத் தீர்த்துவைப்பவரே அவர். நதும்' நாட்டிலும், ஊர்களில், அத்தகைய நாட்டாண்மைக்காரர்கள் உண்டே. நாளடவில், இது குற்றஞ்செய்தவர்களுக்குத் தண்டனை விதிக்கும் அலுவலரைக் குறிக்கும் சொல் ஆயிற்று. 'தண்டனை' விதிப்பவர் தண்டனையர். 'தண்டனை' என்னும் சொல் முன்பே விளக்கப்பெற்றது. தண்டுகொண்டு அடித்தலில் துவங்கி, வேறு பல ஒறுத்தல்கள் தருவதையும், அச்சொல் குறிப்பதாயிற்று, என்பதை. அங்கு அறிந்தோம்.

ஒரு 'தண்டனையர்' என்பவர், 'குற்றவாளி' என்று அவர்முன் கொண்டு செல்பவர்கள் ஒவ்வொருவரையும், தண்டித்தே ஆக வேண்டுமா, என்ன? தண்டிக்காமலும் விட்டுவிடலாமே. எனவே, அவரைத் 'தண்டனையர்' என்று எப்படிச் சொல்லலாம், என்ற வினு எழலாம். தண்டிக்கப்படுவதற்காகவே அவர்முன், அவர்கள் குற்றஞ் சாட்டப்படுகின்றனர். குற்றம் எண்பிக்கப்படவில்லையென்றல் மட்டுமே, 'தண்டனையர' அவர்களைத் தண்டிக்காமல் விட்டு விடுகிருர். அவ்வளவே, ஆனல் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்னும் கோரிக்கையுடன் தான், குற்றவழக்கு நடத்து பவர், 'தண்டனையர்' முன் ஒவ்வொரு ஆளையும் கொண்டு நிறுத்து கிருர். எனவே, 'Magistrate'-க்குத் 'தண்டனையர்' என்னும் சொல் பொருத்தமாக அமைவதையுணரலாம்.

எந்தப் பிறமொழிச் சொல்லாயினும், அதைத் தமிழில் வழங்கும் போது, அதற்கு ஆக்கப்பெறுஞ் சொல், தமிழ்ச்சொல்லாக இருக்க

வேண்டும் என்னும் கொள்கையை, பிறமொழியாளர் எவரும் ஒப்புக் கொள்கிருர். தமிழரில் சிலர், அதை ஏற்க மறுப்பது, பிறமொழியாளர் களுக்கும் வியப்பாக இருக்கிறது. எளிதில் ஒரு தமிழ்ச்சொல் கிடைக் காதபோது மட்டுமே, பிறமொழிச் சொல்லின் ஓசையைத் தமிழ் வடிவமாக்கிப், பயன்படுத்த எண்ணவேண்டும். இது விதி விலக்கே. நல்ல தமிழ்ச்சொல் உருவானதும், பிறமொழிச் சொல்லான 'மாஜிஸ்திரேட்டு' போன்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் எழுத்து வடிவத்தை விட்டு விட வேண்டும். இங்குப், பிறமொழிச் சொல்லின் தமிழ் எழுத்து வடிவம் என்பது, தமிழில் வேர் அமைக்க முடியாத தமிழ் வடிவத்தையே யாகும். தமிழில் வேர் அமைத்த பின்பு, அயல் சொல் கூடத், தமிழில் இயல்சொல் ஆகிவிடுமே.

மொழி என்பது, அம்மொழியாளர்கள் ஒருவருக்கொருவர், தம் கருத்துகளைப் பரிமாறிக்கொள்வதற்குத்தானே? ஒருவர் கருத்தை மற்றவருக்குத் தெரிவிப்பதற்குத், தமிழ்ச்சொல்லே தான் இருக்க வேண்டும், என்னும் கட்டுப்பாடு எதற்கு? பிறமொழிச் சொல்லை, அடுத்தவர் புரிந்து கொள்ளும்போது, அதையே, தமிழில் பேசும்போதும் எழுதும்போதும், பயன்படுத்திஞல், என்ன? என்று கேட்கலாம். மொழி சிதைந்துவிடும் என்று, அக்கேள்விக்கு, விடை சொல்வதுடன், இன்னெரு முக்கிய செய்தியையும் மறந்துவிடக் கூடாது. ஒருவரையொருவர் புரிந்துகொள்ளது என்பது, இன்று உள்ளவர்களை மட்டும் நினைவில் வைத்துக்கொண்டு சொல்லப் பெறுவதாக இருக்கக்கூடாது.

'Bus' என்னும் சொல் இன்று இருப்பவர்கள் அனைவருக்கும் தெரிந்த சொல்லாக இருக்கலாம். இனி பிறக்கப்போகும் குழந்தைக் குக் கூடவா, இச்சொல் தெரியும் என்ன? என்று இடைமறிக்கலாம். 'பேருந்து' என்னும் சொல்லும் அக்குழந்தைக்குப், புதுச்சொல்லே யாஞலும், புதிதாக ஒரு சொல்லை அறிந்து கொள்ள முற்படும்போது, அது தமிழ்ச்சொல்லைத்தான் தெரிந்து கொள்ளட்டுமே.

நாம், நம் காலம் உள்ள வரையில், 'Bus' என்றே சொல்லிக் கொண்டு இருந்து, மறைந்துவிடுவோம். நம்குழந்தைகளும் ஏன் அச் சொல்லையே கற்றுக்கொள்ள வேண்டும்? அன்று ஒரு நாள், என் நண்பர் திரு. திருமலை ஐயங்கார் சொன்ஞர்: "பேருந்து நிலையத்தில்" என்று தொடங்கி, என் பையன், என்னிடம் ஏதோ சொல்லவந்தான். எனக்குப் 'பேருந்துநிலையம்' என்பது, என்ன என்றே முதலில் புரிய வில்லை' என்ருர். அவருக்குத் தமிழ்ச் சொல் புரியாததால், அவர் மகனும், அவருக்குத் தெரிந்த 'Bus' என்னும் சொல்லையே கற்றுக் கொள்ள வேண்டும் என்று, சொல்வது பொருத்தமாகுமா?

ஒருவர் கருத்தை ஒருவர் புரிந்துகொள்வது என்பது, நமது காலத்தையும், நம் குழந்தைகள் காலத்தையும் மட்டுமே பொறுத்தது

ஆகாது. நமது காலத்தையும், இனி எத்தனையோ நூறு ஆண்டுகள், ஆயிரம் ஆண்டுகளுக்கு, அப்பாலுள்ள காலத்தையும் பொறுத்தது என்பதை, நாம் நினைவிற் கொள்ள வேண்டும். இன்று நாம் கொண்டுள்ள கருத்துகளை, எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு தோன்றப்போகும் நம் கால் வழியினரும், புரிந்துகொள்ளவேண்டு மானல், தமிழ் தமிழாகவே வளர வேண்டும்.

இன்று நாம் எழுதுவதைப் படித்து, அக்காலத்தவர்களும் அறிந்து பயன்படுத்திக்கொள்ளக்கூடிய நிலையில் மொழி சிதையாமல் இருக்கவேண்டும். எவ்வளவோ புதுச்சொற்கள் உண்டாக்கப் பெறலாம். எத்துணையோ வகையாக உரைநடையும், கவிகளும் மாறிமாறி, உயர்ந்து உயர்ந்து, உருவாகலாம். ஆனல், தமிழ், தமிழ்த் தன்மை மாருமல் இருந்துவரும் வகையில், இவையாவும் நிகழ வேண்டும். தமிழ் அன்னையைக் 'கன்னித்தன்மை மாருத சீர் இளமை யுடையவள்' என்று சொல்வதன் பொருள், இக்கருத்தை அடிப்படை யாகக் கொண்டதே.

தமிழில் செய்யும் சொல் இயல்பான தமிழ்ச் சொல்லாக இருக்க வேண்டும் என்னும் கொள்கைக்கு, இன்ஞெரு காரணமும் உண்டு. தமிழ் மொழியின் மாண்புமிக்க இயல்பினை அறிந்திராத அயல் மொழியார், பிறமொழிச் சொற்களின் ஓசைகளை, அப்படி அப்படியே தமிழ் எழுத்தில் நாம் எழுதிவைத்துக் கொள்வதைக் கண்டால், 'தமிழில் இவற்றிற்குத் தக்க சொல்லாக்கிக் கொள்ளும் திறன் அம் மொழிக்கு இல்லை போலும்' என்று அவர் எண்ணிக்கொள்ள இடம் ஏற்படுமே! தமிழின் ஆற்றலை, அவர், உள்ளது உள்ளபடி, அறிந்து கொள்ளும் வாய்ப்பினை, நாம் ஏன் அவருக்கு அளிக்க மறுத்துவிட வேண்டும். தவத்திரு கால்டுவெல், தவத்திரு போப், போன்றவர்கள், தாமாக முயன்று பயின்றதனுல், தமிழின் ஆற்றல் பெருமையை, அவர்கள் அறிய முடிந்தது. அப்படி, ஒவ்வொரு அயல்மொழி யினரும், தமிழை அவ்வளவு ஆழ்ந்து படிக்கும் ஊக்கத்தையும் உழைப்பையும் எங்ஙனம் மேற்கொள்வர்?

தமிழன், தன் சோம்பல் தன்மையாலும், சிறிது உன்னித்துப் பிற மொழிகளுக்கு ஏற்ற தமிழ்ச்சொல் காணும் ஆர்வமின்மையாலும், தமிழுக்கு இயல்பாக இருக்கும், மொழியாற்றலையும் தனித்தன்மையை யும், செம்மையையும், ஏன், தானே மறைத்துப், பிறமொழிச் சொற்களை அதில் கலந்து, குறைத்தும் கெடுத்தும் விடவேண்டும்? இதுவா, ஒரு நல்ல மகன் தன் அன்னைக்குக் காட்டும் நன்றி? தான் சில ஆண்டுகளாகக் கற்றுக்கொண்ட அயல்மொழிச் சொற்களை, எழுதும்போதும் பேசும்போதும், பயன்படுத்துவதே தனக்கு எளிதாக இருக்கின்றது, என்னும் ஒரே காரணத்தைக்கொண்டு, தமிழின் பரந்த ஆற்றலைப் புறக்கணித்து, அம்மொழியில் சொற்கள் ஆக்குவது கூடாது, என்று ஏதேதோ காரணம் காட்டி, ஏன் வாதாட வேண்டும்?

பிறமொழி பயின்றவர்களும், அயல்மொழிப்பற்றுடையவர் களும், எவ்வாறு கருதினாலும் அவர்கள் சிறுபான்மையோரே ஆவர். அவர்கள் நிற்க, நாட்டிலுள்ள பெரும்பாலான தமிழ் மக்கள், நல்ல தமிழ்ச்சொற்களையே வரவேற்கின்றனர் என்னும் உண்மையை நாம் மறந்துவிடக்கூடாது. 'பஞ்சாயத்து யூனியன்' என்றே, அந்நிறுவனங் களின் பெயர்ப்பலகைகளில் எழுத வேண்டும் என்று முன்பு ஒரு முறை அரசு ஆணையிட்டது. ஆனால், எத்தனையோ பெயர்ப்பலகை களை ஊர்ஊராகச் சென்றபோது நானே பார்த்தேன். 'ஊராட்சி ஒன்றிப்பு' என்று எழுதப்பெற்றிருந்ததை.

முதலில் 'union' என்னும் சொல்லுக்கு 'ஒன்றிப்பு' என்றே, நானும் தாள்களில் எழுதியும், கூட்டங்களில் பேசியும் வந்தேன். அச்சொல்லை எப்படியோ அறிந்து, அதனையே அப்பெயர்ப் பலகை களில் போட்டிருந்தனர். பிறகு 'ஒன்றியம்' என்னும் சொல் உருசியாவிலிருந்து ஓர் உருசியர் எழுதிய மடலிலிருந்து அறிந்த போதே, அச்சொல்லின் ஓசை இனிமையைக் கண்டு, அன்று தல ஆட்சித்துறைப் பொறுப்பை ஏற்றிருந்த அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொண்டேன், 'ஊராட்சி ஒன்றியம்' என்று அரசாணை பிறப்பிக்குமாறு. அங்ஙனமே ஆணை பிறந்தது.

'பஞ்சாயத்து போர்டு' என்று சட்டத்தில் இருந்தாலும், அரசினர் அதற்குரிய தமிழ் வடிவத்தை அந்நிறுவனங்களுக்கு அறிவிக்காதிருந்த அக்காலத்திலேயே, பெயர்ப் பலகைகள் 'ஊராட்சி மன்றம்' என்றே, மக்களால் எழுதப்பெற்று வந்ததைப் பலரும் கண்டிருக்கலாம். பிறமொழி 'மோகம்' சிலருக்கு இன்னமும் மாறாமல் இருந்து வந்தாலும், நாட்டில் பெரும்பாலாரான மக்கள், நல்ல தமிழ்ச் சொற்களை வரவேற்கின்றனர் என்பதை, நாம் கவனத் தில் வைத்துக்கொண்டு, அதற்கு ஏற்ற வண்ணம், அயற்சொற் களுக்கு, நல்ல தமிழ்ச் சொல் அமைக்கும் மனமுடையவர்கள் ஆக வேண்டும்.

ஆட்சி மொழிக் குழுவின் முதல் தலைவராக விளங்கிய திரு. எஸ். வேங்கடேசுவரன், ஐ.சி.எஸ். அவர்கள், துவக்கத்தில் அவர்களுக்கு இது பற்றி, இருந்த கருத்தை, மேற்குறித்த உண்மையை உணர்த் ததும், விரைவில் மாற்றிக்கொண்ட சிறப்பினை நான், உடனிருந்து கண்டு மகிழ்ந்தேன். 'union'க்கு 'ஒன்றியம்' என்னும் சொல், அரசின் ஆட்சிமொழி யகராதியில், அவர் இசைவு பெற்றுத்தான் சேர்க்கப்பெற்றது. 'ஆங்கிலம் பழகிவிட்ட சிலருக்காக மட்டும் அன்று, நாம் தமிழில் ஆட்சிச் சொற்கள் அமைப்பது; நாட்டில் நல்ல தமிழை விரும்பி வரவேற்கும், பலரையும் மனத்தில் கொண்டுதான் ஆட்சிச் சொல் அமைக்க வேண்டும், என்னும் அடிப்படை உண் மையை, அவர்கள் உணர்ந்துகொண்டார்கள்.

ஓர் அரசியல் கட்சியினரின் கொள்கை, இன்னோர் அரசியல் கட்சியைச் சேர்ந்தவருக்குப் பிடிக்காவிட்டாலும், அயல் கட்சியினர் மேடையில் பேசும் நல்ல தமிழுக்காகவே, ஒரு கட்சியினர் பேசுவதை மாற்றுக் கட்சியினர் விரும்பிக் கேட்கின்றனர் என்னும் உண்மையையும், திரு. எஸ். வேங்கடேசுவரன் அவர்கள் உணர்ந்திருந்தார்கள் என்பதை, அவர்களுடன் உரையாடும்போது நான் தெரிந்து கொண்டேன். துவக்க நிலையில் பழக்கமான பிறமொழிச் சொற்களையும் தமிழ் ஆட்சிச் சொல் அகராதியில் சேர்ப்பது தேவை என்பது அவர்கள் கருத்தாயினும், அக்கருத்து முதலில் வரவேற்கத் தக்கதேயாயினும், பத்தமடையில் தாம்பிரபரணித் தண்ணீரைப் பருகிய தென்பாண்டி நாட்டுத் தமிழராகிய அவர்கள் கொண்டிருந்த நல்ல தமிழ்ப் பற்றினை அருகிருந்து, அன்றுடங் கண்டு, உவக்கும் வாய்ப்பு, எனக்கு ஆறாண்டுகள் கிட்டியிருந்தன.

அறிவியல் துறையில் பாடநூற்கள் அமைக்க, இன்று வழங்கும் உலக அறிவியற் சொற்களை, அவற்றிற்கு ஈடான தமிழ்ச் சொற்களை அமைக்கும் காலம் வரையும், அப்படி அப்படியே யேற்றுக்கொண்டு, அறிவியற் படிப்பை உடனடியாக வளர்க்க வேண்டிய தேவையிருப்பதைச் சுட்டிக்காட்டி, ஆட்சித் துறையிலும் அவ்வாறே செய்ய வேண்டும் என்று கூறுவார் கூற்று, ஆட்சித் தமிழுக்கு கூற்றாகி விடுமாறு விட்டுவிடக்கூடாது. அயல்மொழிச் சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்கள் காணமுடியாவிட்டாலும், தமிழ் வேர்களைக் கொண்டு, பொருத்தமான புதுத் தமிழ்ச் சொற்களை ஆக்கிக்கொள்வது அரிதாகாது. தமிழ்மொழி அத்துணை வளமுடையது. நமது ஆற்றல் குறைவினைத் தமிழ்மொழியின் திறக்குறைவாகப் பிறர் எண்ணும்படி செய்ய விடலாகாது.

ஒரு வணிகத்தைத் துவங்குகையில், பொருளில்லாதவன், கடன் வாங்குவான், இரவல் பெறுவான், நன்கொடை கேட்பான், இரக்கவும் செய்வான். சில மொழிகள் அவ்வறியவன் நிலையில் உள்ளன. அவற்றை எடுத்துக்காட்டி, நாமும் அங்ஙனமெல்லாம் செய்து, மொழியை வளப்படுத்தலாம் என்று, ஒரு தவறான செய்தியை உண்மையென்று எடுத்துரைத்துப், பிறரை ஏமாற்றவோ, நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளவோ கூடாது.

இனி, அடுத்த தலைப்பான 'பொருத்தமான சொல்' என்னும் தலைப்பின் சிந்தனைக்குச் செல்லலாம்.

2. பொருள் பொருத்தம்

ஆக்கும் தமிழ்ச் சொல் பிறமொழியின் கருத்துக்குப் பொருத்தமானதாக அமைய வேண்டும். ஒரே கருத்தைப், பல கோணங்களில் நோக்கிப், பிற மொழிகளில் பல சொற்கள் அமைத்திருப்பர். தமிழிலும் அவ்வாறே பல சொற்கள் அமைப்பதே பொருத்தமாகும்.

காட்டாக, 'Programme', 'Agenda' என்று வழங்கும் இரு சொற்களுக்கும், 'நிகழ்ச்சி நிரல்' என்ற ஒரே தமிழ்ச் சொல் பொருந்தாது. முன்னது 'நிகழ்நிரல்', பின்னது 'பொருள்நிரல்'. ஒரு கூட்டத்தில் நிகழ வேண்டிய செய்திகளை வரிசைப்படுத்தி எழுதுவதே 'நிகழ்நிரல்'. ஒரு கூட்டத்தில் ஆராய்ந்து முடிவு செய்யவேண்டிய பொருள்களை வரிசையாகக் குறிப்பதே 'பொருள்நிரல்'.

'Fancy,' 'Fashion,' 'Luxury' என்னும் சொற்கள் பொதுவாக ஒரே கருத்துடையன போன்று தோன்றலாம். ஆனால், ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான தமிழ்ச் சொல் வேறு வேறு ஆகும்.

Article	—	கவர்ச்சிப் பொருள், கவர்பொருள்
Fashionable Article	—	புதுவகைப் பொருள்
Luxury Article	—	மிகை வசதிப் பொருள்

இவ்வாறே, 'Invention'க்கும், 'Discovery'க்கும் வேறுபாடு உண்டு, இரண்டும், இன்று 'கண்டுபிடிப்பு' என்னும் சொல்லால் குறிக்கப் பெறுகின்றன. 'Invention' - புதுப்புனைவு; ,Discovery' - - புதுக்காண்பு.

'Licence'
'Certificate'
'Diploma'
'Title'
'Degree'

என்னும் இச்சொற்களின் வேறுபாடு தோன்ற, ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான தமிழ்ச் சொல்லை அமைக்க வேண்டும்.

Licence	—	உரிமம்
Licence Holder	—	உரிமத்தர்; உரிமர்
Certificate	—	சான்றேடு
Certificate Holder	—	சான்றேட்டர்
Diploma	—	பட்டிகை
Diploma Holder	—	பட்டிகையர்
Title	—	பட்டயம்
Title Holder	—	பட்டயர்
Degree	—	பட்டம்
Degree Holder	—	பட்டத்தர்

கோவில்களில் பூசை செய்யப் பட்டயம் பெற்றவர், 'பட்டர்' என்று அழைக்கப்பெறுவதை அறிவோம். 'பட்டயர்' என்னும் சொல்லே, 'பட்டர்' என்று மருவியிருக்க வேண்டும்.

'Proof' என்னும் சொல்லுக்கு 'எண்பிப்பு' என்று ஒரு சொல்லையும் 'ஒப்பச்சு' என்று இன்னொரு சொல்லையும், இடத்துக்கு ஏற்ற

படி பயன்படுத்துவது பொருத்தமாகும். எண்பிப்பைப் பற்றி விளக்கம் தேவையில்லை,

அச்சுக் கோத்து, மூல ஏட்டுடன் ஒப்புநோக்குதற்கு வருவதைப் 'Proof' என்று சொல்லுகிறோம். அந்தப் பொருளைத் தரும் பொருத்தமான சொல்லே 'ஒப்பச்சு' என்பது; ஒப்புநோக்குவதற்கு உரிய அச்சு என்று பொருள். 'ஒப்பச்சு' என்று சொல்வதில் இன்னொரு பொருளும் தொனிப்பதை உணரலாம். உண்மையாக இல்லாமல், ஒப்புக்குச் செய்த வேலை என்று சொல்வதைப் போல், இது ஒப்புக்குச் செய்த அச்சுதானே? திருத்தமாக, முடிவில் செய்யப்படுவதே உண்மையான அச்சு ஆகும்.

பொருத்தமானவையென்று நான் கருதும், மேலும் சில தமிழ் ஆக்கங்களை இங்கே தருகிறேன்.

Exchange		
Employment Exchange	—	வேலை வாய்ப்பகம்
Telephone Exchange	—	தொலைபேசித் தொடர்பகம்
Foreign Exchange	—	அயல் பணமாற்று
Stock Exchange	—	பங்கு மாற்றகம்
Mutual Exchange	—	எதிரெதிர் மாற்றம்
Hot Exchanges in Parliament	—	பாராளுமன்றத்தில் வெஞ்சொல் வீச்சு
Exchange Document	—	பரிமாற்று ஆவணம்
Individuality	—	தன்னியல்
Personality	—	ஆளியல்
Management	—	ஆளுமை
Managing Director	—	மேலாளும் இயக்குநர்
Personal	—	நேர்முக
Personnel	—	பணியினர், பணியர்
Personnel Officer	—	பணியர் அலுவலர்
Principle	—	கொள்கை
Policy	—	கோட்பாடு

கொள்கை அடிக்கடி மாறாது, கோட்பாடு மாறலாம். கொள்கையில் படுவதே கோட்பாடு. அரசின் கொள்கை ஒன்றாயினும், அமைச்சுக்கு ஏற்றபடி, கோட்பாடு மாறக்கூடும்.

Director	—	இயக்குநர்
Operator	—	இயக்கி
Whip	—	இயக்கர்
Party Whip	—	கட்சி இயக்கர்

இம்மூன்றுக்குமே, 'இயக்குநர்' என்னும் சொல்லைப் பயன்படுத்துவது பொருந்தாது. 'Whip'-க்கு 'கொறடா' என்னும் சொல் தக

வுடையதாக இல்லை என்று அரசியல் தலைவர் ஒருவர் கூறினர். அவர் ஒரு தமிழ்ப் பேரறிஞருங்கூட. 'இயக்கர்' என்ற சொல்லை நான் சொன்னேன். நன்று என்று ஏற்றுக்கொண்டார்.

Expert	—	வல்லுநர்
Specialist	—	தனித்திறலர்
Seminar	—	ஆய்வரங்கு, பயிலரங்கு
Symposium	—	கருத்தரங்கு
Prohibited place	—	தடுப்பிடம்
Protected place	—	காப்பிடம்
Revenue	—	வருவாய் (பல வாயில்களில் வருவது. அவ் வாயில்களுக்கே செலவு செய்தற்குரியது)
Income	—	வருமானம் (வந்து மன்னுவது, மன்னுவது - தங்குவது) வருமானம் பெறுகிறவர் தம் விருப்பப்படி செலவு செய்யலாம்
Committee	—	குழு
Commissson	—	ஆணைக்குழு, ஆயம்

செயலாக்கும் உரிமை தரப்பெற்றது, ஆணைக்குழு; 'Pay Committee' ஊதியத்தைப் பற்றி ஆய்ந்து தம் கருத்தைத் தெரிவிக்க அமர்த்தப் பெறும் குழு. அதன் முடிபுகளை அரசு செயலாக்க வேண்டும் எனக் கட்டாயம் இல்லை. அதனை அரசு செயற்படுத்தலாம், படுத்தாமலும் விடலாம். ஆனல், 'Pay Commission' ஊதியத்தைப்பற்றி ஆய்ந்து, செய்ய வேண்டியவற்றை எடுத்துரைப்பது இது. அரசு, தானே ஆய்ந்து எடுத்த முடிவுகள் போல, இவ் ஆணைக்குழுவின் முடிவு களைச் செயற்படுத்தும் கடமையுடையது.

'Court's Commission'-ம் அப்படியே. அறமன்ற நடுவர் ஒருவர், தாமே, வழக்கில் தொடர்புடைய ஒருவரின் இருப்பிடத்திற்குச் சென்று, கேட்டாய்வு செய்யாமல், தமக்காக ஒருவரை 'அறமன்ற ஆணையர்' 'Court's Commissioner' என்று அமர்த்தலாம். அவ ருக்குத் தம் அதிகாரங்களைத் தந்து, குறித்தவரின் இருப்பிடத்திற்குச் சென்று கேட்டாய்ந்து, அறிக்கை அனுப்பச் சொல்லலாம். அவ் வறிக்கையைத் தமது அறிக்கையாகவே ஏற்றுக்கொள்வார் அற மன்ற நடுவர். அந்த அறிக்கையையும், தாம் வரைந்த பிறவற்றுடன் சேர்த்து ஆராய்ந்தே, தம் தீர்ப்பைக் கூறுவார்.

'Commission' ஆயம் என்பது ஆய்ந்து முடிவெடுத்துச் செயற் படுத்தும் ஆணைக் குழுவே. 'Public Service Commission' அரசுப் பணி ஆயம். அரசுப் பணி பற்றிய எல்லாச் செய்திகளையும் ஆய்ந்து முடிவெடுக்கும். பணியாளரைத் தெரிந்தெடுப்பது மட்டுமே, அதன்

9

செயல் அன்று. 'ஆயம்' என்பது தானே முடிவெடுக்கும் ஓர் உயர் நிலைக்குழு. 'எண்பேராயம்' என்னும் சங்க காலத் தொடரை நினைவுகூரலாம்.

Council	—	மன்றம்
Board	—	மன்றம்; வாரியம்; 'ஆயம்'
Panchayat Board	—	ஊராட்சி மன்றம்
Licensing Board	—	உரிம வாரியம்
Electricity Board	—	மின் ஆயம்
Revenue Board	—	வருவாய் ஆயம்
Kadhi Board	—	கதர் ஆயம்

'Panchayat Council' என்பதுதான் 'Panchayat Board' எனப் பெறுகிறது. நகர் மன்றம் (Municipal Council) போன்றது அது.

'வாரியம்' என்னும் சொல் பழங்காலத்தில் 'கிராமசபை' அல்லது 'ஊர் அவை'யின் ஓர் உட்குழுவுக்கு வழங்கிய சொல். 'தோட்ட வாரியம்,' 'ஏரி வாரியம்' என்று வரும்.

'Electricity Board' ஓர் உட்குழு அன்று. தானே முடிவெடுத்துச் செயற்படுத்தும் ஓர் உயர்நிலை நிறுவனம். எனவே, அதனை 'மின் ஆயம்' என்று சொல்வதே பொருந்தும். 'வாரியம்' ஒரு சிறு நிறுவனம்தான்.

'Kadhi Board' என்பது, 'கதர் ஆயம்' என்றே முதலில் தமிழாக்கம் செய்யப்பெற்றது. அத்துறைக்குரிய அமைச்சர் அவர்களும் அச்சொல்லுக்கு ஏற்பளித்து, அப்படியே பெயர்ப்பலகைகளும் போடப்பெற்றன. இன்னும் அவற்றை ஆங்காங்கே காணலாம். 'Revenue Board' என்பதை 'வருவாய் ஆயம்' என்றே 'District Office Manual'ன் தம் தமிழாக்கத்தில், உயர்நீதிமன்றத் தலைமை மாநடுவர் திரு. அனந்த நாராயணன், ஐ. சி. எஸ். அவர்கள் மொழிபெயர்த்துள்ளார். அம் மொழிபெயர்ப்பான 'மாவட்ட அலுவலக நடைமுறை நூல்' ஓர் அரிய படைப்பு. அப்போது அவர் 'ஆட்சிமொழிக்குழு' உறுப்பினராக இருந்தார்.

இதுவரையில் தமிழ் ஆட்சிச் சொற்களைப் பொருத்தமானவையாக அமைப்பதில் நம் கருத்தைச் செலுத்தினோம்.

இனி, ஆட்சிச் சொற்கள் சிறுவடிவமுடையனவாக இருக்க வேண்டும் என்பது ஏன், என்பதைக் கவனிப்போம்.

3. உருச்சுருக்கம்

சுருங்கச் சொல்வதில் பெருமைபடைத்ததே, தமிழ்மொழி. ஆட்சிச் சொற்களை எவ்வளவு சுருங்கிய வடிவிலே அமைக்க

முடியுமோ அவ்வளவு சுருங்கிய வடிவிலே அமைத்துத் தமிழின் பெருமைக்கு மாசு ஏற்படாமல் செய்வது நம் கடமை.

தமிழில் எழுதினுல் நீண்டுவிடும் என்னும் குறை, பலரால் கூறப் படுகிறது. ஓர் ஆங்கில நூலை ஒருவர் கையில் வைத்துக்கொண்டிருந் தார். 'இதைத் தமிழில் பெயர்க்கலாம் என்று விரும்புகின்றேன். இரண்டத்தனையாகி விடுமே என்று அஞ்சுகிறேன்' என்ருர் அவர். 'ஆடமாட்டாதவர், கூடம் பற்ருது' என்று சொன்ன கதைதான் அது.

ஆட்சிமொழிக்குழுவின் அலுவலகத்திலிருந்து முதலில் ஆங்கிலச் சுற்றறிக்கைகள் சென்று கொண்டிருந்தன. அவற்றைத் தமிழிலும் அனுப்பவேண்டும் என்று ஆட்சிமொழிக்குழுத் தலைவர் திரு. எஸ். வேங்கடேசுவரன், ஐ. சி. எஸ். அவர்கள் விரும்புவார். தமிழாக்கம் செய்து அவர் ஏற்புக்கு அனுப்புவேன். ஆங்கில வரை வைக்காட்டிலும், தமிழ்வரைவு முக்கால் அளவே இருக்கும். ஆங்கிலம் 2 பக்கம் ஆனுல், தமிழ் 1-½ பக்கமாக அமையும். ஒவ்வொரு வரைவும் இப்படியே. தலைவர் அவர்கள் தமிழின் சுருங்கக் கூறும் சிறப்பினைப் பெரிதும் வியந்து சொல்வார். பிறமொழிச் சொற்கள் சில, தமிழாக்கும்போது நீண்டு விட்டாலும், மொத்தத்தில் பார்க்கும்போது தமிழ் ஆக்கம் சுருக்கமாகவே அமைந்திருக்கும்.

ஒரு தமிழ்ச் சொல் ஆங்கிலச் சொல்லுக்கு எழுத்துக்கு எழுத்துச் சுருக்கமாக இருப்பதுடன், தட்டச்சில் தட்டும்போது, தட்டுக்குத் தட்டுக் குறைவாகவும் இருக்க வேண்டும். தமிழ்த்தட்டச்சு நம் நாட்டுமொழிகளின் பிற தட்டச்சு எந்திரங்களைக் காட்டிலும் திறல் மிக்கதாக அமையப்பெற்றிருந்தாலும், ஆங்கிலத்தில் ஓர் எழுத்துக்கு ஒரு தட்டு என்பது போல, தமிழில், சில எழுத்துகளுக்கு ஓர் எழுத்துக்கு ஒரு தட்டுப்போதுமானதாக இல்லை.

'தமிழ்' என்னும் சொல்லில், 'த' வுக்கு ஒருதட்டு, சாலும். ஆனுல் 'மி'க்கு இரண்டு முறை தட்ட வேண்டும். 'ம' எழுத்துள்ள ஒரு விசைக் காம்பினை அழுத்தினுல் 'ம' எழுத்து விழும். பின்பு பின்னுக்குத்தள்ளும் விசைக் காம்பினை யழுத்தி, 'ம'வுக்கு மேலுள்ள வளைவுக்குரிய காம்பினை அழுத்த வேண்டும். அப்போது தான் 'மி' விழும். பிறகு 'ழ்' என்னும் எழுத்துவிழ, 'ழ' வுக்கு ஒரு தட்டும், அதன் மேலுள்ள '.' க்கு ஒரு தட்டும் தேவை. ஆக மூன்று எழுத்துக்குத், தட்டச்சு எந்திரத்தில் ஐந்து தட்டுகள் தேவைப் படுகின்றன. இதற்கு நேரான 'Tamil' என்னும் சொல்லுக்கும், எழுத்துக்கு ஒரு தட்டாக, ஐந்து தட்டுகள் தேவைப்படுகின்றன.

பின்வரும் சொற்களில், ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ள எழுத்துகளையும் தட்டுகளையும் ஒப்பிட்டு நோக்குவோம்.

	ஆங்கிலம்	எழுத்துகளும் தட்டுகளும் ஒன்றே	தமிழ்	எழுத்துகள்	தட்டுகள்
(1)	Officer	7	i அலுவலாளர்	6	8
			ii அலுவலர்	5	6
(2)	Government	10	i அரசாங்கம்	6	9
			ii அரசு	3	4
			iii அரசினர்	5	7
(3)	Secretary	9	i செயலாளர்	5	8
			ii செயலர்	4	6
(4)	Additional	10	i கூடுதல்	4	6
			ii இணை	2	3
(5)	Joint	5	i கூட்டு	3	5
			ii பிணை	2	4
(6)	Assistant	9	i உதவியாளர்	6	9
			ii உதவியர்	5	7
(7)	Administration	14	i நிர்வாகம்	5	9
			ii ஆட்சி	3	5
(8)	Commissioner	12	i ஆணையாளர்	5	8
			ii ஆணையர்	4	6
(9)	Paper	5	i காகிதம்	4	7
			ii தாள்	2	4
(10)	Order	5	i உத்தரவு	5	7
			ii ஆணை	2	4
(11)	Private Secretary	16	i அந்தரங்கக் காரியதரிசி	13	20
			ii உள்முகச் செயலர்	9	13
(12)	District Collector	17	i மாவட்ட ஆட்சித் தலைவர்	12	19
	(District Administrator)	21	ii மாவட்ட ஆட்சியாளர்	10	16
			iii மாவட்ட ஆட்சியர்	9	14

ஆங்கிலம்		எழுத்துகளும் தட்டுகளும் ஒன்றே	தமிழ்	எழுத்துகள்	தட்டுகள்
(13)	Director	8	i நெறியாளர்	5	9
			ii இயக்குநர்	6	8
(14)	Engineer	8	i பொறியாளர்	8	10
			ii பொறிஞர்	4	8
(15)	Executive	9	i நிர்வாக	4	7
			ii செயல்	3	5
(16)	Superintending	14	i கண்காணிக்கும்	7	12
			ii கண்காண்	4	7
(17)	Municipality	12	i நகராண்மைக் கழகம்	15	15
			ii நகராட்சி	5	8
(18)	Electricity Board	16	i மின்சாரவாரியம்	8	14
			ii மின் ஆயம்	5	8
(19)	Aeroplane	9	i ஆகாயவிமானம்	7	11
			ii வானூர்தி	4	8
(20)	Department	10	i இலாகா	3	5
			ii துறை	2	3

ஒவ்வோர் ஆங்கிலச் சொல்லுக்கும் நேரான தமிழாக்கங்கள் இரண்டு, அல்லது மூன்றாக உள்ள, இருபது ஆங்கிலச் சொற்களையும், அத்தமிழாக்கங்களையும் மேலே காட்டியிருக்கின்றேன். இரண்டு தமிழாக்கங்களுமே, ஆங்கிலச்சொற்களுக்கு, எழுத்துக்கு எழுத்து சிறியனவாக இருப்பதையும், முதல் தமிழாக்கத்தைக் காட்டிலும், இரண்டாவது தமிழாக்கம், தட்டுக்குத்தட்டும் சிறியதாக இருப்பதையும் காணலாம். இதனால் நாம் அறியற்பாலது, ஆங்கிலத்திற்குத் தமிழ்ச்சொல் அமைக்கும்போது, தமிழில் இரண்டு அல்லது மூன்று சொற்கள் பொருத்தமானவையாக காணப்பட்டாலும், அவற்றில் எழுத்துக்கு எழுத்து மட்டுமல்லாமல், தட்டச்சு எந்திரத்தில் தட்டுக்குத் தட்டும் சிறியதாக இருக்கும் சொல்லையே தேர்ந்து ஆள்வது, ஆட்சி தவக்கமில்லாமல் நடப்பதற்குப் பெருந்துணையாகும் என்பதேயாகும்.

சொற்கள் சிறியவையாக இருப்பதுமட்டும் போதாது. எழுதுகிற முறையில், தெரிவிக்க வேண்டிய கருத்தை, சில சொற்களால்,

சுருக்கமாகவும், அதே நேரத்தில், தெளிவாகப் புரியும்படியும், எழுத வேண்டும். பொருத்தமாகக் கிடைக்கும் சொற்களில் சிறிய சொற்களாகப் பார்த்து நாம் தேர்ந்து கொள்வது அவ்வளவு கடினமான செயலாகாது. ஆனால், வரைவு குறிப்புகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது என்பது, பழக்கத்தினால் வரக் கூடியது. துவக்கத்தில் நம்மால் முடிந்தவரையில், சுருக்கமாக, அதேநேரத்தில் விளக்கமாக, எழுத முயற்சி செய்யவேண்டும்.

(1) I am to invite reference to the communication cited— என்பதற்கு,

(i) 'மேலே குறிக்கப்பட்டுள்ள கடிதத்தைப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்' என்றோ,

(ii) 'செப்பிய மடலைக்காண்க' என்றோ எழுதலாம்.

இவற்றில் (ii)-ஆம் வரைவு சுருக்கமாக இருப்பதைக் காண்க. இது போலவே பின்வருபவனவற்றையும் நோக்குக :

(2) Consequent on return to duty from leave by Selvi Muzhu Nila, Selvi Vin Meen is reverted as Assistant.

(i) செல்வி: முழுநிலா என்பவர் விடுப்பிலிருந்து பணிக்குத் திரும்பி விட்டதன் விளைவாகச், செல்வி விண்மீன் என்பவர் உதவியாளர் பணிக்குக் கீழ் இறக்கப்படுகிறார்.

(ii) செல்வி: முழுநிலா விடுப்பிலிருந்து பணிக்குத் திரும்புவதால், செல்வி விண்மீன் உதவியராக இடப்பெறுகிறார்.

(3) On complaints received and after preliminary enquiries made

(i) கிடைத்துள்ள குறை கூறல்களைக்கொண்டும், மற்றும் முதற்படியாகச் செய்ய வேண்டிய கேட்டாய்வுகளைச் செய்தும்

(ii) வந்த குறை கூறல்களை, முதற்படியாக ஆராய்ந்ததில்

(4) Then Mosadi, office Assistant, accepted a bribe of Rs. 100/- from Thiru Asadar of Iruttoor for recommending an assignment of land.

(1) அலுவலக உதவியாளராக இருக்கும் திரு. மோசடி என்பவர் இருட்டூரிலுள்ள திரு. அசடர் என்பவரிடமிருந்து, ஒரு நிலத்தை அவருக்கு உரிமை செய்வதற்காகச் சிபார்சு செய்வதற்குக் கையூட்டுத் தொகையாக ரூ. 100/- வாங்கிக் கொண்டார்.

(2) அலுவலக உதவியர் திரு. மோசடி, இருட்டூர் திரு. அசடருக்கு ஒரு நிலம் உரிமை செய்யப் பரிந்துரைக்க ரூ. 100/- கையூட்டுப் பெற்றார்.

மேலே காட்டாகக் குறித்துள்ளவற்றைக் காட்டிலும், மேலும் தெளிவாகவும், சுருக்கமாகவும் எழுதவல்லவரும் உண்டு. அவரவர் வரைவு ஆற்றலைப் பொறுத்துத், 'தமிழ்' வரைவுகள், இன்னும் விளங்கும் வடிவிலும், மேலும் சுருங்கிய உருவிலும், அமையக் கூடும்.

ஆங்கிலத்திலிருந்து ஆட்சியைத் தமிழுக்கு மாற்றியதால், நம் மொழியில் எழுதுவதற்கு நேரம் கூடுதலாகி விடுகிறது. தட்டச்சு எந்திரத்தில் தட்டுவதற்கும் காலம் மிகுதியாகத் தேவைப்படுகிறது. இவற்ருல், தவக்கம் மேலிட்டுவிடுகிறது, என்னும் குறைகளுக்கு இடந்தராதிருக்க வேண்டும் என்பதே நமது குறிக்கோளாக இருக்க வேண்டும். நமது ஊக்கமின்மையால், நீண்ட சொற்களைப் பெய்து, நீளமான வரைவுகளை எழுதிவிட்டுக் 'காலமும்' நீள்கிறது. 'கையும்' சோர்கிறது. 'தவக்கமும்' புகுந்து தொல்லை தருகிறது. என்று நாமே வருந்தவும், 'தமிழில் எழுதினுல் இப்படித்தான் ஆகும்' என்று பிறர் நகைபடக் கூறவும் நேரிடும்படி விட்டுவிடலாகாது.

இனி, 'சொல்செய்நெறிமுறை'யில் அடுத்த தலைப்பான 'ஓசை நயம்' என்பதைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

4. ஓசை நயம்

அயல் சொல்லுக்கு நேரான ஒரு தமிழ்ச்சொல்லை அமைக்கும் போது, அது ஓசை நயமுடைய சொல்லாகவும் இருக்க வேண்டும் என்னும் கவனம் தேவை. ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் பொருத்த மானவையாகத் தோன்றினுலும், அவற்றில், காதுக்குப் பெரிதளவு இனிமையானதாக இருக்கும் சொல்லையே பெருமளவு ஆட்சியில் பயன்படுத்துவது, நலந்தருவதாகும். 'இனிமை' யென்றே பொருள் பூண்ட 'தமிழ்' என்னும் சொல்லைத் தனக்கே உரிமையாக — பெய ராகக் கொண்ட மொழியாதலின், ஓசைநயங்குன்றிய சொற்களை, முடிந்த வரையில், தவிர்த்து, அரசினர் எழுதும் அலுவலக மடல்கள் படிப்பவர் உள்ளங்களில், ஈர்ப்பினை விளைவித்து, அம்மடல்களால் கோரும் செயல்களை, அன்புடன் ஆற்ற, ஊக்கமும், ஆர்வமும் ஊட்டுவனவாக அமையவேண்டும்.

'union' என்பதற்கு 'ஒன்றிப்பு' என்னும் ஒரு சொல்லை ஆக்கி, அதனை, மதுரையிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த, 'தமிழ்நாடு' என்னும் நாள் இதழிலும் பிற இடங்களிலும் எழுதியும், 'Labour union' என்னும் தொடருக்குத் 'தொழிலாளர் ஒன்றிப்பு' என்று பயன்படுத்தியும் வந்தேன். சமயநல்லூர் ஆலைத் தொழிலாளர் ஒன்றிப்பு', 'சிலைமான் ஆலை தொழிலாளர் ஒன்றிப்பு,' கப்பலூர் ஆலை தொழிலாளர் ஒன்றிப்பு,' என்று, அவ்வூர்களில் நிலவும், மதுரை மீனுட்சி ஆலையைச் சார்ந்த மூன்று நூற்பு ஆலைகளில் அவ் வொன்றிப்புகளை நானே முன்நின்று, நிறுவுவதற்கு ஆவன செய்து,

அங்ஙனமே அவைகளுக்குப் பெயரிட்டு வழங்கினேன். அப்போது, நான், மீனாட்சி ஆலைக்குத் தொழிலாளர் நல அலுவலராக இருந் தேன். ஒன்றிப்பு என்னும் இச்சொல் பிறராலும் ஆளப்பெறலாயிற்று. 'ஊராட்சி ஒன்றிப்புப் பள்ளி' என்னும் பெயர்ப் பலகைகளைச் சில பள்ளிக்கூடங்களுக்குப் போட்டிருந்ததை, வேறு மாவட்டங்களிலும் நானே கண்டேன்.

பின்பு, என்னை ஆட்சிமொழித்தனி அலுவலனாக அரசு அமர்த்திய சில காலத்துக்கெல்லாம், 'ஊறுதியன் செம்பியன்' என்று தம்பெயரைத் தமிழ் வடிவமாக்கிக் கெயொப்பமிட்டு 'ரூதிய செம் பியர்' என்னும் இயற்பெயர் பூண்ட உருசிய நாட்டுத் தமிழறிஞர் ஒருவர், தவத்திரு தனிநாயக அடிகளார் அவர்களுக்கு இனிய தமிழில் எழுதிய மடல் ஒன்றின் தலைப்பில், 'சோவியத் ஒன்றியம்' என்று குறித்திருந்ததைக் கண்டபோது துளும்பினேன். நானே ஆக்கிய 'ஒன்றிப்பு' என்னும் சொல், 'ஒன்றியம்' என்னும் ஊறுதியன் செம்பியன் ஆண்ட சொல்லின் முன், பெருநிலவின்முன் சிறுமீன் போல, ஒளி குன்றிவிட்டது. 'ஒன்றியம்' என்னும் இனிமை சிவணிய இச்சொல்லையே ஆட்சிமொழி அகராதியில் சேர்ப்பது நலமாகும் என, திரு. எஸ். வேங்கடேசுவரன், ஐ. சி. எஸ். அவர்களிடம் தெரிவித்து, அங்ஙனமே சேர்த்தும் வைத்தேன்.

இவ் ஓசைநலமார்ந்த சொல்லை, அதனைத் தம் மடலில் பயன் படுத்திய உருசியத் தமிழறிஞருக்கு அமைத்துத்தந்தவர், நமது மாநில அரசின் கல்லூரிகளில் பேராசிரியாக இருந்து அப்போது உருசியாவில் தமிழாக்கப் பணிபுரிந்துகொண்டிருந்த திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் என்பதை அவர்களை ஒருமுறை கண்டுகளித்து அளவளாவும் வாய்ப்புக் கிட்டியபோது, அவர்களே கூறக்கேட்டு அகமகிழ்ந்தேன். நான் அமைத்த சொல் என்பதனாலேயே 'ஒன்றிப்பு' என்னும் சொல்லை உடும்புப் பிடியாகப் பற்றிக்கொண் டிருக்க வேண்டும், என்னும் எண்ணம் எனக்கு வரவில்லை. தமிழ் இனிமையாகத் திகழவேண்டும் என்னும் ஒரே நோக்கே, 'ஒன்றியம்' என்னும் சொல்லை ஏற்றுக்கொள்ளச் செய்ய என்னை உந்துவ தாயிற்று. நிற்க.

சொல் சுருக்கத்திற்காக வேண்டி, 'செயலாளர்' என்னும் சொல்லைச், 'செயலர்' என்று அமைத்த செய்தியை முன்பே கூறினேன். தமிழில் பற்றும், ஆட்சிச்சொல் அமைப்பதில் ஆர்வமும், பெரிதும் பூண்டுள்ள என் சிந்தைக்கு இனிய அன்பின் நண்பர் ஒருவருக்குச் 'செயலர்' என்னும் சொல் உண்மையிலேயே, காதுக்கு உகந்ததாக தோன்றவில்லை. 'செயலாளர்' என்பது, செவி நிறைந்த சொல்லாக, ஓசைநயமுடையதாகக் காண்கிறது. இதற்கு என்ன செய்வது? ஓசைநயம் என்பது அனைவருக்கும் பொதுவாகப் பொலியும் ஒரு பண்பாயினும், ஒருவர் காது மற்றொருவர் காதினைப்

போல் இல்லை என்னும் உண்மையை நினைவூட்டிக்கொள்ள, இச் செய்தி பயன்படுவதாகிறது. இங்ஙனம், நேரும், வேறுபட்ட உணர்வுகளை, விதிவிலக்காக எண்ணிக்கொண்டு, பொதுவாக இனிமை பயக்கும் ஓசையுடைய சொற்களையே ஆட்சிக்குத் தெரிந் தெடுக்க வேண்டும் என்பதே எனது பணிவான கருத்தாகும்.

'Vice chancellor' என்னும் சொல்லுக்குத் 'துணைவேந்தர்' என்னும் தமிழாக்கத்தைத் தமிழர் பலரும் போற்றுகின்றனர். இது பெருவழக்கிலும் இருந்து வருகிறது. 'Vice' என்னும் சொல், உண்மை யிலேயே 'மாற்று,' 'மாற்றம்' என்னும் பொருளில் இருக்கின்றது. இங்கு மட்டும் அல்லாமல், 'Vice Chairman,' 'Vice principal' என்பன போன்ற இடங்களிலும், 'Vice' என்னும் சொல்லுக்குத் 'துணை' என்னும் சொல்லையே பயன்படுத்தி வருகிறோம். இது ஒரு பக்கம் இருக்கட்டும். இதைப்பற்றிய ஆராய்ச்சி இதுபோது இங்கு இல்லை. 'Vice Chancellor' என்னும் தொடருக்குப் பலரும் ஆளும் 'துணைவேந்தர்' என்னும் ஓசை நயமுடைய தமிழ்த் தொடர் இருப்பவும், இதனை 'உப அத்யக்ஷகர்' என்று செவியில் செவ்விய ஓசையுடன் விழாத ஒரு தொடரைப் பயன்படுத்துவது எப்படி ஏற்ற தாகும்? 'துணைவேந்தர்' என்னும் தமிழ்த்தொடர் ஒன்று, பெரு வழக்கில் உள்ளது என்று தெரிந்திருந்தும், 'உப அத்யக்ஷகர்' என்னும் தொடரையே விரும்பி ஆண்டுவருபவர்களின் செவிப் புலனை என்னென்பது?

சொல்லியல், மொழியியல்களில், நுண் அறிவும், பேராற்றலும் படைத்த என் மதிப்பு மிக்க நண்பர் ஒருவர், ஒருசொல்லை ஆக்குவ தென்றால் அதற்கு ஆழமான அடிப்படையிருக்கும். 'Doctor' என்னும் சொல்லுக்குப் 'பண்டாரகர்' என்னும் அவரது சொல்லை நாம் பயன்படுத்தியும் வருகிறோம். அச்சொல்லை நான் தெரிந்து கொள்வதற்கு முன்பே, 'மூதறிஞர்' என்னும் வேறு ஒரு சொல்லை அமைத்தேன். 'Doctor' என்னும் சொல்லுக்கு 'அறியாமையைப் போக்குகிறவர்' என்னும் பொருள் இருப்பதைக் கண்டேன். 'ஆசு இரியர்' குற்றத்தைக் களைபவர் என்னும் கருத்திலுள்ள, 'ஆசிரியர்' என்னும் சொல் பொருத்தமாக இருக்கும் என்று எண்ணினேன். குற்றத்திலெல்லாம் பெரிய குற்றம் அறியாமையை மேற்கொண் டிருப்பதேயாகும் அறியாமையைப் போக்குவதிலே மிகப்பெரியவர் 'Doctor'.

ஒரு துறையிலே, ஒருவருக்கு, 'Doctor' பட்டம் தருகிறது, ஒரு பல்கலைக்கழகம் என்றால், அத்துறைப்பொருளைப்பற்றிய அறியாமை யைப் போக்குவதிலே மிகச்சிறந்தவர் அவர் என்பதே அதற்குப் பொருள். எனவே, 'Doctor' என்பதை, 'மூதறிஞர்' எனலாம் என முடிவு செய்தேன். 'பண்டாரகர்' என்னும் சொல்லைப் பயன்படுத்து வதில் பெரும்பொருள் உண்டு என்றாலும், 'மூதறிஞர்' என்னும்

சொல் பொருள்பொருத்தத்துடன் ஓசைநயமும் உடையதாக இருக்கின்றது என்பதை நாம் புறக்கணித்துவிடக்கூடாது அன்றோ? ஆட்சிச் சொற்களை ஆக்கும்போது, நமக்கு ஓசைநயத்தின்மேலும் ஒருகண் இருக்க வேண்டும்.

5. மரபு அமைதி

படைக்கும் சொற்கள், தமிழ் இலக்கண மரபுக்கு மாறானவையாக இருந்துவிடக்கூடாது. இலக்கணத்தைப் புறக்கணித்துவிட்டால், மொழி, தன் இயல்பு கெட்டுவிடும். பொருள்செய்துகொள்வது அரிதாய்ப் போகும். இலக்கண வரம்பின்றி எழுதிக்கொண்டே போனால், நாளாக நாளாக மொழியே உருமாறிவிடும். 'உருமாறிப் போனால் என்ன? அதற்கு ஏற்றபடி, இலக்கணத்தையே மாற்றி அமைத்துக்கொண்டே போனால் போகிறது' என்று மொழியில் பற்றில்லாதவர்களே சொல்வார்கள். அவர்கள், மொழி எக்கேடு கெட்டால் என்ன, என்று எண்ணும் வகையினராய் இருப்பர். காலத்தின் போக்கால், புதுவழக்குகளும், புதுமரபுகளும், ஒரு மொழியில் புகுவது இயல்பாக நடைபெறவேண்டும். அவற்றை மொழியில் நுழையவிடக்கூடாது, என்று சொல்வது பொருந்தாது. இலக்கணம் நன்கு அறிந்த பேரறிஞர்களே, காலத்தினால் தேவையெனத்தோன்றும்போது, புதுவழக்குகளையும், புது மரபுகளையும், ஏற்று அமைத்துவைப்பர்.

ஆனால், நினைத்தவர் எவரும், நிலைபெற்று இயங்கிவரும் இலக்கண முறைக்கு மாறாகச் சொற்களை அமைப்பது பொருந்தாது. 'Bank' என்னும் சொல்லுக்குத் தமிழ்ச்சொல் செய்யும்போது, 'பேங்க்,' 'பாங்க்' என்றெல்லாம் எழுதுவது தமிழ் மரபாகாது; 'பாங்கு' என்றே வரைவது பொருத்தம். 'டில்லி' என்பது 'தில்லி' என்று எழுத வேண்டும். 'Madras' என்பதைத் தமிழில் எழுதித்தான் ஆகவேண்டும் என்னும் நிலை ஏற்படும்போது 'மதராசு' என்று எழுதுவது இலக்கண அமைதியுடையது. 'மட்ராஸ்' என்று வரையலாகாது. 'பங்களா தேஷ்' என்பதை 'பங்களா தேசம்' என்று வரைவதே மரபாகும். இப்படியே பிறவும்.

சொற்களைத், தமிழ் இலக்கணத்திற்கு இசைவான முறையிலே அமைத்துக்கொள்வது மட்டும் போதாது. மரபுநடை என்பது உண்டு. அதை, 'Idiom' என்போம், ஆங்கிலத்தில், தமிழுக்குப் பொருத்தமான மரபு நடையில் செய்திகளை எழுதவேண்டும். 'He kicked his bucket' என்பதை 'அவன் அவனது வாளியை உதைத்தான்' என்று மொழிபெயர்க்கலாமா? 'அவன் இறந்தான்' என்பதுதானே தமிழ் மரபாகும்.' 'The matter is hanging fire' என்பது தமிழில், 'செய்தி நெருப்பில் தொங்குகிறது' என்று சொல்லலாமா? 'செய்தி முடிவாகாமலே கிடக்கின்றது' என்பதுதானே பொருந்தும் பொருள்.

இப்படியே, தமிழிலுள்ள மரபு நடைச் செய்திகளை ஆங்கிலத்தில் கூறவரும்போது, 'தலைக்கனமாக இருக்கிறது' என்பதற்கு 'Head weight' ஆக இருக்கின்றது எனலாமா.' ஓர் வட்டாட்சி அலுவலக எழுத்தர் ஒருவர், இங்ஙனமே தம் விடுப்பு விண்ணப்பத்தில் எழுதினார். 'As I am suffering from head weight I may be granted casual leave for one day' என்று. அவ்வெழுத்தரை, அவ்வட்டாட்சியர் நேரில் கூப்பிட்டுக் கேட்டார் : 'என்ன அப்பா' 'வேலைக்கு வந்து' ஒருமாதம் ஆகவில்லை, இதற்குள் உனக்கு 'Head weight' வந்து விட்டதே என்று. அப்போதும் அவருக்கு மரபுத் தவறு விளங்க வில்லை. மழையில் நனைந்தேன் அதனால் 'Head weight' ஆகிவிட்டது என்றார். 'Gave a box on the ear' 'கன்னத்தில் அறைந்தார்' என்று சொல்வதைவிட்டு, 'காதின் மீது ஒரு பெட்டியைத் தந்தார்' என்னலாமா ?

ஆங்கில மரபுநடை வழுவும்போது, நமக்கு அக்குறை நன்றாகத் தெரிகிறது. தமிழ் மரபுநடையைப்பற்றி நாம் கவலை கொள்வதில்லை. எண்ணிப்பாருங்கள். பின்வருவனவற்றில் உள்ள குறைகளை :

> 'போதாத காலத்தினால் இப்படி நேர்ந்தது' என்பதை,
>
> 'This happened due to insufficient time' எனலாமா ?
>
> 'அவனது தலை எழுத்து இங்ஙனம் ஆயிற்று' என்பதற்கு,
>
> 'This accoured thus, due to his head letter' ஆங்கிலம் ஆகுமா ?

'ஆயிரம் பொய் சொல்லியாவது ஒருவிளக்கேற்றி வைப்பது நல்லது' என்றால், "Even uttering Thousand lies it is good to lit a lamp ' என்று ஆங்கிலத்தில் சொல்வது ?

'மூன்று மாதம் முழுகாமல் இருக்கிறாள்'-என்பதை 'She has not taken her bath for three months' என்று மொழிபெயர்க்கலாமா ?

'மஞ்சள்குங்குமத்தோடு போக அவள் விருப்பம்', என்பது Her desire is to go with turmeric and Kungumam' என்று ஆகுமா ?

இவ், ஆங்கில ,ஆக்கங்கள்'. உண்மைப்பொருளை விளக்காமல் போவதுடன், சிரிப்புக்கு இடமானவையாகவும், இருக்கின்றன என்பதைக் காண்போம். இப்படியே, தமிழ் மரபு நடை தவறும் போது நாம் பொறுத்துக் கொண்டிருக்கக் கூடாது அல்லவா ?

இனி இன்னொரு மரபு பற்றிய செய்தி. 'தமிழில், ஒரு 'ர' கரமும், ஒரு 'ற' கரமும் இருக்கின்றன. தமிழ் வழக்கு அறிந்து இவற்றைப் பயன் படுத்த வேண்டும். ஒரு வட்டாட்சியர் (தாசில்தார்) தம் மேல் அலுவ ருக்கு, நேர்முகமடல் ஒன்று வரையும்போது, 'மதிப்புக்குறிய ஐயா' என்ற விளியுடன் மடலைத் தொடங்கினார். அம்மடலை நான், அவ்வ லுவலக ஆய்வின்போது கண்டேன், 'உங்கள் மேல் அலுவலர் உங்க

ளுக்குப் பிடிக்காதவரா? என்று கேட்டேன். 'ஏன் அப்படிக் கேட்கிறீர்கள் என்ருர். 'அவரை விளிக்கும் தொடரில், அவர் உங்கள் மதிப்புக்கு மட்டமானவர் என்று எழுதியிருக்கிறீர்களே' என்றேன். இல்லையே, 'மதிப்புக்குரிய ஐயா' என்றுதானே வரைந்துள்ளேன் என்று மடலில் சுட்டிக்காட்டினர். மதிப்பு-குறிய —மதிப்புக்குட்டையான அல்லது மட்டமான என்றே அவர் எழுதியதற்குப் பொருள் என்பதை அவர் அறியார். 'மதிப்புக்குரிய' என்று எழுதியிருக்க வேண்டும் அல்லவா? 'மதிப்புக்கு-உரிய' என்று பிரித்துப்பார்க்கவும், 'ர' கர 'ற' கரத்திற்கு முள்ள வேறுபாட்டைத் தெரிந்து கொள்ளவும், அவ்வாட்சியர் அறியாததன் குறையினுல் இவ்வாறு ஏற்பட்டது.

'ர' மொழிக்கு முதலில் வராது என்பது தமிழ் இலக்கணம். 'வந்தால் என்ன?' என்னும் கேள்வி எழுகிறது. வராது என்று இலக்கணத்தில் எழுதி வைத்திருப்பதால், வரக்கூடாது என்று சொல்வது முரட்டுத்தனமாகும். தமிழ் இலக்கணம் மிகவும் இயல்பானது. நாம் திருத்தமாகப் பேசும்போது எப்படிப் பேசுகிருேமோ அதற்கே இலக்கணம் எழுதிவைக்கப் பெற்றிருக்கிறது. அவனைக் கண்டேன் என்றே பேசுகிருேம். இடையில் 'க்' ஒலிக்கிறது. ஆனுல் எழுதும்போது 'அவனை - கண்டேன்' என்று எழுதி விடுகிருேம். அப்படியே 'அவனுக்குத்தந்தேன்' என்று பேசுகிருேம். எழுதும் போதோ 'அவனுக்கு தந்தேன்' என்று 'த்'-ஐ விட்டு விட்டு எழுதுகிருேம். இவ்வாறே பிற சந்திகள்.

இனி, வேறொரு மரபுச் செய்தி, ஒருவர் கேட்டார்: 'ர', 'ரா,', 'ல'' 'லா' மொழிக்கு முதலில் எளிதாக வருகின்றனவே. 'ரங்கன்,' 'ராமன்' 'லட்சுமணன்' 'லாடம்' என்று சொல்லலாமே. ஏன் 'அரங்கன்' 'இலட்சுமணன்' 'இராமன்' 'இலாடம்' என்று, 'அ' அல்லது 'இ', எழுத்தை முதல் இட்டுக் கூறவேண்டும் என்று. இந்த, ஐயம் உண்டாவது இயல்பே. தமிழ், மனித இனம் முதன்முதலில் இவ்வுலகில் தோன்றி, முதன்முதலில் பேசிய மொழி தமிழ், என்னும் ஓர் உண்மை, நம் மனத்தில் நிலவ வேண்டும்; மனித இனம் குழந்தைப்பருவத்தில் இருந்த காலம் அது. ஒரு சொல்லை உச்சரிக்கும்போது, அவன் வாயில் 'ர' 'ல' 'லா' சொற்களுக்குமுன் வரமுடியாமல் இருந்தன. எனவே இவ்வெழுத்துகள் மொழிக்குமுன் வாரா என்று, இலக்கணம் எழுதிவைத்தனர். அப்போது, 'ர', 'ரா', 'ல', 'லா'வில் தொடங்கும் சொற்கள் தமிழில் இல்லாமல் இருந்தன. பிற்காலத்தில் பிறமொழிச்சொற்களான, 'ரங்கன்,' 'ராமன்,' லட்சுமணன், 'லாடம்' போன்றவை தமிழ்மொழியில் பேசவும் எழுதவும் வேண்டி வந்தன. அப்போது 'ர,' 'ரா,' 'ல,' 'லா'வின் முன் 'அ' 'இ' ஓசைகளையிட்டு, 'ர,' 'ரா,' 'ல,' 'லா,'வின் ஓசைகளைச் சிறிது மென்மையாக்கினர். 'அ,' 'இ' எழுத்துகளை முதலில் இட்டாலும், அவற்றை

முழுமாத்திரையளவு ஒலிப்பதில்லை. கால் அல்லது அரைக்கால் மாத்திரையளவே ஒலித்து, அடுத்துவரும் 'ர,' 'ரா,' 'ல,' 'லா,' வை ஒலிக்கும் வழக்கம் வந்திருக்க வேண்டும்.

இயற்கையாக அமைந்த தமிழ் இலக்கணத்தின் மரபைக் காக்கச், செயற்கையான இந்த வழக்கம் ஏன் ? என்று தோன்றலாம். இன்னும் குழந்தைகள் வாயில், ர, ல, வராது என்பதை நாம் கவனித்திருப்போம். 'இராசா' என்பதைக் குழந்தைகள் 'ஆசா' என்றே சொல்லும். 'இராமனை', 'ஆமா' என்னும். ல, ர, வுக்கும் இதே விதி தான், குழந்தைகள் இளம் வாயில். இதை எவரும் மறுக்க முடியாது.

நான் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது, எதிர் வீட்டில் இருந்த மூன்று அகவைப் பையன் ஒருவன், அவன் வீட்டில் ஏதேனும் தொல்லை தந்தானுயின், என்னைக் கூப்பிடுவர் அவனை அதட்ட. எனவே, என்னைக் கண்டால், அவனுக்கு, எப்போதுமே எரிச்சல். ஒரு நாள், எங்கள் வீட்டு வாயில் அருகே, சில நண்பர்களுடன் நின்று நான் பேசிக்கொண்டிருந்தபோது, அப்பொடியன், தன் வீட்டு வாயில்வழியாக, எட்டிப்பார்த்து, என்னைநோக்கி 'ஆமிங்கம்! ஊமிங்கம்,' என்று ஏசு மொழியில் இசைத்தான். நான் உற்று நோக்கியதும் உள்ளே ஓடிவிடுவான். மீளவும் 'ஆமிங்கம்! ஊமிங்கம்!' ஒலிக்கும். இவன் குழந்தை. இவன் வாயில் 'ரா' வரவில்லை. 'ல' வும் வரவில்லை. என்பெயர் ராமலிங்கம். இப்பெயரில் இரண்டு சொற்கள் இருக்கின்றன. ***ராம லிங்கம்***, 'ரா'வில் இருக்கும் 'ர்'–ம், 'லி'–ல் இருக்கும் 'ல்'-ம் அவன்வாயில் வரவில்லை. இவ்விரண்டு எழுத்தையும் விட்டுவிட்டு. என்பெயரை ஒலித்தால் (ர்)-ஆம் (ல்) -இங்கம்-'ஆமிங்கம்' என்றே செவியிறபடும். இந்த 'ஆமிங்கத்'துடன் இணையாக இசைக்க 'ஊமிங்கம்' என்னும் ஒரு சொல்லை அச்சிறுவனே ஆக்கிக்கொண்டு 'ஆமிங்கம்! ஊமிங்கம்! என்று கத்தி என்னை ஏசினுன்.

குழந்தைவாயில், சொல்லுக்குமுன் ர, ல, வாராதது போலவே குழந்தைப் பருவத்திலிருந்த தமிழனுக்கும் அவை ஒலிக்க இயலாதன வாய் இருந்திருக்கும். ர, ல-வைக் கொண்ட சொற்கள் தமிழில் நுழைந்த பிறகு, அ, இ,-ஐ முன் வைத்து அச்சொற்களிலுள்ள மென்மை குறைந்த முதல் எழுத்துக்களின் ஓசைகளைச் சிறிது தனித்துக்கூற, இலக்கணத்தில் வழிவகுத்திருக்கிருர்கள். தமிழ்மொழி மிக மிகத் தொன்மையான மொழி, மனிதன் குழந்தைப் பருவத்திலே இருந்தபோது உண்டான முதல் மொழி என்னும் உண்மையை நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்க, இவ் இலக்கண மரபு துணை செய்வதாகும். எனவே, இம்மரபினை நாம் போக்கடித்துவிட வேண்டாமே என்பது என் கருத்து.

சென்னையிலுள்ள அமெரிக்க நிறுவனம் ஒன்று எனக்கு எழுதிய ஒரு மடலில் என் பெயரை 'I ramalingam' என்று ஆங்கிலத்தில் வரைந்திருந்தது. அந்நிறுவனத்திற்குக் கிடைத்த, எனது 'ஆட்சித் துறைத்தமிழ்' என்னும் நூலில் என் பெயர் 'இராமலிங்கம்' என்று அச்சிட்டிருந்ததைக் கண்டு, இவ்வாறு எழுதியிருக்க வேண்டும் என்று எண்ணினேன். எனது விடையில், அச்சிட்ட என் பெயரில், முதல் எழுத்து 'இ' என்று இருந்தாலும், உச்சரிக்கும்போது, 'இ'-ன் ஓசை காதில் ஒரு துளியே ஒலிக்கும்படி உச்சரிப்பதென்றும், 'ர,' மொழிக்கு முன் வராது என்னும் மரபினைக் காக்கவே, அங்ஙனம் செய்யப்படுகின்றது என்றும், எனவே, 'Ramalingam' என்றே என் பெயரை ஆங்கிலத்தில் வரையவேண்டும் என்றும் எழுதினேன். மொழிக்கு முதலிலே வருவதற்கான இயலோசை, 'ர'கரத்திற்கு இல்லாமல் இருப்பதை யுணர்ந்து, அவ்வோசையை நயப்புடைத் தாக்கிக்கொள்வதற்காக, 'இ' என்னும் எழுத்து 'ர'கர முதலையுடைய சொற்களின் முதலில் இடப்படுகிறதென்றும் குறித்தேன்.

இப்பேச்சை முடிப்பதற்கு முன், மேலும் இரண்டொரு செய்தி களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவற்றை 'ஒற்றுமை நோக்கு,' 'பற்றுளம் தேவை,' 'வருங்கால வளமை' என்னும் மூன்று தலைப்புகளில் கூறுவேன்.

ஒற்றுமை நோக்கு

நம் நாட்டிலுள்ள மாநிலங்களில், அந்தந்த மாநில மொழியையே ஆங்காங்கு, ஆட்சி மொழியாக்கித் கொள்ள வேண்டும் என்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் விதித்தது, நாட்டின் ஒருமைப்பாடு வளர்வதற்கேயாகும். மாநிலங்களைப் பிரித்து விடுவதற்கு அன்று. மொழியாளர்கள் பிரிந்து செல்லவும் அன்று. பல மொழிகளைப் பேசும் மக்களைக் கொண்ட நம் தாய் நாட்டின் ஒற்றுமை, பல மொழிகளும் ஒருபடித்தாக மேன்மையுறுவதிலேயே இருக்கின்றது. நாட்டுப் பற்றுடையோராம் நாம் அனைவரும், ஒன்று சேர்வதற்கு நம் நம் அன்னை மொழிகளும், நல்ல நிலையில் இயங்கவேண்டும். மொழி யுரிமையின்றி, நாட்டுரிமை மட்டும் சிறந்த பயனை யளிக்காது. நாடு நம்முடையதான பின்பு, நம்நம் மொழிகளும் நம்முடையன ஆக வேண்டும். நமது பலதுறை வளர்ச்சிக்கு இதுவே இன்றியமையாத தாகும்.

அயலவனை அகற்றுவதற்கு, மக்கள் உணர்ச்சியும் உறுதி யுள்ளமும் பெறவேண்டி, நம் நாட்டுத்தந்தை மகாத்மா காந்தியடி களார், அரசியலில், மொழி வழி மாநிலங்களை அமைத்துக் கொண் டார். ஆங்காங்கேயுள்ள மக்களின் மொழியிலேயே அரசியல் செய்திகள் எடுத்துச் சொல்லப்பெற்ற பிறகே, மக்கள் விழிப்படைந் தனர்; ஒன்றுபட்டனர்; அயலவன், 'இனி நமக்கு இங்கு இடமிராது' என்று அஞ்சியவனாய், அரசினை நம்பால் ஒப்படைத்துவிட்டுச்

சென்ருன். ஆங்கிலத்திலேயே அரசியல் தலைவர்கள் பேசிக்கொண்டு சென்று விட்டிருந்தால், மக்களுக்கு நாட்டுப்பற்றும், நாம் அனைவரும் ஒன்றுபடவேண்டும் என்னும் உணர்வும், வந்திரா. அன்று நம் தந்தை அமைத்துவைத்த மொழிவழி மாநிலங்களே, இன்றும் அப்படியே இயங்குகின்றன. மொழிப்பற்றினுல் நாட்டுப் பற்றுக் குறைந்துவிடும் என்று எண்ணுவது தவறு

சில தன்னலவாதிகள், மொழியை முன் வைத்துக்கொண்டு, தம்தம் முன்னேற்றத்திற்கு அடிகோலக்கூடும். அதனுல் அவர்கள் முன்னேறலாம். ஆனுல் நாடு முன்னேருது. மொழிப்பூசல்களைக் கிளப்பிவிட்டு, மக்கள் மனங்களை மாறுபடச் செய்யும், அவர்கள் கொள்கையும், அதைப் பரப்ப, அவர்கள் செய்யும் முயற்சிகளும் நற்பயன் கூட்டா. ஆனுல், அறிவுடையோர், அவர்களது மறைமுகச் செயல்களை, உணர்ந்துகொள்வர்; உண்மை நிலையை அறிந்து கொள்வர். நாட்டுப்பற்றை நழுவ விடார். அதற்கு மாருக, 'நாம் அனைவரும் ஒன்று. மொழிகள் நம்மைப் பிரிக்க மாட்டா, மொழிப் பற்று என்பது நாட்டுப்பற்றைப் புறக்கணித்தது அன்று. உடலில் உள்ள ஒவ்வோர் உறுப்பும் வலிமையும் செழுமையும் பெறுவது, உடல் முழுவதும் வலிவுற்றுச் செழிப்பதற்காகவே; உடலின்கட்டுக் கோப்பைக் கழலவிடுதற்காக அன்று'' என்னும், திண்மையான எண்ணம், உள்ளத்தில் பதியப்பெறுவர். 'நாம் ஒன்று, என்னும் எண்ணம் மேலோங்கும்.

ஒருவன், தான் பெறவேண்டிய உரிமை நலங்களைப் பெற முடியாமல் முட்டுப்படும்போதுதான், அவற்றைப் பெற்றுள்ள மற்ற வனைப் பார்த்துப் பொருமைப்படக்கூடும். அப்பொருமைப் புகைச் சலால், சமுதாயத்தின் ஒற்றுமையைக் குலைக்கும் செயல்களில் ஈடுபடுவான். அதுபோல, ஒரு மொழி தன் தகுதிக்கு ஏற்ற உயர் நிலையைப் பெற்றுவிட்டால், அந்த உயர்நிலையைத் தான் பெறுவ தற்கு, இடைஞ்சலாக இல்லாத, மற்ற மொழிகளின்மீது, காய்ச்சலோ அக்காய்ச்சலால் நேரற்பால கடுஞ்செயல்களோ, நிகழ்வதற்கே இடம் இராது. நம் அன்னைமொழி நம் தமிழகத்தின் ஆட்சி அரியணையில் அமர்த்தப் பெற்றுவிட்டது. எந்த மொழிக்கும் நம் மொழி தாழ்ந்தது அன்று, என்று நம்நாட்டின் எம்மொழியாளரும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் உள்ளோம். எனவே, மற்ற மொழி யாளர் வாழும் நம் நாட்டின் மற்ற மாநிலங்களும், நம் மாநிலமும், அக்கை தங்கையர் போலக், கைகோத்து ஒளிரும் நிலையை நாம் அடைந்திருக்கிறேம். இந்த ஒற்றுமைநோக்கு நம்மை வாழ்விப்ப தற்கு நல்ல அறிகுறியாக அமைந்திருக்கிறது; இதை மேலும் மேலும் உறுதியானதாக வளர்த்துக் கொள்வோமாக!

பற்றுளம் தேவை

மொழி வாழ்வில், நாம் பெற்றுள்ள பாங்கினைப் பரிந்து போற்றி வருகிறேம். அரியணை அமரவைத்த நம் அன்னை இனிது வளர்ந்து ஓங்கி மிளிர, இனி நமக்குத் தேவையானது பற்றுள்ளமே. கையில்

அள்ளிக் கொடுக்கப்பெற்ற கருந்தனத்தைக் கருத்தோடு பேணிக் காத்துக்கொள்ள வேண்டியது நம் கடமை. இக்கடமையை, முனைந்து ஆற்ற முற்படாவிட்டால், நாம் பெற்றுள்ள உரிமை விரைந்து பயன் அளிக்காது போகும். தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் நிறைவேற்றப்பெற்று, இப்போது இருபது ஆண்டுகள் ஆகிவிட்டும், இனியும் நம் அன்னையை நிறைவான முறையில் அரியணை வீற்றிருக்கச் செய்யாமல் இருக்கின்றோமே என்னும் ஏக்கம், நம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும்.

இதற்கு இன்றியமையாது வேண்டப்படுவன, கண்ணும் கருத்தும் கடுமையான உழைப்புமேயாகும். பணிபுரியும் ஒவ்வொருவரும், இவற்றை இனிது இன்று கொண்டுவிட்டால், அலுவலகங்களில், ஆட்சிமொழி, விரைவாகச், சில நாளில், நிறைவுநிலை எய்தி விளங்கும் என்பது திண்ணம். 'தமிழில், வரைவு-குறிப்புகளை எழுதுவது சட்டப்படியான ஒரு செயலாயிற்றே, அந்தச் செயலைப் புறக்கணிப்பது சட்டத்தை மீறும் தவறாயிற்றே, என்னும் எண்ணம் நமது பற்றுள்ளத்தைப் பாங்குசெய்யப் பயன்படுத்திக் கொள்ள லாம். இப்புறக்கணிப்புக்கும் தவற்றுக்கும் அரசு இடையிட்டுக், கண்டிக்க வேண்டும், தண்டிக்க வேண்டும், என்று எதிர்பார்ப்பது நல்லதன்று.

அத்தகைய கடுமையான நடவடிக்கைகளை, அரசு எடுக்க வேண்டுமென்று எண்ணுவதே, நமது மொழிப் பற்றில்லாக் குறையை விளம்பி விடும். சட்டம் போட்டுவிட்ட பிறகு, நாம் யாவற்றையும் தமிழிலேயே எழுதுவதை அரசு மறிக்க போவது இல்லை என்னும் உண்மையை, உள்ளத்திற்கொண்டு, உவகையோடும், உரிமை யோடும், அனைத்தையும் தமிழாக்கும் அரும்பணியில், அலுவலகங் களில் உள்ள அனைவரும் ஈடுபட வேண்டும். நம் அன்னை, அழகு மிளிர அரியணையில் இனிது அமர்ந்து அரசாட்சி புரிவாள்.

அந்தந்த மாநிலத்தில் வாழ்பவர்கள் அனைவரும், அந்தந்த மாநில மொழியாளர்களேயாவோம். சிலருக்கு வீட்டில் பேசும் தம் தாய்மொழி அம்மாநில ஆட்சிமொழியாக இல்லாமல், வேறொன்றாக இருப்பினும், அவர்களுக்கும் அன்னைமொழி அம்மாநில மொழியே யாகும். ஒரு குழந்தை என்றால், அதன் தாய் அதற்கு இன்றியமையாதவள். குழந்தையின் வளர்ச்சியில் ஒவ்வொரு நிலையிலும், தாயின் பற்றும் பாசமும் பெருந்துணையாகும். தாயில்லா விட்டால் குழந்தையின் வளர்ச்சி தடைபடுவதுபோல, மாநிலத் தாய்மொழியின் துணை இல்லாவிட்டால், அம்மாநில வாழ்வு மணக்க மலராது.

எனவே, அலுவலகங்களில் இருப்பவர்கள் எந்த மொழியின ராயினும், அவ் அலுவலக வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமை யாததான, அம்மாநில ஆட்சிமொழியின்பால், பற்றுள்ளம்

கொள்ளக் கடமைப்பட்டவராவர். ஒவ்வொரு மாநிலத்துக்கும் பொருந்துவதாகும், இக்கொள்கை, நமது தமிழக மாநிலத்துக்கும் பொருந்துவதே. அலுவலகப் பணியில் **வளமை** பெரிதன்று, மொழிப் **பற்றே** இன்றியமையாதது தேவையாகும்.

வருங்கால வளமை

ஆட்சித் தமிழ், வருங்காலத்தில் வளமையுடன் வளரும் என்ப தற்கான செய்திகள், மனநிறைவு அளிப்பனவாகும். அலுவலகங் களில் பணிபுரியும் இளைஞர்கள் பெரிதும் ஆர்வத்துடன் இருந்து வருகின்றனர். மேலும்மேலும், ஆர்வம் மிகுந்த இளைய பணியினர், அலுவலகங்களில் இடம்பெற்று வருகின்றனர். இவர்களே, எதிர் கால மேல் அலுவலர்களில், போகப்போக, பெரும்பாலோராகி விடுவர். இன்றுள்ள மேலலுவலர்களில், சிலர் பலர் இப்பணியில் முனைந்து ஈடுபடமுடியாமல் இருக்கின்றனர் என்பது, இன்னும் சில ஆண்டுகளில் இல்லையாகிவிடுவது திண்ணம். மருத்துவத் துறை யிலும், மொழித் துறையிலும், வேளாண்மைத் துறையிலும் பயிலும் மாணவர்கள், தமிழாக்கப் பணியில் எத்துணை ஈடுபட்டு வருகின்றனர் என்பதற்கு, அவ்வகைக் கல்லூரித் தமிழ் மன்றங்கள் வாயிலாக, வெளியாகும் 'அறிவுக்கதிர்', 'கலைச்சொல் தொகுப்பு', 'தமிழில் முடியுமா?' போன்ற பல அரிய படைப்புகள், சான்று பகர்ந்து கொண்டிருக்கின்றன.

இன்று மேல் நிலைகளிலுள்ள அலுவலர்களில் சிலர், தமிழ்ப் பற்றோடு விளங்கிவருவது இன்பம் அளிக்கும் செய்தியாகும். திரு. க. திரவியம், ஐ. ஏ. எஸ். அவர்கள், கல்வி அமைச்சில் செயலராக ஆற்றிய தமிழ்ப் பணியைப் போற்றுவது அகமகிழ் வூட்டும். வரைவுகள் குறிப்புகள் யாவும் இனிய தமிழிலேயே தாம் எழுதி வந்ததுடன், தம் கீழ் இருந்த உதவிச் செயலர்கள், துணைச் செயலர்களையும் தமிழில் எழுதுமாறு ஊக்கி வந்தனர். தமிழில் எழுதாவிட்டால், அவர் மனக்குறை கொள்வாரே என்னும் அச்சம் அவ்வலுவலர்களுக்கு இருந்ததை, ஒரு துணைச் செயலருடன் பேசிக் கொண்டிருந்தபோது நான் அறிந்து உவந்தேன். தொழில்துறை இயக்குநராகவுள்ள திரு. க. வெங்கடேசன், ஐ. ஏ. எஸ். அவர்கள், படைத்துள்ள தமிழ் வளமையின் பயனே, அவர் எழுதியுள்ள **'புள்ளி இயல்'** நூல் ஆகும். இந்நூலை வியந்து, திரு எஸ். வேங்க டேசுவரன், ஐ. சி. எஸ். அவர்கள் பாராட்டுவதைக் கேட்டுக் களித்திருக்கிறேன்.

அரசின் மொழி பெயர்ப்புத்துறை இயக்குநராக இலங்கும் என் சிந்தைக்கு இனிய செல்வத் திருவினர் முதறிஞர் (டாக்டர்) ஔவை. து. நடராசன் அவர்கள், அரசிதழ் வெளியீட்டின் தமிழையே, அரிய மக்கள் இலக்கியமாக ஆக்கிவிடுந் திறனுடனும், திண்ணிய மனத்துடனும் விளங்கிச் செயல்புரிகின்றார். அரசிதழில்

'டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடிகளின் ஆக்டு' என்று ஒரு காலத்தில் ஆங்கிலத்தை அப்படியே தமிழ் எழுத்தில் எழுதி வந்த நிலைமை சிறிது சிறிதாக மாறி, இன்று பட்டப்படிப்புக்கு ஒரு நூலாக வைக்கக் கூடிய அளவுக்கு, அரசிதழ்-தமிழ் வளர்ந்துகொண்டு வருகிறது.

என் அன்பிற்கும் மதிப்புக்கும் உரிய நண்பர்களான, தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் மூதறிஞர் (டாக்டர்) வி. சி. குழந்தைசாமி அவர்களின் அரிய தமிழ்ப் பணியையும், சட்டமாமன்றச் செயலர் திரு. ம. சண்முகசுப்பிரமணியம் அவர்கள் தமிழில் ஆக்கியுள்ள சட்ட நூல்களையும், அரசு தேர்வு ஆணையர் திரு. கி. வேங்கட சுப்பிரமணியம் அவர்கள் தமிழாக்கம் செய்துள்ள 'ஆக்சுபோர்டு பட அகராதி யையும், எவரும் போற்றுவர். திரு. கோபால் ராவ், ஐ. ஏ. எஸ் அவர்கள் அமைச்சகத்தில் துணைச்செயலராக இருந்தபோது 'Cancel', 'Cancellation' என்னும் சொற்களைத் தமது அலுவலகக் குறிப்பில் தமிழிலேயே எழுதும் ஆர்வத்துடன், இச்சொற்களுக்குத் தமிழாக்கம் யாது? என என்னைக் கேட்டிருந் தார். இவர்களது தாய்மொழி தமிழல்லவாயினும், இவர்கள் ஆட்சித் தமிழில் கொண்டிருந்த பற்றினையறிந்து பெருமகிழ்வு எய்தினேன்.

பருவ இதழ்களும், நாளேடுகளும், நாளுக்கு நாள், தமிழ் வளமை பூண்டு இயங்குகின்றன. எதிர்காலத்தில், தமிழ், ஏற்றம் மிக்கு விளங்கும் என்பதற்கு எடுத்துக்காட்டுகளாக இலங்குகின்றன. 'செந்தமிழ்ச் செல்வி,' 'தமிழ்ப் பொழில்,' 'கலைக்கதிர்,' 'நெய்தல்' போன்ற சில பருவ இதழ்களைக் கண்ணுறுபவர் எவரும், அவை யாற்றி வரும் தமிழ்ப் பணியைப் போற்றுமல் இரார். 'தினத்தந்தி', 'முரசொலி', 'தினமணி', 'சுதேசமித்திரன்' முதலிய பல நாளிதழ் களும், நாளொடு நாள், தமிழ் நலம் சான்ற சொற்களைப் பெய்து எழுதிவருவது, இனி ஆட்சித் தமிழ் வளரும் பாதையில் பீடுநடை போட்டுச் செல்கின்றது என்பதைப் புலப்படுத்துகின்றது.

பொதுமக்களும், ஆட்சித் தமிழின் முன்னேற்றத்தில், நாட்டம் நிறைந்து வருகின்றனர். பொள்ளாச்சித் தொழில் முதல்வர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள், தம் அலுவலகம் ஒன்றில், எத்துணை எழிலுடன் தமிழில் குறிப்புகளை எழுதுகின்ருர்கள் என்பதை என் சிந்தையில் இனிக்கும் செல்வர் மூதறிஞர் ஒளவை. து. நடராசன் அவர்கள் கூறச் செவியுற்றுச் செம்மாப்படைந்தேன். கோவை திரு. ஜி. ஆர் தாமோதரம் அவர்கள் ஆற்றி வரும் தமிழாக்கத் தொண்டு மிகமிக அரியதாகும். திருச்சி திரு. ஜி. வரதராசன் அவர்கள், கூட்டுறவுப் பாங்குகளுக்கு பயன்படத்தக்க ஆட்சிச் சொல் அகராதி யொன்றை வெளியிட்டு உதவியுள்ளார். பேராசிரியர் திரு. சாலை இளந்திரையன் அவர்கள், 'உழவுத்தமிழ்' பற்றிய சொற்பட்டியல் ஒன்று வெளியிட்டுள்ளார். கோயில்களில்

அழகிய தமிழ்ச் சொற்களை வழங்க விரும்பினார், பழநித் திருக்கோயில் அறங்காவல் குழுத்தலைவராக இருந்த திரு. மனோகரன் அவர்கள்; ஆக்கித் தந்தேன். அவற்றைப் பயனுக்குக் கொணர்ந்தார். திரு. ந. ரா. முருகவேள், தாம் ஆசிரியராக இருக்கும் 'திருக்கோயில்' இதழில் அரிய தமிழ்ச் சொற்களை ஆக்கி வழங்குகிறார். இன்னும் பலரும் இப்பட்டியலில் இடம்பெறற்குரியவர்கள். இங்கு எழுத இடம் இல்லையே!

தமிழ் நலம் பேணும் மன்றங்கள் பல, நல்ல தமிழ் படைக்கும் பணியில் பங்குகொண்டு வருகின்றன. 'மறைமலையடிகள் மன்றம்' – புஞ்சைப் புளியம்பட்டி, 'இயற்றமிழ்ப்பயிற்றகம்' திருவாரூர், 'அழகப்பா தமிழ் மன்றம்', காரைக்குடி, 'தமிழ்நாடு பொறியியல் சங்கம்'. சேப்பாக்கம், 'தமிழகப் புலவர் குழு', திருச்சி, திருவள்ளுவர் கழகம்' மதுரை, 'பல்தொழில் கல்லூரி மன்றம்' கோவை, 'உலகத் தமிழ்க் கழகம்' – நெய்வேலி முதலிய மன்றங்களும், இவை போன்ற இன்னும் பல நிறுவனங்களும், தமிழாக்கப் பணியில் முனைந்து ஈடுபட்டு வருகின்றன. இவற்றின் படைப்புகள், எதிர்கால ஆட்சிக்குப் பெரிதும் வளம் வழங்குவதாகும்.

இச்செய்திகள் யாவும், ஆட்சித் தமிழ் வளர்ச்சியில் ஆர்வம் பூண்ட அனைவரும் அகங்குளிரப் போற்றும் செய்திகளாகும். எனவே, இவற்றையும் இங்குக் கூறலானேன். இத்துடன், மறுமுறையும் என் நன்றிக்கு உரியவர்கள் யாவர்க்கும், உங்கள் அன்பின் பொறுமைக்கும் உட்பட, நன்றி நவின்று, 'ஆட்சித் தமிழ்' விரிவுரையின் மூன்றும் நாள் பேச்சை முடித்து, விடைபெற்றுக் கொள்கின்றேன்.

வணக்கம் !

அச்சில் வாரா அருந்தமிழ்—6

இளங்காரிகுடி

மெய்ம்மொழித்தேவர்

அருளிய

மெய்ம்மொழிச் சரிதை

பதிப்பாசிரியர் :

மு. சண்முகம் பிள்ளை

தமிழ் விரிவுரையாளர்,

திருக்குறள் ஆராய்ச்சிப்பகுதி,

சென்னைப் பல்கலைக் கழகம்.

சென்னைப் பல்கலைக் கழகம்

1977

முதற் பதிப்பு : ஆகஸ்டு, 1977.

இதுவரை வெளிவந்த அருந்தமிழ் நூல்கள்

1. அப்பாண்டைநாதர் உலா

   —தமிழாய்வு I, 1972

2. நாககுமார காவியம்

   —தமிழாய்வு II, 1973

3. திருமேற்றிசை அந்தாதி

   —அப்பாண்டைநாதர் உலா தனிநூலின் பிற்சேர்க்கை 1974

4. ஈனமுத்துப் பாண்டியன் கதை

   —தமிழாய்வு III, 1974

5. அடிமதிக்குடி அய்யனார் பிள்ளைத்தமிழ்

   —தமிழாய்வு IV, 1975

முகவுரை

'மெய்ம்மொழிச் சரிதை' என்னும் சைவ சாத்திர நூல் 17ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த தத்துவராயரின் கவனத்தை மிகவும் கவர்ந்த தொரு நூலாகும். தத்துவராயர் தமது பரமாசாரியர் சிவப்பிரகாசரின் பெயரால் திரட்டியருளிய வேதாந்தத் தொகைநூலான 'சிவப்பிரகாசப் பெருந்திரட்டில் இந்நூலிலிருந்தும் பல பாடல்களைத் தெரிந்தெடுத் துள்ளார். மெய்ம்மொழிச் சரிதை-சுபக்கம் 361 பாடல்களில் 109 பாடல்கள் தத்துவராயரால் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. பரபக்கம் 124 பாடல்களுள் இப்பொழுது கிட்டியுள்ள 42 பாடல்களில் 14 பாடல் கள் பெருந்திரட்டிலும் காணப்படுகின்றன. இந்தக் கணக்கை உற்று நோக்கினுல் மெய்ம்மொழிச் சரிதையிலுள்ள மொத்தப்பாடல் களுள் ஏறத்தாழ மூன்றிலொருபங்குப் பாடல்கள் பெருந்திரட்டில் இடம் பெற்றுள்ளன என்பது தெரியவரும்.

பெருந்திரட்டில் இந்நூலின் பெயர் ''மெய்ம்மொழிச் சரிதை' என்றும், 'மெய்ம்மொழி' என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்நூற்பெயர் சுருக்கமாக 'மெய்ம்மொழி' என்றும் வழங்கப்பட்டு வந்திருத்தல் வேண்டும் என ஊகிக்கலாம்.

மெய் என்பது உண்மை என்னும் பொருள் தருதலேயன்றி மெய் யான உண்மைகளை விளக்குகின்ற நூல் என்னும் பொருளையும் தரும்.

> 'யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்
> வாய்மையி னல்ல பிற' (குறள். 300)

என்னும் குறளில், 'மெய்யாக் கண்டவற்றுள்' என்பதற்கு, 'மெய்ந் நூல்களாகக் கண்டவற்றுள்' எனப் பரிமேலழகர் உரைவகுக்கின்ருர். மணிமேகலையில்,

> 'மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடெனும்
> இத்திறம் தத்தம் இயல்பினிற் காட்டும்
> சமயக் கணக்கரும்' (மணி. 1 : 11-13)

எனச் சீத்தலைச்சாத்தனுர் சமயக்கணக்கர்பற்றிக் கூறுமிடத்து அவர், மெய்த்திறம், வழக்கு, நன்பொருள், வீடு என்னும் நான்கிலும் நல்ல பயிற்சியுடையராயிருப்பர் என்று கூறுகிருர். இங்கே, 'மெய்த்திறம்' என்பது மெய்ம்மையை உணர்த்துவனவாகிய நூல்களையேயாகும். சமயக்கணக்கர்தந்திறங் கேட்ட காதையிலும்,

'மெய்த்திறம் வழக்கென விளம்புகின்ற
எத்திறத் தினுமிசை யாதிவர் உரை' (மணி 27 : 106–107)

என்று சாத்தனுர் பேசுகின்ருர். இவற்ருல் சமய உண்மைகளைத் உணர்த்தும் நூலையே 'மெய்த்திறம்' எனக் குறிக்கின்ருர் என்பது தெளிவு.

மெய்த்திறம் என்னும் பண்டைய வழக்குப் போலவே 'மெய்ம் மொழி' என்பதும் சமய உண்மைகளை உணர்த்தும் நூலைக் குறிக் கிறது. மெய்ம்மொழிச் சரிதை யென்ருல் உண்மைப் பொருள் வர லாறு என்ரும். இந்த மெய்ம்மொழிச் சரிதை நூலும் சிவஞானசித்தி யாரைப் போன்று பரபக்கம், சுபக்கம் என்னும் இருகூருயமைந்த தொரு சைவ சாத்திரநூலாகும்.

இந்த நூலின் நடை சித்தாந்த சாத்திரங்களைப் போன்ற சிறப் பான நடையாகக் காணப்படவில்லை. இலக்கிய வரலாற்றுப் பேரறி ஞர் திரு.மு. அருணுசலம் அவர்கள், தமது பதினுன்காம் நூற்ருண்டுத் தமிழிலக்கிய வரலாற்றில் இந்நூல்பற்றி உரைக்குமிடத்து, 'நூலில் பயிலும் சமயச் சொற்கள் சித்தாந்த மரபுக்குரியனவல்ல. வேதாந்த மரபுக்குரிய சொற்களும் இந்நூலில் நிரம்பக் காணப்படுகின்றன. எனவே, இந்நூலாசிரியர் ஓரளவு சித்தாந்தம் கற்றவராய் வேதாந்தம் உணர்ந்து நூல்செய்தார் என்று கருதுதல் பொருந்தும்' என்று குறிப் பிட்டுள்ளார்கள்.

இந்நூல் சிவஞானசித்தியாரைப் பின்பற்றி எழுந்த தத்துவப் பிரகாசம், தத்துவரத்னுகரம், சிவார்ச்சனு போதம் முதலியவற்றைப் போன்றே உள்ளமையினுல், இது சிவஞானசித்தியாருக்குப் பின்ன ரும் தத்துவராயருக்கு முன்னரும் தோன்றியது என்பது தெளிவு. இதன்காலம் சுமார் 1400–ஐ ஒட்டியதாகலாம் எனத் திரு. மு. அருணு சலம் அவர்கள் கொள்ளும் கருத்து ஏற்புடையதேயாகும்.

மெய்ம்மொழிச் சரிதை பரபக்கம், சுபக்கம் என்னும் இரு பெரும் பகுதியதாய் மொத்தம் (124 + 361) = 485 பாடல்களைக் கொண்டுள்ளது. பரபக்கத்தின் முற்பகுதிக்கும் இடையிற் சில பகுதி களுக்கும் உரிய ஏடுகள் சிதைந்துவிட்டன. இதன் மூன்றிலொரு பகுதி அழிந்து போயிற்று; அதனை அறிவதற்கு வேறு ஏடு எதுவும் கிட்டவும் இல்லை. ஆனுல், சுபக்கப் பகுதி முழுமையாயுள்ளது. எனவே, இந்தப் பதிப்பில் சுபக்கப் பகுதியை முதற்கண்தந்து, நூலின்முற்பகுதியாய் அமைந்த சிதைவுற்ற பரபக்கப் பகுதியைப் பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளேன். முகவுரைப் பகுதி என்னும் தொடக்கப்பகுதியில் சில அடிகள் தவிர ஏனைய வெல்லாம் சிதைந் துள்ளன. இதனுல் நூலைப்பற்றியும் ஆசிரியரைப்பற்றியும் உள்ள அருமையான செய்திகள் அழிந்து போயின. கிட்டிய வரையில் பரபக்கத்தில் நையாயிகம், லோகாயதம், மாயாவாதம் பற்றியவற்றில்

சில பகுதிகளும் சாதிபேதம் பற்றிய பகுதியும் மட்டுமே காணப் படுகின்றன.

இந்நூலில் சுபக்கப் பகுதி 'பதிபேதம்' என்பது முதலாக 'வினு வுரை ஈருக 19 பகுதிகளைக் கொண்டுள்ளது. இந்நூலுள் காணப் படும் பாடல்கள் முழுமையும் அறுசீர் விருத்தங்களாயுள்ளன.

இந்நூலின் ஒவ்வொரு பகுதியும் சீடன் வினவக் குருவானவர் விடையிறுப்பது போன்ற அமைப்பில் உள்ளது. 'பதிபேதம்' பற்றிய பகுதி தொடங்கும் போது சீடன், சமயமாம் பார் தாக்காமல் தன்னைச் சேமமாகக் கொண்டுவந்தது போன்று சிவபெருமான் அருளிய ஆகமத்தின் பொருளை விளக்கிக்கூற வேண்டுகிறான். அதற்கு விடையாகக் குரு, 'தீதிலாப் பதியாயுள்ள சிவ முதல் தத்து வங்கேள்' என்னும் பீடிகையுடன் சொல்லத் தொடங்குகிறார். இவ் வாறே ஒவ்வொரு பொருட் பகுதியும் அமைதல் காணலாம். ஒரு சில பகுதிகளில் ஆசிரியரே சீடனின்ஐயத்தை மேலிட்டுக்கொண்டு விளக்கம் தருவதாயும் உள்ளது. தாண்டவ மூர்த்தி சுவாமிகள் செய்த 'கைவல்லிய நவநீதம்' குருசீடர் உரையாடலாய் இருப்பதை போன்ற அமைப்பில் இவ்வாசிரியர் விளக்கும் பொருட் பகுதி களும் உள்ளமை சிந்தித்தற்குரியது.

மெய்ம்மொழிச் சரிதை நூலுக்கு உரை விளக்கமும் ஏட்டுப் பிரதியில் காணப்படுகிறது. இவ்வுரையை நூலாசிரியர் வழிவந்த மாணுக்கர் யாரேனும் இயற்றியிருத்தல் கூடும். இந்நூலின் உரை பெரும்பான்மையும் பொழிப்புரையாயும் சில இடங்களில் கருத்து ரையாயும் அமைந்துள்ளது. ஒருசில பாடல்களுக்கு விரிவுரையும் உண்டு. இந்த உரையின் போக்கில் சமய சங்கேதச் சொற்களும் பிறகுறிப்புச் செற்களும் கலந்து காணப்படுவதால் எளிமையானது என்பதற்கில்லை. சிற்சில இடங்களில் மணிப்பிரவாள நடைபோன்றும் உள்ளது.

எடுத்துக்காட்டாகச் சுபகத்தின் முதலிரண்டு பாடல்களின் உரையை முதலில் காண்போம்:

"இதன் கருத்து ஆராதசுக சுவரூபமான மோட்சமாகிற அந்தக் கரைக்கு ஞானமென்கிற தோணியையுடையாதபடிநோக்கிக் கொண்டு போந்தாற் போல சுவாமி பெரியதாயிருந்துள்ள ஆகமத்தின் பொருளையருளிச் செய்ய வேணுமென்றவாறு." (1)

"சிவாகமத்தில் ஞானயோகக் கிரியா சரிதமென்னும் நூலில் ஞான பாதத்தில் சொல்லப்பட்டன பதி பசு பாச மூன்றிற் பதியாயுள்ளவன் சிவன். பசுவென்பது அணுவாயுள்ள ஆன்மாக்களை. பாச மென்று சொல்லப்பட்டது அஞ்சு. கேடில்லாத சிவன் முதலாயிருந்துள்ள தத்துவங்களைச் சொல்லுகிறேமென்றவாறு." (2)

பரபக்கத்தில் சாதிபேதம் என்னும் பகுதியின் இறுதிப்பாடலுக் குரிய உரையையும் காண்போம். 'இது சாதி ஒன்றே. என்பதனையும் பேதம் எல்லாம் கற்பனையே என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

"இதன் கருத்து: கீழ்ச் சொல்லிப்போந்த கிரமத்தால் மனித் தர் யோனியெல்லாம் ஒருசாதி யென்றறிந்து கொள்க. வேதத்துக்கு யோக்கியன் பிராமணனென்று சொல்லின் அல்லாதவர்களுக்கு மாறுபாடா நிற்கும். அது நிற்கச் சாதி பேதங்களுண்டென்று சொல்லுமவையெல்லாம் கற்பனை யென்று கொள்வது யெத்தா லென்னில் பரமேஸ்வரன் அருளிச் செய்த திவ்யாகமங்களில் ஞானபாதத்தினருளிச் செய்யும் அருத்தங்களருமையாயிருக்கும். அந்த ஞானபாதத் திற்குச் சாதி யெல்லாம் ஏக சாதி யென்னும்படிக்கு ஏது திட்டாந்தரங்களால் அருளிச்செய்தருளித்து. ஆதலாற் சாதி பேதம் கற்பனை யென்றறிந்து கொள்க என்றவாறு."

இவ்வாறு பல்வேறு வகையில் இந்நூற்பாடல்களின் உரைவிளக் கம் உள்ளது. மூலபாடங்களை நிர்ணயிப்பதற்கு இந்த உரையும் பெரிதும் பயன்பட்டது.

இந்நூலாசிரியர் பெயர், 'இளங்காரிகுடி மெய்ம்மொழித்தேவர்' என்பது ஏட்டுப் பிரதிக் குறிப்பினுல் தெரியவருகிறது. ஆசிரியர் தம் பெயராலேயே நூலையும் 'மெய்ம்மொழிச்சரிதை' என்று குறித்தனர் போலும். இந்நூலின் ஐந்தாம் பகுதியான தத்துவ சிருட்டிப்பகுதி முடிந்ததும் பின்வரும் வெண்பா ஒன்று காணப்பட்டது.

'எண்ணிலாப் புத்தாதி யெப்பொருட் டட்டறுத்து
விண்ணிலார்க் கும்மரிய வீட்டின்பம்—பண்ணி
விளங்குமிளங் காரிகுடி மெய்ம்மொழித் தேவன்
களங்கமறுத் தானிந்நூல் கண்டு.'

இப்பாடல் நூலாசிரியர் வாக்கன்று என்பதும் வேறொருவரால் பாடப்பட்டது என்பதும் பாடலைப் படித்த அளவிலேயே விளங்கும். அதனுல்தான் தத்துவசிருட்டிப் பகுதியின்பின் இப்பாடலை நூலுள் சேர்த்து அச்சிடவில்லை. சிறப்புப் பாயிரமாய் இஃது அமைந்துள்ளது. இதனுல் நூலாசிரியர் இளங்காரிகுடியைச் சார்ந்தவர் என்பதும், 'மெய்ம்மொழித் தேவன்' என்பது இவர்தம் இயற்பெயர் என்பதும் விளங்கும். 'தேவர்' என்பது சமய உபதேசம் பெற்றுச் சிறந்து விளங்கும் உயர்ந்தோராகிய துறவியரைக் குறிக்க வழங்கும் பெய ராகும். ஆதலால், இவரும் துறவியாயிருந்தாரென்றும், அந்த நிலையில் இந்த நூலை ஆக்கினுர் என்றும் கருதலாம்.

சிவப்பிரகாசப் பெருந்திரட்டில் இடம்பெற்ற மெய்ம்மொழிச் சரிதை என்னும் இந்நூல் இதுவரை முழுமையும் அச்சாகாத நூல்

களுள் ஒன்று. இதற்குரிய ஏட்டுப்பிரதிகளும் பரவலாக இல்லை. அதனல் அத்திரட்டில் உள்ள நூற்பெயர் ஒரு கற்பனைப்பெயரோ என்று கூட ஐயுற்றவர்களும் உண்டு. இந்த ஐயங்களை யெல்லாம் நீக்கும் வகையில் ஒரேயொரு பிரதியாய் இது மறைந்த மதிப்பிற்குரிய பெருந்தமிழ்ப் புலவர் வேலம்பாளையம் ரா. தெய்வசிகாமணிக்கவுண் டர் அவர்களிடம் இருப்பது தெரியவந்தது. உரையுடன் கூடிய இந்த நூலின் ஏட்டுப்பிரதியைப் பெரியார் தெய்வசிகாமணிக்கவுண் டர் அவர்களே பிரதி செய்து வைத்திருந்தார்கள். இந்தக் கையெழுத் பிரதியைப் பெற்று வந்து தமிழாய்வில் வெளியிட ஊக்கம் தந்த தமி ழன்பர் பல்கலைச் செல்வராகிய கடலூர் தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்களாவர். முதுபெரும் புலவர் தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள் மறைவதற்கு முன்பாகவே இதனை வெளிக்கொண்டுவர வேண்டும் என்று பெரிதும் முயன்றும் ஒருசில குறுக்கீடுகளால் முன்பே அச்சிட இயலாமற்போயிற்று. பற்பல பழஞ்சுவடிகளையும் பெருவிருப்புடன் தொகுத்து மிகுந்த சிரத்தையுடன் அவற்றைப் பிரதிசெய்து வைக்கவும் முற்பட்டுள்ள தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களுடைய தமிழ்ப்பற்றை எவ்வளவு போற்றினலும் தகும். அப் பெரியாரின் மறைவுக்குப்பின் இது வெளிவரினும் இந்நூலைத் தேடித் தொகுத்து வைத்துக் காப்பாற்றி வழங்கிய பெருமை அவர்களையே சாரும். அவர்கள் வழங்கிய கையெழுத்துப் பிரதியைக் கொண்டே இந் நூலின் மூலம் மட்டும் இப்பொழுது அச்சிடப்பட்டுள்ளது.

மூல ஏடு கிட்டப் பெருமையாலும் வேறு பிரதிகள் கிட்டாமை யாலும் இந்நூலின் உரையையும் உடன் சேர்த்து அச்சிடத் தயங்கி, மூலம்மட்டுமே பதிப்பிக்கலாயிற்று. இனி, உரையுடன் இந்நூல் மேலும் சிறப்புற வெளிவருவதற்கும் இம் மூலப்பாடப்பதிப்பு முன் மாதிரியாய் உதவலாம் என்று நம்புகிறேன். இந்நூலுக்குரிய ஏடு யாரிடமேனும் இருக்குமாயின் தந்துதவினல் இனிவரும் பதிப்பு மேலும் செம்மையுறுவதற்கு வழி யாகும். ஆதலால் இந்நூலின் பிரதிபற்றித் தெரிய வருமாயின் அறிவிக்குமாறும் தந்துதவுமாறும் தமிழன்பர்களைப் பெரிதும் வேண்டிக்கொள்கிறேன்.

மூலப் பிரதியை வழங்கிய மறைந்த பெரியார் தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களுக்கு என் வணக்கம் உரித்தாகுக. இந்த நூற் பிரதியைப் பெற்று வந்து தந்ததோடு வெளியிட வேண்டும் என்று அடிக்கடி தூண்டிய பெரியார் தி. கி. நாராயணசாமி நாயுடு அவர் களுக்கு என் வணக்கமும் நன்றியும் உரியனவாகுக.

சென்னை-5
3—8—77. **மு. சண்முகம் பிள்ளை**

சுபக்கத்தின் பொருளடக்கம்

பொருள்	பக்கம்	பாடல்
1. பதிபேதம்	1	49
2. செகத்துற்பத்தி	7	17
3. பசுவிலக்கணம்	9	36
4. பாச இலக்கணம்	13	10
5. தத்துவசிருட்டி	14	44
6. வீடு பற்று	19	17
7. அவத்தாலக்கணம்	21	17
8. முத்திசித்தியிலக்கணம்	23	10
9. ஆசாரியலக்கணம்	24	17
10. சீஷலக்கணம்	26	9
11. தீக்ஷாலக்கணம்	27	5
12. அத்துவாவிலக்கணம்	28	24
13. சமயாசாரம்	31	12
14. அட்டாங்க யோகம்	33	42
15. அரும்பொருள் கூறல்	38	9
16. தனையறியோகம்	39	6
17. பரமயோக லக்கணம்	40	10
18. அனுபோகலக்கணம்	41	15
19. வினவுரை	43	12
		361

பின்னிணைப்பு :

பரபக்கம்	45	42
பாடல் முதற்குறிப்பு அகராதி :		
சுபக்கம்	51	
பரபக்கம்	56	

இளங்காரிகுடி

மெய்ம்மொழித்தேவர்

அருளிய

மெய்ம்மொழிச் சரிதை

சுபக்கம்

1. பதிபேதம்

1. அமைவி லின்பக் கரைக்கிங் கறிவெனுந் தோணி பற்றிக்
கமைவிலாப் பிறவிப் பௌவங் கடந்தேற லுறுகின் றேற்குச்
சமையமாம் பார்தாக் காமற் றவிர்த்துநீ கொடுபோந் தாற்போல்
எமையையா ளுடையாய் நல்கா யிருஞ்சிவ னுக மார்த்தம். 1

2. நாதனற் சிவாக மஞ்சொல் நாலு பாதத்து ஞான
பாதநற் பொருள்கள் மூன்றும் பதிபசு பாச மென்றே
யாதிநற் பதிசி வன்று னணுப்பசுப் பாச மைந்தாந்
தீதிலாப் பதியா யுள்ள சிவமுதல் தத்து வங்கேள். 2

3. திரிவித தத்து வங்கள் சிவசதா சிவம கேசம்
விரியுநற் சிவம தொன்றும் விளம்பிடிற் சகள மல்ல
புரிதரு சகளா சகளம் பொருந்திடுஞ் சதாசி வன்றுன்
றெரிதரு சகள மாகுஞ் செப்பிடில் மயேச மன்றே. 3

4. மன்னுநற் சிவம தேகம் மதித்திடிற் சதாசி வன்றுன்
பண்ணிடு பஞ்ச பேதம் பஞ்சவிஞ் சதிம யேசம்
சொன்னதத் துவங்கள் மூன்றிற் றேன்றிடு முப்பத் தொன்று
முன்னுமவ் வுணர்வுக் கெட்டா வொண்சிவ முரைப்பக் கேணீ. 4

5. இப்படி யிருப்ப தொன்றென் றியம்புவ தொன்ற தின்றி
யொப்புட னுணர்வு சூழ்ந்த வுணர்விறந் துணர்வா யென்றுந்
தப்பில்பே ரின்ப மாகிச் சந்ததம் விளங்கி யெங்கு
மப்படி யிருப்ப தொன்றங் கதற்கமாஞ் சிவம தென்றே. 5

6. நிராமயன் நிர்க்கு ணத்தன் நின்மலன் நித்தன் சுத்தன்
பராபரன் சூக்கிஷ் மத்தன் பாவக மொன்று மில்லான்
புராதனன் போதா னந்தன் புகலுமவ் வளவுக் கெட்டா
விராமயன் மாயா தீத னென்றுகொள் சிவம தென்றே. 6

7. தத்துவ மனைத்துஞ் சாரான் சைதனன் சாந்தன் சுத்தன்
மத்தமா மலாதி பாசம் மயக்குறுன் வடிவொன்றில்லான்
நித்தனு யேக னுகி நிரவய னுய னுதி
முத்தனுய் முத்தி நல்கு முழுமுதல் சிவம தென்றே. 7

8. எல்லாந்தன் னுள்ள தாகி யெவைகளுந் தானே யாகிச்
சொல்லாத பொருளு மாகித் தொல்லையா யெல்லை யின்றி
யல்லாதோர் வடிவொன் றின்றி யானந்த வடிவே யாகிக்
கல்லாதோர் காட்சி யாகிக் கலந்துதா னி[ற்ப னன்றே.] 8

9. அன்றியொன் றில்லாம லாலே அகிலமுந் தானே யாகு
மென்றிங்ங னியம்ப லாகி யீறிலா வின்ப மாகி
யொன்றுடன் பற்று மின்றி யொழிவள நிறைந்து மேலாய்
நின்றது பரம தென்றே நிகழ்த்தின மறைக ளெல்லாம். 9

10. தோற்றமு மாதி யாய தொழிலைந்துந் தன்க ணுளு
மேற்றவச் சத்தி கட்கங் கேதுவாஞ் சேட்டை மற்றும்
வேற்றுமை யிலாத லாலே விளம்புவர் சிவம தென்று
சாற்றினமற் றென்று மல்லாத் தன்மையன் சயம்பு வன்றே. 10

11. பெண்ணிலி யாணென் றில்லான் பெத்தமு முத்தி யில்லான்
வண்ணமும் வடிவு மில்லான் வரவொடு போக்கு மில்லான்
றிண்ணிய பொருளாய் மேலாய்ச் சேமமா யரிதாய்க் கொண்டு
வெண்ணிலா வானுய்த் தூய்தா யிருப்பது சிவம தென்றே. 11

12. சத்தியுந் தானுங் கூடிச் சகல பல் லுயிர்க டோறு
மொத்துயி ராகி னிற்க வுருவிதென் றுணர வொண்ணு
னத்தன்மை யவற்றுக் கெல்லா மாதார னுனே யென்னும்
சித்தமு மில்லா வின்பஞ் சிவமெனப் படுவ தன்றே. 12

13. பொறிகள் போய்ப் புறக்க ணெங்கும் புலன்கள் மேற் பொருது
வறிவற நோக்கிக் கொண்டே யகமுக மாயி னுற்குப் [கின்ற
பொறிபுலன் கரண மெல்லாம் புறம்புமுள் பொழிந்து மேலாய்க்
செறிவுறு மின்ப வெள்ளஞ் சிவமெனப் படுவ தன்றே. 13

14. பன்னுமெந் நூல்க ளாலும் பகருமவ் வளவை யாலும்
மன்னுமிப் பொருள தென்கை வாசக ஞான மாகும்
உன்னுமவ் வுணர்வுக் கெட்டா ஒப்பில் பேரின்ப வெள்ளம்
தன்னனு போக மாகத் தான்றனிற் காண்ப தொன்றே. 14

15. தத்துவஞ் சகலோற் பத்தி தான்செக சிருட்டி யாய
உத்தம யோகி கட்கு முபகார நிமித்த மாகச்
சுத்தநற் சிவத்தோர் சிந்தை சுபாவசத் தியினுற் றேற்றி
லத்தி லாயிரத் தொன்றி லரும்பரா சத்தி தானே. 15

16. ஆதியாஞ் சத்தி தோன்றி யத்தி லாயிரத் தொன்றிற்
பேதியா விச்சை யத்திற் பிறந்ததாங் கதனிற் பின்பே
லோதிலா யிரத்தி லொன்றி லுதித்தது ஞான சத்தி
தீதிலாக் கிரிகை யும்பின் செனித்தாங் கதனி லன்றே. 16

17. ஒப்பிலாச் சிவத்தின் கண்ணின் றுதித்தவிப் பராசத் தீதான்
செப்பிலாங் கந்த மென்றும் தேர்ந்திடிற் சகள மன்று
தப்பிலாப் பரையோ டாதி சத்திகள் கூட்டந் தன்னில்
அப்படிச் சதாசி வந்தா னுதித்ததென் றறிந்துங் கொள்ளீர். 17

18. சிந்தித்து வணங்கு வார்க்குத் தியானஆ சாந்த மாகச்
சந்தித்துச் சகளா சகளஞ் சதாசிவ மாகு மன்றே
வந்திக்குஞ் சதாசி வன்முன் மதிக்கி லைந்தா மிவற்றின்
முந்தித்துச் சிவம தன்றன் மூத்திகத் திருக்குங் கன்மம். 18

19. சுத்தநற் சிவம தென்றுஞ் சொல்லிடிற் சதாசி வன்முன்
வித்தக வமுத்த மூத்தம் விளங்குநற் பரம மூத்தம்
கத்திருட தீய மென்றுங் கன்மமீ சான மென்றும்
தத்துவம் [பகர்ந்த தைஞ்சு]ஞ் சதாசிவ மைஞ்சு மன்றே. 19

20. தத்துவ மூர்த்தி பாவஞ் சாற்றிடு மிந்த மூன்றிற்
தத்துவஞ் சிவத்தி னென்றுஞ் சதாதிவ மாதி மூர்த்தி
தத்துவ மூர்த்தி யாகித் தற்சுவ ரூபத்தைப் ப[ா]வந்
தத்துவ மூர்த்தி பாவஞ் சதாசிவ மான தன்றே. 20

21. சந்ததஞ் சிவம்பா வத்தாற் சதாசிவ மான தென்றும்
சிந்தை செய் சகளா சகளந் தேகமுந் தேகி தானும்
அந்தமி லிரண்டின் பாவ மகிலபூ சாத்த மாகும்
பெந்தமில் சதாசி வத்திற் பேதமா றுதித்த வாகேள். 21

22. சாற்றிடி லாதி சத்தி தன்னிலே பத்தி லொன்றிற்
றேற்றிடு மூர்த்த மான துகளிலாச் சதாசி வன்முன்
சீற்றமி லிச்சா சத்தி பத்திலொன் றதிலு தித்துப்
போற்றிடப் படுந்தான் போதம் மூர்த்தியாஞ் சதாசி வன்முன். 22

23. அலந்தமெஞ் ஞான சத்தி யத்திலே பத்தி லொன்றிற்
கலந்துதான் தோன்றிற் றன்றே கதித்திரு சதாசி வன்முன்
சலந்தரு கிரியா சத்தி தன்னிலே பத்தி லொன்றில்
நலந்தரு கன்ம னும சதாசிவ முதித்த தன்றே. 23

24. பீடலிங் கத்துத் தானும் பேசிடிற் கன்ம மூர்த்தம்
நாடின விந்துப் பீடம் நாதமாம் இலிங்க மென்றும்
கூடுமவ் விரண்டிற் கன்ம சதாசிவம் கூடி லன்றே
தேடிலாக் கத்தி ராதி கேவல நாத மூர்த்தி. 24

25. விந்துமத் திமத்த தாகும் விளங்கிடு நாத மென்றும்
மந்தநா தத்தே கந்தான் மலமற மூர்த்தி சொல்லில்
சந்தத மூர்த்தி தன்னிற் றத்துவங் கேத மாகும்
சிந்தைசெய் தத்து வத்திற் சிவன்கேத மாகு மன்றே. 25

26. இந்தவிச் சிவமா யுள்ள விலிங்கத்தில் யாவும் தோன்றி
யந்தத்திற் கெதமாய் நின்றே யத்திலே யிலைக்கும் முன்தான்
இந்தவிச் செகத்துற் பத்திக் கேதுவாம் யோனி லிங்கம்
அந்தத்திற் கேதுவாம் கன்ம சதாசிவ மான தன்றே. 26

27. திருத்தமாஞ் சதாசி வாதி செப்பிய பேத மைந்தும்
பொருத்தமாய் யோகம் போற்று கன்மசா தாக்கி யந்தான்
கருத்தனும் கன்ம மாய சதாசிவந் துடங்கி மேன்மேல்
ஒருத்தனும் சிவத்தே சொல்ல வொன்றையொன் றடைந்து
[நிற்கும். 27

28. கொடியவன் பிறப்ப றுக்கும் கூர்த்தமெய்ஞ் ஞான மெய்த
கடிகொண்மா மலர்க டூவி கசிந்துள நியம முற்றோர்
அடிகளாஞ் சதாசி வத்தர் அடியினை வணங்க லாலே
வடிவினோ டவனி ருக்கும் வண்ணமும் இயம்ப லுற்றும். 28

29. பஞ்சமந் திரமே சாந்தம் பழுதிலாச் சத்தி யத்தார்
பஞ்சமாந் தொழில்க ளைந்தாற் பாவகஞ் சகலா சகலம்
பஞ்சபூ தங்கட் கீசர் பஞ்சமா மவற்றுல் வண்ணம்
பஞ்சமா முகங்க ளென்றும் பகர்ந்திடிற் சதாசி வற்கே. 29

30. பங்கயா தனமா மேனி படிகமாம் முடிமே லென்றும்
திங்களாம் முகங்க ளைந்தில் திருநய னங்கள் மூவைந்
தங்கமோ ராறு மெனறும் மத்தமும் பத்த வற்றிற்
தங்குமா யுதங்கள் பத்தாம் சாற்றுகம் பேறும் இன்னம். 30

31. பஞ்சநன் முகத்தீ சர்மைப் படிகமாங் குங்கு மந்தான்
வஞ்சமில் புருட னுகு மதித்திடி னகோர மென்று
மஞ்சன வண்ண மாகு மிரத்தஞ்சீர் வாம மாகும்
வெஞ்சொலிற் சத்தி யோசை விளங்கிடுந் தவள மாமே. 31

32. சந்திர னிருத யந்தான் சாமமாம் சிரத்தின் வண்ணம்
சிந்துரஞ் சிகைய தாகுஞ் சிறந்திடுங் கவசங் கார
மத்திரத் திலங்கு மின்போ லாதலால் நேத்தி ரந்தான்
சுந்தரச் சுடரே போன்றுந் துலங்குமத் திறம தென்றே. 32

33. பட்டிடுங் கொலைவேல் சூலம் பரசுவா ளபய மைந்தும்
மொட்டிடு வலத்தே யென்று மிடத்துறு மஞ்சுஞ் சொல்லிற்
கட்டிடும் பாச நாகங் கனலுடன் ரேட்டிக் கண்டஞ்
சட்டமாஞ் சதாசி வத்தர் திருவுரு விதுவி னங்கேள். 3

34. காரியங் கன்மற் கீதாங் கத்திருப் பளிங்காங் கன்னஞ்
சீரிய மூத்தி மூத்தம் செஞ்சுடர் விடுதீப் போலும்
சூரிய ரனந்த கோடி சோதிபோல் மூத்த மாகும்
தேரிலோ கலையி லாமற் சிவசதா சிவற்கொன் றில்லை. 34

35. நேர்ந்திடுங் கிழக்குக் கன்மம் நீரகத் திருந்த தெற்குமா
மார்ந்திடு மேற்குமூர்த்தி யம்மூர்த்தி யிவ்விடக் குதறை
யோர்ந்திடி னூர்த்த மாகுஞ் சதாசிவற் குரைக்கில்...
சேர்ந்திவை கன்மே சற்குத் திருமுக மைந்தா மன்றே. 35

36. உன்னிமுன் சிவமூ லத்தை யூத்த மும்பர் முகத்தான்
மன்னுநற் கன்மே சம்போல் மனத்தினுற் கற்பித் தத்தைச்
சொன்னவ் விதியி னுலே துகளறப் பூசை பண்ணி
பண்ணுமப் பூசாந் தத்திற் பண்டுபோற் பாவி யின்றே. 36

37. இந்திர சாப மெங்ஙன் தற்பணத் திலங்கு மங்ஙன்
மந்திர மூர்த்தி யைந்தான் மனத்தினுற் சிவன்கற் பிக்கத்
தந்திரச் சகள மில்லிச் சகளமாம் பாவ கத்தா
லந்தரச் சதாசி வம்பின் பெதிர்முக மாகு மன்றே. 37

38. பாவக மெய்யோ வென்னிற் பார்க்குமக் கருட னுதிப்
பாவகங் கொண்டு பார்க்கப் பருவிடந் தீரு மாங்கே
பாவகச் சிவம்பா விக்கப் பண்டையஞ் ஞானம் போய்ப்பின்
பாவக மில்லா ஞானம் பயந்தின்பப் பரமா மன்றே. 38

39. கலைகளீ ரெட்டில் வன்னிக் கலைகளைந் தாம மத்தோடு
நிலையுளீ ரைந்தொ டொன்று நிகழ்வித்து நாலெ மூத்தை
விலையிலா விந்து நாத மெய்க்குயிர் கொடுத்தாங் காக்கித்
தலையிலே பிரம மஞ்சு சடங்கமுச் சரிக்க வன்றே. 39

40. ஈரெட்டுக் கலையி லாறு யீரேழா மெழுத்தி னேரு
மோரெட்டாம் வர்க்கந் தன்னி லொருமூன்ரே டொக்கக்கூட்டிச்
சீரெட்டு விந்து நாதந் திகழவுச் சரிக்கக் கொன்றைத்
தாரிட்டுச் சதாசி வத்தா தாமுகஞ் செய்வ ரன்றே. 40

41. சார்ந்தநற் கன்ம மாய சதாசிவா யிரத்து ளொன்றிற்
போந்தனர் மகேசர் தாமும் பொருந்திய சகள மூர்த்த
மார்ந்தவம் மகேசர் தாமும் யனேககோ லங்கள் கொண்டு
வேந்தரா யியந்தி ரத்து விளையாடச் சகத்தைக் கொண்டே. 41

42. பலவகைச் சகத்தை யெல்லாம் பண்ணியு மளித்த ழித்தும்
பலவகை யுயிர்கட் கென்றும் பரிந்தரு ளதுவே பண்ணப்
பலவகை முத்த மான பஞ்சவிஞ் சதிம கேசர்
பலவகை நாம மெல்லாம் பகர்ந்திட லுற்ற தன்றே. 42

43. இந்துமுன் றரித்தோ னுரி பாகன்தன் னிடப வாகனன்
கந்தரக் கூத்தன் விவாக சுந்தரன் பலிகொள் மூர்த்தி
கந்தனிற் காம னுசன் காலாக்கினி தேவர் மற்று
மந்தரத் திரிபு ராந்த னுறது சூடி யன்றே. 43

44. வெங்கரி யுரித்தோன் வீர பத்திர னரிய ரன்ருன்
சங்கையி லத்த நாரீச் வரன்கங் காள வேடன்
பங்கமில் தண்டிக் கீந்த பராபர னஞ்சை யுண்டோ
னங்கையி லாழி மாலுக் களித்தவ னல்ல துங்கேள். 44

45. ஒப்பில்விக் கேசர்க் கீந்தோன் யுமார்கந் தேக பாதன்
செப்பினற் சுகாத னென்ருன் றெக்கினி லிங்க மூர்த்தி
இப்படி யிருபத் தைந்தாம் மகேச ராயிரத்தோர் கூற்றில்
தப்பிலா உருத்தி ரேசர் தாமவர் தரித்தா ரன்றே. 45

46. கோதிலா மகேசர் தம்பால் கோகுகூற் றென்றின் வந்து
தீதில்மா லயனு மங்கே செனித்தனர் என்று கொள்ளே
சோதியா மிரவி இந்து சுடருமுக் கண்ணிற் றேன்ற
வாதிநற் கணேசன் கண்டத் தறுமுக னிருதயத்தே. 46

47. பன்னீ ராதித்தர் உந்தி பகர்ந்திடில் உரோம மான
தன்னிலே நாலேழ் கோடி தனித்தனித் தேவர் தோன்றித்
துன்னியே யிருடி மாரும் தோன்றினர் நாலேழ் கோடி
மன்னிய மயேசு ரோம மற்றவர் வக்கி ரத்தே. 47

48. தத்துவ பேதஞ் சொன்னேம் சத்தியுற் பவங்கேள் விந்து
பத்தி லொன்று மாறிதற்குப் பத்திலொன் றுகு மாம்பி
யத்திலும் கெனும்பி யாங்கே யதிலும்ஈ சுவரியு மாங்கே
சுத்தமாம் மனோன்ம ணியும் தோன்றினள் அதிலு மாங்கே. 48

49. உன்னுமம் மனோன்ம ணீயாம் அதனொளி கோடி கூற்றில்
மன்னுநற் கவுரி தோன்றி மற்றவள் கோடி கூற்றில்
தன்னிலே செல்வி யோடு சரசுவதி துர்க்கை யாதி
பின்னமாய் அனந்த சத்தி பிறந்தன ரென்று கொண்ணீ. 49

பதிபேதம் முற்றும்.

2. செகத்துற்பத்தி

50. வாலிய சிவந்து டங்கி மகேசர்தா மந்த மாகப்
பாலியா வுதித்தெ ழுந்த பதிபதார்த் தங்க ளெல்லாங்
கோலிய முப்பத் தொன்றுங் கூறிநீ யருளி னுற்போல்
சீலர்கட் கிரங்கு மெந்தாய் செகத்தினுற் பத்தி யெங்ஙன். 1

51. மன்னுநற் சிவத்திற் சத்தி மதித்திடி லிருவ கைத்தாய்
பின்னமற் றிருப்ப தென்றும் பின்னமா யிருப்ப தென்றும்
மன்னிய சிவத்தைப் பின்னை மாசில்சிற் சத்தி யாகும்
பின்னமா மதுச டந்தான் பேர்சொல்லின் மாயை யன்றே. 2

52. அரியனு யறிதற் கொண்ணு வரும்பரஞ் சிவற்கு நாளும்
தெரியுமா றுருவ நாமஞ் சிறந்தசிற் சத்தி யாகும்
பிரிவிலாச் சிவத்துக் கென்றும் பின்னமா மாயா சத்தி
விரியுமா செகத்துத் தோன்றும் விதத்ததாய் மேவு மன்றே. 3

53. ஒத்தவவ் வியத்தம் வீச முபாதானஞ் சகத்தி யோனி
பெத்தகா ரண நி மித்தம் பிரதானம் பிரகிருதி யென்றும்
மத்தமா மாயை யென்று மகமாயை யென்றும் பேராய்
நித்தமாஞ் சிவமென் றன்றே நிகழ்ந்திடு மதுவு மன்றே. 4

54. பரஞ்சித்தி லுதியா நின்ற பல்கி ரணம்ப தித்தங்
கிரஞ்சித்த போது நாம மெழில்கொள் குண்டலி மாயைக்குச்
சிரஞ்சித்தன் புணர்ச்சி யாலே செகத்தைமுன் கெற்பித் தாங்கி
யுரஞ்சித்தா னின்று தானே யுலகங்க ளீன்ற தன்றே. 5

55. சுருக்கமில் சிவத்தின் சத்தி தோய்ந்தபின் மாயா சத்தி
தருக்கியே கெற்பந் தாங்கிச் சகத்தைமுன் பெற்ற தன்மை
யருக்கனக் கிரண மேற்க வந்தரத் திலங்கு மேகம்
பெருக்கநீர் கெற்பித் தாங்கே பெய்யுமா மழைபோ லன்றே. 6

56. சிற்சத்தி தானே யொன்றைச் செய்திட மாட்டா தாகும்
சிற்சத்தி யொழியச் சேட்டை செடமாயை தனக்கு மில்லை
சிற்சத்தா முயிரே கூட்டிச் செடவுடல் சேட்டித் தாங்கே
சிற்சத்தி கூட்டி மாயை செகத்தினை நடத்து மன்றே. 7

57. சித்துட னசித்து மாயே சிவசத்தி யிருப்ப தென்றுஞ்
சித்துட னசித்தி டத்தே செகத்தினுற் பத்தி தானும்
சித்துட னசித்து மாக்கும் செகந்தனிற் சராச ரங்கள்
சித்துட னசித்தா யுள்ள சிவசக்தி மயஞ்ச கத்தே. 8

58. ஒன்றுெடொன் றெவ்வா தேனும் ஒழிந்தவச் சகத்தி யாவும்
துன்றிடு மாயை தன்பால் தோன்றிடு மாறு கேளாய்

நின்றடி யொன்ற நேகம் கொம்பிலே நிறைந்த காய்பூ
என்றவை யனைத்தும் வித்தொன் றதிலெழு மாறு போற்காண். 9

59. நித்தம்போ லநித்த யாக்கை நிலையெனக் கருது வித்துச்
சுத்தமா மின்பம் போலத் துன்பத்தைத் தோற்று வித்துப்
பெத்தமா முயிர்கள் புத்தி பிரமிக்கப் பண்ணு மித்தால்
மத்தமா மாயை யின்றன் மயமதே செகத்தி யாவும். 10

60. எடுத்தவவ் வுடல்க டாமே யிரமித்தெவ் வுயிர்க டகத்தில்
அடுத்தவப் பயனு கர்ந்தே யகத்திலே திருத்த மாக்கித்
தடுத்துமே லறிய வொட்டாத் தந்திசை மயக்க மெல்லாம்
அடுத்திடு மாயை யின்றன் மயமதே யகில மெல்லாம். 11

1. இருடிக ளிமையோர் மற்றும் மோகத்தால் விடவல் லார்க்கு
மருடிக ளுடல்விட் டோட்டா மாயையின் வலியைப் பாராய்
யருடிகழ் மெய்ஞ்ஞா னத்தா லியாக்கையைப் போக்கி யின்பப்
பொருடிகழ் முத்தி யெய்தும் புண்ணியற் குவமை யுண்டோ. 12

62. பிறப்பதே பேணி நாளும் பெரியதோ ரின்ப மென்றே
யிறப்பதே தொழிலா யென்றும் மேடணைத் திரைய முற்றுச்
சிறப்பதே யுடைய வின்பச் சிவத்துடன் கூடா வண்ண
மறப்பதே பண்ணு மத்தால் மாயையின் மயஞ்ச கத்தே. 13

63. இதுவென வறிதற் கொண்ணா தியாவையு மயங்கப் பண்ணு
மதுசொலின் மாயை யாகு மருவமே யுருவ மில்லை
யெதுவெனி லிச்சை ஞானத் தொழிலுமா யிருக்கு மென்னி
லதுகுண பேதத் தாலே ஆனது சத்தி மூன்றாய். 14

64. சடத்துவ மாயை யார்தஞ் சமத்தவிந் திரிய மெல்லா
மடர்த்திட வகுத்த னாதி யவற்றினா லுடற்பே தங்க
ணடத்தினாற் பதிற்றெட் டோடு நான்குநூ றாயி ரம்பே
ரிடத்தினை யுடைய மூலச் சிவத்தின்றன் னிடத்தி லன்றே. 15

65. அலர்ந்தமுக் குணத்தி ரட்சி யாதலான் மாயை யென்று
கலந்துகா ரியமு மாகிக் காரணக் கருத்தா வாயே
பெலந்தரு பிரதா னத்தின் பேதமே சகத்தி யாவும்
நலந்தரு மீசர் செய்தி நாடிலங் கதுவு மாயை. 16

66. பதிபதார்த் தங்க ளாய பஞ்சகர்த் தாக்கள் தங்கள்
மதிசெய் மாயா வீசதத் துவத்தா மற்றவற் கிங்கிப்
பதிமாயை தானே யகில காரி யங்க ளெல்லா
முதிசெயப் பரஞ்சி வன்றா னுதாசன னாகு மன்றே. 17

செகத்துற்பத்தி முற்றும்.

3. பசுவிலக்கணம்

67. எண்ணிலாச் சிவன்தன் னோடே ஏய்ந்துநின் றியாவும் தோற்றம்
பண்ணுமா சத்தி தன்னைப் பகர்ந்துநீ யருளி னுப்போல்
திண்ணமாம் பாசத் தென்றும் சேர்ந்துள பசுவின் தன்மை
அண்ணலே யருள வேண்டும் அடியனேற் கறிய வென்றே. 1

68. சாற்றிடிற் பசுவ னாதி சகலமு மனாதி யென்று
தோற்றமுஞ் சிவத்தி லென்று சொல்லிடு மாக மங்கள்
சாற்றிடிற் சகத்துற் பத்தி தனக்குமற் றின்மை யாலே
தோற்றமும் சிவத்தி லென்றே சொல்லவும் படுவ தன்றே. 2

69. விண்ணினில் மழைக்குற் பத்தி வேலைநீர் வெய்யோன் காந்தங்
கண்ணியல் தீக்குற் பத்தி கலந்தநீ யன்றி யில்லை
நுண்ணிய பல்பி றப்பில் நுடங்குசை தனங்கட் கென்று
வெண்ணில் மற்றுண் டோசொல் விருஞ்சிவ னன்றி வித்தே. 3

70. முத்தனு முத்தாத் மாவும் முத்தியி லேக மாகும்
அத்தன்மை யாலு முன்பு மொன்றனு மானத் தாலும்
ஒத்தலும் பூத மைந்து மொன்றொடன் றொன்றிக் கூடாத்
தத்தந்தா யோடுங் கூடும் தன்மையே போலான் மாவும். 4

71. சின்மய மாத லாலே செகத்தினில் சராச ரங்கள்
தன்மய முணர்ந்து பார்க்கில் சத்தியும் சிவமு மேகாண்
சின்மயச் சிவன்றன் சீவன் சிற்சத்தி யறிவு மாயை
தன்மயம் காய மென்றே சாத்திர நிச்ச யார்த்தம். 5

72. வித்தின்றி முளைதா னில்லை வித்தின்றி முளைவே றில்லை
அத்தன்மை சிவத்தின் கண்ணி லாத்துமா வனாதி தொட்டு
நித்தமுஞ் செகத்தி யாவும் நிகழ்ந்திடுஞ் சுபாவ மிங்ஙன்
பெத்தமுஞ் சிவமென் றன்றே பிறப்பிறப் பிதுவு மன்றே. 6

73. அனாதியல் பாகிற் பெத்தம் அறுமோதா னென்னிற் செம்பிற்
றனாதியில் காளி தம்போம் தன்மைபோற் குளிகை தாக்க
வனாதியல் பெத்த நில்லா வருளினாற் குருக்க ளேக்கத்
தனாதியல் ஆத்து மாவின் தற்சுவ ரூபத்தைத் கேளாய். 7

74. நித்தன் கேவல னிர்க்குண னிரவய னன்வி காரி
சுத்தன் வியாபகன் மருண்மையன் றெழிலிலன் விந்து நாதச்
சத்த னசபைய னசைதன னுத்த மன்மலத் தென்றும்
பெத்த னத்தாற் பிரபுவின் பேர்பசு பதியாவ னன்றே. 8

75. பசுபதி சைத னத்தாற் பகர்ந்திடி லொப்பர் வாசி
பசுமல சம்பந் தத்தன் பதியவ னமல னென்றும்

பசுவவன் பாசந் தீர்க்கை பசுதொழி லாகுந் தீர்ந்தாற்
பசுபதி பேதஞ் சொல்லிற் பரசைவசேர்ந் தியலா றன்றே. 9

76. சுத்தநற் சிவமுஞ் சீவன் சுபாவசை தனத்தா லொத்து
மொத்ததன் மாயா பேதத்துத் தானீங் கரிது யிர்க்குத்
தெத்தஞ்செய் சத்தி காட்டத் தீக்கில்லை குண்டத் தீக்குண்
டத்தன்மை யாத்து மாவு மமரநற் சிவமு மன்றே. 10

77. சட்டெனத் தெளிந்தான் சற்றும் இரைச்சுவிற் கரணா திப்பேர்
கட்டின பாசம் விட்டான் கண்டிலன் பெத்த பின்பு
சுட்டநற் சுவாய மேயாஞ் சீவன் முத்தன் தேகத்தை
விட்டபின் பரம முத்தன் வியோமம்போல் கடனா சத்தி. 11

78. மூடிமுன் னிருந்த தீபம் மூடின கும்பம் போனால்
நீடுமின் னொளியா யெங்கும் நிகழ்ந்தங் காத்து மாவும்
மூடிமுன் மறைந்தி ருந்த மும்மலம் விட்ட போது
நீடுதற் சொரூப மாயே நிகழ்ந்துதான் விளங்கு மன்றே. 12

79. பெத்தித்த சாம நீலம் பெத்தம் விட்டாற் பளிங்கு
சுத்தந்தன் னுருவ மாயே சோதியாய் விளங்கி னாற்போல்
தெத்தித்த புரியட் டத்தின் பெத்தத்தை விட்ட போது
சுத்தத்தா னாத்து மாவும் சுபாவமாய் விளங்கு மன்றே. 13

80. அதிகாரி சுத்த நித்த னாத்துமா வென்னி லிந்த
பதிகார குணங்கள் பெத்தம் பற்றுவிட் டிருக்கு மாறென்
விகாரி சுத்த னுண்மை யனாதி சம்பந்த பரசம்ப
விகாரம் பண்ணும் பெத்தம் பாவனா பெத்த மன்றே. 14

81. விளங்கிய சித்தத் தோதான் மேவிய வசுத்தத் தோதான்
களங்கமாங் குணங்க ளென்னிற் கருதிடாத் மாவுக் கில்லை
விளங்கிய விளக்கத் தன்று விளக்கிலே திரியு நெய்யாற்
களங்கமா மைப்பி றப்பக் காண்டல் போற் குணம தன்றே. 15

82. சத்தெனு மமிர்தா னத்தைச் சாந்தத னிச்சை கொண்டு
புத்திமுன் சேட்டித் தத்தாற் போகங்கள் புசிக்கு மாகேள்
சத்தன்றன் சன்ன திக்கே தற்சொரூபத்தி னின்று
புத்திதன் சேட்டை யெல்லாம் புருடனங் குதாசி னன்காண். 16

83. செறிதரு கதிரோன் முன்கண் சேட்டையாங் காத்து மாமுன்
னறிதரு புத்தி சேட்டை யத்தினாற் சேட்டை பெற்று
வெறிதரு மாங்கா ரத்தில் விகாரமா மனஞ்சேட் டித்துப்
பொறிகண்மேற் புறக்கண் செல்லப் பொறிகள் சேட்டித்த
[தன்றே. 17

84. சத்தமுன் விடயந் தன்னைச் சமத்தவிந் திரியம் பற்ற
மெத்தன மனமும் வாங்கி விகாரத்திற் கூட வைக்கு
மத்தகு மவைய னைத்து மாங்காரம் வாங்கிக் கொண்டு
புத்தியி னிடத்தே சேர்க்கும் புத்திநிச் சயிக்கு மன்றே. 18

85. இப்படிப் புத்தி தன்னி லெய்தவவ் விடைய மெல்லாந்
தப்பிலா விச்சைதன் னுத்மாச் சன்னிதி யால்வி ளங்கு
மெப்படி விகார மின்றி யாவிபூ தலத்தி லுள்ள
வப்படிப் பொருள்க ளெல்லா மறிவிக்கு மாங்ங னையா. 19

86. முகமெங்கன் காணு நிற்கு முன்வலி தற்ப ணத்தி
லகமங்ஙன் காணும் புத்தி யத்திலே கதம தர்க்கச்
சகமதில் கொள்ளல் கொள்ளா தொழிகைபா வகந்தா னில்லைச்
சுகமதே வடிவி தான சுருபமாய் நிற்கு மன்றே. 20

87. அத்தமா யகத்துட் டோன்று மானந்த மாக மற்றும்
வெத்தமே புறக்க ணென்றும் விடயங்கள் பலவு மாகப்
புத்திதன் வசத்தால் ஞானம் பொருந்திடு மசேத னன்றுன்
வத்துவி னிடத்த தாகு மதிக்குமம் மதியு மன்றே. 21

88. பொறிகளால் விடய மெல்லாம் புக்கவை புத்தி தன்னில்
செறிவுறப் பிரகா சிக்கும் சேதனன் சன்ன திக்கே
யறிவுறு மிக்க ஞான மனைத்துமென் செயல தென்னும்
வெறியுறு பிறவிக் கென்றும் வித்ததாய் மேவு மன்றே. 22

89. தானல்லா தொன்று தன்னைத் தானெனக் கருதிக் கொண்டு
நானெல்லாஞ் செய்தே னென்னு ஞானமஞ் ஞான மத்தா
லீனமாம் வினையி ரண்டா மிருவினை யாலு டம்பா
மூனமா முடம்பா லூழா மூழினு லாகா துண்டோ. 23

90. வித்திலே விளைவு தோன்றி விளைவிலே வித்தா மாங்கே
பெத்தமுன் வினைக ளாலே பிறந்திடு முடலி தென்று
மித்தவ வுடலி னுலே மீண்டுமவ் வினைக்கட் டோன்றி
நித்தமா யிடைய றுதே நிகழ்ந்திடு மனுதி யன்றே. 24

91. ஓர்ப்பொடு பசியுந் தாக முற்சாகஞ் சுகதுக் கங்கள்
தார்ப்பரி யங்கள் போகந் தன்மமும் பாவந் தானும்
நீர்ப்பரி தான புத்தி நிகழ்குண மாகு மத்தை
யாரம குணம தென்பா ரயிக்கிய பாவத் தாலே. 25

2. உரைப்ப டாவி காரத் துண்மை சைதன மாத்மாத்
துரைப்படும் விகாரி போலத் தோன்றிடுஞ் சம்பந் தத்தா
லிரைப்படா விகாரந் தானே தத்தாத்மா மதிக்கண்
விரைப்படும் விகாரங் காண்பான் மீதசோ கத்தா நின்றே. 26

93. சேர்ந்தவவ் வுருவம் போலத் தெளிதரு பளிங்க தென்ன
வார்ந்தநோய் திரைகள் மூப்பு மருந்துய ரனைத்துங் கொண்டு
சோர்ந்தவச் சரீரத் தாலே சரீரிபோற் றோன்று கின்றா
லோர்ந்திடி லொன்று மில்லா வுண்மை சைதனத்த தன்றே. 27

94. துன்பொடு பயமி லச்சை சோகமு மோகங் கோபந்
தன்படு தன்மம் பாவஞ் சமத்தமென் செயல தென்கை
யின்பொடு புத்தி கன்ம மிவையென்கை விவேக மென்று
மன்புட னென்ன தென்கை யதுவவி வேக மன்றே. 28

95. அத்தவத் துணரா துள்ள மற்பமே ஞானி யென்பார்
பத்துநூ றுயி ரம்பேர் சேதனமெனப் பகரக் கேளாய்
தத்துவ ஞானி யாவார் தற்சொரு பத்தை நாளும்
புத்தியின் மேலே காணும் புண்ணியா ரென்னி லன்றே. 29

96. சித்த நல்லாத் மாவுந் திரிவித மாம்ம லத்தால்
வித்தகன் மலமொன் றுள்ளான் விஞ்ஞான கலனா மென்றும்
பெத்தநன் மலகன் மந்தான் பிரளய காலந் தென்பான்
மத்தமாஞ் சகல னாவான் மலகன்ம மாயை யன்றே. 30

97. பற்றின மலத்த ரென்று பகர்ந்தவுத் தமமி ரண்டாம்
முற்றிய மலத்த ரென்று மூடமா மலத்த ரென்றும்
பற்றிட லாம லத்தா னட்ட விச்சே சார்வார்
மற்றுள்ள மலத்தார் சொல்லில் மந்திர ரேழு கோடி. 31

98. செறிவுறு மலமுங் கன்மஞ் சேர்ந்தமத் திமர்கள் மூன்றில்
அறிவுறு பக்கு வத்தா லடைவர்கள் முத்தி யென்றே
பொறியுறு பிறவி நண்ணும் புரியட்டத் தோடுங் கன்ம
நெறியுறு புவனங் கட்கு நிற்பர்கள் சிலர்கத் தாவாய். 32

99. இருட்டிய சகலர் தம்மில் ஏய்ந்தபக் குவர்க ளெல்லாம்
மருட்டிகள் தேசி கன்றன் அருளினால் முத்தி சேர்வர்
சிருட்டியி லாதி தன்னில் சிலர்கலை யாதி காலம்
மருட்டநூற் றொருபத் தெண்மர் உருத்திரர் மந்தி ரேசர். 33

100. அருந்துய ரம்மை யூழால் அல்லாத சகல ரெல்லாம்
பொருந்தியே மாயை யின்றன் வசத்தராய்ப் போத மின்றி
வருந்துவர் பறந்து மூர்ந்து மாறிநின் றுழன்று நாளும்
திருந்திய வின்ப முத்தி சேருமவ் வளவு மன்றி. 34

101. நட்பொடு பகைக ளுள்ளா னவக்கிர கங்கள் நண்ணும்
சட்பகைக் குணங்கள் மேவும் தந்தைதாய் மனைவி சாரு
முட்பகை பிணிகள் சேரு மொண்குலங் கல்வி பேணும்
தட்பமும் நாடுங் காடுஞ் சார்ந்திடுங் கன்ம மன்றே. 35

102. உடற்கிறை மயக்க ஞான மூழ்வச் செயல்க ளெல்லாம்
மிடற்படற் றன்னை நாளு மின்பமீ தென்றி ருக்கும்
நடற்படு பெத்த மென்று நண்ணுவா னலமொன் றில்லான்
அடற்படு விகார மாகி அதன்மலங் குணாங்க ளீதாம். 36

பசு இலக்கணம் முற்றும்.

4. பாச இலக்கணம்

103. சிட்டரா மன்பர் நாளும் செய்தவப் பொருளே ஞான
பட்டனே பரம யோகி பசுத்திற மருளி னுற்போல்
விட்டுடற் பிறப்பை யின்ப வீடெய்த வொட்டா தென்றுங்
கட்டிடும் பாச நாமங் காரிய முருவ மென்னே ? 1

104. வளைத்தறி வாத்து மாவின் வடிவினை மறைத்துக் கொண்டே
இளைத்திடும் பிறப்புக் கென்றும் ஏதுவாம் மலமுன் ருகி
முளைத்திட வித்தை பண்ணும் மூக்கொடு தவிடு மிப்போல்
திளைத்திடும் ஆத்து மாவைச் சேர்ந்துமுன் னுதி யன்றே. 2

105. சொன்னமும் மலங்க ளேது சொன்னவவ் வடைவி னுலே
மன்னுமுன் னுணவந் தானும் மாயைகா மியங்கள் பின்பு
பன்னிலை ஞான மோகம் பரவசம் பண்ணும் மூன்றும்
இன்னமும் இவைதான் செய்யும் காரியம் இயம்பக் கேளாய். 3

106. எறித்திடும் பொருள்மே லிச்சை எனக்கெதி ரியாவ ரென்கை
வெறித்திடு கோபத் தோடே விகற்பநிச் சயமற் றுசை
செறித்திடும் பொறியுட் போகஞ் செறிந்தபே ருவகை யோடும்
குறித்திடுங் குணங்க ளெல்லாம் கூறி லாணவ மதன்றே. 4

107. வெய்யசொல் வெறுப்புச் செய்தல் வியன்குரு மொழிபி ழைத்தல்
செய்ய செய்ந் நன்றி கொன்றல் தீக்குண முடைய னுதல்
பொய்யுரை கொலைதா னேர்தல் புகன்றமா றுற்றுக் கூறல்
மையுறு குணங்க ளெல்லாம் மாயையா மலம தன்றே. 5

108. மயக்கமோ டறிவொன் றின்மை மைதுனங் களவு காண்டல்
பயத்துட னுயிர்த்தம் பண்ணல் பாவமாந் தொழில்கள் செய்தல்
செயற்படுந் தன்கு லத்திற் செய்வன செய்யா னுதல்
வியற்புடைக் காமி கத்தின் வியன்குண மிவையா மன்றே. 6

109. கன்மமு மனுதி யன்றே கலந்திடு வகைக ளான
தன்மமுங் கன்ம மாயே சரித்திடை விடாதே நின்று
முன்வலி காலின் பின்னு முருகென வுயிர்கள் புத்தி
தன்வச மாக்கி நாளுந் தகைந்துடல் கட்டு மன்றே. 7

110. மாலதா மாயை யென்று மன்னியொன் றாக நின்றே
மூலமாய்ச் சகத்துக் கெல்லா மோகமே யுயிர்க்குப் பண்ணுஞ்
சீலமாம் பசுக்க ளுண்மை சேதன வடிவ தெல்லாங்
கோலமா மறைக்கும் பாசங் குணங்களின் றன்மை யீதால். 8

111. பிறப்பதும் பாசத் தாலே பிணிப்பதும் பாசத் தாலே
யிறப்பதும் பாசத் தாலே யிளைப்பதும் பாசத் தாலே
மறப்பதும் பாசத் தாலே மயக்கமும் பாசத் தாலே
துறப்பதும் பாசத் தாலே தொழில்களும் பாசத் தாலே. 9

112. பிணிகளும் பாசத் தாலே பேதனம் பாசத் தாலே
துணிவதும் பாசத் தாலே துன்பமும் பாசத் தாலே
யணிவதும் பாசத் தாலே யாக்கையும் பாசத் தாலே
பணிவதும் பாசத் தாலே பற்றெல்லாம் பாசத் தாலே. 10

பாச இலக்கணம் முற்றும்.

5. தத்துவ சிருட்டி

113. கலங்குவன் பிறவிப் பௌவங் கடந்துயர் கரையி லேற்று
நலங்கொள்சே வடியி னானே நற்றவர் முனிவர் நாதா
மலங்களின் செய்தி யெல்லாம் மாசற வருளி னாப்போல்
சலங்கொள் தத்துவங்கள் தோற்றஞ் சாற்றிநீ யருள வேண்டும். 1

114. சுத்தநற் சிவமு மத்திற் சுபாவசிற் சத்தி யாய
சத்தியின் கிரண மான சத்திதான் முன்பே சொன்னோ
மொத்தவை தன்னி னாலே வுலகங்கள் கெற்பித் துள்ள
வித்தக மலமா யாதி தத்துவம் விளம்பக் கேணீ. 2

115. தத்துவஞ் சிவமுஞ் சத்தி சதாசிவ மீசன் வித்தை
நித்தமா மாயை கால நியதிநன் கலையு டன்றான்
வித்தையு மிராக மாத்மா மேவுமவ் வியங்கு ணம்பின்
புத்தியாங் காரத் தோடும் பொருந்திடு மின்னங் கேளாய். 3

116. நன்மேந் திரியஞ் செவிதோல் நாக்கண் ணாசி
கன்மேந் திரியம் வாய்கை கால் குதத் தோடுபத்தம்
தன்மாத் திரைசத்த மூறொளி யிரத கந்தம்
வன்மா பூதம் வான்கால் வன்னிநீர் மண்டத் துவமே. 4

117. செப்பின தத்து வங்கள் சிவன்முத லவனி யந்தம்
முப்பதோ டாறு நாம மொழிந்தவவ் வடைவி னாலே
யொப்புடை யுதயம் பெத்த முருபகா ரியங்க ளெல்லா
மிப்படி யிருக்கு மன்றே யெடுத்தினி யியம்ப லுற்றாம். 5

118. இடம்படு வியாப மேக மேய்விடம் நித்த சுத்தஞ்
சடம்படு தத்து வங்கள் சகலகா ரணங்க ளாகு
முடம்படு முயிர்கட் கெல்லா முணர்வொடு தொழிலுண்டாக்
செடம்பொருள் சிவமென் றென்றுஞ் சிவத்தின்றத் துவமி [குஞ்
[தன்றே. 6

119. சத்துநற் சிவவி சார சத்திகள் திட்டாந் தத்திற்
சித்துநற் சிவம தென்பர் சிலர்சிவ தத்து வத்தைச்
சுத்தமா மனத்தி னூலே தோற்றமு மனுதி யாய
வத்தொழில் செய்த லாலு மருளுமுண் டென்ப ரன்றே. 7

120. எரியது சேர்வித் தாங்கே யிருஞ்சிவன் சேர்ந்த தெல்லாஞ்
திரியவும் பிறவா தாகுஞ் செகமெலாஞ் சென்றொ டுங்கி
விரியுமவ் விடம்வே ருக வேண்டுது மதுமா மாயை
தெரிவுறு நல்லோ ரித்தைச் சிவத்தின் றத்துவம தென்பர். 8

121. முந்தித்தான் சிவதத்து வத்தில் முழுதுல குற்ப விக்கச்
சந்தித்த தியாது செப்பிற் சத்திதத் துவம தாகு
முந்தித்தான் ஞான சத்தி யொக்கவே கிரியா சத்தி
சந்தித்த விடத்திற் சத்தி சதாசிவ தத்து வங்காண். 9

122. அற்பமா ஞான சத்தி யதின்மிகக் கிரியை தன்னி
லுற்பவச் செயலே யீச தத்துவ மெனவு ரைப்பா
ரற்பமாய்க் கிரியா சத்தி யதற்குமேல் மிக்க ஞானத்
துற்பவ மாமவ் வித்தியா தத்துவ முரைக்கி லன்றே. 10

123. சார்ந்தனன் விந்து நாதஞ் சதாசிவ தத்து வத்தின்
னேர்ந்தன ரந்த ராதி யீசதத் துவத்தி னன்றே
சேர்ந்தனர் சுத்த வித்தை செறிந்தமந் திரமேழ் கோடி
யார்ந்தன வுயிர்கட் கெல்லா மருள்புரி கார ணத்தால். 11

124. சித்திரித் துலகம் பண்ணச் சிவதத்து வத்துதித்த
வெத்திறத் திச்சை யாதி சத்திக ளேற்றத் தாழ்வு
வித்திரித் துதித்த வற்றின் வியா பார போதமாய
சுத்ததத் துவமிவ் வைந்துந் தோற்றமும் பிற்பா டில்லை. 12

125. சுத்தமா மாயை தன்பால் தோன்றின பேதஞ் சொன்னே
மத்தமா மாயை தன்பால் மற்றுள்ள தத்து வங்க
ளத்தனே யிரண்டோ மாயை யன்றுகா ணவத்தா பேத
மெத்தன்மை தற்ப ணத்தி னிருபுறம் போலு மன்றே. 13

126. ஏகாந்த னறிதற் கொண்ணு தெங்குநின் றனித்த மன்று
போகங்கள் பிறப்பிக்கின்ற புவனகா ரணம தாகு
மாகந்தோ யுயிர்கட் கெல்லா மவ்வவ வினைக்குத் தக்க
மோகங்கள் பிறக்கப் பண்ணு மோகினி யென்னு மாயை. 14

127. மூலத்தி னின்றுங் கால மூன்றுமே யுருவ மாகி
யேலத்தான் காலஞ் சத்தி யாவையின் மயமாய்த் தோன்றி
காலத்தின் வசத்தி னாலே கலித்ததிவ் வகில மென்றே
சீலத்தி னாலே யத்தைச் செப்பினாற் கால மென்றே. 15

128. கனந்தரு மாயை யன்று காலதத்து வத்தின் பின்னே
யனந்தரந் தோன்றி யாதொன் றகிலமுன் செய்த தன்றங்
கினந்தொறு நியம மேதன் வடிவமா யிருக்கு மத்தை
மனந்திகழ் நல்லோ ரெல்லா மதித்தன நியதி யன்றே. 16

129. படர்ந்துள மாயை நின்றும் பகர்ந்தவந் நியதி பின்பாய்
அடைந்துள மலத்தி னாலே யறிவிலாத் மானுக் கத்தைக்
கடைந்தொரு விடத்தை நீக்கிக் கத்திரு சத்தி காட்டி
யுடன்றிக ழறிவா மத்தை யுரைத்தனர் கலைய தன்றே. 17

130. பின்கலை பிறந்த தென்னும் பேசிய நியதி கால
முன்கலை யாத்மா வுக்கு மொழிந்திடில் வினியோ கத்தில்
நன்கலை யறிவி னாலே நானில மந்த மாகத்
தன்செயல் யாவுஞ் செய்யுஞ் சகலதத் துவங்க ளன்றே. 18

131. தூண்டிய யறிவி னோடுந் தொழிலுடைப் புமான்றன் விடையங்
காண்டகு நிமித்த மாகக் கலையது பெற்ற வித்தை
யீண்டிய மலத்தை நீக்கி யாவையுந் தெரிசிப் பிக்க
வேண்டுநற் கரண மாகும் வித்தையென் றறிக வென்றே. 19

132. சத்துநற் புமான் விடையஞ் சகலமுந் தெரிசிப் பிக்கை
யொத்தநற் கரண மென்றே யுரைத்தது வித்தை தன்னைப்
புத்தியுஞ் செய்யு மென்னிற் புமான்வி டயம்பு சிக்கு
மத்திசைக் கரணம் புத்தி யந்தக் கரண மவித்தை. 20

133. தெரிந்தவல் விடைய மேலே சேதனன் றனக்கு நேசம்
பரிந்துமுன் பண்ணு மித்தைப் பகர்ந்தன ரிராக மென்றே
விரிந்தவவ் விடையஞ் செய்யில் விகாரத் தரையுங் கண்டோம்
புரிந்திடும் புத்தி யாமேற் புறம்பதி துள்ளு மன்றே. 21

134. தத்துவ மனைத்துஞ் சார்ந்து சகலபோ கங்க டன்னை
மத்தனாய் நுகரும் போது மதித்தனர் பசுவ தன்றே
சுத்தனா மாத்து மாவுந் தோய்தலா லுடலோ டெண்ணிப்
பெத்தனாய்ப் புருட னென்றும் பேர்சொல்லப் படுவ தன்றே. 22

135. மத்தவவ் வியத்தந் தன்னை மதித்திடிற் குணங்கள் மூன்று
மொத்தன வுருவ மத்தை யுரைப்பரவ் வியத்த மென்று
பெத்தம துயிர்க்கி ருப்புப் பிரகிருதிதான் பேதித் தக்காற்
சத்துக மிராச தம்பின் தாமத மென்ன மூன்றும். 23

136. இரண்டெனத் தத்து வத்தோ டெண்ணினுங் குணங்கள் மூன்றுந்
திரண்டவவ் வியத்த மத்தின் செயல்கள்காண் குணங்கள்
விரண்டுமொன் ருகு மத்தி லேகமே தத்து வத்துட் [சொல்லி
டிரண்டவவ் வியத்தந் தன்னின் திரிகுணஞ் செயல்கள்
[கேளாய். 24

137. துலங்குமவ் வுயிர்க ளுக்குத் தோற்றமு நிலையுந் தம்மில்
இலங்குமுக் குணங்கள் செய்யு மென்றுகொள் சொல்லி லன்றே
நலங்கொளுஞ் சாத்து வீகம் ஞானமா மிராச தந்தான்
சலங்கொளக் கோப மாகுந் தாமத மஞ்ஞா னங்காண். 25

138. சிட்டநல் லறிவு சாந்தஞ் சிருட்டியோ டின்ப மற்றுஞ்
சட்டென வீதல் தன்மந் தயாவிவை சாத்து வீகம்
வெட்டென வுரைத்த லாசை வியாபாரங் கீர்த்திபேணல்
கிட்டிடுங் கோபத் தோடுங் கிராகத மிராச தங்காண். 26

139. பழித்துரை நியமத் துன்பம் படைத்தவப் பொருள்க டன்னை
யழித்தலோ ரேக்கஞ் சோம்பு மாயவன் தாம தங்காண்
கொழித்துமுக் குணமொன் றென்றிற் கூடுறு மூன்ற தாகிக்
கழித்திடுங் கலந்து மாறிக் கணத்தினிற் பங்க மாயே. 27

140. அடையமுக் குணத்திற் றேன்றி யலந்தெழு புத்தி தானு
முடையதாக் குணங்க ளுக்கிங் குரைத்துள செயல்க ளெல்லாம்
விடையநிச் சயமும் பண்ணி மேவுவித் திடும வற்றைப்
படை கொள்முற் கன்மத் தாலே யென்றுகொள் பரிந்து நீயே.28

141. ஆத்தவிப் புத்திக் கண்ணின் ருங்காரந் தோன்றித் தானு
மூத்தமுக் குணவ சத்தால் மூன்றுபே தங்க ளாகுஞ்
சாத்துவாங் கார மென்றுந் தாமதாங் கார மென்று
மேத்துவ விரண்டின் றேன்று மிராசதாங் கார மன்றே. 29

142. சிறந்தனற் சைத னன்ருன் செறிந்தவாங் காரந் தன்னில்
பிறந்தநன் மனமும் புத்தி பிணித்தவிந் திரிய மைந்தும்
நிறந்தரு மவைகா ரிக னிகழ்ந்தவாங் காரந் தன்னில்
மறந்தரு கன்மேந் திரிய மதித்தவை பிறந்த தன்றே. 30

143. தாங்குபூ தாதிக் கப்பேர் தரித்தவாங் காரந் தன்னி
லோங்குமாத் திரைக ளைந்து முதித்தன வென்று கொள்க
வாங்குமாத் திரையி லொவ்வொன் றடைவடை வேற்றங்
நீங்குவ னுதி பூதம் நேர்ந்தவை பிறந்த தன்றே. [கொண்டு
31

144. குணங்களிற் றேன்றும் புத்தி கோதில்சே தனனுற் மாற்கு
வணங்கிவா கனமாம் போக மருவிப்போய் நுகரும் போதி
னிணங்கிடும் விடய மெல்லா மின்னதீ தின்ன தென்றே
பிணங்கிடா வகைய வற்றின் பேர்கள்நிச் சயிக்கு மன்றே. 32

145. வித்தகப் புமான்முன் புத்தி வெய்யவன் முன்கண் சேட்டை
யத்தன்மை யென்னச் சேட்டித் தத்தங்கள் தெரிசிப் பிக்கும்
புத்திதன் வசத்த தாகும் போகமும் புசித்த ருனும்
பெத்தமும் பெத்த வீடும் பிணிப்பது புத்தி யாலே. 33

146. உயர்ந்துளே னுலகி னுனே யொப்பெனக் காரோ வென்றும்
பயந்துநோக் காங்கா ரம்போற் பாசமற் றென்று மில்லை
யியம்பலாங் காரந் தானு மென்றுண்டன் றளவுஞ் செல்லச்
சயம்புமெய்ஞ் ஞானஞ் சாரா யென்றுகொள சாற்றி லன்றே. 34

147. இந்திரி யங்கள் சேட்டைக் கிறையதா மனவி கற்பம்
தந்திரிப் பிறவி மூலஞ் சங்கமா மிச்சா ரூபம்
மந்திரத் தலைவன் முத்தி மனவச மாகில் நண்ணும்
அந்தரப் பிறவி யெய்து மவ்வச மாகி லன்றே. 35

148. சோத்திர மோசை கேட்குந் தொக்குறும் பரிசங் கண்டான்
பார்த்திடு முருவந் தாலுப் பரிந்துணு மிரத நாசி
சேர்த்திடும் வாசந் தன்னைச் செப்பின விந்த வைந்து
மாத்திர பஞ்ச கத்தின் வடிவுணர் கருவி யன்றே. 36

149. வசித்திடும் வாக்குத் தான மலர்க்கைகள் கெமனம் பாதம்
பசித்துணு மவற்றைப் போக்கும் பாயு ருபத்தா னந்தம்
புசித்திட விடமா காசம் பொருந்திடத் திரட்டுங் கால்தீ
நசித்திடும் பிடிக்கு நீராம் நானிலந் தாங்கு மன்றே. 37

150. இலங்குவான் வட்ட ரூப மிருமூன்று கோணம் வாயுச்
சலங்கொள்தீ மூன்று கோணந் தண்மதிப் பாதி போல்நீர்
நலங் கொள்பார் சதுர நான்கா நானில மந்த மாக
புலங்கொள்வா னுதி யாய பூதங்க ளுருவி தன்றே. 38

151. விரியும்வான் றூமம் போலு வீசுங்கால் கறுப்ப தாகு
மெரியுந்தீ யிரத்தம் போன்று மிரங்குநீர் நீலம் போலுந்
தெரியும்பா ரதுதா னேயாச் சிறந்தசெம் பொன்னி னுங்கே
பெரியவைம் பூதங் கட்குப் பேசுங்கா லிவையே வண்ணம். 39

152. ஏயும் வான்தனக் ககாரம் வகாரமாம் வாயு வுக்குக்
காயும் வெந்தீச் சிகாரங் கலந்தநீர் மகார மாகுந்
தோயுமா நிலத்துக் கொன்றுஞ் சொல்லிடில் நகார மாகு
மாயுமையும் பூதங் கட்கு மக்கர மமைவி தானே. 40

153. வானினிற் சதாசி வன்றான் வாயுவில் மயேச னாகு
முனமி லுருத்தி ரன்தீக் கோங்குமா லிருநீர்க் கென்றிப்
பூவினில் நான்மு கத்தோனையா பூதங்க ளைந்தினுக்கு
மானவிவ் வைந்து மூர்த்தி யதுதெய்வ மாகு மன்றே. 41

154. விந்துவி னின்று மாலம் வித்தென விரிந்தாங் காத்மாத்
தந்தம் வல்வினை புசித்த தனுகர ணங்க ளாகி
யந்தர மண்ட மெண்டிக் காயதத் துவங்க ளெல்லாம்
வந்தவிவ் வடைவி னாற்போய் மாயையி னடங்கு மன்றே. 42

155. அடங்கிடு மாயை தன்னி லாத்மா வனைத்துஞ் சென்றே
யிடங்கொளு மாயை யாத்மா யிருஞ்சிவ மென்று முண்டு
மடங்குவார் வினைக ளொத்தார் மாசிலா முத்தி தன்னிற்
றுடங்கிமுன் போலுன் மத்தர் தோன்றுவர் பிறப்பி லன்றே. 43

156. மன்னிடு மலங்கள் கன்ம மாயையாம் பாச மூன்றும்
பன்னிடும் பசுவைப் பாசம் பந்திக்கப் பண்ணுஞ் சத்தி
தன்னுடன் பாச நான்காந் தற்பவ பரிணா மத்தா
லுன்னிடுந் தத்து வங்க ளொன்றுடன் பாச மைந்தாம். 44

தத்துவ சிருட்டி முற்றும்.

6. வீடு பற்று

157. தேர்ந்தனன் பரம மாய சிவனுதா சனனாய் நிற்க
வார்ந்தமெய்ஞ் ஞான சத்தி யத்துட னசத்தா மாயை
சார்ந்துநல் லகிலம் பெற்ற தன்மைநீ யருளி னாப்போல்
வேந்தனே யுயிர்கள் காயம் விட்டவை பற்று மாறென். 1

158. தாயையா ரறியார் மற்றுந் தந்தையா ரறியார் தாமே
போயையார் புக்குப் பற்றும் புதல்வரு மறியா ரன்றே
மாயையார் செய்தி யெல்லாம் மயக்கமா யிருக்கு மன்றோ
காயையைக் கருத்துத் தன்னைக் கருத்தினாற் பிறப்ப தன்றே. 2

159. திருத்தமா மலர்போய்த் தெங்கே சென்றவவ் மணம்போ
[லங்கே
கருத்துத்தான் போமி டத்தே கட்டும்போய்ச் சீவ னன்றே
பொருத்தமா முடலை விட்டு புரியட்ட கத்தி னோடும்
வருத்தமே பண்ணு முன்னை வல்வினை வசத்தா லன்றே. 3

160. சத்தமும் பரிசந் தானுஞ் சார்ந்தொளி யிரத கந்தம்
புத்தியும் மனமாங் காரம் புரியட்ட மாகு மன்றே
யொத்தவிச் சூக்கு மத்தோ டூழ்வசத்தி யோனி புக்குப்
பெத்தமாந் தூலங் கொண்டு பிறந்திடா நிற்கு மன்றே. 4

161 விட்டிடுந் தேகஞ் செய்த வினைதனக் களவிற் சென்று
கட்டிடுங் காயந் தன்முன் கனவுபோற் புணரக் கண்டு
விட்டிடுங் கருத்தங் குற்று வினையுடன் காலங் கூடிக்
கட்டிடும் பாத்தி ரத்தே காரண நீடு மாயை. 5

162. ஒருவன்செய் மாயை யாலே யூழ்வசத்தி யோனி புக்குக்
கருவங்குப் பாயு மாறுங் கட்டாண்பெண் ணலியா மாறும்
பொருமந்தக் குணமா மாறும் பொருந்தவை யவங்கள் வண்ணம்
வருவன வாழு நாளும் வளற்றியு மியம்ப லுற்ரும். 6

163. தோயு முன்னுடலை விட்டுச் சூக்குமத்தோடுங் கூட
வாயு வாகனுயைத் தந்தை வாயுவி னேடுங் கூடிப்
பாயு மாதா விடத்தே பாய்ந்தபின் பாச யத்தி
லேயுமவ் விருநீர் மெய்யா யிட்டவித் தெழுந்தாங் கன்றே. 7

164. தந்தைதன் வலத்தே வாயுச் சரிக்கச் சுக்கிலமு மிக்காற்
சுந்தர வானுந் தந்தை வாயுவு மிடத்தே தோன்றிக்
கந்தமா ரிரத்த மிக்காற் கருதுபெண் ணிருநீ ரொத்து
வந்திடி லலியாந் தந்தை வாயுவு மிருபாற் றேன்றில். 8

165. தோன்றிடும் வாயுத் தந்தை தொக்குட லெங்கும் புக்குத்
தோன்றிடி லவய வங்கள் தோன்றிடும் பிள்ளை பாலுந்
தோன்றிடும் வாயுப் புக்குத் தோன்றிடா தவய வங்கள்
தோன்றிடும் பிள்ளை பாலுந் தோன்றிடா தென்றுகொள்க. 9

166. என்றவிவ் வாயு வைந்து நாழிகை வலத்தி யங்கக்
சென்றிடும் போது வந்த சிறுவனும் வயது நூறும்
அன்றியவ் வாயு வைந்து நாழிகை வலத்தி யங்கிப்
பொன்றிடும் போது வந்த புதல்வனும் போகு மன்றே. 10

167. அக்கணிற் றந்தை வாயு வைந்துபூ தத்தின் மாறிப்
புக்கிடு பூத வண்ண மாயிடும் புதல்வற் கென்றும்
முக்குணந் தன்னில் மாறி முயங்கிடுந் தந்தைக் கப்போ
தெக்குண முதிக்கும் பிள்ளைக் கக்குணம் விதிய தன்றே. 11

168. விட்டவவ் வுடலாற் செய்த வினைக்குடல் பிதாவாற் பெற்றும்
மட்டவி ழெறிமென் கூந்தல் மாதாவி னுதரம் புக்குக்
கட்டிய கெற்பந் தோறிக் கரும்புன்னை வெண்முத் தன்ன
மொட்டலர் பவளம் போலு முதனுளென் றறிக வென்றே. 12

169. நீருறு குமிழி போல நிரம்புமஞ் சாநா ளண்டச்
சீருறு பதினைஞ் சாநாள் சிரந்தோன்றுந் திங்க ளொன்றில்
மார்புறுந் தோளுந் தோன்று மிரண்டினில் வயிறு மூன்றில்
பேருறு தாளி ரண்டும் பிறந்திடு நாலா மாதம். 13

170. மாதமைந் துக்கு ளெல்லா மவையவம் வகுத்துப் பின்னே
யேதுமி லாமை யின்றன் பிண்டம்போன் றிருக்கு மாறில்
சேதமொன் றின்றி யென்பு சீக்கெனு மேழா மாதம்
போதவும் படுமு ரோம மிரத்தமும் பொருந்தி யாங்கே. 14

171. ஆனபி னெட்டா மாத மாக்கையி னூக்கம் போதந்
தானுமுண் டாகிப் பின்னை நவதிங்கள் சார்ந்த போது
ஞானமு மிக்குத் தோற்ற நன்னிலை யிறுதி யோர்ந்தே
யூனமாங் கெற்பத் துன்ப முணர்ந்திட வுற்ற தன்றே. 15

172. உற்றெரி கொளுநீ ருற்ற வாமைபோ லுதரத் தீயு
ளெற்றுறுந் துன்ப மாற்றே னென்றிரு நொந்தும்
மற்றினிப் பிறவா வண்ணம் மாற்றிடெம் மிறைவா வென்று
தற்சொரு பத்தை நோக்கித் தாய்வீணு தண்டைச் சாரும். 16

173. சார்ந்ததவ் வளவிற் பத்தா மாதமாய்த் தாயா ரீன்று
போந்தமெய் வருத்தத் தால்முன் பொருந்திய ஞானம் விட்டுச்
சோர்ந்துபா ரதன்மேல் வீழ்ந்து தொடரவும் பசிதா கத்தால்
மாந்தனுய் வருந்தி நாளும் வல்வினைக் குழலு மன்றே. 17

வீடுபற்று முற்றும்

7. அவத்தாலக்கணம்

174. நீடுமா லிருளுக் கென்று நிறைந்தசெங் கதிரோன் போல
மூடமாம் பாசந் தீர்க்க முத்தியைத் தரித்துள் ளோனே
வீடுபற் றருளி னுற்போல் மேவிய காயந் தன்னில்
கூடுமவ் வவத்தை தன்னைக் கொள்ளுமா றருள வேண்டும். 1

175. அறிவுடன் சாக்கி ரந்தா னனைத்துடன் முகத்தி னின்றே
பொறிகளிற் சொற்ப னம்பின் பொருந்திடு மிருத யந்தஞ்
செறிவுறு நாபி யந்தஞ் செப்பிடிற் சுழுத்தி தன்கீழ்
நெறியுறுந் துரிய நிற்கு மிலிங்கத்திற் றுரியா தீதம். 2

176. சத்தமுன் விடயம் பத்துஞ் சரித்திடும் பொறிகள் பத்தும்
பத்துவா யுக்க ளோடும் பகர்ந்திடிற் கரண நான்கு
மெத்திறத் திவற்றின் சேட்டைக் கேதுவாய் முகத்தி னிற்கு
மத்திசை புசித்தா னென்பர் அவத்தைசாக் கிரம தன்றே. 3

177. ஒழிந்திடப் பொறிகள் பத்து மொழியாது மற்ற னைத்தோ
டிழிந்துகண் டந்து டங்கி யிருதயத் தளவு நின்று
கழிந்துமுன் செயல்க ளெல்லாங் கருத்தினிற் பிரதிபா திக்க
மொழிந்திடுங் கனவு கண்டே னெனுமுகத் துணர்வு நின்றே. 4

178. ஏயுறு சுழுத்தி நாபி யிருதயத் திடையே நின்று
வாயுவின் சித்தத் தோடே மன்னிடும் புருடன் சித்த
மாயுமுன் கனவை யுன்னி யறிந்திலே னென்னு மாங்கே
யோயுமற் றியாவும் வாயு வொன்றுடன் றுரியஞ் சாரும். 5

179. எரியினைச் சேர்ந்த போதவ் விரும்பெரி யாகு மாங்கே
விரியுநற் சேத னன்றுன் மேவினுல் மனுதி யெல்லாந்
திரியவவ் வெரியை நீங்கச் செடமதா மிரும்பு போலத்
துரியமற் றறிவ டங்கச் சுழுத்தியோ டனைத்துந் தோன்றுன். 6

180. உறப்பட்ட விலிங்க முந்திக் குள்ளது துரியம் வந்து
பிறப்பொடு சுகதுக் காதிப் பெரும்பாரஞ் சுமந்த சித்த
மறப்பெய்தித் துரியந் தன்னில் வாயுவு நிற்கப் போதஞ்
சிறப்புடை யிலிங்கத் தானஞ் சேர்ந்தனன் றுரியா தீதம். 7

181. சித்தமில் துரியந் தன்னில் சேதனன் றுனே தானும்
வத்துசற் பாவ முண்டாம் வற்றவன் றுரியா தீதம்
மத்தனே துரியாதீத மானந்த ரூப மாய
சுத்தமா மவத்தை யென்றுந் தோன்றிடும் பிறப்பி ருதீ. 8

182. என்வடி விதுவென் றெண்ணி யின்பத்தின் வடிவு காணுன்
றன்வடி விருளா மாயை தனையது மறைத்த லாலே
யென்வடி வறிவா யத்தா லெப்பொறி கரணங் காணுந்
தன்வடி வதனைப் பின்பு தான்கண்டி டாத தென்னே. 9

183. தன்னைத்தான் காணுக் கண்கள் தானெல்லாங் காண நின்றுந்
தன்னைப்பின் தர்ப்ப ணத்தின் தான்கண்டு கொள்ளு மாப் [போல்
தன்னைத்தான் காணு னுத்மாச் சற்குரு நாதன் காட்டத்
தன்னைத்தான் காணும் பின்பு சாராது பிறப்புத் தானே. 10

184. சொற்படு சாக்கி ராதி தொடங்கிமுன் னொடுங்கி லாத்மா
முற்சட்ட வியாபி யென்னும் மொழிவுடன் மலைவா மென்னிற்
சிற்படு முரும றைத்த திரிமலம் பின்பு நீக்கி
யற்பமோ ரிடத்திற் கூட்டு மறிவினுக் கவத்தை யன்றே. 11

185. அடுத்திட வேண்டு வானே னறிவுக்கு விரிவொ டுக்கம்
மடுத்துள பிரகிருதி சூழ்ந்த பாவகங் காணேன் போல
வடுத்தவ் வவைதா னுகு மமலநற் பளிங்கு போல
வடுத்தமுக் குணங்க ளாலே அறிவுபே திக்கு மன்றே. 12

186. அறிவுறு சாத்து வீக மடுத்துப்பின் சாக்கி ரந்தான்
செறிவுற்றங் கிராசி தந்தான் செனித்திடுங் கனு விரண்டு
மறிவதிற் றுமத தம்வந் தடுத்தபின் துரிய மாகும்
செறிதரு துரியா தீதந் திரிகுண வசம தன்றே. 13

187. போதமும் போதா போதம் போதமி லாமை மூன்றும்
பேதமும் பேதா பேதம் பிரகிருதிக் குணமா மன்றே
போதமாஞ் சாத்து வீக மிராசதம் போதா போதம்
போதமில் தாம தந்தான் பிழம்புடை போத மாமே. 14

188. விடமதுக் கடங்கிப் போதம் விரிந்திடு மமுதுக் காங்கே
சடமுடை யுறக்க மாய தாமதத் தறிவ டங்கிச்
சடமதிற் சாத்து வீகஞ் சனித்தபி னெழுந்தி ருக்கும்
விடமுடை யறிஞன் கொள்க இப்படி யவத்தை யையா. 15

189. விரிதரு கதிரோன் மேக மிடைந்தபின் மறைந்தாங் காகித்
தெரியவு மவைதா னீங்கத் தெரிதரு மாறு போல
விரிதரு சேத னற்கு விரிவுட னொடுக்க முண்டோ
திரிகுண விவகார மேகாண் செப்பிடி லவத்தை யெல்லாம். 16

190. மத்தமவ் வியத்திற் றேன்றும் மாயநித் திரையா யுள்ள
சத்திதன் புத்தி யாதி சமத்தமு மடர்த்த போது
வொத்தநற் சைத னன்றன் னெடுங்கின னென்னத் தோன்று
மத்தன்மை யல்லால் மற்றே ரவத்தைக ளவனுக் குண்டோ. 17

அவத்தாலக்கணம் முற்றும்.

8. முத்திசித்தியிலக்கணம்

191. எண்டிசை போக்கு மெல்லா மின்பவீ டெங்ங னென்னிற்
மண்டுசர்க் கரைசெல் பால்நெய் கனிகளின் சுவையே னென்று
லுண்டுபார்த் திடுமி னென்றுங் குரைப்பதன் றுன்பால் நீயே
கண்டனு பவிப்ப தேகாண் காட்டுவோ மஞ்ச வேண்டாம். 1

192. முத்திதன் சித்தி தன்னை மொழிவர்கள் சிலர்வெவ் வேறே
சித்தமற் றுலா மென்றுந் தீவினை சிதைந்தா லென்று
மொத்தநல் லியோகா லென்று முபாயஞா னத்தா லென்று
மத்தன்மை யனைத்து மாகா வீச னருளினு லாகு முத்தி. 2

193. பற்றின வினைகள் விட்டாற் பரமா முத்தி யென்னி
லுற்றுட லிருத்த லாலே யுணவொடு தொழில்க ளுண்டாம்
பற்றிடும் வினைய வற்றல் பற்றுமல் விலக்கி னுலு
முற்ற வாணவ மிருக்க வொன்றுது முத்தி தானே. 3

194. திருத்தமா முத்தி யின்பஞ் செறிதருங் கருத்தற் றுலே
கருத்தரு துடலி ருக்கக் கருத்ததி லிருளே மூடும்
திருத்தமா மின்ப முத்தி சிவனரு ளாலே யன்றிக்
கருத்தினுற் கூடா தாகு மென்றுகொள் கருத்து நீயே. 4

195. துரியத்தைச் சாக்கி ரத்தே துரிசறப் பார்க்க வந்தச்
துரியத்துச் சரீர முத்தி தோன்றிடு மென்னிற் கேளாய்
துரியமா மென்று மென்றுந் தொல்பிறப் பொழியாப் பானேன்
துரியம மிருளா மின்பச் சொரூபமாம் சிவன்றன் மேனி. 5

196. சினத்திருங் கடலெ ழுந்து செகங்கொள் மாத்திரைகள் போலும்
மனத்தினிற் சஞ்ச லத்தை மாற்றி டாதியோக மீந்தாற்
சினத்தெழ வெதிரி பீருச் செய்வனோ வாயு தத்தாற்
மனத்தினிற் சுத்தி யில்லேல் வருஞ்சல மியோக மெங்கே. 6

197. அத்தத்துட் பிடித்து வைத்து அசுத்தத்தைப் புறங்கை நீராற்
சுத்தத்தைப் பண்ணு மாங்கே துற்றுள்ளு மலமி ருக்கச்
சித்தத்தால் யோகஞ் செய்தாற் சிறந்தவை பலிக்க மரட்டா
பெத்தத்தை யருதே யோக மீய்கைதான் பிழையா மையா. 7

198. வடித்துள கிளியே போல வகுத்தசில் லறிவு கொண்டு
படிக்கிற சொற்க ளாலே பறியுமோ மலங்கள் மூடி
முடித்தமொய் யிருள்போ மாங்கே மொய்த்தசெங் கதிரோன் [தோன்ற
வடுத்தமுப் பாச பெத்த மறுஞ்சிவ ஞச்சி னேக்கி னேக்கே. 8

199. எஞ்ஞான மந்தி ரங்கள் யோகங்க ளுபாய மெல்லாம்
மெஞ்ஞான மாவ தென்றும் விமலமாஞ் சித்தற் கேகாண்
செஞ்ஞானக் கடைக்கண் வைத்த தேசிகன் சித்த மத்தி
லஞ்ஞானம் பறித்த போதே யமுதவீ டதுவுந் தோன்றும். 9

200. சிறந்தநற் றீட்சை பண்ணுந் தேசிய ரிலக்க ணங்கள்
பிறந்திடும் பக்கு வத்தாற் சிசுக்களைப் பேணு மாப்போல்
சிறந்தநற் றீட்சை யத்தின் செய்தொழி லத்து வாக்கள்
பிறந்திடும் மற்றி யாவும் பிழம்பற வுரைக்க லுற்றும். 10

முத்திசித்தியிலக்கணம் முற்றும்.

9. ஆசாரியலக்கணம்

201. வேதிய ராதி நான்காம் வேறுமா மனிலோ மத்தாற்
சாதிதான் சொல்லி நிற்கச் சடகன்மா ராகி லுங்கேள்
கோதிலா ஞான மில்லேற் குருவல்லன் பாச பெத்தஞ்
சேதியா வீட்டைக் காட்டுந் தெளிவில னுகி லன்றே. 1

202. இறையெங்க ளுகை மத்தி லிதந்தொறு நாலு பாத
முறையினு லருளிச் செய்த மொழிவழி யந்த னுன்கு
நிறையுற நல்கு ஞான நிட்டன்காண் சிட்டற் கென்றுங்
கறையுறு பிறப்ப றுக்குங் கண்ணுடைக் கடவு ளாவான். 2

203. ஆர்த்தது பிறப்பை யென்று மஞ்ஞான பாச மத்தைக்
கூர்த்தமெய்ஞ் ஞான வாளைக் கொண்டுசே திக்க வேண்டு
மேத்திநீ ஞான வானை யெய்திவ ருருட்க ணலே
பார்த்தபின் நில்லா பெத்தம் பருதிமுன் னிருள்போ லன்றே. 3

204. விடத்தினல் மூர்ச்சித் தானை விடம்வல்லான் பார்க்கத் தீரு
மடர்த்தலா ரெல்லாம் பார்த்து மதுதீரா வாறு போல
விடத்தினை யுடைய ஞானத் திறைவனுர் பார்க்கி லல்லாற்
சடத்துவ மாயை செய்த சழக்குடைப் பிறப்ப ருதே. 4

205. ஞானமில் குருவைச் சேர்ந்தால் ஞானமுண் டாவ தெங்ஙன்
போனகந் தனக்கொன் றில்லான் புகுந்தவற் கீவ தெத்தை
யீனமில் ஞான வான்ற னிணையடி பணியி லல்லா
லூனமில் முத்தி யுண்டோ வொழியுமோ பிறப்பி றப்பே. 5

206. விட்டுவிட் டொன்றே டொன்று விரைமலர் தேடி வண்டு
மட்டுமட் டுண்டு தான்பின் மகிழ்தல்போற் குருக்க டம்மை
விட்டுவிட் டாயி னும்போய் வியன்குரு மேவா னந்தம்
மட்டுமட் டுண்டு நீயுள் வடிவுகாண் பளவு மன்றே. 6

207. ஒப்பிலா மேரு வாமோ வுலகத்தின் மலைக ளெல்லா
மப்புறங் கங்கை யாமோ வல்லாத பல்லா றெல்லாம்
செப்பில்மா தேவ ராமோ தெருவெல்லாங் குருக்கள் கூடித்
தப்பிலாச் சீவ முத்தி தரும்பர குருவா வாரோ. 7

208. உற்றுமுன் னரசைச் சேர்தல் லொலிகடல் வங்க மோடல்
மற்றுமந் திரவா தந்தான் மகாபலங் கொடுத்தல் கோறல்
குற்றமுங் குணமு மங்ஙன் குருபாதம் வணக்க மின்பம்
முற்றிடும் வழுவி லென்று முழுநர காக்கு மன்றே. 8

209. பிறந்திடக் கடைந்த வெண்ணெய் பின்புமோர் தன்னைக் கூடிச்
செறிந்திடா வாறு போலத் தேகமுந் தேகி தானும்
பிறிந்திடப் பார்த்த பின்பு பெத்தத்துள் நிற்பி னுங்கேள்
செறிந்திடா வாறு செய்யுந் தேசிகன் தேசி கன்ருன். 9

210. அடங்குதீக் கடைந்த போது காட்ட மாகரித்தல் போல
உடங்கிமுன் கிடந்த சீவ னுணர்ந்துபின் பெழுந்தி ருந்து
கடங்கொளுங் காயந் தன்னிற் கருதிய விவற்றை யெல்லாந்
திடங்கொளக் கடைக்கண் வைக்குந் தேசிகன் தேசிகன்ருன். 10

211. பற்றிமுன் பெழுந்த செந்தீப் பரந்தகா னகம்போற் பற்றச்
செற்றையை ஞானத் தீயாற் றெத்தச்செய் தின்ப வீரம்
முற்றும்வந் துடற்க ணின்று முளைத்திடக் கடைக்க ணேக்கிச்
செற்றவன் றுன்பந் தன்னைத் தேசிகன் தேசி கன்ருன். 11

212. முற்றின துரித்துக் காச மூப்பிணி யுடம்ப றிந்தே
மற்றவை தனக்குத் தக்க மருந்தினுற் றீர்ப்ப வன்போல்
பற்றின பிறவிப் பாசப் பக்குவ மறிந்த வற்றை
யற்றிட யருட்க ணேக்கு மவன்பர குருவா மன்றே. 12

213. உரத்தின்கண் பிறவித் துன்ப மொழிந்துமே லின்ப மாய
பரத்தின்கண் ணின்றுர் தாம்போல் பாவித்தூ ணிமித்த மாக
மரத்தின்கண் போல்வார் சென்று மற்றவர் மாசொ ழித்த
லிரத்தந்தோ யாடை தன்னை யிரத்தத்தாற் கழலு மாங்கே. 13

214. பற்றின பிறவித் துன்பப் பற்றறுத் தின்ப வீட்டி
லுற்றவர் பிறகுற் றத்தை யொழிப்பவர் மற்றல் லாதார்
கற்றுள கிளிப்போற் சொல்லிக் காட்டுதல் பிறர்க்கு முத்தி
குற்றம தற்றுக் கொத்தைக் கொத்தைக்குக் கோல்காட்டன்றே.
14

215. ஆர்த்ததப் பிறவித் துன்ப மறுத்தறி வுலகின் மிக்க
மூத்தவர் போன டித்து மூடமா மதிஞ ரெல்லாம்
தீர்த்திடார் தம்குற் றத்தைச் சிலர்குற்றம் தீர்க்கும் தன்மை
பேர்த்தடி யிடமாட் டாதான் பிறர்க்கூன்று கோலா மாங்கே. 15

216. அத்திற மதுவும் போகா தத்துவா வடைவா லாறு
மெய்த்திறல் உருவில் வைத்து வேதிப் பார்போல் நடித்துக்
குத்திரர் குத்தி ரற்குக் கூர்ப்பொருள் கூறுந் தன்மை
சித்திரம் சித்தி ரத்துச் செவிச்சொல்லும் வார்த்தை போலும். 16

217. தத்துவ வித்தி லாத சளக்கர்தாம் பிறரைச் சென்று
சுத்திதாம் பண்ணும் தன்மை சொல்லிடின் அவரில் மிக்க
தத்ததி யார்த்த ரில்லைத் தாமும்போய் நரகில் வீழ்வர்
சித்திரம் அவர்பால் இல்லை சீடனும் சிவனைச் சேரான். 17

10. சீஷ லக்கணம்

218. சத்தமெய்த் தயாவி ளேடு சாந்தசஞ் சலனு மாய
அத்தமோ கிடுசார் ஞானி வத்தன லசிய மோடு
இத்தன்மைக் குணங்க ளின்றி யிப்பிறப் பைமெய் யென்னுப்
பத்தியோடு முத்தி யெய்தும் பக்குவன் நல்ல புத்திரன். 1

219. இன்பமில் பிறப்பில் மற்றி லென்றும் வந்த போதமே
துன்பமென்று நின்று சொல்லு மாறு பேத மார்செய்தா
ரின்ப மான வீசனே விடற்கண் மன்னு தானேயோ
துன்ப மாக்கும் சொல்ல வேண்டும் வல்லவா கன்மமோ. 2

220. தன்மங்கொ டாயு மேற்ற விரந்து போம ஞுதியே
கன்மமோ கொடுத்தி டாது கூட்டுகைக்க தேது வான
தன்ம மான வீசனேற் றயாக்க டாஞ்சி லர்க்கிவிற்
கன்ம மன்று தானு மன்று கத்தா வன்று பக்குவம். 3

221. துன்ப மிக்கே யெங்கணுஞ் சுழல்வர் பாவ மிக்கிடி
லின்ப மிக்குன் மத்தரா யிருப்பர் புண்ணியஞ் செய்தார்
துன்ப மின்ப நாடொறுந் துடர்ந்த முக்கு மாதலா
லின்ப மான முத்தி நோக்க லில்லை யாத்ம போதமே. 4

222. தட்டி லிட்ட பொன்கலுத் தடாமி ரண்டு மொத்தபின்
சிட்ட மாந்த ராசுநாச் செவ்வி தான வாறுபோல்
விட்ட நாள்க ளூற்றுவந்து வினையி ரண்டு மொத்தபின்
கெட்டிடும் வினையின் சேட்டை கேடில் போத மேல்கொளும்.5

223. இடுக்க ணுற்ற விப்பி றப்பை யானொழிப்ப தென்னென
மடுக்க லுற்ற சற்ப வாயின் மண்டு கம்ம தென்னவே
நடுக்க லுற்று நாதனே நல்கி டென்று வந்தபோ
தடுக்கு மீசர் தம்மரு ளளிக்க நல்ல பக்குவம். 6

224. ஆசி லாவ ருக்கர்தங் கதிர்கள் சென்று பற்றியு
மூசு வண்ட றைந்திடா வன்மொட் டலர்ந்தி டாமைபோல்
மாசில் பக்கு வத்தினின் வந்து நின்ற சீஷனைத்
தேசிகன் சிறந்து செய்யு மாஞ்ஞை சென்று மங்ஙனே. 7

225. சலத்தின்மிக் கெழுந்து நின்ற தாமரையின் வன்முகை
யலர்த்தி ஞற்க ரத்தின லழகு கெந்த மின்மையால்
மலத்தின் மிக்க பக்குவன் மனத்தி ஞர்கள் தங்களைப்
பெலத்தின் மிக்க தேசிகன் பெலங்கள் செய்து மங்ஙனே. 8

226. நற்றவங்கள் முத்தி நல்ல ஞான மேவு மிச்சையா
லுற்றவிச் செகத்தொ ழித்த லுக்கரித்த சோறெனப்
பற்ற தற்ற சித்தராய்ப் பராபரங் குருக்க ளன்றியே
மற்றொர் தெய்வ முண்டென மனத்தர் பக்கு வத்தரே. 9

சீஷ லக்கணம் முற்றும்.

11. தீக்ஷா லக்கணம்

227. சலந்திகழ் மாயா காயந் தந்திசை மயக்கந் தீர்த்து
நலந்திக ழின்ப வீட்டை நாட்டிடத் தீக்கை தன்னை
யலர்ந்தமற் றனைத்து மாட்டா வாதலா லதனை யானிந்
நிலந்திக ழுயிர்கட் காக நிகழுமா சாற்ற லுற்றேன். 1

228. திகடரு ஞானந் தன்னைச் செனிப்பித்த லாலுஞ் சீடற்
கிகடரு பாதி பேதத் திண்கயி றறுத்த லாலும்
நிகடரு தீக்கை யென்றே நிகழ்ந்திடப் பட்ட தென்று
புகடரு மாக மங்கள் போற்றின வென்று கொள்க. 2

229. கனவினில் விடயம் போலக் கலந்தவிப் போகந் தீர்த்து
நனவினி லின்ப வீட்டை நாட்டிடுந் தீக்கை தன்னை
மனநினைப் பரிச நோக்கால் கூர்மனே வியங்க மச்சம்
எனவினை யதனுற் செய்வா ரேன்றுகொள் வியன்கு ருக்கள். 3

230. சொல்லிய தீக்ஷை செய்கை காலகுக் குமங்க ளாகும்
நல்லியல் ஞானத் தாலும் நலந்திகழ் தொழிலி னுலும்
மெல்லிய மனத்தாற் செய்யும் வியாபாரஞ் சூக்கந் தூலம்
பலலுயி ரறியக் குண்ட மண்டலம் பரப்பிச் செய்கை. 4

231. சுத்தநல் லாத்மா வாவான் தொக்கவவ் வுடல சித்தாம்
வித்தகத் தீக்கை பண்ண விளம்பிய தாருக் கென்னில்
மெத்தமா மிரண்டுந் தன்னில் பிணித்தகா ரணமாய் நின்ற
சித்தத்து மனத்தைச் சுத்தி செய்கவென் றறிக வென்றே. 5

தீக்ஷா லக்கணம் முற்றும்.

12. அத்துவாவிலக்கணம்

232. நின்றவவ் விடந்தன் னின்றும் நீங்கிவே றிடத்தை நோக்கிச்
சென்றுறு நெறிய தாகுஞ் செப்பிடி லத்து வாத்தா
னென்றவிம் மார்க்க மிங்கே தென்றிடி விருஞ்சி வத்தோ
டொன்றிட வுயிர்கள் செல்லு மொண்ணெறி யாகு மன்றே. 1

233. அத்துவா வென்கொல் சீவ னபேதநற் சிவத்தோ டென்னிற்
கொத்தைக்கண் ணெளிகா ணுப்போல் கூடியுஞ் சிவத்தைக்
[காணுன்
பெத்தனைப் பெத்தந் தீத்துப் பேரின்ப வீட்டைக் காட்டும்
வித்தக நெறிகா ணென்று விளம்பிடி லத்து வாவே. 2

234. செடிபடு மாயா கூட்டந் தேசிகன் கிரமத் தாலே
அடியெடுத் தடியிட் டாப்போ லகிலதத் துவங்க ளெல்லாம்
படியைவிட் டோடு மென்மேற் பகர்ந்தபா வனையாம் பெத்தம்
முடியைவிட் டுயிரை முத்தி கூட்டிடுந் தொழிலா மார்க்கம். 3

235. அத்துவா வறுவகைத்தா மாதிமந்தி ராத்து வாவும்
வித்தகப் பதாத்து வாவும் விளங்குவன் ணுத்து வாவு
மெத்திறத் துயிர்கட் கெல்லா மிடம்புவ ஞுத்து வாவும்
தத்துவ வத்து வாவும் பின்புதான் கலாத்து வாவும். 4

236. மாருமந் திரமைந் தாரும் வான்பதம் எண்பத் தொன்ரும்
வேரும்பல் வன்னந் தன்னை விளம்பிலோ ரைம்பத் தொன்ரும்
கூருமண் டாண்டங் கூறின் மூவெழு பத்தீ ரேழா
மாருறு தத்து வங்க ளருங்கலை யைந்தா மன்றே. 5

237. ஆர்ந்தவிவ் வத்து வாக்க ளடைவடை வொன்றி லொன்று
சேர்ந்தவை வியாபி யாகிச் செறிந்திடுங் கலைக ளஞ்சில்
நேர்ந்தவக் கலைகள் நாமம் நிவர்த்தியும் பிதிட்டா வித்தை
சார்ந்தநற் சாந்தி சாந்தியா தீதையாஞ் சாற்றி லன்றே. 6

238. விளம்பிய வத்து வாக்கள் விரித்தது வெவ்வே ருக
வுளங்கொளுங் கலைக ளைந்தி லுட்புக வைக்கு மாறும்
களங்கமாங் குணம வற்றின் காரணக் கலைகள் வைக்குந்
தளங்களா மிருத யாதி தானமுஞ் சாற்ற லுற்ரும். 7

239. இடங்கொள் மந்திர நிவிர்த்திக் கிரதயஞ் சத்தி யோச
மிடைந்த நற்பதம் வியோமம் வியாபியில் விலோம மாகத்
துடங்கிமா தேவ வென்ற பதமந்தஞ் சொல்லில் நாலேழ்
திடங்கொளிக் கலைக்கு வண்ணஞ் சிறந்திடுங் க்ஷகார மாமே. 8

240. உரங்கொள் காலங்கி யங்கு முருத்திர புவன மந்தம்
புரங்கணூற் றெட்ட தாகும் புவியதே தத்து வந்தான்
பரந்தன குணங்கள் சொல்லிற் பார்தனிற் குணங்க ளைந்தாம்
வரந்திக முயன்நி விர்த்தி காரணன் மதிக்கி லன்றே. 9

241 செறிதரும் பிதிட்டை விற்சிர சுவாம மந்திரம்
மறிதரும் பதமு வேழு மகின்மயே சாந்த மாகக்
குறிதரும் மகார மாதி கொண்ட கார மீறதாய்
நெறிதரு வருண ணன்முன் னேர்ந்த ஞான மூன்றுமாம். 10

242 அலந்துள வமரே சாதி யாம்புர மைம்பத் தாறுஞ்
சலந்தன்மேல் வியந்து வைத்த தத்துவ நாலா ருகும்
கலந்தநிற் குணஞன் கென்றுங் காரணன் றிருமா லேயே
நலந்தரும் பிதிட்டை யாயே நாடுமிக் கலைய தன்றே. 11

243. வித்தகத்த கோரமுஞ் சிகையும் வித்தை மந்திரம்
பத்தொ டெட்டி ரண்டுமாம் பதிந்தி யான கராமிதா
வெத்திறத் துருவ ணுத்தி யெழுவருண கவ்வாதமா
யொத்து வாம முக்கியாதி யொண்புர மைந்நான் கொடேழ். 12

244. வருத்துறும் புருட ணுகி மாயை யந்த மாகவே
திருத்து கின்ற தத்துவம் சிறந்த விந்த வேழுமாம்
கருத்து றுங்கு ணங்கெடான் கனற்க ணின்ற மூன்றுமாய்
உருத்திரன் நிவத்தைபால் ஒடுங்கு கின்ற காரணன். 13

245. புகழின் மிக்க வசமொடு புருட சாந்தி மந்திரம்
நிகழ்பதங்கள் பத்தொ டொன்று நித்த யோகி னுமழுத
லிகழி லாக்க வற்க மத்தி லேய்ந்த வருணன் மூன்றுமுன்
றிகழு வாய்மை யாதி யாய திண்புரம் மிரொன்பதாம். 14

246. மன்னு தத்து வங்கள் வித்தை யீசுவரன் சதாசிவன்
முன்னுமா குணங்கள் காலி னுற்றவிவ் விரண்டுமாம்
சொன்ன விந்த நல்ல சாந்தி தொக்கி நின்ற காரணன்
னின்ன கத்தி ருக்கவெவ் வுயிர்ம யேச னுகுமே. 15

247. மந்தி ரங்க ளத்திரே சான நேத்தி ராபதஞ்
சுந்தரவோம் தோன்றுமேல் சோர்வில் சாந்தி யாதிதை
யந்தர விசற்க மாதி வருணன் சோட சங்களா
மந்திரப் புரன்னிர விர்த்தி யாதி பத்தொ டைந்ததாம். 16

248. சத்தியுஞ் சிவமுமே தத்து வங்கள் சாற்றிடில்
லொத்த வானி லுற்ற னின்ற வோசை யொன்று மே குணன்
நித்தமாஞ் சதாசிவன் னிறைந்த சாந்தி யாதீதையி
லத்த னுய காரணன் னிடம் பிரம மரந்தரம். 1

249. எண்ணுமந் திரம்பத மெழுத்துடன் புரங்களும்
பண்ணு தத்து வங்களும் படைத்துநின் றுரைத்திடிற்
றிண்ண மாக வெண்ணியே சிறந்த செய்கை யாவையும்
நண்ணு மிவ்வி டத்திலே யென்றுநீ நயந்திடே. 18

250. அடைத்து வந்த அடைவினுல் அத்து வாக்க ளந்திலுங்
கிடைத்த வைந்தை வாங்கி யஞ்சு கலையுள் கெற்ப மாக்கியே
படைத்தமுன் வினையிலாப் பற்ற வற்று ளெங்கணுந்
துடைத்த நற்சி வாஞ்ஞையால் தொகுத்துவற்றுள் வைத்திடே.19

251 சுருக்கி வைத்த கலைகளைத் துலங்கு மாவு ரத்திலும்
நெருக்கு கண்ட மத்திலும் நேர்ந்த தாலு வடிவிலும்
பெருக்கு மாச யத்திலும் பிரம மரந்த ரத்திலு
மிருக்கு மாறு வைத்திட ரியம்பி வந்த வடைவினுல். 20

252. வாதியாய் மயக்கு மாயை தத்து வங்கள் பாசமும்
சோதியாய்த் தனித்தனி தொகுத்துடலுள் சீவனைப்
பேதியாப் பரந்தொ டேற்றிப் பின்ன மற்றி யாவையும்
சேதியென் றெழுந்தி டாமல் தேசி கன்ற னுஞ்ஞையால். 21

253. பற்றி னின்ற பரகுருக்கள் பாச மான சேற்றையுந்
துற்ற வன்ற னூடெழுந்து துகளில் ஞான வன்னியால்
உற்றெரி கொளுவ நோக்கி யொன்றொ ழிந்த தில்லைபின்
பொற்றி பஞ்செய் கற்புரப் பாவை தீப மென்னவே. 22

254. அண்ட மெட்ட டுத்துமுத் தரித்த டைத்து வைத்தவப்
பிண்டம் வெந்து வீழ்ந்த தன்பி னனையஞ் செழுத்தினல்
பண்டு போல தன்றியே பாவ ரூப மாக்கிபின்
கொண்டு போன சீவ பாவ கங்கொணர்ந்து கூட்டிடே. 23

255. வந்தியோடு பூசை பண்ணு வித்து மந்தி ரங்களா
லந்த மத்தி லேச நீர மத்த மும்பி ராணனு
மெந்தை தாநீ கொண்டரு ளெனக்கு மற்றி யாதொரு
சிந்த னையு நீயலா லெனத்தெளியு மாறுசொல். 24

அத்துவாவிலக்கணம் முற்றும்.

13. சமயாசாரம்

256. சற்குரு பரசி வன்ரு ஞயினும் வாசி சாற்றின்
சற்குருச் சிவன்கோ பித்தாற் சமிக்குமச் சிவனு லென்றுஞ்
சற்குருக் கோபந் தன்னைச் சமிப்பிக்க வொண்ணு தத்தாற்
சற்குரு நாதன் பாதந் தப்பிடான் முத்த னன்றே. 1

257. சித்தநீ யுனக்கு நாளுஞ் சிறீகுருத் தந்தை தாயும்
வந்திநீ சேட்டன் றன்னை மன்னுநற் குருபா தம்போ
லுந்தியி னுயிரே போல வொக்கக்காண் கனிட்டன் றன்னைச்
சிந்தியாய் சிவன்றன் னேடே சிவபத்தர் தம்மை யுங்காண். 2

258. போற்றுகை தவிர்தல் நாதன் பொருளினைப் புசித்த லீதல்
தூற்றுதல் தோடந் தன்னைச் சொன்னது மறுத்தல் பொய்கள்
சாற்றுதல் குலமுங் கல்வி தனத்தபி மானம் பண்ணல்
மாற்றுதல் கொடுத்தல் தன்னை மற்றிவை குருவோ டாகா. 3

259. குருபாதம் பூசி நாளும் குருநாமம் செவியெப் போதும்
குருபாதம் தியானம் பண்ணித் குருகீர்த்தி தோத்தி ரம்பண்
குருபாதம் நினைக்கத் தீருங் குருதோட மல்லா தெல்லாம்
குருபாதம் தன்மே லுண்டோ குருவின்பேர் சிவனு மன்றே. 4

260. சத்திய முரைக்க நாளும் சகலபல் லுயிர்கட் கெல்லாம்
நித்தலு மிதமே செய்க நினைப்பது சிவத்தை யென்றும்
அத்தன் வேதாக மத்தில் அருளிய பொருள்கள் மூன்றும்
எத்திறச் சமயத் தோர்க்கும் எம்மதங் கட்கு மிட்டம். 5

261. கன்றிடு மாகி னெஞ்சம் கண்டவா றுண்மை சொல்லி
லன்றது சத்தி யந்தா னசத்திய மாயி னுங்கேள்
நன்றது பிறர்க்குக் காட்டி னீளுநற் சத்தி யந்தான்
என்றுமுன் னல்லோ ரெல்லாம் எடுத்துரை செய்தா ரன்றே. 6

262. என்றுமே யுயிர்க ளுக்கு மிதஞ்செய்கை தனக்கி தங்காண்
கன்றுமவ் வயிரி யேனும் காப்பது தனைத்து றந்து
நன்றுணர்ந் தோர்க்குத் திட்ட நானிலத் தருளி லாதார்
கொன்றிடு மாயிற் றன்னைக் கொல்லென்பர் பசுவு மன்றே. 7

263. தம்மைத்தா னோக்க வெண்ணித் தான்புறம் பொன்று கொல்
[வான்
தன்னைத்தான் கொல்கின் றான்காண் தன்னுயிர் விடுத்து
[மொன்று
தன்னைத்தான் கொல்லா தான்காண் தன்னைமுன் னோக்கு
[கின்றான்
தன்னைத்தான் நோக்கு கின்ற தத்துவ ரிட்ட மீதால். 8

264. கொல்லுதல் கொலைதா னிற்கக் குவலையர் கனிட்ட மாகச்
சொல்லுதல் நினைத்தல் செய்தல் சுத்தமே கொன்றான் மற்றுக்
கொல்லுதல் சாத்தி ரங்கள் கூறுமா கமத்திற் றட்டுச்
சொல்லுதல் தானு மன்றே சொல்லுவர் நல்லோ ரெல்லாம். 9

265. கொல்லாதான் றன்மந் தன்மேற் கூறின்மற் றில்லை தன்மங்
கொல்லாதான் செல்வந் தன்மேற் குவலயத் தில்லை செல்வங்
கொல்லாதான் துறவு தன்மேற் கொள்ளலாந் துறவு மில்லைக்
கொல்லாதான் ஞானந் தன்மேற் கூர்ந்தமெய்ஞ் ஞானமில்லை. 10

266. நினைத்திடுஞ் சிவத்தை நீதா னென்றவப் பொருளைச் சொல்லில்
அனைத்துயிர் தனக்கி ரங்கும் அருளுடை அறிவ தேகாண்
மனத்திலே அருளை வைப்பான் மாசில்நற் சிவன வன்பின்
நினைத்துநீ தயாவின் கண்ணே நித்தலு நின்றி டையா. 11

267. இப்படிச் சிவாக மத்தி னியம்பிய சமயா சார
மப்படிச் சரிப்பான் முத்தன் ஆதலாற் குருவின் முன்னே
செப்பிடா தொழியிற் சீடன் செய்தோட ங் குருவுக் காகுந்
தப்பினு ளுகிற் பின்பு தன்வினை தான்பு சிக்கும். 12

சமயாசாரம் முற்றும்.

14. அட்டாங்க யோகம்

268. சிட்டனல் வேத கத்தாற் செனித்துள பத்தி ஞானஞ்
சிட்டனல் வயிராகம்பின் செப்பின விந்த மூன்றும்
விட்டுற வெங்க ணுந்தான் விளங்கிட விளங்குகின்ற
வெட்டியோ கங்கள் தன்னை யீதிதென் றியம்ப லுற்றும். 1

269. வருத்தமா மியம மாதி மல்குசீர் நியமந் தன்பின்
னிருத்துவ மாத னமா மியக்குறும் பிராணு யாமம்
கருத்தினுற் பிரத்தியா காரங் கலந்த தாரணை தியானந்
திருத்தமாஞ் சமாதி யந்தந் திகழுமட் டாங்க யோகம். 2

1. இமயம்

270. கொடுங்கொலை களவு காண்டல் கொடுங்கணூர் வலையம் [வைக்க
படுந்தொழில் பொய்கள் சொல்லல் பரர்பொருள் விரும்பி [யேற்றல்
விடுந்தொழி லிவற்றை விட்டே மிக்கநல் லங்க சேட்டை
யிடும்பையொன் றின்றிச் செய்கை யியமத்தின் குணம தன்றே.

2. நியமம்

271. பரிந்துமுன் தவங்கள் செய்கை பாவக சுத்தி யுண்மை
தெரிந்துநற் செபங்கள் பண்ணல் சித்தசந் தோட மங்கை
புரிந்துதான் சிவனை யென்றும் பூசைசெய் தேத்தி வாழ்தல்
விரிந்தவித் தொழில்கள் மிக்க நியமமாம் விதிய தன்றே. 4

3. பத்மாசனம்

272. இருந்ததி லாத னங்க ளியம்பிடி லனந்த நிற்க
வருந்ததில் பத்மா தனங்கேள் மடித்திரு கால்க ளோங்கி
யிருந்தவூ ருவினில் மாறி யிடக்கையால் வலக்கை தாங்கி
வருந்தலில் சித்த மொன்றி மலர்க்கண்கள் நாசி நோக்கே. 5

4. பிராணுயாமம்

273. சாற்றிய பற்ப மாறும் சார்ந்தொரா தனத்தி ருந்து
மேற்றிமுன் பிராணு யாம மியற்றினை யறிந்து பண்ணி
மாற்றிட வேண்டுந் திக்கில் மலஞ்சேர்ந்த தொண்ணு தத்தால்
நாற்றிசை நாடி சுத்தி யாதலால் நவிர்த்த லுற்றும். 6

274. நாடிக ளனைத்தி னுக்கு நலந்திக ழுந்தி யாதி
பீடுடை யிடையி னேடும் பிங்கலை யிடம்வ லம்போய்
மூடிய கபால முற்றே முன்புபோ லிரண்டு மாறிக்
கூடிடுந் தனதா நாசி யென்றுகொள் குழுமி யன்றே. 7

275. துற்றிடுங் கபாலந் தன்னிற் சுழுனைகாந் தாரி தானும்
பற்றிடும் வலக்கண் சென்று பறிந்துபோ மிடக்கண் சிங்கு
வுற்றிடும் வலக்கன் னத்தே யோங்கலம் புருடை பின்பு
மாற்றிடக் கன்னம் சென்று மன்னிடு புருடா வன்றே. 8

276. குகுத்திசங் கினியி ரண்டுங் குதத்தினு மிலிங்கத் தானம்
அகத்தினு மிருக்கு மன்றே அறிந்துகொள் ளவைதன் பின்பு
முகத்தின்மேல் மூர்த்தினி யந்தம் முதுகுதண் டிடையே நிற்கும்
சகத்தினிற் சுவனி யென்றே சாற்றுவா மிவற்றின் சுத்தி. 9

5. நாடி சுத்தி

277. ஆதியில் வாதை யாவு மற்றதோ ரிடமா யத்திற்
கோதிலா வீசர் பூசை குருபாதந் தொடங்கிப் பண்ணி
வாதியா மயக்கு மாய மசித்தத்தே டணைக ளெல்லாஞ்
சேதியுன் பார மீச வென்றுசே ரேகாந் தத்தே. 10

278. ஊற்றமா முண்டி யின்றி யுசிதமாப் பற்ப மத்தில்
சீற்றமற் றிருந்து கொண்டே சித்தமு மொருவ ழித்தாய்க்
கூற்றமாப் பாசந்தீர்த்த குருபரன் றுள்க ளுன்னி
யேற்றுக தாலுந் தன்னி னக்கிர மதனை நாக்குள். 11

6. கும்பகம்

279. சுந்தர வம்பி கத்தைச் சுவாலைக ளொடுங்கக் கூடிச்
சந்திர வின்பத் துள்ளே தன்வாம நாசி முன்னே
யந்தர மதிலே பாவித் தத்தைய வாயு வாலே
மந்திரம தாக வாங்கி வைத்திடு நாபிக் குள்ளே. 12

7. ரேசகம்

280. கும்பித்த சுவாலை யெல்லாங் கொழுவியென் னுடி தோறுந்
தம்பித்த மலம்பு றம்பே தள்ளுபா வகத்தி னுலே
வம்பித்த பின்பு மாறி வலத்திசை யறற்பு றத்தே
வெம்பிடா தெழும்பி மெள்ள விடுவிரே சகத்தினுலே. 13

8. அக்கினி மண்டலம்

281. வன்னிமண் டலமும் வன்னி வீசமும் வலத்து நாசி
தன்னினக் கிரத்தி முன்னே தன்னுடைச் சுவாலை யோடு
முன்னிய நாசி யாலே யுட்புக வாங்கி மெள்ள
மின்னியல் போல நாபி தன்னிலே மெள்ள வைக்க. 14

282. மூண்டெழு சுவாலை யெல்லாம் முன்புபோல் நாடி தோறும்
தூண்டியே மலங்க டன்னைச் சுவாலையாற் புறத்தே நூக்கி
யீண்டுமவ் விரேபந் தன்னை யிரோசித்து வாமத் தாலே
மீண்டுமீண் டுற்றி ருந்து விரும்பியே செய்க விங்ஙன். 15

283. இப்படி யிருந்து நாளு மேகசித் தத்த னுகித்
தப்பின்றி நாலா மூன்ருஞ் சந்திபுக் கிருந்து செய்யச்
செப்புநா ளீரே மூாதல் திங்களோன் றிரண்டி னுதல்
அப்படி நாடி சுத்தி யாமென்று கொள்க வன்றே. 16

284. சுத்தமாந் தன்பின் னுடி தோன்றிடுங் குறிகள் சொல்லில்
மத்தமாஞ் சரீர முன்பு மந்தமற் றறநொய் தாகும்
முத்தமச் செயல்கள் தம்மே லுதரமா ரமுத வங்கி
யித்தன்மை யோடு நாத மெழுந்தபின் செயிப்பி ராணன். 17

285. பிராணனுற் பிறப்பி றப்புப் பிராணனுற் பெலமு மாயும்
பிராணனுற் புலம்பு சித்தல் பிராணனுற் கெகாகெ மங்கள்
பிராணவா கனமாஞ் சேட்டை பிராணன்விட் டின்மை யாலே
பிராணனுத் மகமாம் ப்ராணி பிராணன்விட் டென்ன வாய்
[வோ. 18

286. எண்ணிலாச் சித்தர் வானே ரிருடிகள் யோகத் துள்ளோர்
திண்ணிய கால வஞ்சர் திரிகால ஞான மூர்த்தி
யெண்ணிலாச் சித்தி முத்தி யெய்தினு ரவர்கள் முன்பே
திண்ணிய பிராணன் றன்னைச் செயித்தவ ரென்று கொள்க. 19

287. தஞ்சமாம் பிராண னுகத் தசபையைச் சார்ந்து கொண்டே
நெஞ்சகந் துடங்கி யெங்கு நிகழ்ந்துபந் தனத்தைச் செய்யும்
பஞ்சன விருத்தி பெய்தாற் பஞ்சவா யுக்க ளோடு
மஞ்சுவா யுக்கள் பேத மனேகமென் றறிக வென்றே. 20

288. கடிகொள்பூ நாசி யாதி கால்களங் குட்ட மந்தம்
வடிவுதா நீல மாயே மன்னியா தார மாகி
யடிகளங் குட்ட நாபி யடைந்துதா னுசி முன்பும்
படியுநற் பிராணன் மீண்டு பகர்ந்திடில் விசேடித் தன்றே. 21

289. ஊறுமவ் வுந்திக் கண்ணின் றுதித்தகா ரத்தி னின்று
சீறிமே லெழுந்து போயே சிரமுட்டி நாசி யாலே
ஆறிரண் டங்கு லம்போ யத்தினு லொழிய மற்றை
யீறிலா வெட்டு மீண்டு மிழிந்துபோ யுந்தி சேரும். 22

290. பந்தநற் பிராணன் றன்னைப் பார்த்தது நாசி முன்னே
சிந்தைசெய் ததனை வாங்கிச் சேர்ந்தன நாபி பாத
மந்தம தாக வைத்தே யவ்வவை யூடு வாங்கி
வந்தவ மாற்க மன்றி வலத்தினுல் மெள்ள மாறே. 23

291. ஏற்றுமாத் திரைத னக்கங் கிரட்டிகொள் கும்ப கத்தை
மாற்றுமாத் திரையு மங்ஙன் மற்றதற் பாதி கொள்க

நாற்றமே நாசி யாதி பாதாந்த நடத்தி யிங்ஙன்
சீற்றமில் கெமாகெ மங்கள் செய்திடச் செயமா மன்றே. 24

292. இனமனுப் பிராண னாதி யியக்குமா கெமாகெ மத்தை
மனமன மெங்கே செல்லும் வாயுவு மங்கே செல்லும்
கனமனு கடுஞ்சு வாசங் கடுப்பிலே சென்று தூரத்
தினமனுந் தீபந் தன்னை யவித்தபின் செயித்தா யன்றே. 25

293. கேட்டிடங் கபான வாயுக் கிருகரந் துடங்கிப் பாதம்
பாட்டின மந்த மாகிப் பற்றிடு மிரத்தம் போன்று
மீட்டுமா கிருகா நாடி மேவிய பிருட்டம் பாயுந்
தோட்டினிற் பரட்டி னங்க டன்னிலுஞ் சரிக்கு மன்றே. 26

294. சத்திதன் னுருவ மாகிச் சவிசறக் கொண்ட பானான்
னொத்துமூ லத்து நின்றே யொழிக்கநீர் மலங்க டன்னை
யத்தைமுன் பிரேச கஞ்செய் தத்திலே பாதி பூரித்
தித்தையே கெமாகெ மஞ்செய் யிண்டனாஞ் சயம தன்றே. 27

295. துன்றிடுஞ் சமான வாயுந் தொடக்குட லெங்கு மேவி
நின்றிடுஞ் சந்து தோறும் நிசாகர ராகா ரம்போ
லன்றியும் விசேட மாக அடைந்துபின் னுரமும் நாபி
சென்றுபோ யுதர வங்கி செய்தெழப் பண்ணு மன்றே. 28

296. எவ்விடத் தின்றும் வாங்கி ரேசகம் பண்ணி முன்பே
யவ்விடத் திரேச கத்தி லிரட்டிபூ ரகத்தைக் கொண்டு
வவ்வுடைச் சமானன் றன்னை மலர்ந்த நாபிக்கே வைத்துச்
செவ்விய வரவும் போக்குஞ் செய்யவே செயமா மன்றே. 29

297. மூர்த்திமுன் னாதி யாகப் பாதந்தான் முழுது மந்தந்
தீத்தியா மனலா கார மெனச்சிறந் திரேப முற்றுப்
பேர்த்ததே விசேட மாகப் பின்மூர்த் தினிதாலுக் கண்ட
மார்த்த மாமுரஞ் செறிந்து நிற்குமென் றறிந்தி டன்றே. 30

298. நாவினா னுகர்ந்து வாங்கு நல்லபல் லிரதந் தன்னை
மேவியே விடுங்கா யத்துள் மிடைந்தபல் சிறையி னாலே
தாவியே கெமாகெ மஞ்செய் சத்தனு முடலினி னுள்ளே
பாவுமா சலமா மென்றும் பகர்ந்திடி லுதான னன்றே. 31

299. மிக்குடல் வியாபி யாய விண்ணி னிந்தி ராயுத
மொக்கநின் றிலங்கி யெல்லா வெழுத்தை யுற்றி டத்திலே
தொக்குறு பரிச மான தொன்றுவித்து நின்றிடும்
மெக்கணுஞ் சுருக்கி யித்தை யிருதயத் தடைத்திடே. 32

300. சொன்ன விவ்வாயு வைந்திற் ருேன்றிய பேத மைந்தாம்
தன்னில் முன்ஞக வாயுச் சத்தியு மவிக்கல் பண்ணும்
மன்னியே கண்ணிற் கூர்மன் நடித்திமை கொட்டா நிற்கும்
துன்னிய கிருக ரன்ருன் றும்மல் கொட்டாவி செய்யும். 33

301. உளங்கொளுந் தேவ தத்தன் உடலகத் தெங்கு நின்றே
தளர்ந்திடா வண்ணங் காத்துத் தாங்கியே நடத்தா நிற்கும்
விளங்கிய சீவன் விட்டும் விடாதுநின் றுடலை வீக்கிப்
பிளந்துபின் போகா நிற்கும் பேர்சொலிற் றனஞ்ச
[யன்கேள். 34

302. அறிதரும் வயிர மூர்த்தி யந்தரி யாமி யோடு
நெறிதருஞ் சிவேத ஞேடு சுவாதனும் வாயுத் தானும்
பொறிகளின் முகம்பி ருட்டம் பொருந்தியே பாத மத்தஞ்
செறித்தரு கரணங் கட்குஞ் சேட்டையாய் நிற்கு மன்றே. 35

303. ஏய்ந்தனல் லிருதயத்தே இருத்திமுன் னுதானன் றன்னை
யாய்ந்தவிவ் வாயு வான அனைத்தையு வடைவிற் கூடி
வாய்ந்திடுங் கண்டம் தாலு மன்னிய வயிர மூர்த்தி
பாய்ந்திவை யூடெ ழுப்பிப் பையவே மூர்த்தினிக் கேள். 36

304. மூர்த்தினி தன்னில் வைத்து முயங்கிய வாயுத் தன்னை
யூர்த்துவ நாளத் தாலே யோங்கிட வெழுப்பி மெல்லப்
பேர்த்தது வாங்கிக் கொண்டு பிராணனி னிடத்தே கூட்டி
சேர்த்தின்னம் வாயுப் போக்கைச் செய்திடச் செயம தன்றே.37

305. உரவிய பிராஞ யாம முற்றிருந் திங்ஙன் செய்தாற்
பரவிய காயம் வேண்டிப் பாரிலெஞ் ஞான்றுஞ் சென்று
விரவிய தன்கா யத்தே யிருக்கலாம் வேண்டுங் காலம்
நிரவய நின்ம லத்தை நினைத்தபின் விடலு மாமே. 38

பிரத்தியாகாம், தாரணை

306. சினத்தொடு பொறிகள் சென்று சேர்ந்து தந்தம் புலன்க
ளனைத்தை யும்பற் றிக்கொண் டவாவினைப் பண்ணு வண்ணம்
நினைத்தெழு மவற்றை யெல்லாம் நிரோதிக்கை யாகு மென்று
மனத்தினிற் பிரத்தியா காரம் என்றுகொள் மதித்து நீயே. 39

307. ஆதாரஞ் சுவாதிட் டானம் மணிபூ ரகமா மதற்பின்
மீதாரு மஞக தந்தான் வெய்யவ னிடம்வி சுத்தி
சாதா ரணமா மாஞ்ஞை சந்திரமண் டலமே தாலு
மீதாகு மிவற்றிற் சித்த மிருத்தல் தாரணையா மன்றே. 40

தியானம், சமாதி

308. இலயமற் றிவையைக் கும்பித் திலங்குமுக் கோணத் துள்ளே
வலையமுற் றுறங்குஞ் சத்தி மயக்கற வெழுப்பி மென்மேற்
கலைகளுட் போந்து நின்று கட்டுடைத் தமுதை யுண்ண
சிலையமைப் புறஞ்சித் தத்தால் நோக்குதல் தியான மன்றே. 41

309. சேர்ந்தவிந் திரியங் கரணஞ் சேட்டைகட் கேது வாகி
யார்ந்துட லிடத்தி னின்று மவற்றுடன் றேய்வொன் றின்றி
யோர்ந்திடி லரிய வின்பத் துள்ளுசை தனமா யென்றுஞ்
சாந்தனுந் தன்னைத் தானே காண்கைகாண் சமாதி தானே. 42

அட்டாங்கயோகம் முற்றும்

15. அரும்பொருள் கூறல்

310. விடையமே புறக்க ணோடி விரும்புமவ் வளவு ஞான
முடையனன் றுணர்வி லாத வளவுந்தன் னுருவங் காணு
னிடைவில் பின்றன்னைத் தானெவ் வளவறி கிலானவ் வளவு
மடைவிலா னின்ப முத்தி யவ்வளவுங் காணு னன்றே. 1

311. வார்ந்த மூவகை ஞானத்து வைகாரி கன்ம காண்டம்
ஓர்ந்தநற் பிராகிரு திதான் யோக சித்தத் தாற்கும்
ஆர்ந்தவப் பிராகிரு திதன் னந்தாத்மா வதனைக் கண்டே
யோர்ந்துமற் றியாவும் விட்டே யுதாசனித் திருப்ப ரன்றே. 2

312. சனித்திடாக் கோச ரத்திற் றுன்போதா வரிய தொன்றே
மனித்தரா யறிவுண் டாகை மற்றதி லரிய தொன்றே
யனித்தமில் தன்னை யாயும் மறிவதி லரிய தொன்றே
யினித்தமா யின்பங் காண்பா னியாவரி லரிய தொன்றே. 3

313. அறியலாம் புண்ணி யங்கள் செய்திடு மவரை யெல்லாம்
நெறியினல் மந்தி ரத்தால் நிட்டரைக் காண லாகுஞ்
செறியலாம் யோகத் தாலே திரிகாலம் வஞ்சித் தாரை
யறியலா மறியொ ணுதா மாத்மவே தகனை யையா. 4

314. தேசிக ரனந்த மந்தச் சிசுக்களு மனந்த மாகும்
பேசிடிற் பலமு மங்ஙன் பேதையாம் பெருங்க டற்குள்
ளாசிலா வின்ப மான ஆத்மவே தகனுக் கேகாண்
வாசிதா னுள்ள தையா மற்றவற் குரைக்க வுண்டோ. 5

315. சொல்லுஞ் சாத்திர மெங்கேனும் சுருதியுஞ் சொலுமெங் கேனு
நல்லுல கினிற்கி லேச நாடிலெங் கேனுமையா
பல்லுரை யில்லா வின்பப் பரமுமெங் கேனு மாகு
நல்லுரு நாடிக் காண்பார் நானிலத் தெங்கே யெங்கே. 6

316. பன்னுளும் பண்ணிப் போந்த பாதகச் சித்தத் தாற்குச்
சொன்னலும் பொல்லா தாகுந் தூரமா யரிது காண
நன்ருன மனத்தி னற்கு நன்ருகி யொன்ருய்த் தோன்றும்
தன்னலே தன்னைக் காணும் தற்பரா வமுத மன்றே. 7

317. அஞ்ஞானச் சித்தத் தாற்கு மாவாக னதி பூசை
மெஞ்ஞான முதித்த தாலே வீட்டைக்காண் பொருட்ட தாக
வஞ்ஞான மில்லா தாருக் காத்துமா விலிங்கந் தோன்றும்
மெய்ஞ்ஞானந் தானே தானும் வீடுந் தானேதா னகும். 8

318. பொன்னைத்தான் கண்ட வன்போற் புழுதியை யரித்தெங்
[கண்ணு
மன்னித்தா னுடன்ம யக்கும் மாயதத் துவங்க ளாய்ந்தே
யுன்னித்தா னறிய வின்பத் துருபசை தனமா யுள்ள
தன்னைத்தான் கண்ட வற்குத் தானென்ருர் பிறப்புத் தானுர். 9

அரும்பொருள் கூறல் முற்றும்

16. தனையறியோகம்

319. தன்னைத்தான் காணி லல்லாற் சாராது முத்தி யானல்
என்னைத்தான் என்னை நானே காணுமா றருள வேண்டும்
சொன்னத்தாற் பொருளன் றையா சொற்குரு முகத்தா லாகும்
பின்னைத்தான் யோகத் தாலும் பிறந்திடக் கண்டு கொள்ளாய்.1

320. சிந்தனை யாவும் விட்டுச் சித்தத்தை யிருத யத்தே
சந்ததம் வைத்தி ருக்கத் தற்சுவ மான ரூபம்
பந்தனஞ் செய்யு மத்தைப் பற்றிமற் றியாவும் விட்டால்
வந்துதி செய்யு முன்றன் வடிவில்பே ரின்ப ரூபம். 2

321. புறக்கண்மேல் விடயத் தோடிப் பொறிகள் செய்கின்ற தெல்லா
மறக்கநித் திரைதா னெங்ஙன் வருமதின் மனத்தை மெள்ள
வுறக்கமு முணர்ச்சி யின்றி வைக்கவுன் னுருபத் தின்பம்
மறக்கினும் மறக்கொட் டாதே வந்துதி செய்யு மன்றே. 3

322. மற்றொரு சிந்தை யின்றி மாதரா ரோடுங் கூடி
யுற்றிருந் திழையும் போகத் துறுமின்பத் துருவந் தன்னைப்
பற்றியங் கதுவும் பார்க்கப் பாவிக்கப் பாவிப் பில்லா
முற்றுமே யையா யின்பம் முளைத்தெழு மென்று கொண்ணீ. 4

323. எங்கெங்கே சந்துட் டந்தான் ஏய்ந்தது மனந்தனக்கே
யங்கங்கே மனஞ்ச மிக்க வசஞ்சல னுயிருப்ப
தெங்கெங்கு மிடைய ருதே வின்பமா முன்றன் மேனி
யங்கங்கே தோன்று நிற்கு மனுபவி யத்தை நீயே. 5

324. அண்டமெண் டிக்கெங் கெண்ணு மடங்கச் சூன்னியம தாகக்
கண்டுகொண் டிருக்கக் கண்ட கருத்தையு மறவே விட்டே
யண்டமெண் டிக்கெங் கண்ணு மாய்நின்ற வானந் தத்தைக்
கண்டுகொண் டிருக்கும் வண்ணங் கணத்தில் வந்துதிக்கு
[மன்றே. 6

தனையறி யோகம் முற்றும்

17. பரமயோக லக்கணம்

325. பெற்றநற் றந்தை தாயும் பிள்ளைபெண் டுடன்பி றந்தார்
உற்றசுற் றக்குழாத்தோ டொக்கவே யிருப்பி னுங்கேள்
பற்றிலன் பரம யோகி பத்மபத் திரந்தா னென்றுந்
துற்றதோ யத்து ணின்றுந் தோய்விலா வாறு போல. 1

326. அலையாரு மநேக நாக மார்த்தெடுத் தணிந்தே றட்டு
இலையா மந்திர பெலத்தா லெங்ஙனே விளையாட் டிங்ஙன்
துலையாருஞ் செவிதொக் காதி துகளாமிந் திரியங் கொண்டு
விளையாடும் யோகி தன்னை விடயங்கள் செய்வ தென்னே. 2

327. மன்னுநன் மருந்தி னேடும் மந்திர பெலத்தால் நஞ்சைத்
தின்னிலுஞ் செரிக்கு மாங்கே தீவினை யனந்த கோடி
பன்னுநற் பரம யோகி பண்ணிலும் நசிக்குங் கேளாய்
மன்னு மாத்திரை தனக்குள் விமலபா வகத்தி னுலே. 3

328. செஞ்சுடர்த் தீயுட் புக்குச் சிலர்கள் மந்திர மருந்தாற்
பஞ்சிழை யதற்குஞ் சேதம் படாமைபோந் தேறு மாங்கே
நெஞ்சக முழுது மின்பம் நிறைந்தபன் ஞான யோகி
வஞ்சமா மாயக் கூட்டம் மயக்கினும் மயக்கு றுனே. 4

329. அழுக்குடைச் சாதி யோரு மடைந்தால்மெஞ் ஞானி தன்னை
விழுப்புடன் றலைவ ராவர் வேதகக் குளிகை சேர்ந்த
இழுக்குடை யிரும்பு செம்பு மிலங்குபொன் னுகு மாங்கே
ஒழுக்கமோ டவன்ருள் சேர்மின் னேங்குவீ டெய்த லுற்றீர். 5

330. சிற்சொரு பத்து ஞானஞ் சேர்ந்திட மிகவு மெங்குங்
குற்சிதத் தான மெல்லாங் கோடிவிற் கிடைக்கு ளெங்குந்
தற்சிவத் தானஞ் சுத்தந் தபோவனந் தீர்த்த மாகு
நற்சுடர் புக்கி டந்தான் நன்மையாய் விளங்கு மாங்கே. 6

331. பாத்திர மனைத்திற் சத்தாம் பாத்திரம் பரம யோகி
யேத்திசைத் தவருக் கீந்தால் எவ்வுல குக்கு மாகும்
பார்த்தவப் பிரதி மங்கள் பணிந்தவர் வேண்டித் தீந்தா
லேத்திசைத் தேவு மாற்ருர் யோகீசர் தம்மை விட்டே. 7

332. வருந்திய சரிதை தீர்த்த மந்திர செபங்கள் பூசை
பொருந்திய தியானம் யோகம் போதத்துக் கேது வாகும்
திருந்திய ஞான முற்ருற் சிற்சொரு பத்தை நோக்கி
யிருந்திடு மிவைபின் பாரா னின்பனும் யோகி யன்றே. 8

333. எங்கணும் நிறைந்த வின்பத் தெய்திய பரம யோகர்
தங்கணிற் காண்ப ரத்தைச் சகளம்பின் புறம்பு பாரான்
அங்கையிற் றிரனை விட்டே யவாவினுல் மூன்கை நக்கும்
பங்கமா மதினுர் போலா மென்றனர் பயனை யோர்ந்தே. 9

334. பெத்தபா வகத்தை விட்டும் பிழம்பில் தற்சொருப னெக்குஞ்
சித்தனெங் கிருந்தா னங்கே சிவன்முகஞ் செய்யா நிற்குஞ்
சுத்தமாஞ் சத்தி வீசந் தோன்றிடு மனைத்து மங்கே
யெத்தைநாம் புகழ்வோம் தன்னை யினிச்சொல்லுந்
[தாற்பரீயம். 10

பரமயோக லக்கணம் முற்றும்.

18. அனுபோக லக்கணம்

335. இனிப்பல சொல்லி யென்னே யோகங்கள் சித்தி யாய
தனிப்பெரும் பொருளே நல்காய் தற்சொரு பத்தை முன்னம்
முனிப்பெருந் தகையோய் செவ்வாய் முறுவல்செய்
[தருட்க ணேக்கிச்
செனித்ததே னிப்போ தும்பாற் றெரிந்துசெப் பென்ருய்
[கேளாய். 1

336. செப்பொண்ணு தென்னு லத்தைச் சிரசாதி பாத மந்தங்
கப்பெலாம் விட்டு ரோமங் கம்பித்து விதிர்விதிர்த்து
அப்படி யுளேசீத் தத்தா யங்கங்க ளனைத்து நெக்கு
ஒப்பில்பே ரின்ப மெங்கு முகமதா யுதித்த தன்றே. 2

337. பண்டுநீ நானென் றெண்ணப் பண்ணிய மாயா கூட்டங்
கண்டிலே னென்னே யுன்றன் கண்வலி யிருந்த வாறே
யண்டனே யண்டர் கோவே யளவில்பே ரின்பந் தானே
எண்டிசைக் கீழு மேலு மெங்கணு நிறைந்த தெந்தாய். 3

338. ஆதனாய்க் காணா துன்னை யளவிலாக் கால மெல்லாம்
பேதனாய்ப் பிறந்து வந்த பேதைமை யென்னே யென்னே
நாதனே நாத மூர்த்தி நாதாந்தத் தலைவா வுன்றன்
பாதநா னடையப் பெற்றுப் பகரொணா வின்ப னானேன். 4

339. இரண்டென நடுக்கி டந்த விருண்மா யக்கரை யழிந்து
புரண்டது வின்ப மெங்கும் புறவெள்ளப் பட்டின் றன்றே
முரண்டவண் டணிதார் மார்பா முத்தனே முத்தி யெல்லாந்
திரண்டதோருருவே யுன்றன் றிருக்கடைக் கண்பட் டன்றே. 5

340. வஞ்சகம் பண்ணி மாயை வகுத்தபல் துன்ப மெல்லாம்
பஞ்சழ லென்னப் பொன்றிப் பாறின பவங்க டானு
நெஞ்சக நிறையத் தந்தாய் நிகரில்போ தானந் தத்தை
யுஞ்சன னடிநா யேனா னுன்னருள் பற்றி நின்றே. 6

341. இத்தனை நாளும் புத்தி விகற்பத்தை யென்ன தென்றே
அத்தனே யடியேன் போருக் காதனா யகப்பட் டேனான்
சுத்தமா யின்ப ரூபத் தூர மின்றித் தூரம்மாய்
வித்தகா நீதான் செய்த வித்தைதா னிருந்த வாறே. 7

342. பொறிபுலன் கரணம் பூதம் புணர்ச்சிசெய் தளவில் காலம்
பிறிவுமாய் வகுத்த மாயப் பேதைமை யெல்லாந் தீர்த்துச்
செறியுமா றறிய வின்பச் சீவனன் முத்தி தந்தாய்
அறிவுமா யறியப் பட்ட பொருளுமா மண்ண லேநீ. 8

343. பெண்ணலி யாணா னென்னப் பிறந்துழன் றநேக யோனி
கண்ணலி காலம் வந்த கடுந்துய ரனைத்துந் தீர்த்து
விண்ணென முழங்கு நாத விந்துவும் விளக்கா வெங்கு
மண்ணலே யின்ப வெள்ளத் தழுத்தினா யென்னை யின்றே, 9

344. செந்தியு மிருக்கக் காட்டஞ் செற்கொண்டு மண்ணா மாங்கே
யெந்தையே யின்ப னாய விறைவநீ யிருக்க வென்னு
ளந்தனாய்க் காணா துன்னை யளவிலாக் கால மெல்லாம்
வந்ததே பிறந்தி றந்து மாயையின் வசத்த தாயே. 10

345. பகைத்தென்னை மிகையே பண்டைப் பண்ணிய தொண்ணூற் [றாறும்
திகைத்தன மாயை யார்செய் கிரிகையுந் தெண்பட்ட தன்றே
நகைத்துநீ பார்த்த போதே நாதனே துன்ப நீங்கி
வகைப்பில் பேரின்ப மானேன் மற்றுநா னுரைப்ப தென்னே. 11

346. விரையுமா பூதம் விட்டு வேட்கைநோய் வெகுளி யும்போய்த்
திரையிலா நீர்போ லென்றன் சித்தசஞ் சலமுந் தீர்த்து
கரையிலாக் கருணை வெள்ளக் கடைக்கணீ வைத்த போதே
யுரையிலா வின்ப மானே னுரைப்பதென் னினிமற் றெந்தாய்.12

347. பன்னிடப் பட்ட வெந்நூல் பரிதிமா ரமரர் நிற்க
வுன்னுட னெண்ணப் பட்டா ருடனின்று முணரா மன்னே
வென்னுடற் புகுந்தெங் கண்ணு மின்பமாய் நிறைந்த தன்மை
சொன்னடற் கேது வெங்குந் தோன்றிடக் கண்டி லேனே. 13

348 முப்பொறிப் பகைக ளாறு முக்குணங் குற்ற மற்று
மெப்பொறிப் புலன்க ளெல்லா மிரிந்தன வென்னை விட்டே
கப்புறு கருத்துந் தீர்ந்தேன் கல்வியு மமைந்து நின்றே
யொப்புறு வகையி லின்பத் துன்னைநான் கண்ட போதே. 14

349. ஐகண்டப் பட்டுச் சட்டோ வாக்கைவிட் டலம்வந் தென்று
மைகண்டத் துழலு மாயத் தந்திசை மயக்கம் போம்போல்
மெய்கண்டே னிம்மை யேநான் விளங்குபே ரின்பமுத்தி
கைகண்டேன் கேட்ட தெல்லாங் கருத்தின்று முடிந்த தன்றே.15

அனுபோகலக்கணம் முற்றும்.

19. விஞவுரை

350. மன்னனின் னருளால் முன்னம் மறைந்தபா சம்போய் நாயேன்
என்னைநான் கண்டு மெந்தா யின்னமோர் விண்ணப் பங்கேள்
கன்னலே உடம்புக் கெல்லை கன்மமுள் ளளவு மன்றே
பின்னையிவ் வுடலென் கன்மம் பெத்தமுந் தெறத்தப் பாட்டே.1

351. வேதித்த போதே வீடு விளம்புநற் சத்தியோ முத்தி
சேதித்துப் பாசத் தேயத் திருக்கிலுஞ் சீவ முத்தர்
வாதித்த தாகிற் றனே மாற்றியுங் கொள்ள லாகுஞ்
சோதிக்க வேண்டா சொல்லிற் பொய்த்தன்றே பிறவி
[யன்றே. 2

352. அந்தித்த பாச மற்று லாக்கையும் வறுத்த வித்தேற்
பந்தித்த வுடற்கி லேசம் பண்டுபோ லுண்டா வானேன்
பெந்தத்தின் வாச னைகாண் பெருங்காய மாண்டும் பண்டம்
கந்தத்தில் நாச மில்லா வாறெனக் கருதிக் கொண்ணீ. 3

353. பற்றிமுன் மறைத்த பாசப் படனமாம் போர்வை யெல்லா
மற்றமைக் களவை காண்கை யாத்துமாத் தன்னைக் கண்டுஞ்
செற்றதே தென்னில் முன்னை விசைசித்தக் கிலேசங் கோலாற்
சுற்றுகை குலாலன் வீட்டுஞ் சுழலுஞ்சக் கரம்போ லன்றே. 4

354. இருக்கிலுஞ் சீவ முத்த னிருக்குதே னென்று சொல்லிச்
சுருக்கமில் பரம முத்தி சுவேச்சையாற் கூட வைத்தாய்
பெருக்கமற் றியாவும் பெற்றேன் பெறவேண்டு மின்ன
[மொன்றை
யுருக்கியுள் கசிந்துன் றுள்கட் கொழிவிலா யன்பே யன்பே. 5

355. கோதில் நற்சிவந் துடங்கிக் குருபாரம் பரியஞ் சுத்தி
தீதிலா தென்று மென்றுஞ் சிறந்தவற் குண்டவ் வாஞ்ஞை
போதுசெய் யாத பத்தி புண்ணியா வுனக்குத் தந்தோஞ்
சேதிநீ தானும் பாசந் தெளிவுள வுயிர்கட் கன்றே. 6

356. அண்ணல்நீ யருளி னக்கா லணுமணல் மேரு வாகும்
விண்ணினி லுடுவு மிக்க சந்திரன் றனு மாகு
மண்ணிலே யடிய னேற்கு வானுளோர்க் கறியா வின்பத்
தெண்ணிலாப் பதம ளித்த இறைவனே போற்றி போற்றி 7

357. எல்லாருங் காணப் பொல்லா விரும்பைப்பொன் னாக்கி
[யத்தைப்
பல்லாருந் தொழுந்தே வாகப் பண்ணிவைத் தாங்க ளுதி
பொல்லாவென் பிறவித் துன்பம் போக்கியாண் டின்பந்
[தந்தாய்
சொல்லாய்கைம் மாறென் செய்கேன் தோற்றியா வுனது
[முன்னே. 8

358. எனக்குநீ செய்வ தெல்லா மிந்தநூல் தன்னை யென்று
முனக்குநீ நல்லாய் போல நோக்கியொண் ணெறியே சேர்வான்
றனக்குநீ யறிவி நாளுஞ் சம்பிர தாய மாக
மனக்குறை யறுக்கு மாஞ்ஞை வழிவழி யறைய வேண்டும். 9

359. ஒப்பி லடியொன் றிரண்டொண் கமல முவமிக்கும்
கப்பி ரண்டு பல்கொம்பாங் கதிரொ ளிசே ரடிபோற்றி
செப்பில் நஞ்செகத் துருவிலேபூச் செழும்ப லங்க ளுயிர்க்
யப்படி சென்றென் றுகு மடிதந் தாயடி போற்றி. [களித்தே 10

360. ஆசதா முடற்பிறப் னறுதியாந் துடக்கறுத்து
மாசிலா வீடளித்த வள்ளலே போற்றி போற்றி,
பாசசே தன்ற டாதுன் பரசர ணங்கடந்த
வீசனே போற்றி போற்றி யெந்தையே போற்றி போற்றி. 11

361. உணங்கிடா தனைத்து நீயாய் நின்றுமொன் றில்லாய் போற்றி
யிணங்கிடுஞ் சகத்தா மிந்த வியந்திரத் தலைவா போற்றி
பிணங்கிடுஞ் சமய தர்க்கப் பிணக்கறுந் தாண்டாய் போற்றி
வணங்குமென் பவநோய் தீர்த்த வயித்திகப் பெருமான்
[போற்றி. 12

வினவுரை முற்றும்.

இளங்காரிகுடி மெய்ம்மொழித்தேவர் அருளிய

மெய்ம்மொழிச் சரிதை சுபக்கம் முற்றும்.

பரபக்கம்

நையாயிகம்

மக்கள்மார் மணலூண் அன்ன வசனமாத் திரத்தால் முத்தி
பொக்கமே சொல்லா திந்நூல் பொ ... ...
... ...
மெய்ம்மொழி யாலே நாமம் மெய்ம்மொழிச் சரிதை என்றே.

பிறக்குமிவ் விடத்துத் துன்பம் பிணிபல உறுகை துன்பம்
உறக்கமும் உணர்வுந் துன்பம் ஒண்பொருள் தேடல் துன்ப
மிறக்குமவ் விடத்திற் துன்பம் ... ...
... ...

நையாயிகம் முற்றும்

ஆகத் திருவிருத்தம் 77

லோகாயதம்

வானங்கா லங்கி மண்ணீர் மணமிருந் தெனநீர் தோன்ற
தானவற் றுடலா யத்திற் சதுர்த்தச புவனம் போத
மானது கரட்டத் தீவோன்... ... ...
... ...பின்புகுதா பூத காலமே கர்த்தா வன்றே. 1

....சைதன வீச ணுத்மா சார்வினை மறுபிறப்பு
பொய்யதாம் அளவை என்றே பூதங்கள் புணர்ச்சிக் காலம்
செபதப வியல்பா லெல்லாம் சனித்தவா றங்கு முத்தி
மைதுனம் லோகாயதம் மதியிது நன்று நன்று. 2

அன்னத்தி லிருநீர் மெய்யே அன்னமுன் பரக்கி னுரார்
அன்னத்தி லிருநீர் காணு மாக்கையா மாறென் னன்றி
அன்னத்தை நுகர்ந்த வாக்கை... ... ... ன்னி
லன்னத்தி லிருநீர் தோன்றும் அதற்குமுன் பியாக்கை
[யுண்டோ. 3

ஆதலா லன்னந் தன்னு லாக்கைசம் பவியா மற்றத்
தாதுவா முடல்க டம்மி லிழைந்தநீ ராக்கை யென்னில்
மாதரார் மைந்த ரோடே மகிழ்ந்திழை யிருநீ ரென்றும்
போதமா முடல்க ளாகாப் பிறப்புட லிருநீ ரன்றே. 4

காயிலே நீறு கூட்டிக் கசிந்த செந் துவரே போல
வேயுமைம் பூத மென்ருய் விழையலா முடலுட் போதந்
தோயும்போ தொன்ருே டைந்து தொக்கிடத் துடல தொன்ரும்
வாயுமைம் பூத மன்ரு மாகடை … … யுமறிவு மையா. 5

உடம்பினி லுணர்வா மென்னில் உதித்திடுங் காட்டத் தீப்போல்
உடம்புள வளவா மங்கே யுணர்வது முறைய வேண்டும்
உடம்பது கிடக்க விங்கே யுணர்வது போத லாலே
உடம்பினி லுணர்வு வேரு முணர்விலீ ருணரு மன்றே. 6

உட … குருநீர் நாளு மூக்கசே தனமாய்ப் போகை
யுடல்தானே யுணர்வா காதவ் வுயிர்போக வுடல்வே மத்தா
யுடல்வேவ திருநீர் சார்வா லுயிர்வந்து புகிரி லேயா
வுடலொடு வுயிரு மோரா வுரைக்கையைத் தவிர்நீ யையா. 7

இறந்தன பிறவா வென்னி லிருநிலத் துள்ளோர் நாளும்
சிறந்தநற் றன்ம தானம் செய்திடக் கூடா வாகும்
பிறந்தனு பவியா தாகில் பெறுவதென் னென்று சொன்னீர்
மறந்தனி லோக வாதம் மலேந்திலே யென்ன லாமோ. 8

உலோகர்தம் வார்த்தை மெய்யே யுடற்பிறப் பின்பு மென்றிவ்
வுலகரெல் லாருஞ் சொல்ல வுடலிட ரென்ப ரென்னீ
ருலகரி லுயர்ந்தோ ரெல்லா முடற்பிறப் பிடரே யென்கை
யுலகமு முயர்ந்தோர் தாமும் முண்டென்பர் மறுபிறப்பே. 9

இன்றுதாய் மலடி யென்று மென்றவன் போல வுன்சொல்
லொன்ருகக் கொள்ளா ரொன்றைப் பலருண்டென் றுரைக்கும்
[போது
நன்ருக வுண்டா கித்தான் நானிலத் துள்ள தையா!
பொன்ருவும் வழியுண் டென்னும் புத்தனில் வழிகே
[டுன்பால். 10

ஓங்கின மரத்தின் மண்டு முதிர்ந்த வச்சரு கேழா
தாங்கின விறந்த வாக்கை யறிவுபின் பிறவா தென்னி
லோங்கின மரந்தா னன்ருே வுதிர்ப்பதுந் தளிர்ப்ப தையா
வாங்கன மாத்து மாவு மாக்கைவிட் டெடுப்ப தன்றே. 11

கோலமாங் கலேகள் கூடிப் பிறந்தபின் பிறந்தாங் காகிப்
பாலனுய்ப் பிறந்து பைய வளர்ந்திடு மதியே போலத்

தூலமா முடல்விட் டாத்மா சூக்கம வுடலாய் நின்று
மேலுஞ்சென் றிருநீர் தோய்ந்தூழ் வசத்துட லுடலுட்
[டோன்றும். 12

போனமுன் னுடலிற் கன்மம் புகுந்தவவ் வுடல்தான் காட்டும்
ஞானவிந் திரியஞ் செய்தி நாமமுங் குணமு மாயுந்
தானமுந் தன்மஞ் சார்ந்த தனித்தனி வெவ்வே ருனு
லீனமா ஞானி கட்கு மிம்மையி லம்மை தோன்றும். 13

வினைப்பய னில்லை யாகில் விரும்பினிர் நாடு நாளும்
நினைத்தெழுங் கரும மெல்லாம் நினைவாக முடிய வேண்டு
மனைத்துமுன் வசமொன் றின்றி யாக்கமு மழிவுங் கண்டால்
முனைப்பலத் தளவா யிம்மை முயற்றி யிற்பலமின் றேராய். 14

இறந்தபின் பிறவா தாயி னிருவினை யில்லை யாயின்
அறிந்துநீ பெறுவ தென்னே வற் ... லா ரிழப்ப தென்னோ
விறந்தபின் பிறவா வாயி னில்லைமேற் பெறுவ தன்றே
யறிந்தன ருனக்கொன் றீயா ரறிவிலா வுலகா யிதானீர். 15

வேலமுட் கூச்சிட் டாரும் விளாங்கனி திரட்டி னூரும்
சாலமுன் னேர்ந்து பார்க்கி லில்லைத்தன் னியல்பே யன்றே
மூலம்வித் திலைகாய் பூண்டு மூண்டெழு மழையுங் காற்றுங்
காலங்கள் புரியத் தோன்றிக் கழிதல்போற் காலங் கத்தா. 16

சடங்களா மாபூ தங்கள் தனித்தனி புணர்ச்சி காலம்
அடங்கலுஞ் சகத்திற் றேன்று மவையவ மாத லாலே
சடங்கள் காலங்கள் செய்யத் சம்பவித் திடாது கன்ம
மடங்கலு மறிந்து தத்த மளவினிற் செய்வான் வேண்டும். 17

ஆர்ந்தவக் காலஞ் செய்த நவக்கிர கங்கள் போயச்
சோர்ந்தவப் பயிரைக் கண்டு துளிமுத லிடாத தென்னே
சாந்தியைப் பண்ண வென்னே தாணியா மழையுங் கண்டோம்
சேர்ந்தவச் சகத்தின் கத்தாச் சேதன சத்தி கண்டாய். 18

விண்ணில்லார் மைது னத்தின் மேலிலை யெனவிரும்ப
மண்ணுளார் முத்தி யென்ன வாலிதோ வவரிற் போத
மெண்ணிலா வின்ப முங்கள் முத்தியாங் கரனோ மென்னில்
கண்ணிலா னெளியைக் காணுன் கதிரவ னிலனு மோதான். 19

(இதன்மேற்பட்ட பாடல்கள் இல்லை.)

மாயாவாதம்

பிறந்த வங்கிசம் பரந்தான் பிறந்திடா தென்னிற் கேளாய்
பிறந்த வங்கிசம் பார்க்கிற் பேதமோ வபேத மோசொல்
பிறந்த வங்கிசம் பரத்திற் பேதமேற் பேதந் தட்டாம்
பிறந்த வங்கிசம் வேறன்றேற் பிறப்புறந் துயர மொக்கும். 4

பெத்தனாய்ப் பிறவா தாத்மா பேதமாய்த் 5

இலங்குமக் காந்த முன்பே யிரும்பது திரிந்தாப் போல
நலங்கொள் சேதனன்றன் முன்பே நடந்திடும் புத்தி யென்னில்
சலங்களின் பரமாத் மாவின் சோதிதன் கட்டுப் பாடோ
புலன்கொளா துடலை விட்டுப் போவது புத்தி சொல்லாய். 6

எண்ணியல் சுத்த நித்த னியான்பரம் பிரம மென்றுஞ்
சன்னதி மாத்தி ரத்தாற் சஞ்சாரி புத்தி யென்றுஞ்
சொன்ன வாரார் பரந்தான் சொல்லாத வவிகா ரத்தாற்
பின்னிய சடமாம் புத்தி பி(ம)ரம நரனென்றல் மெய்யோ. 7

பாடல் இல்லை-உரைமட்டும் உள்ளது. 8

நீக்கலாப் பரத்தின் கண்ணில் நிகழு மாயா கூட்ட
மாக்கையா யதன்கண் சீவ னாயுழன் றிடுமென் னிற்கேள்
நோக்கிநீ பேத னோவின் றில்லையே பிறப்பை நொந்து
போக்குவார் தேட வேண்டாம் பொய்யாயே தேடுகின்றாய். 9

சற்பமென் றிரச்சு தன்னிற் சனித்தவப் பீருப் போல
நிற்பதிப் பிறவிப் பீரு நிருமிக்கு மளவு மென்னி
லற்பமோ வனித்த முண்டோ வறிவில்லை யோதான் பீரு
வுற்பவிப் பானென் சொல்லா யாங்குநற் பிரமன் றன்பால். 10

சலிக்குமச் சலனம் புந்தி சைதன னீரில் விந்துச்
சலிக்குமச் சலத்துக் குள்ளும் சந்திரன் சாயை யன்றோ
சலிக்குமப் புந்தி தன்னிற் சைதன னில்லை யத்தாற்
சலிக்குமச் சரீரம் புந்தி சடம் பின்னர்ச் சரீரி யாரோ. 11

இருளொடு வெளிக்கே தென்னுஞ் சம்மந்த முண்டோ
[சொல்லின்
மருளுடை மாயை யோடும் வான்பர மங்ங னென்னில்
இருளொடு வெளிபோ லன்றி யானென தென்று நீயும்
மருளற மதிநூல் கற்கும் கார ணா மதித்தோ ராயே. 12

சூத்திர மொன்ற னேகந் துகளிலா மணிகோத் தாப்போ
லார்த்தபல் யாக்கைக் குள்ளு மாத்துமா வொருவ னென்னி
லப்பேத்தொ ரூன்றே டிப்போய்த்தோ பின்புநாய் தின்ன
[விட்டுப்
பாத்திருந் தாரோ சொல்லாய் பரத்தினர் செய்த தென்னே. 13

அகமுகம் பார்த்த கத்துள் அவிகார னுனெ னென்று
முகமுகம் பார்த்துச் சொன்னாய் முன்பின்பு மலைவோ ராதே
சகமுக மாயை யில்லாத் தற்பரம் பிரமம் வந்து
முகமுகம் பார்ப்ப ராஞல் பபரத்துக் குறை களையா. 14

இதம்பிர ... ... னபரம் பிரம மென்று
இதம்பிர பஞ்ச மித்தை யென்செய்யப் புகுந்தா யித்தி
லிதம்பிர பஞ்சத் துள்ளே யிருந்திருந் தல்லே னென்கை
யிதம்பிர பஞ்சற் கேற வீதல ... ... டோ. 15

... ... 16

உன்னுணர் வளவுஞ் செல்ல வுரைத்தனை யமையு நிற்க
மன்னிய வின்பத் துன்ப மலவுடல் சேரான் புத்தி
சன்னதி சேட்டை யன்ருந் தற்பர நீக்கும் போதை
துன்னிய பிறப்புக் கென்றுஞ் சுகதுக்கி யுளனென் ருேராய். 17

மாயாவாதம் முற்றும்

ஆகவிருத்தம் 114

சாதிபேதம்

ஆதியிற் பிரம னேதா னனைவர்க்கும் பிதாவ தென்றும்
வேதியர் வேந்தர் மிக்க வணிகசூத் திரர்கள் மற்றும்
நீதியிற் சங்க ரங்கள் நீசராம் பறைய ரென்றும்
சாதிபே தங்கள் சொல்லும் தன்மையொன் றறிகி லோமே. 1

முகத்திலந் தணன்ருன் வாகு முடிமன் னூருத் தன்னில்
அகத்தினுல் வசியன் றன்பின் படியினிற் சூத்தி ரன்ருன்
பதத்திலென் பிதாபுத் திரரன்ருே பண்டையன் பால நீங்கள்
சகத்தினில் மூன்று போலப் பிறந்திடிற் சாதி யுண்டாம். 2

தந்தையாம் பிரமன் றன்பாற் சனித்தவத் தானந் தோறும்
அந்தண ராதி சாதி யன்றுபோற் பிறக்கக் காணேம்
முந்திய வுதிர வூத்தை யொழுக்கரு வாச லாலே
வந்தவர் பிறந்து சொல்லும் வாசியென் சாதி யையா. 3

ஓதிநல் லகத்தி யன்பின் னெக்கவே வசிட்ட னரும்
போதிநற் பிரம ருக்கும் புத்திரர் தாயார் வேசி
கோதினல் வசிட்ட னருங் குனுங்கி பாலிழைந்து பெற்ற
தீதில்நற் புதல்வன் சத்தி மாமுனி செப்பி லன்றே. 4

மன்னுநற் பராச ரற்கு மற்சன கந்தை பெற்ருள்
பன்னுமென் னூல்க ளெல்லாம் பண்ணிய வியாசன் றன்னைச்
சொன்னவவ் வியாச னற்குச் சூதனைப் பெற்றெ டுத்தாள்
அன்னமென் நடைதா னுன திலோத்தமை யவளு மன்றே. 5

வேசிபால் நுளைச்சி பாலும் குனுங்கிபால் விரவிற் றேன்றும்
பாசியாம் பல்வாய்ப் பார்ப்பார் பண்டித ரிருடி யாராய்
மாசிலா மறைநூல் கற்றங் கவரவர் வழிநீ சொன்னய்
மாசிலாக் கல்வி யேகாண் மற்றுங்கள் பிறப்பை யோராய். 6

போற்றுவ ருயற்றி தன்னைப் பூதல மதனிற் பாப்பா
ரேற்றவர் தமக்கொன் றீயா ரியாவரிற் றலைவ ரையா
சாற்றிடிர் தன்ம போதரு தனவற்கே முற்றிதானு
மேற்றெருகை கீழவது உம்மீடுவா ரகைமேலு மத்தால். 7

ஆத்துமாக் கரணம் பூத மைம்புலன் பொறிக ளொக்கும்
யோர்புடை யுணர்வு வேட்கை யுணவுமை துனுதி யொக்கு
மேற்படு மிறைவன் சாதி வேறுவே றில்லை யானுற்
பாற்பிலா மறையோ ரெல்லாம் பறைகடை யென்ப தென்னே. 8

ஏறதற் கெருமை தன்பா லில்லையாங் கெற்ப மென்றும்
வேறெனுஞ் சாதி பேதம் விளம்பிலப் படியே வேண்டும்
மாறிலா மறையோர் கெற்பம் வாய்ந்திடும் பறைச்சி பாலும்
கூறினய் சாதி பேத மென்கொடு கூறினயே. 9

ஆதலாற் சாதி யொன்றென் றறிந்துகொள் நித்த ரெல்லாம்
மோதிநல் லோர்க்கும் வேத முனையன்றி யவற்கும் நிற்கும்
பேதமுண் டென்று சாதி பிதற்றிற் கற்பனைகாண் மிக்க
பாதஞானத்து ரைத்த பரமார்த்த மென்று கொண்ணீ. 10

சாதிபேதம் முற்றும்

ஆகத் திருவிருத்தம் 124 கவியாற் பரபக்கம் முற்றும்

பாடல் முதற்குறிப்பு அகராதி

சுபக்கம்

(எண் : பாடல் எண். *உடுக்குறியிட்ட பாடல்கள் தத்துவராயர் திரட்டிய சிவப்பிரகாசப் பெருந்திரட்டில் சேர்க்கப்பட்டிருப்பவையாகும்.)

அக்கணிற் றுந்தை 167
*அஞ்ஞானச் சித்தம் 317
அடங்கிடு மாயை தன்னி 155
*அடங்குதீக் கடைந்த போது 210
அடுத்திட வேண்டுவானே 185
அடைத்து வந்த 250
அடையமுக் குணத்திற் 140
அண்ட மெட்டடுத்து 254
*அண்டமெண் டிக்கெங் 324
அண்ணல்நீ யருளி 356
*அத்தத்துட் பிடித்து 197
அத்தமா யகத்துட் 87
அத்திற மதுவும் 216
அத்துவத் துணராதுள்ள 95
அத்துவா வறுவ கைத்தா 235
அத்துவா வென்கொல் 233
அதிகாரி சுத்த நித்த 80
*அந்தித்த பாச 352
அனுதியல் பாகிற் 73
அமைவி லின்பக் 1
*அரியனு யறிதற் கொண்ணு 52
அருந்துய ரம்மை யூழால் 100
*அலந்த மெய்ஞ்ஞான 23
அலந்துள வமரே சாதி 242
அலர்ந்த முக்குணத்தி 65
*அழுக்குடைச் சாதியோர் 329
*அனேயிரு மநேக 326
*அற்பமா ஞான சத்தி 122
*அறிதரும் விபிரமூர்த்தி 302
*அறியலாம் புண்ணி யங்கள் 313
அறிவுடன் சாக்கி ரந்தா 175
அறிவுறு சாத்துவீக 186
*அன்றியொன் றில்லாம 9
அனுதியல் பாகிற் பெத்தம் 73
ஆசதா முடற்பிறப்பி 360
*ஆசி லாவ ருக்கர் 224
ஆத்தவிப் புத்திக் 141
*ஆதனுய்க் காணு 338
*ஆதாரஞ் சுவாதிட் டானம் 307
*ஆதியாஞ் சத்தி 16
ஆதியில் வாதை யாவு 277
*ஆர்த்தது பிறப்பை 203
*ஆர்த்தப் பிறவித் 215
ஆர்ந்தவிவ் வத்துவாக்க 237
*ஆனபி னெட்டா மாதம் 171
இடங்கொள் மந்திர 239
இடம்படு வியாப மேக 118
*இடுக்க ணுற்ற 223
இத்தனை நாளும் 341
இதுவென வறிதற் 63
இந்தவிச் சிவமாயுள்ள 26
இந்திர சாப மெங்ஙன் 37
இந்திரி யங்கள் சேட்டை 147
இந்துமுன் றரித்தோன் 43
இப்படிச் சிவாக மத்தி 267
இப்படிப் புத்தி தன்னி 85

*இப்படி யிருந்து நாளு 283
இப்படி யிருப்ப தொன்றென் 5
*இரண்டெனத் தத்துவத்தோ 136
*இரண்டென நடுக்கி 339
இருக்கிலுஞ் சீவமுத்த 354
இருட்டிய சகலர் தம்மில் 99
* இருடிகளிமையோர் 61
இருந்தி லாத னங்க 272
இலங்குவான் வட்ட ரூப 150
*இலயமற் றிவையைக் 308
இறையெங்ங ளுகமத்தி 202
*இன்பமில் பிறப்பில் 219
*இனமனுப் பிராண 292
இனிப்பல சொல்லி 335
ஈரெட்டுக் கலையில் 40
உடற்கிறை மயக்க ஞான 102
*உணங்கிடா தனைத்து 361
*உயர்ந்துளே னுலகி 146
உரங்கொள் காலங்கி 240
உரத்தின்கண் பிறவித் 213
உரவிய பிராண யாமமு 305
உரைப்ப டாவி காரத் 92
உளங்கொளுந் தேவ 301
*உற்றுமுன் னரசைச் 208
உற்றெரி கொளுநீ 172
உறப்பட்ட விலிங்க 180
உன்னிமுன் சீவமூலத்தை 36
உன்னுமம் மனோன்மணி 49
*ஊற்றமா முண்டி யின்றி 278
ஊறுமவ் வுந்திக் கண்ணின் 289
எங்கணும் நிறைந்த 333
எங்கெங்கே சந்துட் 323
*எஞ்ஞான மந்திரங்கள் 199
எடுத்தவவ் வுடல்க 60
*எண்டிசை போக்கு 191
எண்ணிலாச் சித்தர் 286
எண்ணிலாச் சீவன்தன் 67
எண்ணுமந் திரம்பத 249
எரியது சேர்வித் தாங்கே 120
எரியினைச் சேர்ந்த 179
*எல்லாந்தன் னுள்ள 8
*எல்லாருங் காண 357
எவ்விடத் தின்றும் 296
எறிந்திடும் பொருள்மே 106
என்வடி விதுவென் 182
என்றவிவ் வாயு வைந்து 166
என்றுமே யுயிர்களுக்கு 262
எனக்குநீ செய்வ 358
ஏகந்தா னறிதற் 126
ஏய்ந்தநல் லிருதயத்தே 303
ஏயும் வான்தனக் 152
ஏயுறு சுழுத்தி நாபி 178
ஏற்றுமாத் திரைத 291
ஐகண்டப் பட்டு 349
*ஒத்தவவ் வியத்தம் 53
ஒப்பில்விக் கேசர்க் 45
ஒப்பி லடியொன் 359
ஒப்பிலாச் சிவத்தின் 17
ஒப்பிலா மேரு 207
ஒருவன்செய் மாயை 162
ஒழிந்திடப் பொறிகள் 177
*ஒன்றெடொன் றெவ்வா 58
ஓர்ப்பொடு பசியும் 91
கடிகொள்பூ நாசி 288
கலங்குவன் பிறவிப் 113
கலைகளீ ரெட்டில் 39
கன்மமு மனுதி 109
கன்றிடு மாகி னெஞ்சம் 261
கனந்தரு மாயை 128
கனவினில் விடயம் 229
காரியங் கன்மற் 34
*குருத்தசங் கினியிரண்டுங் 276
குணங்களிற் றோன்றும் 144
*கும்பித்த சுவாலை 280
*குருபாதம் பூசி நாளும் 259
கேட்டிடங் கபான வாயுக் 293
கொடியவன் பிறப்ப 28
கொடுங்கொலை களவு 270
கொல்லா தான்றமைந் 265
கொல்லுதல் கொலைதா 264
கோதில் நற்சிவந் 355
கோதிலா மகேசர் 46
சட்டெனத் தெளிந்தான் 77
சடத்துவ மாயை 64
*சத்தமும் பரிசந் 160

சத்தமுன் விடயந் தன்னைச்	84
சத்தமுன் விடயம் பத்துஞ்	176
சத்தமெய்த் தயாவி	218
சத்திதன் னுருவ மாகிச்	294
சத்திய முரைக்க	260
சத்தியுஞ் சிவமுமே	248
சத்தியுந் தானுங் கூடி	12
சத்துநற் சிவவி	119
சத்துநற் புமான்	132
சத்தெனு மமிர்தா னத்தை	82
சந்ததஞ் சிவம்பா	21
சந்திர னிருதயந்தான்	32
*சலத்தின்மிக் கெழுந்து	225
சலந்திகழ் மாயா	227
*சற்குரு பரசிவன்று	256
சனித்திடாக் கோசரத்திற்	312
சார்ந்தநற் கன்ம மாய	41
*சார்ந்ததவ் வளவிற்	173
சார்ந்தனன் விந்து	123
சாற்றிடி லாதி சத்தி	22
*சாற்றிடிற் பசுவ நாதி	68
சாற்றிய பற்ப மாறும்	273
சிட்டநல் லறிவு	138
சிட்டரா மன்பர்	103
சிட்டனல் வேத கத்தாற்	268
சித்தநல் லாத்து மாவுந்	96
சித்தமில் துரியந் தன்னில்	181
*சித்தநீ யுனக்கு நாளுஞ்	257
சித்திரித் துலகம்	124
*சித்துட னசித்து மாய	57
சிந்தனை யாவும் விட்டுக்	320
சிந்தித்து வணங்கு	18
*சிற்சத்தி தானே	56
*சிற்சொரூ பத்து	330
சிறந்தநற் சைத னன்றான்	142
சிறந்தநற் றீட்சை	200
*சின்மய மாதலாலே	71
*சினத்திருங் கடலெழுத்து	196
சினத்தொடு பொறிகள்	306
சுத்தநல் லாத்மா	231
சுத்தநற் சிவம தென்றுஞ்	19
சுத்தநற் சிவமுஞ் சீவன்	76
சுத்தநற் சிவமு மத்திற்	114
*சுத்தமாந் தன்பின்	284
சுத்தமா மாயை	125
*சுந்தர வம்பிகத்தை	279
*சுருக்கமில் சிவத்தின்	55
சுருக்கி வைத்த கலைகளைத்	251
*செஞ்சுடர்த் தீயுட்	328
*செடிபடு மாயா	234
*செந்தியு மிருக்கக்	344
செப்பின தத்துவங்கள்	117
செப்பொணா தென்னா	336
செறிதரு கதிரோன்	83
செறிதரும் பிதிட்டை	241
செறிவுறு மலமுங்	98
*சேர்ந்தவவ் வுருவம்	93
சேர்ந்த விந்திரியங்	309
சொல்லிய தீச்சை	230
*சொல்லுஞ் சாத்திர	315
சொற்படு சாக்கிராதி	184
சொன்னமும் மலங்கள்	105
சொன்னவில் வாயு	300
சோத்திர மோசை	148
ஞானமில் குருவை	205
தஞ்சமாம் பிராண னாகத்	287
தட்டி விட்ட பொன்கலுத்	222
தத்துவஞ் சிவமுஞ்	115
தத்துவ பேதஞ் சொன்னோம்	48
*தத்துவஞ் சகலோற்	15
தத்துவ மனைத்துஞ் சார்ந்து	114
*தத்துவ மனைத்துஞ் சாரான்	7
தத்துவ மூர்த்தி	20
தத்துவ வித்திலாத	217
தந்தைதன் வலத்தே	164
தம்மைத்தா னோக்க	263
தன்மங்கொ டாயு	220
தன்னைத்தான் காணாக்	183
தன்னைத்தான் காணி	319
தாங்குபூ தாதிக்கப்பேர்	143
*தாயையா ரறியார்	158
*தானல்லா தொன்று	89
திகடரு ஞானந்	228
திரிவிதத் தத்துவங்கள்	3
திருத்தமாஞ் சதாசிவாதி	27
*திருத்திமா மலர்போய்த்	159

*திருத்தமா முத்தி	194	*பற்றிமுன் பெழுந்த	211
துரியத்தைச் சாக்கிரத்தே	195	பற்றிமுன் மறைத்த	353
துலங்குமவ் வுயிர்களுக்குத்	137	பற்றின பிறவித் துன்பப்	214
*துற்றிடுங் கபாலந் தன்னிற்	275	பற்றின மலத்த ரென்று	97
துன்ப மிக்கே யெங்கணுஞ்	221	*பற்றினை வினைகள்	193
துன்பொடு பயமில் லச்சை	94	*பன்னுளும் பண்ணிப்	316
துன்றிடுஞ் சமான வாயுந்	295	பன்னிடப் பட்ட	347
தூண்டிய வறிவினேடுந்	131	பன்னிரா தித்தர்	47
தெரிந்தவல் விடைய	133	பன்னுமெந் நூல்க	14
*தேசிக ரனந்த மந்தச்	314	*பாத்திர மனைத்திற்	331
தேர்ந்தனன் பரம மாய	157	பாவக மெய்யோ	38
*தோயு முன்னுடலை	163	*பிணிகளும் பாசத் தாலே	112
தோற்றமு மாதியாய	10	பிராணனல்	285
தோன்றிடும் வாயுத் தந்தை	165	*பிரிந்திடக் கடைந்த	209
நட்பொரு பகைக ளுள்ளா	101	பிறப்பதும் பாசத் தாலே	111
நற்ற வங்கள் முத்தி	226	*பிறப்பதே பேணி	62
நன்மேந் திரியஞ்	116	பின்கலை பிறந்த தென்னும்	130
*நாடிக ளனைத்தி னுக்கு	274	பீடலிங் கத்துத் தானும்	24
நாதனற் சிவாக	2	புகழின் மிக்க வசமொடு	245
நாவினு நுகர்ந்து	298	புறக்கண்மேல்	321
*நித்தம்போ லகித்த	59	பெண்ணலி யாணு	343
நித்தன் கேவல	74	*பெண்ணலி யாணென்	11
*நிராமயன் நிர்க்குணத்தன்	6	பெத்தபா வகத்தை	334
*நின்றவவ் விடந்தன்	232	பெத்தித்த சாம நீலம்	79
*நினைத்திடுஞ் சிவத்தை	266	பெற்றநற் றந்தை	325
நீடுமா லிருளுக் கென்று	174	*பொறிகள் போய்ப்	13
*நீருறு குமிழி போல	169	பொறிகளால் விடய	88
நேர்ந்திடுங் கிழக்கு	35	பொறிபுலன் கரணம்	342
*பகைத் தென்னை	345	*பொன்னைத்தான் கண்ட	318
பங்கயா தனமா மேனி	30	*போதமும் போதா	187
*பசுபதி சைதனத்தாற்	75	போற்றுகை தவிர்த்தல்	258
பஞ்சநன் முகத்தீசர்	31	மத்தமவ் வியத்தந்	135
பஞ்சமந் திரமே	29	மத்தமவ் வியத்திற்	190
பட்டிடுங் கொலைவேல்	33	மந்திரங்க ளத்திரே	247
படர்ந்துள மாயை	129	மயக்கமோ டறிவொன்	108
பண்டுநீ நானென்	337	மற்றெரு சிந்தை யின்றி	322
பதிபதார்த் தங்க ளாய	66	மன்ன னின்னருளால்	350
பந்தநற் பிராணன்	290	*மன்னிடு மலங்கள்	156
*பரஞ்சித்தி லுதியா	54	மன்னு தத்து வங்கள்	246
பரிந்துமுன் தவங்கள்	271	*மன்னுநற் சிவத்திற்	51
பலவகைச் சகத்தை	42	*மன்னுநற் சிவம தேகம்	4
பழித்துரை நியமத்	139	மன்னுநன் மருந்தி	327
பற்றி நின்ற பரகுருக்கள்	253	*மாதமைந் துக்கு ளெல்லா	170

மாலதா மாயை யென்று 110
*மாருமந் திரமைந் தாரும் 236
மிக்குடல் வியாபி யாய 299
முகமங்கன் காணு நிற்கு 86
*முத்தனு முத்தாத் மாவும் 70
முத்திதன் சித்தி தன்னை 192
முந்தித்தான் சிவதத்து வத்தில் 121
முப்பொறிப் பகைக 348
*முற்றின துரித்துக் 212
மூடிமுன் னிருந்த 78
*மூண்டெழு சுவாலை 282
மூர்த்தி முன்னுதி 297
மூர்த்தினி தன்னில் 304
மூலத்தி னின்றுங் கால 127
வசித்திடும் வாக்குத் 149
*வஞ்சகம் பண்ணி 340
வடித்துள கிளியே 198
வந்தியோடு பூசை 255
வருத்தமா மியம 269
வருந்துறும் புருட ஞகி 244
*வருந்திய சரிதை 332
*வன்னிமண் டலமும் 281
வாதியாய் மயக்கு 252
*வார்ந்த மூவகை 311
வாலிய சிவந்து 50
வானினிற் சதாசி வன்ருன் 153
*விட்டவவ் வுடலாற் 168
*விட்டிடுந் தேகஞ் 161
*விட்டுவிட் டொன்ருே 206
*விடத்தினுல் மூர்ச்சித் 204
விடமதுக் கடங்கிப் போதம் 188
விடையமே புறக்க ணுேடி 310
*விண்ணினில் மழைக்குற் பத்தி 69
வித்தகத்த கோரமுஞ் 243
வித்தகப் புமான்முன் 145
*வித்திலே விளேவு 90
*வித்தின்றி முளேதா னில்லே 72
விந்துமத் திமத்த தாகும் 25
விந்து வினின்று மலம் 154
விரிதரு கதிரோன் 189
விரியும் வான்றுமம் 151
*விரையுமா பூதம் 346
விளங்கிய சித்தத் தோதான் 81
விளம்பிய வத்து வாக்கள் 238
விளேத்தறி வாத்து மாவின் 104
வெங்கரி யுரித்தோன் 44
வெய்யசொல் வெறுப்புச் 107
வேதித்த போதே 351
வேதிய ராதி நான்காம் 201

பரபக்கம்

(எண் : பக்க எண்)

அகமுகம் பார்த்த கத்துள் 49
*அன்னத்தி லிருநீர் 45
ஆத்துமாக் கரணம் 50
*ஆதலா லன்னங் 46
ஆதலாற் சாதியொன்று 50
ஆதியிற் பிரம னேதான் 49
ஆர்ந்தவக் காலஞ் 47
இதம்பிரமம் 49
*இருளொடு வெளிக்கே 48
*இலங்குமக் காந்த 48
*இறந்தபின் பிறவா 47
இறந்தன பிறவா 46
இன்றுதாய் மலடியென்று 46
*உடம்பினி லுணர்வா 46
உடல்குரு நீர் 46
உலோகர்தம் வார்த்தை 46
உன்னுணர் வளவுஞ் 49
எண்ணியல் சுத்த 48
ஏறதற் கெருமை தன்பா 50
*ஓங்கின மரத்தின் 46
ஓதிநல் லகத்தி யன்பின் 50
காயிலை நீறு கூட்டி 46
*கோலமாங் கலைகள் 46
சடங்களா மாபூத 47
*சலிக்குமச் சலனம் 48
*சற்பமென் றிரச்சு 48
சூத்திர மொன்றநேகங் 49
செய்யுள் சிதைவு, உரைஉண்டு 48
*சைதன வீச னாத்மா 45
*தந்தையாம் பிரமன் 49
நீக்கலாப் பரத்தின் 48
பிறக்குமிவ் விடத்துத் 45
பிறந்த வங்கிசம் 48
பெத்தனாய்ப் பிறவா 48
போற்றுவ ருயற்றி 50
போனமுன் னுடலிற் 47
மக்கள்மார் மண லூண் 45
மன்னுநற் பராசரற்கு 50
முகத்திலந் தணன்ருன் 49
வானங் காலங்கி 45
விண்ணில்லார் 47
*வினைபய னில்லை யாகில் 47
வேசிபால் நுளைச்சி 50
வேலமுட் கூச்சிட் டாரும் 47

மதிப்புரை மாலை

மதிப்புரை நூல்களும் மதிப்புரையாளர்களும்

1. கவிமணி வாழ்க்கை
2. கவிமணி கவிதை
3. கவிமணி ஆராய்ச்சி

} டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

4. தொல்காப்பியம்—சொல்லதிகாரம் ஆதித்தியம்

—திரு. மு. சண்முகம் பிள்ளை

5. காளிதாசன் உவமைகள்

—டாக்டர் ந. கங்காதரன்

6. போற்றித்திரு அகவல்

—திரு. மு. சண்முகம் பிள்ளை

7. எ. ஆ. கிருஷ்ண பிள்ளை கிறிஸ்தவனான வரலாறு (தன்வரலாறு)

திரு. மு. சண்முகம் பிள்ளை

கவிமணி வாழ்க்கை : ஆசிரியர் : மு. சண்முகம் பிள்ளை ; முதற் பதிப்பு 1977 ; பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1, பக். 168 ; விலை ரூ. 5.00.

கவிமணி கவிதை : ஆசிரியர் : மு. சண்முகம் பிள்ளை ; முதற் பதிப்பு 1977, பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1. பக். 204, விலை ரூ. 6.00.

கவிமணி ஆராய்ச்சி : ஆசிரியர் : மு. சண்முகம் பிள்ளை ; முதற் பதிப்பு 1977 ; பாரி நிலையம் ; 59, பிராட்வே; சென்னை-1. பக். 168, விலை ரூ. 5.00.

கவிமணி வாழ்க்கை, கவிமணி கவிதை, கவிமணி ஆராய்ச்சி என்னும் இம்மூன்று நூல்களும் வித்துவான் மு. சண்முகம் பிள்ளை அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1972ஆம் ஆண்டு '**கவிமணியின் தமிழ்ப் பணிகள்**' என்னும் தலைப்பில் நிகழ்த்திய கல்கி நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவுகளாகும். மூன்று நாள் உரைகளும் ஒரே நூலாய்அமையின் மிகப் பெரிதாய்விடும் என்பது கருதித் தனித்தனியே இப்பொழுது வெளியிட்டுள்ளனர்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் இருபதாம் நூற்றுண்டுப் பெரும் புலவர்களுள் ஒருவராய்ப் புகழுடன் விளங்குபவராவர். மறுமலர்ச்சிக் கவிஞர்களுள்ளும் இவர் தலைசிறந்து விளங்குகின்றார் இப்புலவர் பெருமகனுரின் நூற்றுண்டு 1976ஆம் ஆண்டு நிகழ்ந்தது. இந்தச் சிறப்புமிக்க ஆண்டில் தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் ஆங்காங்கே அன்பர்கள் விழா எடுத்துப் போற்றினர். இளமை தொட்டே கவிமணி அவர்களின் அன்புக்கும் அரவணைப்புக்கும் உரியவராய் விளங்கிய வித்துவான் மு. சண்முகம் பிள்ளையவர்கள் இந்நூற்றுண்டு நினைவாகத் தம் உரைகளை வெளியிட்டு நன்றிக் கடன் செலுத்தியுள்ளார் என்று தெரிகிறது.

கவிமணி அவர்களோடு இளமை தொட்டே நெருங்கிப் பழகியவர்களுள் இவரும் ஒருவர். கவிஞரின் ஆயுட்காலம் வரையில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நெருக்கமாக இருந்து தொடர்பு கொண்டு அறிந்தவர். மேலும், கவிமணியவர்களின் சமகாலத்து வாழ்ந்த பெரும் புலவர்களோடும் இவருக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. கவிமணியவர்களின் நூல்களைப் பாரி நிலையத்தின்வழி முறையாக அமைத்துப் பதிப்பித்து வெளியிட்டவரும் இவரே. எனவே, இவர்கள் தரும் கவிமணியவர்களைக் குறித்த இந்நூல்கள் சிறப்பாக அமைதல் இயல்பேயன்றே ?

முதல்நூல் கவிமணியின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையெல்லாம் தொகுத்துத் தருவதாகும். கவிமணி தோன்றிய நாஞ்சில் நாட்டின் பழஞ் சிறப்பினைப் பரக்கப் பேசிப் பின்னர்க் கவிமணி அவர்கள் பிறந்த சூழ்நிலையினை விளக்கி, அவரோடு வாழ்ந்த சமகாலப் புலவர்களைக் குறிப்பிட்டு, கவிமணி அவர்களின் புலமை நிறைந்த முன்னோர்களைக் காட்டி, திருமடத்தில் தம்பிரானிடம் அவர் தமிழ்க்கல்வி கற்ற பாடத்தைக் கூறி, இளமையிலேயே கவி பாடிய அவர் தம் ஏற்றத்தையும், நினைவாற்றல் திறத்தையும் காட்டியுள்ளார். மேலும், தொடக்கப்பள்ளி ஆசிரியராகத் தொடங்கிய அவர் வாழ்வில் குழந்தைப் பாடல்கள் எனும் தாமரை மலர்கள் அவர்தம் நெஞ்சத் தடாகத்தில் மலர்ந்த பான்மையினைக் குறிப்பிட்டு, வாழ்க்கைத் துணைவியாய் உமையம்மையார் அமைந்த சிறப்பைக் காட்டி, பெண்மையின் பெரும் பண்புகளுக்கு உறைவிடமாய்த் துலங்கிய அவ்வம்மையார் கவிமணி அவர்கள் மங்கையர் மாண்பு உணர ஓர் இடமாய் விளங்கிய நிலையினையும் எழுத்தில் நம் புலவர்மணி அவர்கள் வடித்துள்ளார். நூலின் இறுதியில் திருவனந்தை வாழ்க்கையும், புத்தேரி வாழ்க்கையும், கடைசிக் கால வாழ்க்கையும் இடம் பெற்றுள்ளன. பெண்கள் கல்லூரித் தமிழ் விரிவுரையாளராய்த் துலங்கி நயத்தக்க நாகரிகம் உடையவராய்ச் சிறந்து, சமூகக் கொடுமைகளைக் கண்டு கொதித்து, அதன் விளைவாய் நாஞ்சில் நாட்டைத் திருத்த, 'மருமக்கள் வழி மான்மியம்' என்னும் எள்ளற் சுவையும் சீர்திருத்தப் பயனும் கொண்ட கவிதை நூலொன்றைத் தந்த நல்லுள்ளம் காட்டப்படுகிறது. வையாபுரிப் பிள்ளை, முத்துசாமிப் பிள்ளை, இலட்சுமணப் பிள்ளை, சிவராஜ பிள்ளை, சங்கரய்யர் முதலான அறிஞர் பெருமக்களோடு தொடர்பு கொண்டு அதன்வழி இவ்வறிஞர் பெருமக்கள் சேர்ந்து ஆற்றிய பணிகளைக் குறிப்பிட்டுள்ளார் நூலாசிரியர். கவிமணி அவர்களின் புத்தேரி வாழ்க்கை பல்லோர் பாராட்டாகவும், பயனுறு தொண்டாகவும் துலங்கிய சிறப்பினைப் புலவர்மணி அவர்கள் விரிவாக விளக்கிக் கூறியுள்ளார். புகழால் மயங்கிச் செருக்கடையாத பொற்புறு வாழ்க்கை கவிமணி அவர்களுடையதாகும் என்பதனை நூலாசிரியர் விளக்கியுள்ளதோடு, கவிமணி அவர்களின் குண நலத்தையும் கருத்துரைகளையும் கவினுறக் காட்டியுள்ளார்.

'கவிமணி கவிதை' எனப் பெயரமைந்த இரண்டாவது நூலில் கவிமணியின் இலக்கியப் பூங்காவில் மலர்ந்த கவிதை மலர்களை நாம் நுகர வைத்துள்ளார். 'மலரும் மாலையும்', 'ஆசிய ஜோதி', 'உமார் கய்யாம் பாடல்கள்' முதலியன கவிமணியின் கவிதைச் சோலையிற் பூத்த வண்ணமும் மணமும் மிக்க மலர்களாகும். இவைகள் இலக்கிய ஆராய்ச்சியாலும், இறையுணர்வாலும், குழந்தையோடு குழந்தையாய்க் கவிமணி அவர்கள் வாழ்ந்த தூய தொண்டு வாழ்வாலும் மாண்புற மலர்ந்த கவிதைகளாகும். சுருங்கச் சொன்னால் இவ்விரண்டாவது நூல், கவிமணி அவர்களின் கவிதை

நலன்களையும் நயங்களையும் சுவைத்து மகிழ்வதற்குத் துணை செய்யும் தொண்டினைக் குறைவரச் செய்து நிற்கிறது எனலாம்.

எளிமையும் இனிமையும் வாய்ந்த கவிதைகளை இயற்றித் தமிழ் கூறு நல்லுலகிற்கு அளித்த கவிஞர் பெருமானாகிய கவிமணி அவர்கள் இலக்கியம், வரலாறு, சமூகம் முதலிய பிற துறைகளிலும் ஆழ்ந்து ஆராய்ந்து கற்றவர் என்பதனைக் 'கவிமணி ஆராய்ச்சி' என்னும் நூல் இனிதுற, எழிலுற எடுத்துக் காட்டுவதாகும்.

கவிமணி அவர்களின் அறிவியல் நோக்கினைப் புலப்படுத்திப் பின் அவர் வழங்கிய அறிவுக் கொடையினைக் காட்டி, அவர்தம் ஆராய்ச்சிப் பணிகளை அடுத்து முறையே காட்டி இந்நூல் சிறப்புற அமைந்துள்ளது. சாசன ஆராய்ச்சியில் நேர்ந்த தவறுகளைச் சுட்டிக் காட்டி, அத்துறை மேலும் சிறப்படைய அவர் ஆற்றிய அரும் பணிகளை முறையே தந்து, 'நாஞ்சில் நாட்டு வேளாளர்' பற்றிய சமூக வரலாற்று ஆய்வினைக் காட்டிக் கவிமணி அவர்கள் ஆராய்ச்சி அறிஞராய்த் துலக்கமுறும் பெற்றியினை இம்மூன்றாவது நூல் முழுமை யாகவும் முறையாகவும் கிளத்தி நிற்கின்றது.

இவ்வாறாகக் கவிமணி அவர்களைப் பற்றி என் ஆசிரியர்பிரான் புலவர்மணி அவர்கள் தம் புலமைச் சிறப்பும் எளிமையும் அடக்க மும் இனிதே விளங்க ஏற்ற முறையில் எழில் தமிழில் வடித்துத் தந் துள்ளார். இந்நூல்கள் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்களு டைய வாழ்க்கையையும், கவிதை மாண்பையும், பிற வேறு பொதுப் பணிகளின் சிறப்பையும் விளக்கி நிற்கின்றன. இந்நூல்களால் கவி மணியின் தூய, தொண்டு வாழ்வுச் சிறப்பினையும், அவர்தம் ஆராய்ச்சித் திறனையும் முறையே அறிவதோடு நூலாசிரியர் புலவர் மணி மு. சண்முகம் பிள்ளையவர்களின் புலமைச் சிறப்பினையும், நடைநலத்தினையும், உள்ளப் பாங்கினையும் முறையே அறிகிறோம். இந்நூல்களால் கவிமணியின் புகழ் என்றும் ஒளி வீசித் திகழும்; தமிழுலகம் பயன் பெறும். நல்லனவற்றை ஏற்றுப் போற்றி ஆத ரித்து நிலைக்கச் செய்யும் தமிழ்கூறு நல்லுலகம் இந்நூல்களை விரும்பி வரவேற்று மகிழ்வதாக.

—*சி. பாலசுப்பிரமணியன்*

தொல்காப்பியம்—சொல்லதிகாரம்—ஆதித்தியம் ; மகாகவி அ. கு. ஆதித்தர் அருளிய தெளிவுரை ; C.L.S. கிறிஸ்தவ இலக்கிய சங்கம், 1977 ; பக்கம் viii + 252 ; விலை ரூ 7-50.

தொல்காப்பியம் ஒரு பெருங்கடல். 'தொல்காப்பியக் கடலில்' என்றே நேமிநாத நூலின் பாயிரம் சுட்டுகிறது. இது பண்டைத் தமிழின மொழிமரபு. இலக்கிய மரபுகளை நன்கு வகுத்துரைக்கும் பெருநூல் ; தமிழில் பண்டு தொட்டு இன்றுவரை வளர்ந்து பெருகி வரும் தமிழ் மரபிற்கு ஓர் உரையாணி போன்று ஒப்புயர்வற்று விளங்குகிறது இத் தொல்நூல்.

இந்நூலின் மூன்று அதிகாரங்களுள் நடுவணதாக நின்று இலகும் சொல்லதிகாரம் தமிழ் மொழி மரபினை அறியத் துணைவரும் அரிய தொரு கருவியாகும். ஏனைய அதிகாரங்களினும் இந்தச் சொல்லதி காரத்திற்கே உரைகாரர் பலர் விளக்கங் காண முன்வந்துள்ளனர், இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் என்னும் ஐவர் உரைகள் பழமையானவை. இவற்றை அடிநிலையாக வைத்து இந்நூற்றாண்டில் உரை விளக்கம் காண முயன்றார் சிலர் உளர். அவரெல்லாம் முந்திய உரைகளுக்கு மேலும் விளக்கவுரை தந்து, பொருள் புலப்பாட்டிற்கு உதவி வந்துள்ளனர். எனினும், இந்த 'ஆதித்யம்' போன்று முழுமையும் புத்தம் புத்துரையாக அவை அமையவில்லை.

இப்பொழுது மகாகவி அ.கு. ஆதித்தனார் தந்துள்ள 'ஆதித்யமோ' பழைய உரைகளையும் பின்னர் வந்த நன்னூல் முதலிய இலக்கணங் களையும். தமிழ் இலக்கிய மொழி மரபுகளையும் நன்கு அலசி ஆராய்ந்து, இக்காலத்தார் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் ஆக்கப்பெற்ற புத்துரையாகும். இந்தப் புத்துரையைத் 'தெளிவுரை' என்று ஆசிரியர் அவர்கள் சுட்டியது சாலவும் பொருந்தும். இந்நூற் றாண்டு வழக்கியல் நடையில், இன்றைய வழக்கியலொடு பெரும் பாலும் ஒத்துவரும் எடுத்துக்காட்டுகளையும் தேர்ந்து தந்து, ஆசிரியர் தொல்காப்பியர் தெரிவிக்கும் சொல்லியல் மரபுகளை நன்கு தெளி வாக்க முற்படுகிறது இந்த ஆதித்தியம். பொழிப்பு, அரும்பத விளக்கம், காட்டு, மறுப்பு, ஆய்வு, குறிப்பு என்னும் தலைப்புகளில் விளக்கம் கண்டிருப்பது ஒருவகைப் புதுமுயற்சி. இவற்றுள் மறுப்பு, ஆய்வு, குறிப்பு எனவரும் பகுதிகள் ஏனைய இலக்கண நூல் கருத்து களோடும் ஒப்பவைத்து ஆராய்ந்து காலத்திற்கு ஏற்பக் கோலம் பூண்டுவரும் புதுவழக்குகளையும் தெளிவுற விளக்கிக் காட்டு கின்றன.

எளிமையினும் எளிமை என்னும்படி நூற்பா விளக்கங்களையும் உரிய எடுத்துக்காட்டுகளையும் •தெளிவாக்க ஆசிரியர் பெரிதும் முயன்றுள்ளார். வகை தொகையாக நூற்பாவினுள் வரும் பொருட் பகுதிகளுக்கு எண்ணிட்டு விளக்கம் தந்திருப்பது படங்காட்டி விளக்குவது போலுள்ளது.

ஆசிரியரின் ஒருசில கொள்கை விளக்கங்களில் மாறுபட்ட கருத்துகள் ஆய்வாளர் சிலருக்குத் தோன்றுதல் கூடும். ஆயினும், ஆசிரியர் அ. கு. ஆதித்தனாரின் புதிய கண்ணோட்டம் பெரிதும் மெச்சத்தக்கது. டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் தமது மதிப்புரையில் சுட்டியிருப்பது போன்று, 'இத்தகைய எளிய உரைகளின் வழியாகத்தான் தொல்காப்பியம் வாழமுடியும்' என்று குறித்திருப்பது முற்றிலும் உண்மை. இந்தத் தெளிவுரை நூலின் துணையுடன் நோக்கினால் தொல்காப்பியர் தரும் நூற்பொருள் தெற்றெனப் புலனாதல் ஒருதலை.

தொல்காப்பியரின் துணிபொருளையே அலசிப் பார்த்து அதில் தவறு கண்டு எடுத்துரைக்கும் இவர்களை நவீன நக்கீரர் என்னலாம்.

> 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு'

என்னும் வள்ளுவர் வாக்குப்படி ஆராய்ந்து பார்த்து மெய்ப்பொருள் கூறும் திறத்தினைத் தெளிவுரையில் அங்கங்கே காணலாம்.

புதிர்போல அமைந்திருக்கும் பழைய உரைப்பகுதிகளையெல்லாம் துருவி ஆராய்ந்து, அவை சுட்டும் அரும்பொருள்களை யாவரும் உணரும் வண்ணம் விளங்கவைக்கமுனைகிறது, இத் தொல்காப்பியத் தெளிவுரை. திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களைப் படித்து, அதன்வழியாகத் 'தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே' என்று வேதாந்த தேசிகர் விண்ணப்பிக்குமோபோலே தொல்காப்பியச் சொல்லதிகார ஆதித்யம் ஓதினால் தமிழ் மரபில் தெளியாதன வெல்லாம் நன்கு தெளிவுறப்பெறலாம்.

அச்சுப்பிழைகளை முற்றும் தவிர்த்து அச்சிடுவது என்பது இக்காலத்து எளிய செயலன்று, பார்வை மயக்கால் சில பிழைகள் நேர்வது இயல்பே. எனினும், இதில் காணும் அச்சுப்பிழைகளும் சற்று மிகுதிதான். இவையெல்லாம் இனிவரும் பதிப்பில் முற்றும் இல்லாமல் 'ஆதித்யம்' ஆதித்தனைப்போலவே மேலும் சிறந்து ஒளி வீசித் தமிழுலகில் திகழ்வதாக.

தொல்காப் பியமுறையில் தோற்றுப் புதிரெல்லாம்
எல்லாரும் கண்டெளிதில் இன்புறவே—நல்லார்
புகழ்கவிஞர் ஆதித்தர் பொற்புமிக ஆக்கித்
தகவுடையா தித்தியம்தந் தார்.

ஆதித் தியமிவ் வவனிமிசை வாழ்வுறுக
போதித்து நற்புலவர் போற்றுக—நேசித்து
நாளும் நவிலவே நல்லதமிழ் நாடிவரும்
மாளும் மயற்பகையே தான்.

—மு. சண்முகம் பிள்ளை

காளிதாஸன் உவமைகள் : தொகுப்பு : நா. வரதராஜுலு நாயுடு சாந்தி ட்ரஸ்ட், தாசநாயக்கன் பாளையம் ; பொள்ளாச்சி - 638202. 1977. பக்கங்கள் xix, 88. விலை குறிப்பிடப்படவில்லை.

உவமைகளைப் பெருமளவிற்குக் கையாண்டு ***'உபமா காளி தாஸஸ்ய'*** என்று சிறப்புற வழங்கும் புகழைப் பெற்ற மகாகவி காளிதாஸன் உவமைகள் எண்ணிலடங்கா. அவ்வுவமைகளையறிய விழைபவர்களின் ஆவலைப் பெருக்கும் வண்ணம் தொகுக்கப் பட்டுள்ள இந்தச் சிறு நூல் அனைவராலும் வரவேற்கப்படும் என்பது திண்ணமே.

முதல் அனைத்திந்திய கீழ்க்கலை மாநாட்டில் காளிதாஸனின் உவமைகளின் மன இயலைப்பற்றி திரு. கோடே அவர்கள் படித்த ஆங்கிலக் கட்டுரையும், கல்கத்தாவிலிருந்து 1945-ல் திரு. செல்லப்பன் பிள்ளை அவர்கள் வெளியிட்ட ஆங்கில நூலும் காளிதாஸனைப்பற்றிக் கூறும் மற்றும் பல நூல்களும் இருப்பினும் தமிழில் இம்மாதிரி நூலொன்று வெளியிடப்பெற்றது போற்றத் தகுந்ததே.

காளிதாஸனின் உவமைகளில் நூறினைத் தேர்ந்தெடுத்து, அவை களை முறையே அரசு, போர், இலக்கியம், இயற்கை, விலங்கு, ஊர்வன, பறப்பன, குழந்தை, பெண்டிர், காமம், துறவு ஆகிய பதினொரு தொகுதிகளில் பிரித்துச் செய்யுட்களை ஸம்ஸ்க்ருத எழுத்தில் தந்து, எளிய இனிய தமிழில் அவைகளுக்கு விளக்கங்கூறப் பட்டுள்ளது. இந்நூலின் முதல் நோக்கம் ஸம்ஸ்க்ருத எழுத்துக்களை அறியாதவரும் தமிழ் எழுத்து மட்டுமே அறிந்தவரும் காளிதாஸனின் உவமைகளை அறியவேண்டும் என்பதே. ஆனால் ஸம்ஸ்க்ருத எழுத்தில் கொடுக்கப்பட்டுள்ள செய்யுட்களைத் தமிழ் எழுத்தில் கொடுத்தும் ஸம்ஸ்க்ருத எழுத்தில் பின்சேர்க்கையாகவும் கொடுக்கப்பட்டிருந் தால் நோக்கம் முழுமையாய் நிறைவு பெற்றிருக்கும்.

ரகுவம்சத்தில் (6. 67) கையாளப்பட்ட '*தீபசிகா*' (ஒளிப்பந்தம்) என்னும் சொல்லினால் '*தீபசிகா காளிதாஸஸ்ய*' என்று சிறப்புடன் காளிதாஸன் கூறப்பட்டான். இந்த ஒப்பனைச் சொல் இந்துமதியின் சுயம்வரத்தை விவரிக்கும் கட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மலர் மாலையுடன் தன்னருகில் இந்துமதி வரும்பொழுது தன்னையே மாலையிடப் போவதாக எண்ணி ஒவ்வோர் அரசனும் முகம் மலர்கின்றான். ஒவ்வொருவனையும் அவள் தாண்டியதும் அவரவர்களின் முகமும் பொலிவிழக்கின்றது. இது எது போல என்றால் இருண்ட நடைபாதையில் கைப்பந்தம் ஏந்தி வரும் ஒருவன் ஒரு மாளிகைக் கருகே வரும்பொழுது பந்தத்தின் ஒளிபட்டு மாளிகை ஒளிபெறுவது போலவும் அவன் அப்பால் நகர்ந்து செல்லவும் ஒளி மங்கி மாளிகையைச் சிறிது சிறிதாக இருள் சூழ்வது போலவும் என்று காளிதாஸன் கூறுகின்றான் (பக்கம் 65).

கருவுற்றிருக்கும் தன் மனைவியை எவ்வாறு கருதினான் மன்னன் திலீபன் என்பதற்கொரு விளக்கம் ரகுவம்ச காவ்யத்தில் (3. 8) காண்கின்றோம் பல செல்வங்களையும் தாங்கியுள்ள பூமிபோலவும், தீயைத்தன்னுள் பொதிந்துள்ள வன்னிமரம் போலவும், பூமிக்கடியில் ஓடும் வற்றாத ஊற்றுக்களை உடைய ஸரஸ்வதி நதி போலவும் அவளை எண்ணினான். உழைப்பால் பூமியின் செல்வங்களான பயிர்கள் உணவுப் பொருள்களாக வெளிப்படுவது போலவும், அவ்வாறே தீயினின்று வீரமும், நீரினின்று தூய்மையும் வெளிப்படுவது போலவும், அரசியானவள் வளத்தையும், வீரத்தையும், தூய்மையையும் ஒருங்கே தாங்கி நின்றாள் (பக்கம் 60).

இவ்விதமாகப் பரிமளிக்கும் இந்நூலில் ஸம்ஸ்க்ருத செய்யுட்களின் சொற்களைப் பிரித்துக் கொடுப்பதிலும், சில சொற்களில் ஏற்பட்டுள்ள எழுத்துப் பிழைகளும் தவிர்க்கப்பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். உதாரணமாக பக்கம் 30-ல் செய்யுள் 38-ல் மூன்றாவது வரியில் 'தைலநிஷேகபிந்துனா' என்று சேர்ந்து வரவேண்டும். அதுபோலவே பக்கம் 61-ல் செய்யுள் 74-ல் கடைசி அடியில் 'ப்ரபோத' என்று வரவேண்டும். மறுமுறை விரைவில் பதிப்பு வெளிவரும் பொழுது இம்மாதிரிக் குறைகள் களையப்பட்டு அழகாகத் தொகுக்கப்பட்டுள்ள இந்நூல் மேலும் விரிவாக்கப்பட்டு சிறந்து விளங்கும் என்று எண்ணுகின்றேன்.

மற்றபடி சொல்லும் பொருளும் இணைந்து நடமிடும் இந்நூல் இலக்கியத்தில் நாட்டமுடையவர்களால் பெரிதும் வரவேற்கப்படும்.

—*டாக்டர் ந. கங்காதரன்*

வடமொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

போற்றித் திரு அகவல் : எ. ஆ. கிருஷ்ண பிள்ளை ; உரையாசிரியர் ; டாக்டர் வீ. ஞானசிகாமணி ; வேதாகம மாணவர் பதிப்பகம் ; முதற்பதிப்பு 1977 ; பக் - 56 ; விலை ரூ. 3-00.

'போற்றித்த் திரு அகவல்' கிறிஸ்தவக் கம்பர் எ. ஆ. கிருஷ்ண பிள்ளை அவர்களால் 1884-ல் பாடப்பெற்றது. கையெழுத்துப் பிரதியாக இருந்த இந்தப் பாடலைக் கண்டறிந்து டாக்டர் வீ. ஞான சிகாமணி விளக்கமான உரையுடன் 1977-ல் முதன்முதல் பதிப்பித்துத் தமிழுலகிற்கு அறிவித்துள்ளார்.

இத் திரு அகவல் கிட்டிய வரலாறும், பாடற்பொருளாராய்ச்சிக் குறிப்பும் நூலில் கூறப்பட்டுள்ளன. கவிஞரின் கையெழுத்தில் அமைந்துள்ள பாடல் படஅச்சில் அமைத்துப் பதிப்பித்திருப்பது நூலுக்குச் சிறப்புத் தருகின்றது. கிருஷ்ண பிள்ளையின் 150 ஆவது ஆண்டு நிறைவு நினைவு வெளியீடாக இந்நூல் வெளி வந்துள்ளது.

கண்ணி அமைப்பில் உள்ள இப்பாடலில் மொத்தம் 53 கண்ணிகளும் 106 அடிகளும் உள்ளன. பாடல் திருவாசகத்தின் திரு அகவல்களின் போக்கில் உருக்கமான பக்தி நடையில் செல்லுகின்றது. இப்பாடல் முற்றுப்பெறவில்லை. எனினும், பொருட் போக்கு முழுமையையே காட்டுகின்றது,

ஒவ்வொரு கண்ணிக்கும் பொழிப்புரையும் விளக்க உரையும் எழுதப்பட்டுள்ளன. கிறிஸ்தவ வேத ஒத்த வாக்கியங்களுடன் விளக்கவுரையில் தரப்பட்டுள்ள குறிப்புகள் பாடற்பொருளைத் தெளிவுபடுத்துகின்றன. பிற இலக்கியங்களிலிருந்து எடுத்துக் காட்டப்பெற்றுள்ள ஒப்புமைப் பகுதிகள் ஒப்பாராய்ச்சிக்குத் துணைபுரியத்தக்கனவாய் உள்ளன. கிறிஸ்தவ வேதத்தின் இறையியல் கருத்துக்கள் தத்துவார்த்த முறையில் இதில் கூறப் பட்டுள்ளன. கிருஷ்ண பிள்ளை பாடிய அகவற்பா இஃது ஒன்றே என்று தெரிகின்றது. கவியரசரின் வாழ்க்கைக் குறிப்பும் முதலில் தரப்பட்டுள்ளமை பொருத்தமாகும்.

53 கண்ணிகள் கொண்ட ஒரு பாடலை எவ்வளவு அழகாகவும், சிறப்பாகவும் தர இயலுமோ அந்த வகையில் அழகிய முறையில் இப்பதிப்பில் சிறப்புற அமைத்துத் தரப்பட்டிருக்கிறது. பாடிய கவிஞரின் புகழொளியாகவும் இது திகழ்கிறது.

— *மு. சண்முகம் பிள்ளை*

பாளையங்கோட்டை எச். ஏ. கிருஷ்ண பிள்ளை கிறிஸ்தவனுன வரலாறு (தன் வரலாறு) :

எச். ஏ. கிருஷ்ண பிள்ளை ; பதிப்பாசிரியர் : டாக்டர் வீ. ஞானசிகாமணி ; வேதாகம மாணவர் பதிப்பகம் ; 7, அங்காடித் தெரு, அயன்புரம், சென்னை ; முதற்பதிப்பு 1977 ; பக். 55 ; விலை ரூ. 2-50.

பத்தொன்பதாம் நூற்ருண்டில் கிறிஸ்தவ சமயம் தென்தமிழ் நாட்டில் மிகுதியாகப் பரவியது. இந்துக்களில் பலர் கிறிஸ்தவ மதம் சார்ந்தனர். வாழ்க்கை வசதிகளை நாடியும் மதக்கொடுமை, சாதிக்கொடுமைகளிலிருந்து விடுதலை பெறவும் மதம் மாறியவர் பெரும்பான்மையர். கிறிஸ்து பெருமானின் அருள்நெறிமேல் ஆராத பக்தி பூண்டு உண்மைக் கிறிஸ்தவரான பெருமக்களும் பலராவர். இத்தகு பெருமக்களுள் எ. ஆ. கிருஷ்ண பிள்ளை முதலிடம் பெறுவார். இதனை அவர் எழுதியுள்ள இந்தத் தன் வரலாற்று நூல் மெய்ப்பித்துக் காட்டுகிறது.

சுயசரிதை என்று கூறப்படும் தன் வரலாற்று இலக்கியம் இந்த இருபதாம் நூற்ருண்டில்தான் முழுமை பெற்றுத் தோன்றியது. இந்த வகையில் வாழ்க்கைக் குறிப்புகளை நாட்குறிப்பு, கடிதங்கள் வாயிலாக வெளிப்படுத்தியவர்கள் பத்தொன்பதாம் நூற்ருண்டிலும் அதற்கு முன்னரும் சிலர் இருந்தனர். ஆனுல், தன் வரலாற்று அமைப்பு முறையில் முன்னேடியாக விளங்குகிறது எ. ஆ. கிருஷ்ண பிள்ளை வரைந்த தன் வரலாறு எனின் மிகையாகாது.

தொடக்க முதல் வாழ்க்கையின் முடிவு வரையில் ஒருவர் தம் வரலாற்றைத் தாமே எழுதி வெளிப்படுத்தல் இயலுவதோ? ஏதோ ஒரு கால கட்டத்தில் தன் வரலாறு எழுதும் ஆசிரியன், அந்தக் கால கட்டம் வரையில் எழுதி முற்றுவிப்பதுதானே இயற்கை? பாளையங்கோட்டை எச். ஏ. கிருஷ்ண பிள்ளை கிறிஸ்தவனுன வரலாறு 1827-ல் கவிஞர் பிறந்தது முதல் 1865 வரையில் ஆன வரலாறுகளை மட்டுமே கொண்டது. இஃது அவர் கிறிஸ்தவனுக மாறிக் கிறிஸ்துவுக்குத் தொண்டு பூண்டு சமயப்பணி செய்யத் தொடங்கிய காலமாகும்.

கவிஞருடைய இளமை வாழ்க்கையும் அவருடைய குடும்பத்தார், நண்பர்களின் வரலாறுகளும், அவர் கலந்து பழகிய பெரியார் பலர் வரலாறுகளும் இதில் இடம் பெறுகின்றன. சுருங்கச் சொன்னல் அக்காலச் சமூகச் சூழலையே இது நன்கு பிரதிபலித்துக் காட்டுகிறது என்னலாம்.

ஓர் எடுத்துக்காட்டுக் காண்போம். அந்நாளில் கவிஞரும் அவருடைய இளைய சகோதரர் முத்தைய பிள்ளையும் கல்வி கற்றது பற்றிய பகுதி பின்வருமாறு :

"18 வயசுக்கு மேல் நானும், என் சகோதரர் முத்தைய பிள்ளையும் வீண் காலக்ஷேபம் செய்யாமற் சொந்த முயற்சியாய்த் தமிழிலக்கியப் புத்தகங்களைத் திருந்தப் படித்து வந்தோம். அத்தோடு இலக்கண நூல்கள் அச்சிட்ட பிரதி அப்போ கிட்டாததால் வெகு பிரயாசத்தின் பேரில் ஒரு பெரியவரிடமிருந்த நன்னூல் முதலிய இலக்கண கிரந்தங்களை வாங்கி ஓலையேட்டுப் புத்தகங்களில் எங்கள் சொந்தக் கைப்பட எழுதி வைத்தோம். அக்காலத்து இலக்கணமறிந்த வித்வான்கள் எங்கள் ஜில்லாவில் இரண்டு மூன்று பேர் தவிர வேறு கிடையார். இவர்களில் வண்ணார்பேட்டையிலிருந்தவரும், கனம் ரேனியுஸ் ஐயர் கிளார்க்கையர் முதலானவர்களுக்குத் தமிழ் படித்துக் கொடுத்த முனிஷியுமாயிருந்த மகாவித்வான் திருப்பாற் கடனாத கவிராஜரவர்கள் என் பிதாவுக்கு இஷ்டமாயிருந்த நிமித்தம் அந்த ஹேதுவை முன்னிட்டு அவர்களையடுத்து இலக்கணம் வாசிக்க முயன்றோம். ஒன்றரை வருஷ காலஞ் சிசுப் பணிவிடை செய்து படித்தோம்." *(பக். 14 – 15).*

இப்பகுதியால் அந்த நாளில் கல்வியைத் தேட ஒருவர் எவ்வளவு முயலுதல் வேண்டும் என்பது தெரிய வருகிறதல்லவா? இது போன்ற பல்வேறு சமூகச் சூழல்களும் இவ்வரலாற்று நூலில் இடம் பெறுதல் காணலாம்.

மூல நூலுள் வரும் பல செய்திகளுக்கும் பதிப்பாசிரியர் அடிக் குறிப்பில் தரும் விளக்கங்கள் பெரிதும் உதவுவன. நூலின் தொடர் புள்ள சிறப்பு அங்கமாக முதலில் உள்ள கவியரசரின் வாழ்க்கைக் குறிப்பும் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள வேதியர் ஒழுக்கமும் அமைகின்றன. இறுதியில் இணைக்கப்பட்டுள்ள 'சிறப்புப் பெயர் அகராதி' நூலுள் விவரிக்கப்பட்டுள்ள பொருள்களை எளிதில் கண்டறிய உதவும் கண்ணுடி போன்று விளங்குகிறது.

இவ்வாருகப் பல்வகைச் சிறப்புக்களோடு கூடிய ஒரு வரலாற்று நூலைத் தக்க முறையில் பதிப்பித்துத் தந்துள்ள பதிப்பாசிரியர் பாராட்டுக்குரியவராவர். புதைபொருளாயிருந்த ஒரு வரலாற்றுக் கருவூலத்தை இவர் தமிழுலகுக்கு வெளிப்படுத்தியுள்ளாரல்லவா? தன் வரலாற்று வழிகாட்டியான இந்நூல் என்றும் நிலைபெற்றுத் திகழ்வதாக.

— மு. சண்முகம் பிள்ளை

தமிழ்த்துறைச் செய்திகள்

1977 – சூலை—1977 – டிசம்பர்

பொருளடக்கம்

1. ஆசிரியர் மாணவர் கருத்தரங்கு

2. சிறப்புச் சொற்பொழிவுகள்

ஆசிரியர் - மாணவர் கருத்தரங்கு

ஜூலை 1977 — டிசம்பர் 1977

வரிசை எண்	நாள்	ஆசிரியர்	பொருள்	மாணவர்	பொருள்
1.	31-8-1977	டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்	'பெருங்கதை காட்டும் இலக்கியக் கொள்கை'	திரு. சு. சண்முகசுந்தரம்	'கும்மிப் பாடல்-தோற்றமும் வளர்ச்சியும்'
2.	28-9-1977	டாக்டர் ந. சஞ்சீவி	'புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் நடத்திய ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்'	திரு. த. அமிர்தலிங்கம்	'வறுமைவரையறை'
				திரு. வேங்கடேசன்	'சித்த மருத்துவம் - 'மருத்துவம் நவீன (ஒப்பாய்வுக் குறிப்புகள்)
3.	26-10-1977	டாக்டர் பொன். கோதண்டராமன்	'ஆ' என்ற வினையடிச் சொல்.		
		செல்வி தி. சு. சத்தியம்	'நூலே நுவல்'	திரு. ப. கிருட்டிணன்	'ஆசாரிய ஹிருதயத்தில் தமிழுணர்வு'
				திரு. பா. வீரப்பன்	'நடை-சில குறிப்புகள்'
4.	30-11-1977	திரு. வ. செயதேவன்	'நாடகக் கலைக்களஞ்சியம் - ஒரு மதிப்பீடு'	திரு. தெய்வசுந்தரம்	'தமிழில் எழுத்து வழக்கிற்கும் பேச்சு வழக்கிற்கும் இடையே உள்ள உறவு'
				திரு. மாதையன்	'பாஞ்சாலி சபதமும் பாரதி நோக்கும்'

சிறப்புச் சொற்பொழிவுகள்
(சூலை 1977 — டிசம்பர் 1977)

வரிசை எண்	நாள்	சொற்பொழிவாளர்	பொருள்
1.	14-9-1977	டாக்டர் அவ்வை நடராசன்	கம்ப இராமாயணம் : சுந்தர காண்டம்
2.	,,	திரு. ந. ரா. முருகவேள்	பெரிய புராணம் : தடுத்தாட்கொண்ட புராணம்
3.	17-9-1977	பெரும்புலவர் மே வீ. வேணுகோபாலப் பிள்ளை	சீவக சிந்தாமணி சுரமஞ்சரியார் இலம்பகம் & விமலையார் இலம்பகம்
4.	,,	பேராசிரியர் அ ச. ஞானசம்பந்தன்	திறனாய்வாளனும் திறனாய்வு வகைகளும்
5.	,,	சிலம்பொலி சு. செல்லப்பன்	சிலப்பதிகாரம்
6.	21-9-1977	திரு. ந. பிச்சமுத்து	நடை
7.	,,	திரு. இரா. மாயாண்டி	கற்பனை வகைகள்
8.	,,	டாக்டர் தாட்சாயணி	இலக்கியத்தில் இயற்கை
9.	24-9-1977	டாக்டர் வ. தெ மாணிக்கம்	இலக்கிய கொள்கைகள் : கவிதை
10.	,,	கவிஞர் கோ. கண்ணன்	குயில்பாட்டு & குடும்ப விளக்கு
11.	,,	கவிஞர் குருவிக்கரம்பை சண்முகம்	ஆசியஜோதி & மாங்கனி
12.	,,	கவிஞர் இன்குலாப்	பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள்
13.	,,	கவிஞர் நா. காமராசன்	& கறுப்பு மலர்கள் கவிதையனுபவம்
14.	28-9-1977	திரு. சோ. சிவபாத சுந்தரம்	இலக்கியக் கொள்கைகள் : புதினம்
15.	,,	திரு. பகீரதன்	பார்த்திபன் கனவு
16.	,,	திரு. கோ. செல்வம்	மண் குடிசை
17.	,,	திரு. தி. வ. மெய்கண்டார்	ஆடும் மாடும் & கலிங்கராணி
18.	,,	திருமதி. ராஜம் கிருஷ்ணன்	புதின அனுபவம்

வரிசை எண்	நாள்	சொற்பொழிவாளர்	பொருள்
19.	1-10-1977	பொன். செல்வ கணபதி	இலக்கியக் கொள்கைகள் : சிறுகதை
20.	,,	திரு. க. செந்தில்நாதன்	காஞ்சனை & யாருக்காக அழுதாள்
21.	[illegible]	திரு. கோவி மணிசேகரன்	சிறுகதையனுபவம்
22.	12-10-1977	டாக்டர் சி. இ. இராமச்சந்திரன்	தமிழ்நாட்டு வரலாறும் பண்பாடும் - சங்க காலம் முடிய
23.	,,	திருமதி. திலகவதி	தமிழ்நாட்டு வரலாறும் பண்பாடும் - பல்லவர் காலம் முடிய
24.	,,	டாக்டர் கி. அனுமந்தன்	தமிழ்நாட்டு வரலாறும் பண்பாடும் - பாண்டியர், நாயக்கர் காலம் முடிய
25.	,,	புலவர் கோ. தங்கவேலு	தமிழ்நாட்டு வரலாறும் பண்பாடும் - பிற்காலம்
26.	15-10-1977	பேராசிரியர் கொண்டல் சு. மகாதேவன்	உவமை, மெய்ப்பாடு மரபு இயல்கள்
27.	,,	திரு அ. கி. பரந்தாமனுர்	யாப்பருங்கலக் காரிகை
28.	19-10-1977	பேராசிரியர் மா. நன்னன்	தொல். எழுத்து : முதல் 3 இயல்கள்
29.	,,	திரு. இராம. சுப்பிரமணியன்	தொல். எழுத்து : இறுதி 6 இயல்கள்
30.	,,	திரு. இரா. மதிவாணன்	தொல். சொல்லதிகாரம்
31.	22-10-1977	டாக்டர் ஏ. என். பெருமாள்	இலக்கியக் கொள்கைகள் : நாடகம்
32.	,,	டாக்டர் இரா. சனுர்த்தனம்	சேர தாண்டவம்
33.	,,	திரு. வி. கிருட்டிணசாமி	மாபெரும் அறம்
34.	,,	நடிகமணி டி. வி. நாராயணசாமி	நாடக அனுபவம்
35.	12-12-1977	Dr. Ian Dale (From Wisconsin University)	Language Planning in India

சென்னைப் பல்கலைக் கழகம்

தமிழ்த் துறை வெளியீடுகள்

1. திருவாய்மொழி (பகுதி 1 முதல் 10 வரை)
   —ஆசிரியர் : திரு. பு. ரா. புருஷோத்தம நாயடு
2. ஆசார்ய ஹிருதய மூலம்
   —ஆசிரியர் : திரு. பு. ரா. புருஷோத்தம நாயடு
3. பத்துப்பாட்டு ஆராய்ச்சி
   —டாக்டர் மா. இராசமாணிக்கனார்
4. திருக்குறள் யாப்பு அமைதியும் பாட வேறுபாடும்
   —திரு. மு. சண்முகம் பிள்ளை
5. திருக்குறள் நீதி இலக்கியம்
   —திரு. க. த. திருநாவுக்கரசு
6. திருக்குறள் அணிநலம்
   —திரு. இ. சுந்தரமூர்த்தி
7. திருக்குறள் அமைப்பும் முறையும்
   —திரு. மு. சண்முகம் பிள்ளை
8. சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்
   —டாக்டர் ந. சஞ்சீவி
9. திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும்
   —திரு. க. த. திருநாவுக்கரசு
10. பல்கலைப் பழந்தமிழ்
    —(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி
11. நாக குமார காவியம
    —(ப. ஆ.) திரு. மு. சண்முகம் பிள்ளை
12. இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்
    —(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி
13. திருவிசைப்பா—திருப்பல்லாண்டு
    திரு. மு. அருணசலம்

14—17. தமிழாய்வு (நான்கு தொகுதிகள்—1, 2, 3, 4)
    —(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி

18. அப்பாண்டைநாதர் உலா
    —(ப. ஆ.) திரு. மு. சண்முகம் பிள்ளை
19. தெய்வத் தமிழ்
    —(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி
20. பெருங்காப்பியச் சிற்றிலக்கியப் பெருந்தமிழ்
    —(ப. ஆ.) டாக்டர் ந. சஞ்சீவி